மங்கையர் மலர்



MANGAYAR MALAR ஜூலை 1996 விலை ரூ. 9


அழகு! அழகு! அழகு!
மன்னர்கள் கட்டி வைத்த
கோட்டை அழகு!
சாரதா'ஸ் கட்டி வைத்திருக்கும்
துணிக்கோட்டை அழகு!!
சாரதா'ஸ்
627, அண்ணா சாலை,
தான் பில்டிங், சென்னை - 2.
போன் : 852 11 77
32, N S B ரோடு,
திருச்சி 620 002
போன் : 27077

வளரும் குழந்தைக்கு புரோட்டீன்கள் அடித்தளமாகும்.

அவனது ஆரோக்கிய பானத்தில் கூடுதல் புரோட்டீன் இருக்கிறதா?




உங்களது டாக்டரைக் கேளுங்கள். தரமான புரோட்டீன்கள்தான்,



உடலுக்கு வலுவூட்டும் அடித்தளமாகும் என்று, அவர் உங்களிடம் சொல்வார். தசை திசுக்களுக்கும், உடலின் முக்கிய திரவப் பொருட்களுக்கும் வலுவூட்டி, அவற்றை பராமரிக்கவும் இவை உதவுகின்றன. இது மட்டுமல்ல, ஜீரணிப்பதற்கும், நோய் எதிர்ப்புத் தன்மையை உருவாக்குவதற்கும் இவை உதவுகின்றன. எனவே, வளரும் குழந்தைகளுக்கு, புரோட்டீன் சேர்வுள்ள உணவை டாக்டர்கள் எப்போதும் பரிந்துரைப்பது ஆச்சர்யமில்லை.

போனஸ் கூடுதல் புரோட்டீன் அளிக்கிறது

இயற்கையின் செழுமையான வளங்களில்



ஒன்றான, சோயாவிலிருந்து எடுக்கப் பட்டபோனஸ், உங்கள் குழந்தைக்கு கூடுதல் புரோட்டீன் அளிக்கிறது. உண்மையில், போனஸில் உள்ள 25 கி. புரோட்டீன் அளவு, மற்ற உடல் ஆரோக்கிய பானங்களைவிட அதிகமாகும். எனவே, வெறும் இரண்டு கிளாஸ் போனஸ், உங்கள் குழந்தைக்கு அதனுடைய அன்றாட புரோட்டீன் தேவையில்* அநேகமாக பாதி அளவை அளிக்கிறது.

போனஸில் அதிகம் இருக்கிறது

கூடுதல் புரோட்டீனோடுகூட, போனஸில், கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்துக்கள், ஃபைபர்கள், விட்டமின்கள், கால்ஸியம் மற்றும் வேறு மினரல்கள் இருக்கின்றன. வலுவான அடித்தளம் அமைப்பதோடல்லாமல், ஒரு வளரும் குழந்தைக்கு தேவைப்படும் எல்லா முக்கிய சத்துணவுகளையும் அளிக்கும் ஒரு உடல் ஆரோக்கியபானம் உங்களுக்கு கிடைக்கிறது.



வலுவான அடித்தளம், சூப்பர் சுவை


இப்போது நீங்கள், பிளெயின் போனஸ் அல்லது சாக்லேட் போனஸிலிருந்து தெரிவு செய்யலாம். எனவே, இன்றே போனஸிற்கு மாறவும். உங்கள் குழந்தைக்கு வலுவான அடித்தளத்தை வழங்கவும்.



BUILD THEM UP WITH BONUS

* 46% of Protein requirement for age group 4-6years. (ICMR Report 1994)

Mudra: NES: 0369 Tam







உங்களின் குழந்தைகளின் நலம் வேண்டி....

தெய்வ சிந்தனைக்கு....

புதிய கோணத்தில் சிந்திக்க....

மங்கையர் மலர்

ஜூலை '96

மலர் : 16 இதழ் : 6

கதைச் சுவைக்கு....

மருத்துவம்

வழக்கமாக சுவைதரும்...





BUSINESS! MONEY! BUSINESS!

YOUR INTEREST & OUR KNOW-HOW

Will work wonder for a highly Profitable Business for you

COME......

750/96

SHARE OUR EXPERIENCE & EXPERTISE TO START A SURE WINNER of a business

CHOSE from the following range of products....

YOU CAN MANUFACTURE WITH OUR CONSULTANCY

1. Pan Masala & Tobacco Products
(Chewing Tobacco, Gutkha Quimam, Khaini, Sweet Supari & Mouth Freshner etc.)



2. Perfumery Products & Flavour's
(Incense Sticks, Dhoop, Havan Samagri, All type Perfume & Flavours.



3. Cosmetics & Tolietery products
(Hair Oils, Detergents, Bath & Washing Soaps etc.)



4. Foods Products & Aditives
(Jam & Jelly, Soups, Churan, Chutney's Sherbet's, Thandai Achar & Murabba etc.)



We have the necessary Infrastructure and technical Know-how and do-how to tell you the right composition & contents for the above Products.

WE PROVIDE TIPS ON MARKETING AS WELL

INTERESTED?

Then write immediately, in English/ Hindi, with full details (Name of Product / Products etc.).

You would love to see in to

Post Box No.1519 G.P.O., Delhi-6

உங்கள் பணத்தை எங்கேயோ
போட்டு தலைவலியை
விலைக்கு வாங்குங்க...



[illegible]

ஐ எஃப் பி ஃபைனான்ஸ் கிட்டே
ஒப்படைங்க, போதும்

ஐ எஃப் பி ஃபைனான்ஸ் க்யுமுலேடிவ் ஃபிக்ஸெட் டெபாஸிட் திட்டத்தில் குறைவாக ரூ. 1000/- மேல் அல்லது ரெகுலர் இன்கம் ஃபிக்ஸெட் டெபாஸிட் திட்டத்தில் ரூ. 5000/- மேல் 12, 24, 36, 48 அல்லது 60 மாதங்களுக்கு முதலீடு செய்யுங்கள். வட்டி ஆண்டிற்கு 18%.

தவிர R.B.I. சட்டதிட்டங்களின்படி சுலபமான கடன் வசதி. தொகையை முதிர்வதற்கு முன் திரும்பப்பெறும் வசதி. அசலுக்கும் வட்டிக்கும் பாதுகாப்பிற்கு 'ICRA வின் MA' ரேட்டிங். ப்ரோக்கர்கள் மற்றும் ஏஜெண்டுகளின் பரந்த ஓர் அமைப்பு கூடிய நிறுவனம் ஐ எஃப் பி ஃபைனான்ஸ் லிமிடெட்.

உலகம் முழுவதும் அறிந்த ரூ. 600 கோடி க்ரூப் குழு. வாஷிங் மிஷின் மற்றும் ஃபைன் பிளாங்கின் முன்னோடிகள்.

IFB FINANCE


3755/96

IFB Finance Ltd.

தரமே நாங்கள் கொண்டுள்ள உறுதி.

Corporate Office
IFB Finance Limited 8/1 Middleton Row, Calcutta 700071, India
Tel : 290909 (D), 29-1969/5166/5213/6412/2161
Madras : No. 1 Precision Plaza, 3rd Floor, 281 Anna Salai, Teynampet,
Madras 600018 Tel : 4500824/450240
Bombay Tel : 288 1376/77 Delhi Tel : 6425564/65 Bangalore Tel : 5596081
Hyderabad Tel : 311568

சில ப்ரச்னைகள்; சில வார்த்தைகள்



சில நாட்களுக்கு முன்பு ஒரு பெண்மணியின் கடிதம் வந்திருந்தது. இந்தப் பெண் என்றில்லை, என்றைக்கு நம் பத்திரிகை பெண்களுக்கு ஒரு தோழியாகச் செயல்படுகிறது என அவர்களெல்லாம் உளப் பூர்வமாக நினைக்க ஆரம்பித்தார்களோ, அப்போதிலிருந்தே அவரவர்கள் தங்கள் மனக்குறைபாடுகளை எழுதுவதுண்டு. இவை பெண்கள் தங்களுக்குள் மட்டுமே பரிமாறிக் கொள்ளக்கூடிய உள்ளக் குமுறல்கள். அப்படிச் சொல்லும் போது மேலே சொன்ன அந்தப் பெண்ணின் கடிதம் என் மனதை இரண்டு, மூன்று நாட்கள் அலைகழித்துக் கொண்டே இருந்தது. எங்கே போனாலும், எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் கடிதத்தின் வாக்கியங்கள் மட்டும் என்னைத் துரத்திக் கொண்டே வரும்.

இன்றைக்கு நிறைய சமுதாயக் கொடுமைகளை பார்த்துக் கொண்டுதான் வருகிறோம். ஆண்தான் குற்றவாளி, பெண்ணுக்கு எப்போதும் தீங்கு செய்பவன் என்று நாம் எப்போதுமே 'கட்சி' எடுப்பதில்லை. இரண்டு பாலாரில் யார் மோசமாக இருந்தாலும் அடுத்தவர் வாழ்க்கையில் அவஸ்தைப்படுகிறார்கள். சில பெண்களால் ஆண்கள் படும் பாட்டையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

சரி, இந்த அடுத்தவரை வருத்துவது அதிலிருந்து மீளுவது என்பது இருக்கிறதே இதிலே கொடுமைப்படுத்துவது என்பது எந்த அளவிற்கு யார், என்ன சதவீதம், இதிலிருந்து தப்பிக்கலாமா, மாற்றிக் கொள்ளலாமா, அறிவுரை சொல்லி திருந்தச் செய்யலாமா, ஒன்றுமே முடியாது அறுத்துக் கொள்ளலாமா என்பதில்தான் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் வித்தியாசப்படுகிறது.

ஆணோ, பெண்ணோ மிக மோசமான லெவலுக்குப் போவது என்பது குறைந்த சதவீதமே. இதைத்தான் நாம் கொடுமைக்கார கணவன்/மனைவி/மாமியார்/மாமனார் என கதைகளில், டி.வி.யில், சினிமாக்களில் பார்க்கிறோம். சூடு வைப்பது, வக்கிரமாகப் பேசுவது, இப்படி... இதை ஏன் ஆணுக்கு மட்டுமே சொல்ல வேண்டும். பெண்ணும் இப்படி மாறுவதுண்டு, பேயாய்.

சரி, சாதாரண அன்றாட வாழ்க்கையில் குடும்பத்தில் பிரச்னைகள் நிறைய வரும். இரண்டு மனிதர்கள் எனும் போது அவர்களுக்குச் சிந்தனைகளும், எண்ணங்களும் வேறாகத்

மஞ்சுளா ரமேஷ்

மனிதனுக்கு ஆயுளை வளர்ப்பவை ஐந்து! மாலை வெய்யில், ஓமப்புகை, அன்பான இளம் மனைவி, அருவி நீர், இரவில் பால் சாதம் இந்த ஐந்தும் ஆயுளை வளர்க்கும்.

– கிருபானந்த வாரியார்

தகவல் : ஆர். பார்த்திபன்

தான் செய்யும். அதே போல அடிப்படையிலேயே ஒவ்வொருவரின் குணமும் வேறுபடுகிறது. சிலர் அடக்கியாளுகின்ற தன்மை உடையவர்களாக இருப்பார்கள். எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் எனப் பேசுவது, அடாவடியாக நடந்து கொள்வது; எதையும் அவசரமாக சிந்தித்து முடிவெடுப்பது, படபடப்பது, அல்லது எதற்கும் நிலைகுலையாமல் சிந்தித்துச் செயல்படுவது. இப்படிப்பட்ட குணங்களுடன் பிறந்து வளரும் போது வெவ்வேறு குணமனிதர்கள் சேரும் போது வாழ்க்கையில் முரண்பாடுகள் தோன்றுகிறது.

ஆனால் ஒன்று கவனிக்க வேண்டும், மறக்கக் கூடாது. இவையெல்லாம் அவர்களின் சுபாவங்களே தவிர அடிப்படையில் மனிதர்கள், காதல், அன்பு, பாசம், நேசம் உள்ளவர்கள். தங்கள் உறவினர்கள், நண்பர்களோடு வாழும் போது மேற்சொன்ன எல்லாவித உணர்வுகளால் பீடிக்கப்பட்டுதான் வாழுகிறார்கள். அவர்களுடைய பிறவிக் குணங்களால் ஒரு விஷயத்தை நோக்கும் போது பார்வை வேறுபடுகிறது, நடவடிக்கை வேறுபடுகிறது, அவ்வளவுதான்.

இதை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டு அவர்களை வெறுக்காமல் அவர்களின் குணங்களைப் புரிந்து கொண்டு முடிந்தால் மாற்றச் செய்யலாம். பேசலாம், வாதிடலாம். ஆனால் இவர்களெல்லாம் வெறுத்து ஒதுக்க வேண்டியவர்களோ வெட்டி விட வேண்டியவர்களோ அல்ல. இன்னும் சொல்லப் போனால் நம் சமுதாயத்தில் இப்படிப்பட்ட மனிதர்கள்தான் 90% இருக்கிறார்கள் எனலாம்.

ஆனால் பிறவியிலேயே இராட்சசர்களாகவும் பிறக்காமல், வெவ்வேறு குண இயல்புகள் கொண்டவர்களாக உள்ள மனிதர்களாகவும் இல்லாமல் சில 'விசித்திர பிறவிகள்' இருப்பது உண்டு. நான் ஆரம்பத்தில் சொன்னேனே கடிதம் எழுதிய பெண்மணி அவரைப் போன்றவர்கள் இவர்களால் பாதிக்கப்படுகிறார்கள்.

என்ன எழுதினார்? அதை இங்கே பேச முடியாதுதான். சாதாரணமாக நார்மலாக இருக்கும் அந்தக் கணவன் அவரை இரவில் உட்படுத்துகின்ற கொடுமைகளைப் பற்றி எழுதியிருந்தார். வேலை பார்க்கும் இவர் இதனால் படுகின்ற துன்பம் தன் ஒரே குழந்தையையும் அம்மா வீட்டில் விட்டு விட்டு இருக்கிறாராம். மிகவும் மனம் நொந்து எழுதியிருந்தாலேயோ என்னவோ மிகவும் விரிவாக இதைப் பற்றி எழுதியிருந்தார். யாரோடும் பெற்ற தாயோடும் இந்தத் துயரைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்பதால் எனக்கு எழுதியிருந்தார்.

இதே போல சில மாதங்களுக்கு முன்பு ஒரு பிரபலமானவரின் மனைவி, ஒரு வயதான பெண்மணி என நிறைய பேரிடமிருந்து அவ்வப்போது இப்படிப்பட்ட கடிதங்கள் வரும். வெளிப்பார்வைக்கு, மற்றவர்களின் கண்களுக்குச் சாதாரண கணவனாகக் காட்சி

தோசைக் கல்லில் எண்ணெய் தேய்க்கும் கட்டையின் அடியில் ஒரு அங்குல அளவில் சதுரமாக ஒரு ஸ்பான்ஜ் வைத்து அதையும் கட்டையையும் சுற்றி ஒரு வெள்ளைத் துணி கொண்டு கட்டி விட்டால் எண்ணெய் சமமாக பரவும். மேலும் சப்பாத்தி சுடும் போது அந்தக் கட்டையை வைத்து அழுத்தி விட்டால் சப்பாத்தி பூரி போல் பொங்கும்.

– அமலி எட்வர்ட்

அளிப்பவர்கள், மனைவியிடம் மட்டும் இப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்கிறார்கள். இது ஒருவகை மனநோய் என்று கூடச் சொல்லலாம். அந்தக் காலத்துப் பெண்மணிகளுக்கு இது தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் இன்று படித்து, வேலைக்குப் போய் சுயமாக வாழ முடிகின்ற பெண்கள் ஏன் கோழைகளாக இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு அடிமைகளாக வாழ வேண்டும்?

'செக்ஸ்' கொடுமை மட்டுமேயல்ல, மனைவியை (மட்டுமே) அடிப்பது, துச்சமாகப் பேசுவது, தாழ்வாக நோக்குவது, மற்றவர்கள் எதிரில் மட்டந் தட்டுவது இவையெல்லாமே கூட அந்தப் பெண்ணின் வாழ்வைச் சிதைத்து விடுகிறது. தந்தை அடிப்பதையும், வாயில் வருகின்ற அத்தனை கெட்ட வார்த்தைகளாலும் திட்டுவதையும் பார்த்துக் கொண்டிருக்கின்ற குழந்தைகள் அம்மாவின் மேல் மரியாதையை இழக்கின்றார்கள். அப்படிப் பெரியவர்களாகும் குழந்தைகள் வயதான பிறகு அவளை வேலைக்காரி போல நடத்துவதை (இன்றைக்கு நாம் வேலைக்காரி போல வேலை செய்பவர்களை நடத்த முடிகிறதா?) பார்க்கிறோம், கேட்கிறோம்.

எனவே, இப்படிப்பட்ட வக்கிர குணம் உடைய கணவனாக அமையும் பட்சத்தில் இந்தக் கொடுமைகளுக்கு ஏன் இன்றைய தலைமுறைப் பெண்கள் ஒப்புக் கொண்டு போக வேண்டும்? நீங்கள் உடனே வீட்டை விட்டு வெளியேறுங்கள், கோர்ட்டுக்குப் போங்கள் என்று நான் சொல்லவில்லை. 'என்னால் உன்னுடைய வக்கிரத்திற்கு ஒப்புக் கொள்ள முடியாது. எனது பெண்மை அத்தனை கேவலமானது அல்ல' எனத் தைரியமாக மறுக்கும் நெஞ்சுரத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

இருபத்தோராம்
நூற்றாண்டின்
குழந்தைகளுக்காக
கட்டுரையை
எழுதியிருப்பவர் :
மல்லிகா
பலராமன்
- பக்கம். 35

இந்தக் கடிதம் எழுதிய பெண் போல பல ஆயிரம் பெண்கள் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஏன், எதற்காக உடன்பட வேண்டும்? இரவெல்லாம் உன் முன் நிற்க முடியாது என்று சொல்லுங்கள் 'உனக்கு மனநோய் இருக்கிறது, என்னோடு வா மனநல வைத்தியரிடம்' என அழைத்துச் செல்லுங்கள். இது ஏதோ இரண்டு வரியில் எழுதி விடுவது போல அத்தனை சுலபமான விஷயம் அல்லதான். அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மீட்க வேண்டும். ஆனால் அதற்காக அவர்களோடு உடன்படுவது என்பது மகா அநியாயம். இப்படித் தவிக்கும் பெண்கள் நாளடைவில் அவர்களே மனநோயாளியாக மாறுவார்கள். இதனால் குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள். குடும்பம், அதனுடைய அழகிய வளர்ச்சி சிதைக்கப்படுகிறது.

இன்றைய தலைமுறைப் பெண்கள் அறிவுத்திசாலிகள். நன்கு சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள். மூளை, மூளை சார்ந்த வளர்ச்சியோடு மனசிலும் தைரியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். மற்ற விஷயங்களில் பிரித்து ஆராய்ந்து அதற்கு முடிவு காண்பது போல வாழ்க்கை என வரும்போதும், அதில் பிரச்னைகள் என வரும் போதும் அக்குவேறு, ஆணிவேறாகச் சிந்தனையில் பிரித்து நோக்க வேண்டும். இந்த பிரச்னை இருக்கே, இதை எப்படித் தீர்க்க வேண்டும் என விஞ்ஞானபூர்வமாக யோசிக்க வேண்டும். மிகவும் நம்பிக்கையானவர்களிடம் யோசனை கேட்கலாம். பாதிக்கப்பட்டவர்கள் அந்த மனநிலையிலிருந்து சிந்திப்பது என்பது புதைசேற்றுக்குள் இருந்து தப்பிக்க முயல்வது போலத்தான். அடுத்தவர் நடுநிலைக் கண்ணோடு யோசிக்கும் போது சிறந்த வழிகள் புலப்படும். 'அய்யய்யோ அந்தரங்க விஷயத்தை எப்படிப் பேசுவது?' எனக் கூச்சப்பட வேண்டாம். அதுதான் இன்றைக்கு டி.வியிலும், சினிமாக்களிலும் பகிரங்கமாகத்தானே எல்லாம் நடக்கிறது?

சாதாரண கருத்து மோதல்களை அதைச் சகித்துக் கொண்டு கூட போய் விடலாம். ஆனால் அவமானப்படுத்தும் விஷயங்களுக்கு நிச்சயம் உடன்படாதீர்கள். பெண்கள் மனோ தைரியத்துடன் நிமிர்ந்து நின்று அக்கிரமச் செயலுக்கு 'நோ' என மறுத்துச் சொல்லுங்கள். அப்போது முக்கால்வாசிப் பேர் தானாகவே திருந்தி விடுவார்கள். மீறிப் போனா திருத்துங்கள். இல்லையெனில்: நீங்கள்தான் அழிந்து போவீர்கள்.

இன்றைய பெண்களுக்கு அவசியம் தேவை நியாய உணர்வுடன் கூடிய மனதைரியம், வலிமை, தன்னம்பிக்கை. அதை வளர்த்துக் கொள்வோம், நம் குழந்தைகளுக்கும் வளர்ப்போம்.


பளபளக்கும்
உங்கள்
மேனி
பார்ப்பவர்
மனதைக் கவரட்டும்
பாண்ட்ஸ் சாண்டல்
டால்க்கின் ஜொலிப்பு
தீபத்தின் சுடரைப்போல்
பளபளப்பு.
நறுமண சந்தனம் கொண்ட
புதிய பாண்ட்ஸ் சாண்டல் டால்க்
பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
மென்மையானது. உங்கள்
மேனியுடன் இயற்கையாக
இணைகிறது.
புதியது!
POND'S SANDAL TALC
பிரமிப்பூட்டும் பளபளப்பு.

Ad start


கானந்தம்மா... இவருக்கு 79 வயது. பெங்களூரில் வாழும் ஒரு கன்னட எழுத்தாளர். அந்தக் காலத்தில் பெண்கள் பள்ளிக்குப் போவதே அரிது. கனந்தம்மா பள்ளிக்குப் போக ஆரம்பித்தார். தாவரகெளு என்ற ஊரில் பெண்கள் பள்ளி இல்லாததால் ஆண்கள் பள்ளியில் சேர்ந்தார். அவருடைய வகுப்பில் அவர் ஒருவர்தான் பெண். மீதி எல்லோரும் பையன்கள். கனந்தம்மாதான் எப்போதும் வகுப்பில் முதல்! பையன்களுக்கு இது பொறுக்கவில்லை! அவர்கள் தங்கள் தகப்பனாரிடம் புகார் சொல்ல தலைமை ஆசிரியருக்குப் புகார் போயிற்று. அவர் சொற்படி மாணவி கனந்தா வீட்டுக்கு அனுப்பப்பட்டார். அதற்காக அவள் மனம் உடைந்து போகவில்லை. வீட்டிலேயே படித்து நல்ல மார்க்குகள் வாங்கி பாஸ் பண்ணினாள்.

பிறகு அவர்கள் குடும்பம் பெங்களூருக்கு வந்தது. அங்கு ஒரு பெண்கள் பள்ளியில் சேர்ந்து பள்ளியிறுதி வகுப்பில் ஃபர்ஸ்ட் கிளாசில் பாஸ் செய்தார். கனந்தம்மாவுக்கு 11 வயதிலேயே கல்யாணமாகி விட்டது. திருமணத்துக்குப் பிறகும் படிப்பைத் தொடர புக்ககத்தினர் அனுமதித்தனர். அதனால் கனந்தம்மா இன்டர்மீடியட் (தற்போதைய பிளஸ் டு) முடிக்க முடிந்தது. பட்டப்படிப்புக்காக கல்லூரியில் சேர ஆசைப்பட்டார் அவர். ஆனால் புக்ககத்தினர் அவரை அதற்கு அனுமதிக்கவில்லை. ஏனெனில் அது ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் கல்லூரி!

கனந்தா கம்மா இருக்கவில்லை. எழுத்துத் துறையில் தன் கவனத்தைத் திருப்பினார். காலக் கிரமத்தில் ஒரு சிறந்த நகைச்சுவை எழுத்தாளராக பரிணமித்தார். அவருக்குக் கர்நாடக சாகித்ய அகாதமி, சாகித்ய பரீட்சத் பரிசுகள் கிடைத்தன. 1990-ல் கர்நாடக மாநில அரசு 'ராஜோத்ஸவ' பரிசளித்து கனந்தாவை கௌரவித்தது. அவர் கன்னட எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தார். பின்பு இரண்டு முறை சாகித்ய அகாதமி உறுப்பினராக இருந்தார். ஒருமுறை ஆங்கில எழுத்தாளர் குஷ்வந்த்சிங், 'நம் நாட்டில் குறிப்பிடும்படியாக பெண் நகைச்சுவை எழுத்தாளர் யாரும் இல்லை' என்று எழுதியிருந்தார். அதைப் படித்த கனந்தம்மா அது தவறு என்று நிருபிக்க விரும்பினார். அவருடைய கதைகள் புத்தகங்கள், பரிசுகளின் பட்டியலை குஷ்வந்த் சிங்குக்கு அனுப்பி வைத்தார். அதைப் பார்த்த சிங் கனந்தம்மா வுக்கு ஒரு மன்னிப்புக் கடிதம் அனுப்பி வைத்தார்!

தகவல் :அனிதா ராமச்சந்திரன்

ஆதாரம் : டெக்கான் ஹெரால்டு



குழந்தைங்க சாப்பிடாம அடம்பிடிப்பாங்கதான்!

எம் பொண்ணு ஸ்மிதா, வயிறு நிறைய சாப்பிட்டாளா அதுவும் சரியானத சாப்பிட்டாளான்னு எனக்கு எப்பவுமே கவலையா இருந்தது.

நான், டாக்டரை பார்த்து இதுக்கு என்ன செய்யலாம்னு கேட்டது ரொம்பவே நல்லதா போயிடுச்சு.

அப்போதான் தெரிஞ்சது, 1-லிருந்து 3 வயசு குழந்தைங்களுக்கு ஸ்பெஷல் ஊட்டச்சத்து ரொம்ப அவசியம்ன்னு. இந்த வயசுல அவங்க எவ்ளோ வேகமா வளர்றாங்க!

அப்புறம்தான் Junior Horlicks பத்தி எனக்கு தெரிய வந்தது.

பால், கோதுமை, மால்டட் பார்லி இதெல்லாம் சேர்த்து சின்ன குழந்தைகளுக்குன்னு ஸ்பெஷலா தயாரிச்சிருக்காங்க. நேச்சுரல் பொருட்களால் தயாரிச்சிருக்கிறதால ஈஸியா ஜீரணமாகுது.

அதோட, இதுல எக்ஸ்ட்ரா கால்ஷியம், எக்ஸ்ட்ரா அயர்ன், முக்கிய விட்டமின், புரோட்டீன் எல்லாம் இருக்கு.

தயார் பண்றதா? ரொம்ப ஈஸிங்க! பால்ல கலந்து அப்படியே குடுக்கலாம். தெனமும் ரெண்டு தடவை.

உண்மையா சொன்னா, மனசு சந்தோஷப்படறப்போ, எனக்கு இதத்தான் சொல்லத் தோணுது.....

தேங்



1-2-3
க்யூ ,
NEW
Junior
Horlicks
NOURISHING FOOD DRINK

இது பள்ளிக்குக் குழந்தைகள் போக ஆரம்பித்திருக்கும் நேரம்

'என் குழந்தை நல்லாத்தான் படிக்கறா. ஆனால் பரீட் சையிலே பார்த்தா ரொம்ப குறைவான மார்க். ஏன்னு கேட்டா - எனக்குப் படிச்சது எதுவுமே நினைவுக்கு வரலே எல்லாம் மறந்து போச்சுன்னு சொல்றா' - இதுதான் இன்று பல பெற்றோர்களின் பிரச்னையே. நினைவாற்றல் பெருக வல்லாரையைப் பற்றி நிறைய சொல்கிறார்களே, என்ன சமாசாரம் என 'நவோதயா' - சித்த ஆராய்ச்சி மைய ஜெயராமனை விசாரித்த போது பல சுவையான தகவல்களைச் சொன்னார்.

''நம் மனித மூளை சக்தி வாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்களை விடவும் சக்தி கொண்டது. நம் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள் அனைத்தையும் பதிவு செய்து கொண்டு தேவைப்படும் சமயங்களில் அவைகளை திரும்ப நினைவுக்குக் கொண்டு வரும் அபார சக்தி நம் மூளைக்கு உண்டு. இதைத்தான் நாம் 'நினைவாற்றல்' என்கிறோம். இந்த நினைவாற்றலை பெருக்கிக் கொள்ள அநேக வழிகள் உண்டு.

நினைவாற்றல் குறைய மிக முக்கியமான காரணம் நம் உணவில் வேண்டிய சத்துக்கள் இல்லாமையே! 'அறுசுவை உண்டி' என்பார்கள். இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, காரம் ஆகிய ஆறு சுவைகளில் நாம் கசப்பையும், துவர்ப்பையும் மறந்து விடுகிறோம். உடலின் தேய்மானங்களைச் சரி செய்ய வல்லது துவர்ப்பு - நோய் கிருமிகளை அழித்து (கல்லீரல் சம்பந்தமான) நோய்களையும் குணப்படுத்தக் கூடியது துவர்ப்பு. இவை இல்லாமையினால் நம் உடல் நலம் பாதிக்கப்பட்டு நம் நினைவாற்றலும் குறைகிறது.

கருவுற்ற பெண் அதிகக் குளிர்ச்சி உண்டாக்கக் கூடிய உணவுப் பொருட்களையும், மாட்டிறைச்சி போன்றவைகளையும் உண்டால் பிறக்கும் குழந்தை மிகவும் 'டல்லாக' மிகவும் குறைந்த நினைவாற்றல் உள்ளதாக இருக்கும்.

தேவையை விட அதிக குறைந்த உணவு, நேரம் கெட்ட நேரத்தில் உண்பது, போன்றவைகளினாலும் கூட நினைவாற்றல் குறைந்து விடும். அதிகமான வேலை பளுவினால் பல செய்திகளையும் ஒரே நேரத்தில் மனத்தில் பதிய வைக்க வேண்டும் என்பதும் நினைவாற்றல் குறைய மிகவும் முக்கிய காரணம்.

நினைவாற்றல் பெருக...

எதையும் ஒரு ஈடுபாட்டுடன் செய்ய நினைத்தாலே நினைவாற்றல் பெருகும்.

நம்மில் பலர் கடுமையான வெயிலில் வெளியில் நடந்து செல்வர். இதனால் மூளையின் செல்கள் களைப்படைந்து விடும். நினைவாற்றல் குறையும். குறைந்த பட்சம் ஒரு தொப்பியாவது அணிந்து செல்வது நலம்.

நினைவாற்றலை பெருக்கும் வல்லமை வாய்ந்தது வல்லாரை. இதில் முக்கிய மூன்று வகைகள் உண்டு. அவை கொடி வல்லாரை, கொத்து வல்லாரை, வெங்கா வல்லாரை ஆகும். உடலின் உட்புறம் மற்றும் மூளையில் ஏற்படக்கூடிய வீக்கங்களைக் குணப்படுத்த வல்லது கொடிவல்லாரை. இந்தச் செடியை வேருடன் பிடுங்கி எடுத்து நன்கு சுத்தம் செய்து பசும்பால் அல்லது ஆட்டுப்பால் சேர்த்து பசைபோல் அரைத்து ஒருவாரம் தொடர்ந்து உண்ண வேண்டும். பின்பு சில நாட்கள் இடைவெளி விட்டு மீண்டும் ஒரு வாரம் இதை உண்ணலாம். வல்லாரையின் முழுப்பயனையும் பெற விரும்புவோர் அதை பச்சையாக (பறித்து வந்தவுடனேயே) பயன்படுத்த வேண்டும்.

வெண்டைக்காய், முருங்கைக்காய், கீரைகள் போன்றவைகளும் மூளையின் செல்களைக் குளிரவைத்து நினைவாற்றலைத் தூண்ட வல்லவை. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இவற்றை நிறைய கொடுக்க வேண்டும்.

தாழம்பூ, மல்லிகை போன்ற மலர்களின் மணம், சந்தன கட்டைகள் எரிக்கும் போது வரும் வாசனை இவைகளை முகர்வதனாலும் மூளை புத்துணர்ச்சி பெறும்.


மூளையின் செயல் திறனையும், நம் நினைவாற்றலையும் பெருக்க வல்லதுதான் சிரசாசனம். ஆனால் இதைப் பயிற்சி பெற்ற நிபுணரின் துணையுடன்தான் செய்ய வேண்டும்.

சுவாசப் பயிற்சியான பிராணாயாமமும் கூட நினைவாற்றல் தர வல்லது தான். இவற்றைக் குழந்தைகளுக்குத் தகுந்த ஆசானைக் கொண்டு கற்பியுங்கள். சிறந்த பலனைப் பெறுவீர்கள்.

பேட்டி : **வைதேகி தேசிகன்**



இந்து சமயத்தில் 'நீத்தார் கடன்' என்று இறந்தவர்களுக்குச் செய்யப்படும் சடங்குகள், முக்கியமாகக் கருதப்படுகிறது. பித்ரு கர்மாக்கள் ஆண்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்டிருக்கின்றன. பெண்களை பலகாரணங்களால் விலக்கியிருப்பதும் உண்மைதான். ஆனால் கேரளாவில் மட்டுமே, பித்ரு கர்மாக்கள் பெண்கள் மட்டுமே செய்தால்தான் மோட்சம் என்று நடப்பில் நடந்து வருகிறது. இங்கு ஆண்கள் முக்கியமாக செய்வதில்லை. வேண்டுமானால், செய்யலாம். செய்யாவிட்டாலும் அது தப்பாகவோ, முக்கிய வேண்டுகோளாகவோ எடுப்பதில்லை. அதற்குக் காரணங்களும் உண்டு. மற்ற மாநிலங்களில் ஆண்மகன்தான் வாரிசு என்று கருதப்பட்டு வருகிறது. குடும்பம் நிலை நிறுத்த ஆண் குழந்தை ஒன்று பிறக்க வேண்டும் என்று பழைய காலம் முதல் யாகம் செய்து,



கேரளாவில் பெண்கள் 'நீத்தகடன்' செய்கிறார்கள்!

ஆண்சிசுவிற்காக தவம் இருந்த கதைகளும் உண்டு. ஆனால் பெண் குழந்தை பிறக்க வேண்டும் என்று யாரும் தவம் இருந்தோ, யாகம் செய்தோ கேட்டிருக்கிறீர்களா?

ஆனால் கேரளாவைப் பொறுத்தவரை பெண்கள்தான் குடும்ப வாரிசு. எத்தனை ஆண் குழந்தைகள் பிறந்தாலும், ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று வேண்டுதல்கள் நடத்துபவர்களும், அங்கப் பிரதட்சணம், துலாபாரம் தூக்குவது என்றும், இப்படி பலப்பல பிரார்த்தனைகள் நடத்துபவர்களும் இங்கு ஏராளம். யானை நடை தள்ளுகிறேன் என்றும் (அதாவது யானையை கோயிலுக்குக் கொடுப்பது) ஐயப்பனுக்கு நெய்யாட்டு நடத்துவதாகவும் வேண்டுதல் செய்பவர்கள் ஏராளம். இப்படி ஒரு பெண் குழந்தை பிறந்து வம்சம் விருத்தியடைய வேண்டுபவர்கள்தான் இங்கு இருக்கிறார்கள்.

காரணம் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கு நல்லமதிப்பும், மரியாதையும் கொடுத்து எல்லா காரியங்களுக்கும் அவர்களைக் கேட்டுச் செய்கின்றனர். பிறந்த வீடுதான் அவர்களுக்கு முக்கியமே தவிர, திருமணம் ஆனாலும் புகுந்தவீடு அவர்களுக்கு நிரந்தரம் இல்லை. திருமணம் ஆனாலும் இறக்கும் வரை அவர்கள் பிறந்த வீட்டிலேயே நிலையாக இருந்து விடுகிறார்கள். தாய், தந்தை இறந்தாலும் அவர்களுக்கு அதாவது பெண்களுக்குத்தான் பத்து அல்லது பதினைந்து நாட்கள் தீட்டு, ஆண்களுக்கு மூன்று நாட்கள்தான். இறந்தவர்களுக்குச் செய்யும் கர்மங்கள், பெண்தான் எடுத்துச் செய்ய வேண்டும். பிண்டம் வைப்பது முதல் எல்லாமே பெண்கள்தான். புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய் செய்வதும் பெண்களே!

நம்பூதிரி, வாரியர், புதான், செருமக்கள், தண்டாமார், நம்பியார், இம்ராந்திரி, பணிக்கர், எழுத்தச்சன், இழுவன்மார், பிள்ளை, தட்டாமார்,

நாயடி, மூப்பனார் என்று எல்லாவகைப் பிரிவினருக்கும் பெண்கள்தான் நடுநாயமாக எல்லாமே செய்ய வேண்டும். குலம் விளங்க ஒரு பெண் வேண்டும் என்றுதான் அவர்கள் சொல்வார்களே தவிர ஒரு ஆண் வேண்டும் என்று அவர்கள் சொல்வதில்லை. குழந்தை பிறந்தவுடன் பெண்ணா என்று கேட்கும் இந்திய சமுதாயத்தில் கேரளாவில் அந்தக் கேள்விக்கு இடமே இல்லை. எத்தனை பெண் குழந்தைகள் பிறந்தாலும் அவர்கள் முகம் களிப்பதில்லை.

மருமக்கள்தான் அதாவது ஒரு ஆண்மகனுக்குக் குழந்தைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவனுடைய சகோதரியின் மக்கள்தான் அந்த ஆண் மகனுக்குரிய கர்மங்களைச் செய்ய வேண்டும். அப்போதும் அங்கு பெண்ணுக்குத்தான் முதல் இடம். மக்கள் தாயம், மருமக்கள் தாயம் என்று சொல்லுவார்கள். உடன் பிறந்த சகோதரிகளை உயர்வாக நினைக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் இறந்தவர்களுக்குச் செய்யும் கர்மங்களை புண்ணியஸ்தலங்களான திருநாவாயா, திருவில்லாமலை போன்ற இடங்களில் புழைகளில் போய் செய்கிறார்கள். இதற்கு வலி இடுதல் என்று சொல்லுவார்கள்.

க்ஷேத்திரத்தில் போய் செய்தால் விசேஷம் அதிகம் என்று நம்பிக்கை உள்ளவர்கள் அவர்கள். எவ்வளவு பெரிய பணக்காரனும், ஏழையும் ஒரே போல் இங்கு போய் செய்வதால் திருநாவாயா, திருவில்லாமலை பிரசித்தி பெற்ற ஸ்தலங்களாகின்றன. என்றும், தண்ணீரும் இறைத்துத் தம் இறந்த உறவினருக்குச் செய்யும் கடமைகளை இங்குள்ள பெண்கள் செய்வது போல், மற்ற மாநிலங்களில் ஆண்கள் மட்டும்தானே செய்கிறார்கள் என்றால் அதற்குக் காரணங்கள் என்ன என்று ஆராய்ந்தால் எல்லாம் ஒரு நம்பிக்கை என்றும் வழி வழியாக முன்னோர்கள் வைத்துள்ள கோட்பாடுகள் என்றுதானே சொல்ல முடியும்? இதற்குத் தகுந்த காரணங்கள் இருக்குமானால் நாமும் தெரிந்து கொள்ளலாம்.

— வி.எஸ். லட்சுமி அரிகரன்

வா ழ் க் கை வண்ணங்கள்

கட்டுரைப் போட்டி - 8



"எந்த அம்மாவிற்கு அவளுடைய உழைப்பையும், பெருமையையும், கஷ்டங்களையும் புரிந்து கொண்டு புடவை பரிசளிக்க ஆசைப்பட்டு பணம் போதாமல் அவர் புடவை மிஷேலிய பெயிண்ட் செய்து பரிசளித்தேன் என எழுதி பரிசு பெற்றேனோ அதே அம்மாவின் ஆசி என்று தான் நினைக்கிறேன். நீங்கள் இந்தச் சமயம் பரிசைக் கொண்டு வந்து கொடுத்தது."

எனக் கண்களில் நீர் தளும்பக் கூறினார் ஷோபா ராம்ஜி. ஹைதராபாதில் இருக்கும் அவர் சென்னைக்கு வந்த சமயம், அவர் தங்கியிருந்த மைத்துனர் வீட்டில் கொண்டு போய் பரிசினைக் கொடுத்தோம். வீடு நிறைய 'ஜேஜே' வென்று உற

கும் அவருடைய மைத்துனர் மகனுக்கும் உபநயன விசேஷம். மாமியார், மாமனார், பெரிய மைத்துனர், அவர் மனைவி, ஷோபா, அவரின் கணவர் ராம்ஜி, ஷோபாவின் சகோதரர், குழந்தைகள் எனப் பார்த்தபோது சந்தோஷமாக இருந்தது.

''எங்களைக் கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கிய அம்மா இப்போ இல்லைன்னாலும் அவங்களோட ஆசி எங்களுக்கு எப்பவும் உண்டுங்கறது இது மூலமாகவே நிருபணமாயிருக்கு'' என்றார் ஷோபா. குடும்பத்தில் அத்தனை பேருக்கும் சந்தோஷம். செண்பகம் சில்க்ஸ் உரிமையாளர், ஜம்பகம் இவருக்கு என்ன கலர் புடைவை எடுத்து வருவார் என அவர்களுக்குள் போட்டியே வைத்திருக்கிறார்கள்! அதில் ஏறக்குறைய எழுதி ஜெயித்தது ஷோபாவின் மகன்தான். மங்களகரமான மஞ்சள் கலரில் அரக்கு பார்டருடன் அழகாக மின்னியது செண்பகம் சில்க்ஸ் புடைவை.

அதற்கு முந்தைய மாதம் பரிசு பெற்ற வள்ளி சந்திரசேகருக்கு நாங்கள் பரிசளித்த சமயமும் அவருடைய வளைகாப்பு சமயம் தான். ''கடவுள் அருள்தான், நாம் இப்படி நம்மையறியாமலே இப்படிப்பட்ட சந்தர்ப்பங் களில் பரிசு தருகிறோம்....'' என சந்தோஷப்பட்டுக் கொண்டோம்....

இனி அடுத்த மாத போட்டி பற்றி....

மங்கையர் மலரும், செண்பகம் சில்க்ஸும் இணைந்து ஒரு கட்டுரைப் போட்டியினை அறிவித்திருந்தோம். புடைவை சம்பந்தமாக பெண்களுக்குப் பல்வேறு சம்பவங்கள் வாழ்க்கையில் நடந்திருக்கலாம். அந்த உணர்வுகளையே ஒன்பது பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு உணர்வு வெளிப்படுத்துவதாகப் போட்டிகளை அறிவித்து வருகிறோம்.

செண்பகம் சில்க்ஸ் பட்டுப்புடைவை பரிசு பெறும் வாசகிகளுக்கு நேரிலோ, தபாலிலோ பரிசினை தருவது என முடிவெடுத்துள்ளோம். அவ் வப்போது அவற்றினை பற்றிய அறிவிப்பைப் புகைப்படங்களோடு பிரசுரிக்க உள்ளோம்.

சரி, இப்போது எட்டாவது மாதப் போட்டிக்குப் போவோமா?

எட்டாவது மாதப் போட்டிக்கான தலைப்பு

மகிழ்ச்சி

- புடைவை சம்பந்தமாக உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுத்திய நிகழ்ச்சியை, அல்லது உங்களுக்குத் தெரிந்தவர் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுத்திய நிகழ்ச்சியை எழுதி அனுப்புங்கள்.

போட்டிக்கான நிபந்தனைகள் :

❖ வாழ்வின் வண்ணங்கள் போட்டியில் இது எட்டாவது மாதப் போட்டி, மொத்தம் ஒன்பது மாதங்கள் நடைபெறும்.

❖ ஒவ்வொரு மாதமும் போட்டிக்கு வரும் கட்டுரைகளில் மிகச் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து ரூ. 5000/- பெறுமானமுள்ள 'செண்பகம் சில்க்ஸ்' பட்டுப் புடைவை பரிசாக அளிக்கப்படும்.

❖ இந்தப் போட்டிக்கான கட்டுரை ஒரு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

❖ கட்டுரையின் முடிவில் உங்களுடைய பெயர், முகவரியைத் தெளிவாக எழுதவும்.

❖ தபால் கவரின் மேல் வாழ்வின் வண்ணங்கள் கட்டுரைப் போட்டி - 8 எனத் தவறாமல் குறிப்பிடவும்.

❖ இம்மாதக் கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 20.7.96.

❖ கட்டுரைகளைத் தபாலில் மங்கையர் மலர் முகவரிக்கோ அல்லது தபாலிலோ (அ) நேரிலோ செண்பகம் சில்க்ஸ், 30-பி, லஸ் அவின்யூ, சென்னை - 600 004 என்ற முகவரிக்கோ அனுப்பவும். இரண்டு இடத்திற்கும் ஒரே கட்டுரையைப் பிரதி எடுத்து அனுப்ப வேண்டாம்.

❖ நேரில் கட்டுரைகளைச் சேர்க்கும் வாசகியருக்கு செண்பகம் சில்க்ஸ் உரிமையாளர் திருமதி. செண்பகம் ராமசாமி ஒரு அன்பளிப்பைத் தரவிருக்கிறார்.

❖ கட்டுரை சம்பந்தமான கடிதப் போக்குவரத்தோ, திருப்பி அனுப்புவதோ கிடையாது.

❖ கட்டுரை சம்பந்தமான விதிகளைத் திருத்தவோ மாற்றவோ ஆசிரியருக்கு உரிமையுண்டு.

❖ பரிசு பெறும் கட்டுரைகளைப் பொறுத்த வரை ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

ரூ. 5000 மதிப்புள்ள செண்பகம் சில்க்ஸ பட்டுப் புடைவை பரிசு பெறும் கட்டுரை.

இது அடிமைத்தனமா?

என் அப்பாவிற்கு அடிக்கடி வெளியூர் சென்று வரும் வேலை. ஒருமுறை அப்பா அம்மாவிற்கு புடைவை வாங்கி வந்தார்கள். நன்றாகவே இல்லை. ஆனால் அம்மா,

''நன்றாக இருக்கின்றது. இதுவே அந்தக்



களாக இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்" என்றார்கள்.

எனக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை. நான் கேட்டேன், "அப்பாவுக்கு பயந்து கொண்டுதானே அப்பா மனம் நோகக் கூடாது என்றுதானே இப்படிக் கூறுகிறீர்கள். இதுதான் என் போன்ற இளைய தலைமுறையினர் களுக்குப் பிடிப்பதில்லை. நன்றாக இல்லை என்றால் நன்றாக இல்லை என்று கூறினால் தானே அடுத்தமுறை பார்த்து வாங்கி வருவார் கள். உங்களைப் போன்றவர்களால்தான் பெண் களை மட்டமாக நினைக்கிறார்கள் ஆண்கள்" என்றேன். அதற்கு என் அம்மா முன்பு நடந்த நிகழ்ச்சியைக் கூறினார்கள்.

"உன் அப்பா வெளியூரிலிருந்து முதன் முதலில் எனக்கு ஒரு புடைவை வாங்கி வந்தார் கள். வயதானவர்கள கட்டிக் கொள்ளும் புடைவை போல் இருந்தது. அதைப் பார்த்த உடன் எனக்கு ஒரே எரிச்சல். என் வீடாக இருந்தால் இதை யார் கட்டுவார்கள் என்று தூக்கிப் போட்டிருப்பேன். நன்றாக உள்ளதா என்று உன் அப்பா கேட்டார்கள். நன்றாக உள்ளது என்று கூறிவிட்டு என் வேலையைப் பார்த்தேன்.

சில நாட்கள் கழித்து உன் அப்பா அவர் நண்பருடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட் டேன். நண்பர் கேட்டார், "உங்கள் வீட்டில் வாங்கி வந்த புடைவையால் பிரச்னை ஒன்றும் இல்லையா" என்று "ஒன்றும் இல்லையே" என்றார் உன் அப்பா. "எங்கள் வீட்டில் காசு கொடுத்து அலைந்து திரிந்து புடைவை வாங்கி வந்து திட்டு வாங்கியதுதான் மிச்சம். என்ன புடைவை இது? பார்த்து வாங்கக்கூடாது? இவ் வளவு பணம் கொடுத்து இது என்ன புடைவை, கலரும் டிசைனும்" என்று ஒரே திட்டுதான். "இனிமேல் இந்தப் புடைவை வாங்கும் பிசினஸே வேண்டாம். நீயே பார்த்துக் கொள்" என்று கூறிவிட்டேன் என்றார்.

அதற்கு உன் அப்பா, "எங்கள் வீட்டில் நான் எது வாங்கி வந்தாலும் என் மனைவிக்குப் பிடிக்கும். அப்படி ஒரு உயர்ந்த குணம்

அவளுக்கு" என்றார்.

அதைக் கேட்ட எனக்கு உடலே புல்லரித்துப் போய் விட்டது. என் எரிச்சல் போன இடம் தெரியவில்லை, மனத்தில் பெருமை பொங்கி வழிந்தது. அதிலிருந்து இன்று வரை புடைவை என்று இல்லை எந்தச் சாமானாக இருந்தாலும் நேரடியாக நன்றாக இல்லை என்று முகத்தில் அடித்தாற்போல் சொல்லாமல் பிறகு ஒரு சமயம் மெதுவே சொல்லிப் புரிய வைக்கிறேன். அதனால் அவர்களுக்கும் மனக் கஷ்டம் இல்லை. நமக்கும் பொருள் கிடைப்பதில் தடங்கல் இல்லை. இது என்ன அடிமைத் தனமா?" என்று என் அம்மா கேட்டார்கள்.

அதைக் கேட்டு நான் இளைய தலைமுறையினர்களுக்கு வேகத்துடன் விவேகமும் வேண்டும் என்று புரிந்து கொண்டேன். அன்றிலிருந்து நான் மட்டுமல்ல என் அக்கா, அண்ணன் எல்லோருமே அந்தப் பழக்கத்தைக் கடைபிடிக்கிறோம். எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்குகின்றோம். யாராவது அப்படி முகத்தில் அடிப்பது போல் பேசுபவர்களையும் இந்நிகழ்ச்சியைக் கூறி மாற்றி விடுவோம்.

என் தந்தையும் ஒவ்வொரு முறை வெளியூரிலிருந்து வரும் போதும் ஏதாவது ஒரு பொருளோ டிரஸ்ஸோ வாங்கி வருவார்கள். அதிலே அப்பாவுக்கு மன நிறைவு, எங்களுக்கு மன மகிழ்ச்சி.


இதைப் படித்தால் இன்னும் அதிகப் பேர்கள் மாறுவார்கள் என்று நம்புகிறோம்.

— ஆர்.பி. அகில், திருச்சி - 13.

பிரசுரத்திற்கு....

எரிச்சலோ எரிச்சல்!

25 வருடங்களுக்கு முன்பு நடந்த கதை. திருமணமாகி 6 மாதங்களில் என் கணவர் எனக்கென வாங்கின பரிசு - பூ ஒன்றுதான். எனக்கு ஏதாவது வாங்க வேண்டும் என்று





அவர் விரும்பும் சமயம் புதிதாக ஒரு செலவு வந்து விடும்; அது நிறைவேறாது. இதில் எனக்கு மிகவும் குறைதான். ஒரு சமயம் திருமணம் ஒன்றுக்கு நாகப்பட்டினம் சென்றோம். பணமும் கொஞ்சம்தான் இருந்தது. இருந்தாலும் நிறைய கடைகள் ஏறி இறங்கி எனக்கென முதன் முறையாக ஒரு ஃபாரின் புடைவை வாங்கினார். இலைப் பச்சை நிறத்தில் மஞ்சள் கலர் பூக்கள் தெளித்தாற் போல் - பளிச்சென மின்னின அப்புடைவையைப் பாராட்டாதவர்களே இல்லை. 'திருமண நாள் வரட்டும்' அதைக் கட்டிக் கொள்ளலாம்' என்று வைத்திருந்தேன்.

ஒரு சமயம் புதிதாகத் திருமணமான என் சகோதரியை நாங்கள் விருந்துக்கு அழைத்திருந்தோம். அவள் மேல் எனக்குப் பிரியம் அதிகம். சமையல் பரபரப்பில் என் கணவரும் அவர்களும் சேர்ந்து சீட்டு விளையாடுவதில் நான் கலந்து கொள்ளவில்லை. அது சமயம் என் புதுப்புடைவையைப் பற்றி இவர் கூற, அவளும் எடுத்துப் பார்த்துவிட்டு, மிகவும் நன்றாக இருப்பதாயும் தனக்கும் ஒன்று இது போல் வாங்கித் தரும்படி கூறியதும், தாராளமனது கொண்ட என்னவர், "பரவாயில்லை உன் அக்காவிற்கு வேறு நான் வாங்கித் தருகிறேன். இதை நீ வைத்துக் கொள்," என்று வாரி வழங்கி விட்டார். இவளும் எடுத்துக் கொண்டாள். இது பற்றி என்னிடம் கூற இருவருமே மறந்து விட்டனர்.

மறுநாள் தற்செயலாக அதைத் தேடிய நான், அன்று மாலையில் வீடு திரும்பின என் கணவரிடம் அழுது கொண்டே, "புடைவை காணவில்லை" என்று கூறினேன். பிறகுதான் என் கணவர் அது பற்றிக் கூறினார். அன்புச் சகோதரிகளுக்குள் சண்டை வராது என்று நம்பினவர், என் மனத்தில் ஏற்பட்ட ஆதங்கத்தையும் கோபத்தையும் புரிந்து கொள்ளவில்லை. நாகரிகம் கருதி, நானும் ஏதும் பேசவில்லை. என் திருமண நாள் அன்று வேறு புடைவை கட்டிக் கொண்டாலும், பச்சைப் புடைவையின் எண்ணம் எழாமலில்லை.

திடீரென என் தம்பிக்கும் திருமணம் நிச்சயமாயிற்று. மணம் முடித்த கையுடன் என் வீடு, என் சகோதரி வீடு என்று விருந்துக்கு வந்திருந்தனர். என் சகோதரி தன் பரிசாக அந்தப் பச்சைப் புடைவையை என் தம்பியின் மனைவிக்குக் கொடுத்த விஷயம் எனக்குத் தெரியாது.

ஒரு ஆடி வெள்ளிக்கிழமை நாங்கள் அலைவரும் பழனிக்குப் போக எண்ணினோம். அன்று அதிகாலை அனைவரும் திண்டுக்கல் பஸ் ஸ்டாண்டில் சந்தித்துக் கிளம்ப ஏற்பாடு. நாங்கள் போவதற்குள் என் சகோதரியும், என் தம்பியும் குடும்பத்தோடு வந்திருந்தனர். கடைசியாகச் சென்ற எனக்கு ஒரே ஷாக்! ஏனெனில் என் கண்ணில் நின்ற அப்புடைவை என் தம்பியின் கொழுந்தியாள் இடுப்பில் பளீரென மின்னியது. முதலில் யாரிடம் என்ன, எப்படிக் கேட்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வழியாக பஸ்ஸில் விஷயத்தைக் கிரகித்தேன். என் தம்பி மனைவிக்கு இப்புடைவை ராசியில்லாததால் தன் தங்கைக்கு அவள் கொடுத்து விட்டாளாம். எப்படிப் போகிறது கதை பாருங்கள்!

என் ஆதங்கமும், ஆத்திரமும் என் கணவர் மேல்தான்! மறுபடியும் மறுபடியும் என் கனவில் தோன்றிய அப்புடைவையைப் பார்த்த எனக்கு அதன் மேல் தீராத ஒரு வெறுப்புதான் ஏற்பட்டது. விஷயத்தைப் புரிந்து கொண்ட என் கணவர் பரிதாபமாக என்னைப் பார்க்க, எனக்கு ஏற்பட்ட எரிச்சல் இருக்கிறதே சொல்லி மாளாது போங்க! அதோடு அந்தப் புடைவை மோகமும் மறைந்தது.

— முத்துலட்சுமி, திண்டுக்கல்.

விடுமுறையில் வெளியூரில் இருந்து அக்கா என் வீட்டிற்கு வந்திருந்தார். அந்த வருடம் வரப் போவது என் 25 வது திருமண நாள் ஆதலால் எனக்கு ஒரு புடைவை பரிசளிக்கப் போவதாக சொன்னார். நான் புடைவை சிகப்புக் கலரில் எடு என்று கூறினேன். அருகில் இருந்த என் கணவரோ, "நீ சிகப்புக் கலரைவிடவே மாட்டாயா?" எனக் கிண்டல் செய்தார். இதற்கிடையில் என் கணவர் வெளியூர் சென்று விட என் அக்கா கடைக்குச் சென்று புடைவை எடுத்து வந்தார்.

"உனக்குப் பிடித்த சிகப்புக் கலரிலேயே புடைவை அமைந்து விட்டது" எனக் கூறவே மிகவும் ஆசையாக எடுத்துப் பார்த்தேன். மிகவும் விலை உயர்ந்த அந்தப் புடைவையில் டிசைன் எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

"இவ்வளவு விலை கொடுத்து இப்புடைவையை ஏன் வாங்கி வந்தாய்?" என நான் கேட்க அக்கா மிகவும் எரிச்சல் அடைந்து, "உன் குணம் தெரிந்துதான் கடையில் மாற்றிக



கொள்வதாக சொல்லி வாங்கி வந்தேன். பில்லை பத்திரமாக வை" என என் கையில் கொடுத்தார்.


இரண்டு நாள் கழித்து நல்ல சித்திரை வெயிலில் புடைவையை எடுத்துக் கொண்டு கடைக்குச் சென்றேன். புடைவையை மாற்ற வேண்டும் என கடைக்காரரிடம் சொன்னால் அவரோ, டேமேஜ் இருந்தால் மட்டும் புடைவையை மாற்றுவதாகக் கூறினார். அப்போது எனக்கு வந்ததோ எரிச்சலோ எரிச்சல். நானும் பில்லை காட்டி விபரத்தைக் கூறினேன். பின்னும் அவர் மறுக்கவே நான் கோபத்தில் சத்தம் போட்டேன். கடைசியில் வேறு வழியில்லாமல் கடைக்காரரும் எரிச்சலுடன் புடைவையை வாங்கிக் கொண்டு மாற்றிக் கொடுத்தார்.

அன்றிரவு வெளியூர் சென்றிருந்த என் கணவர் வீட்டிற்கு வந்தார். 'பஸ் ஸ்டாண்டிலிருந்து துணிக்கடை சென்று உனக்குப் புடைவை எடுத்து வந்திருக்கிறேன்' என்று கூறினார். நான் மிக ஆர்வமாக புடைவை கவரை பிரித்தால் எந்த புடைவையை நான் சண்டை போட்டு மாற்றிக் கொண்டு வந்தேனோ அதே பழைய டிசைன் சிகப்புப் புடைவை! எனக்கு எப்படி இருந்திருக்கும்? இப்புடைவை கதையை என் கணவரிடம் கூறவே அவரும் எரிச்சல் அடைந்து இதைத் திரும்பவும் மாற்ற முடியாது பீரோவில் வை என சத்தம் போட்டார். இப்படி அனைவரின் ஒட்டுமொத்த எரிச்சலையும் பெற்ற இப்புடைவையைப் பார்க்கும் போதெல்லாம் இப்போது சிரிப்பு வருகிறது.

— ஆர். சீத்தாலஷ்மி ராமானுஜம், சீர்காழி.

தீபாவளிக்கு ஒரு பரிசு!

எங்கள் குடும்பமும் எங்கள் அத்தையின்



குடும்பமும் பக்கத்து வீடுகளாக இருந்தன. அத்தையும் அவர் கணவரும் வயதானவர்கள். பெண்களை திருமணம் செய்து கொடுத்து, பிள்ளைகளையும் படிக்க வைத்து, அவரவர் குடும்பங்களை டெல்லியிலும் நாக்பூரிலுமாக வைத்து விட்டு, வரும் பென்ஷனில் ஹாயாக மனைவியுடன் மறுபடி தனிக் குடித்தனமாக இருந்து கொண்டிருந்தார். என் பெற்றோருக்கு அவர்களிடம் மிகுந்த மரியாதை, பயபக்தி எல்லாம் உண்டு.

அத்தையின் கணவர் பயங்கர கருமி. அத்தை அதற்கு மேல் சிக்கனம். உதாரணத்திற்கு ஒன்று சொல்லலாம். காலையில், உப்புமா செய்ய வேண்டும். நாலு பச்சை மிளகாய் இருந்தால் கொடு', என்று எங்களிடம் கேட்டு வாங்கிக் கொண்டு போவார். உப்புமா செய்து விட்டு அடுப்பிலிருந்து இறக்கி, அதிலிருக்கும் பச்சை மிளகாய் துண்டுகளை பொறுக்கியெடுத்து இரண்டு தேங்காய் வில்லைகளை அதனுடன் வைத்தரைத்து மோர்க் குழம்பு செய்து விடுவார். கேட்டால், "அந்தப் பச்சை மிளகாய் துண்டுகளில் இருக்கும் காரத்தை வீண் செய்வானேன்? இரண்டு பச்சை மிளகாய் லாபம் தானே!" என்பார்.

என் அத்தை கணவரிடமிருந்து ஒரு நாலணாவாவது வாங்கிக் காட்டுகிறேன், பார் என்று பந்தயம் கட்டி தோற்றுப் போன அனுபவம் எனக்கும் என் அண்ணனுக்கும் நிறையவே உண்டு.

ஒரு தீபாவளிக்கு அப்பா எனக்கு ஒரு சில்க் புடைவை வாங்கித் தந்தார். அதைக் கொண்டு போய் அத்தையின் கணவரிடமும் அத்தையிடமும் காண்பித்தேன். பளபளவென்று ஆங்காங்கே ஜரிகைத் தெளிப்புடன் ஜொலித்த அதைப் பார்த்து விட்டு அவர், "அட.. பேஷாயிருக்கே! இதே மாதிரி இன்னும் ஒன்று



உளுந்து செலவில்லாமல் ஊத்தப்பம் செய்ய:

2 டம்ளர் பச்சரிசி + ½ டம்ளர் அவல் என்ற விகிதாசாரத்தில் இரண்டையும் அரைமணி நேரம் ஊறவைத்து, நைசாக அரைத்தெடுத்து சிறிது புளித்த மோர் சேர்த்து உடன் சற்றுக் கனமாக வார்த்தெடுக்க, பைசா உளுந்து செலவில்லாமல் அருமையான ஊத்தப்பம் தயார். (முதல் நாள் இரவே அரைத்து வைத்துச் கூட மோர் கூட வேண்டியதில்லை).

— ஏ. சாரதா


'' பாரசூட் ஹெர்பல்
தலைமுடிக்கு
தருகிறது
தலைசிறந்த ஊட்டம்''
Parachute Herbal
எக்ஸ்ட்ரா ஊட்டம் செறிந்த பாரசூட் ஹெர்பல். பின்னல் போலே வலுவாக்கும்.
S S C & B * HBL * 154 * 2013 * TM

வாங்கிக் கொண்டேன்" என்றார்.

நான் குறும்புடன், "நீங்கள் வாங்கித் தந்தால், நன்றாயிருக்குமே!" என்று கூறி விட்டேன்.

அவர் சிரித்துக் கொண்டார், "பார்க்கலாம்," என்றார்.

அத்துடன் நான் அந்த சம்பாஷணையை மறந்து விட்டேன். தீபாவளி என்றைக்கு வரும், எப்போது சில்க் புடைவையைக் கட்டலாம் என்ற ஏக்கத்துடன் அதைப் பெட்டியிலிருந்து எடுத்து எடுத்துப் பார்த்து, மறுபடி பெட்டியில் வைத்து மூடுவேன்.

தீபாவளிக்கு முதல் நாள் அவரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. போனேன்.

"இங்கே வா. அதோ ஆணியில் மாட்டி யிருக்கு பாரு, அந்தப் பையை எடு" என்றார். முகத்தில் பெருமிதத்துடன், எடுத்தேன். "அந்தப் பொட்டலத்தைப் பிரி. என்ன இருக்கு பாரு" என்றார்.

பிரித்தேன்.

அகலமும் இல்லாமல் நீளமும் இல்லாமல் சாக்கு மாதிரி ஒரு புடைவை. சாக்கு கலரே. எந்தக் கடையிலோ கழித்துக்கட்டின, சீப் ரேட் புடைவை.

"எப்படி இருக்கு? உனக்குதான்!" முகத்தில் கர்வம் பொங்கக் கேட்டார்.

"ஓ, ரொம்ப நல்லாயிருக்கே. இருங்க. அம்மா விடம் காமிச்சுட்டு வரேன்" என் அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு அம்மாவிடம் ஓடினேன்.

வீட்டுக்குச் சென்று அம்மாவின் மடியில் புடைவையைப் போட்டு விட்டு விஷயத்தைச் சொன்னேன்.

"அடடா, அவரிடம் நீ ஏன் இப்படிக் கேட்டாய்? உனக்கு வாய்க் கொழுப்புத் தானே! இப்ப பார். அப்பா வாங்கித் தந்ததைக் கூட நீ கட்ட முடியாமல் போய் விட்டதே!" என்று பரிதாபப்பட்டாள் அம்மா. "ஏன்?" திகிலோடு கேட்டேன். அம்மா சொன்னபடிதான் நடந்தது.

தீபாவளியன்று, "பெரியவர் ஆசையுடன் வாங்கித் தந்த புடைவை. அதைத்தான் கட்டணும். இல்லையென்றால் தன்னை அவமானப் படுத்துவதாக அவர் நினைப்பார். தீபாவளி வருடா வருடம் வரும். போகும். அவர் மனதைப் புண்படுத்தக் கூடாது" என்று அப்பா கண்டிப்பாகச் சொல்லிவிட, நான் ஏக எரிச்சலும் கண்ணீருமாக அதைச் சுற்றிக் கொண்டு அந்தத் தீபாவளியைத் தள்ளி விட்டது வேறு விஷயம்.

"அவரிடமிருந்து அந்த பத்து ரூபாய் புடைவையை எப்படியோ கறந்துட்டியே நீ கெட்டிக்காரிதான்" என்று அண்ணன் வேறு கிண்டல் செய்ய அந்தத் தீபாவளி எரிச்சல் தீபாவளியாயிற்று.

— சாரதா ராமமூர்த்தி, ஊட்டி.

வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக் கல்?

'வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக்கல்?' போட்டியில் பரிசு பெற்ற இக்கட்டுரையாளர்களுக்கு ரூ.500/- மதிப்புள்ள வண்ண முத்துமாலை செட்டினைப் பரிசாக அளிப்பவர் சென்னை தி.நகர் வடக்கு உஸ்மான் ரோட்டில் ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ் எதிரில் இருக்கும் ஜெய்ப்பூர் ஜெம்ஸ் இன் ஜுவல்ஸின் உரிமையாளர் ராஜேந்திர குமார் எம்.மேத்தா.

என்னுடைய கடைசித் தங்கைக்கு, பல இடங்களிலிருந்து ஜாதகம் வந்தபோதிலும், எதுவும் பொருந்தாமல், திருமணம் ஆகாமல் தள்ளிக் கொண்டே போயிற்று. மேலும் பல கோவில்கள் சென்று பிரார்த்தனைகள் செலுத்தியும், விரதங்கள் இருந்தும் பார்த்தாயிற்று. ஒரு பலனுமில்லை. அந்த நேரத்தில் அதிருஷ்டக் கல்லைப் பற்றி கேள்விப்பட்டு என் தங்கையின் ஜாதகத்துக்கு ஏற்ற கல்லை (கல் வைத்த மோதிரம்) வாங்கி வந்தோம். என்ன ஆச்சரியம்! அந்த மோதிரம் அணிந்த அன்றே அதாவது காலையில் மோதிரத்தை அணிந்திருப்பாள் மதியம் பெண் பார்க்க வரப் போவதாக செய்தி சொன்னவர்கள், வந்து பெண் பார்த்ததுடன் மட்டுமல்லாமல் நிச்சயதார்த்த நாளையும் குறித்து விட்டுப் போனார்கள். இப்போது அவளுக்கு கல்யாணமாகி கணவருடன் சந்தோஷமாக குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கின்றாள். அந்த அதிருஷ்டக் கல் பதித்த மோதிரம்தான் அவளுக்கு வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று



நாங்கள் முழு மனதாக நம்புகின்றோம்.

நிற்க,

என் தங்கையின் வாழ்வில் அதிர்ஷ்டக் கல் ஏற்படுத்தும் திருப்பத்தைக் கண்டு என் கணவருக்கும் அதுபோல் அதிர்ஷ்டக்கல் பதித்த மோதிரம் வாங்கி வந்தோம். ஏன் எனில் என் கணவர் சிறுவயது முதலே வாழ்வில் பல இன்னல்களை அனுபவித்ததோடு இல்லாமல் இப்பவும் மிகவும் கஷ்டமான நிலையிலுள்ளார். கிடைத்த வேலையிலும் திருப்தியில்லை. ஆரம்பித்த Businessலும் ஏகப்பட்ட நஷ்டம். இந் நிலையில் அந்த மோதிரத்தை அணிந்தால் மாற்றம் ஏற்படும் என்று முழு மனதோடு மிகவும்





நம்பிக்கையுடன் அவர் அணிந்து கொண்டார். அணிந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்று வரை பலன் எதுவுமில்லை. நாளை எப்படியோ......? தெரியவில்லை.

என்னைப் பொறுத்தவரையில், அதிர்ஷ்டக் கல், அணிந்தவுடனே, ஒருவர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இன்னொருவர் வாழ்வில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. சொல்லப் போனால் முன்பை விட இப்போது மேலும் கஷ்டப்படுகின்றார். ஆதலால் இதனை நம்புவதா? நம்பாமல் இருப்பதா என்பதே கேள்வி குறியாக உள்ளது. காலம்தான் தீர்ப்பு சொல்ல வேண்டும்.

-ராஜலக்ஷ்மி, சென்னை-91.

பவளம் தந்த தைரியம்

நான் சிறுவயது முதல் பவள மோதிரம் அணிந்து இருப்பதால் அப்போதெல்லாம் பவளத்தின் மகிமை தெரியாது. வகுப்பில் மிகுந்த தைரியசாலியாகவும், படிப்பில் கெட்டிக்காரியாகவும் இருப்பேன். ஒருநாள் பஸ்ஸில் பயணம் செய்யும்போது பவளம் விழுந்திருக்கிறது. அது எனக்குத் தெரியவில்லை. வெறும் மோதிரம் மட்டுமே அணிந்திருக்கிறேன். வகுப்பில் என் தோழியர் பார்த்துவிட்டு கூறிய பிறகுதான் தெரிந்தது. அப்போது மட்டும் கொஞ்சம் வருத்தப் பட்டேன். பிறகு அதைப் பற்றி மறந்து விட்டேன். வகுப்பில் பெரும்பாலும் முதலில் வரும் நான் பள்ளி இறுதி ஆண்டில் மதிப்பெண் குறைந்தேன். மிகுந்த தைரியசாலியான நான் கொஞ்சம், கொஞ்சமாக பயப்பட ஆரம்பித்தேன். எதற்கும் சட்டென்று முடிவெடுக்கும் நான் ஒரு சிறு விஷயத்திற்குகூட மனம் குழம்பித் தவித்தேன். அடிக்கடி உடல் நிலை வேறு பாதிக்கப்பட்டது. இந்த நிம்மதியற்ற நிலையிலேயே படிப்பை முடித்தேன். உள்ளூரிலேயே வேறு மேல் படிப்பிற்கு இடம் கிடைக்கவில்லை. வெளியூரில் சென்று தங்கிப் படிக்கும் நிலை ஏற்பட்டது. பெற்றோரின் பிரிவு எனக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது.


அப்போது என்னுடன் சேர்ந்து படித்த கல்லூரித் தோழி ஒருத்தி கரு நீலக்கல் மோதிரம் ஒன்று அணிந்திருந்தாள். அவளைப் பார்த்து, நான் "நீயோ நல்ல கருப்பு. ஏன் நீ வெள்ளை அல்லது லைட் கலர்ல கல் அணியாமல் இக்கல் அணிந்திருக்கிறாய்" என கேட்டேன்.

அதற்கு அவள் "எனக்கு இக்கல்தான் அதிர்ஷ்டம். இக்கல்லை அணியாமல் எங்கு

தொந்தி குறைய...

கீரை, முட்டைக்கோஸ், காலிபிளவரை தாராளமாகச் சாப்பாட்டில் சேர்த்து வந்தால் உடல் எடை தானாகக் குறைந்து விடும்.

-ராதிகா அழகப்பன்



பொதுமக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

எங்கள் நிறுவனத்தின் புதிய டெபாசிட் திட்டம்

5,000/- ரூபாயில் முதல் பரிசு பிரிமியர் பியட் கார்



ஸ்ரீ ராஜயோகம்

இன்வெஸ்ட்மென்ட்ஸ் & பைனான்ஸில்

- டிபாசிட் செய்யும் ஒவ்வொரு 5,000/- ரூபாய்க்கும் ஒரு பரிசுக்கூப்பன்.
- ஒவ்வொரு கூப்பனுக்கும் பரிசுபெற வாய்ப்பு உண்டு.

உங்கள் ஒவ்வொரு ரூ. 5,000/- முதலீட்டிற்கும்

25%

வருட வட்டி + ஊக்கத்தொகை ரூ. 50

காலம் 18 மாதங்கள் முடிவில்

ரூ. **6875/-**

பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பன் பெற்று போட்டியில் கலந்து கொள்ளுங்கள். இத்திட்டம் 30.7.1996 வரை

பரிசு விபரம்

1வது பரிசு - பிரிமியர் பியட் கார்	10 முதல் 100 வரை -
2வது பரிசு - கலர் டி.வி.	ரூ. 1,000 மதிப்புள்ள சேலை
3வது பரிசு - வி.சி.ஆர்.	100 முதல் 500 வரை -
4வது பரிசு - வாஷிங்மெஷின்	எவர்சில்வர் டிபன் கேரியர்
5வது பரிசு - பிரிட்ஜ்	500 முதல் இறுதி வரை -
6 முதல் 10 வரை - வெட்கிரைண்டர்	சுவர் கடிகாரம்

அதிர்ஷ்டசாலி தேர்வு நடைபெறும் இடம் : சேலம்

தலைமை அலுவலகம் : 49-ஏ, பெரமனூர் மெயின் ரோடு, சேலம் - 7. போன் : 411225, 414830.

கிளைகள் : பட்டாட் காம்ப்ளக்ஸ், 30, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014. போன் : 8550358.

4-B, சூப்பர் பஜார், விருத்தாசலம். போன் : 60772.

சென்றாலும் எனக்குத் தோல்விதான் கிட்டுகிறது" என்றாள். அப்போது நான் விளையாட்டாக நான் பவளம் அணிந்திருந்ததைப் பற்றிக் கூறினேன். என்னைப் பற்றி முழுமையாக, நன்றாக அறிந்தவள் அத்தோழி. அவள் "நீ பழையபடி பவள மோதிரத்தை அணிந்தால் உன் பழைய உற்சாகம், தைரியம், சந்தோஷம் எல்லாவற்றையும் பெறலாம். அது நம் உடலில் பட்டு, கரைவதே மிகுந்த நன்மை தரும்" என்றாள். நானும் அவள் வாக்கை வேதவாக்காக எடுத்துக் கொண்டு உடனே பவள மோதிரம் வாங்கி அணிந்தேன். அது முதல் எவ்வளவு ஆனந்தம் தெரியுமா? போன தைரியம், சந்தோஷம், நினைத்த காரியத்தில் வெற்றி, படிப்பில் முதன்மை, பல புண்ணிய ஸ்தலங்களைப் பார்க்கும் வாய்ப்பு என பல நன்மைகள் என்னைத் தேடி வந்தன. சாதாரண லக்ஷ்மி, தைரியலக்ஷ்மி ஆகி விட்டேன். அதிலிருந்து பல ஜாதகப்படி, அடுத்த என்ன தசை, அதற்கு எந்தக் கலர் அதிர்ஷ்டம், என்ன கல் அணியலாம், எந்த நாள் விரதம் எடுக்கலாம் என அறிந்தேன். நன்றாக இருக்கிறேன்.

-லக்ஷ்மி குமரன், ஸ்ரீமுஷ்ணம்.

நானும் மற்றவர்களைப் போல இன்று மாறி வரும் விஞ்ஞான உலகத்தில் ஜாதகமாவது, அதிர்ஷ்டமாவது என்று உதாசீனப்படுத்தி பல வியாபாரங்களில் ஈடுபட்டு நஷ்டமடைந்தேன். குடும்ப வாழ்க்கையில் நிம்மதி இல்லை. பிறகு பிரபல ஜோதிடரை சந்தித்து எனது ஜாதகத்தைக் கணித்தபோது அதற்குண்டான பரிகாரங்களும் எனது ராசிக்குரிய அதிர்ஷ்டக்கல் (வைடூரியம்) அணிந்த பிறகுதான் எனக்கு லண்டன் செல்லும் வாய்ப்பு கிட்டியது.

என்னுடைய வாழ்க்கையில் வீசிய புயல் ஓய்ந்து தென்றலாக உள்ளது. ஆகையால் ஒரு மனிதனின் வாழ்க்கையைப் பொறுத்தவரை நல்ல ஜோதிடர் கணிக்கும் ஜாதகமும் அவர்கள் கூறும் பரிகாரமும், அதிர்ஷ்டக் கல்லும் நடைமுறை வாழ்க்கையில் மிகச் சரியாக ஒத்துப் போக எனது வாழ்க்கையில் என்னுடைய வெளிநாட்டுப் பயணமும், எனது பள்ளியின் வளர்ச்சி + எனது அமைதியான குடும்ப வாழ்க்கையுமே எடுத்துக்காட்டு என்பதை மிக உறுதியாக வெளிப்படுத்துகிறேன்.

-ஆர். ரோகிணி வர்தன், அம்பாசமுத்திரம்

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள்: 'மாநில உணவுகள்' கடைசி தேதி: 15.7.96

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

நவீன விஞ்ஞான யுகத்தில் குழந்தையை எல்லா வகையிலும் சமச்சீராக வளர்ப்பது என்பது மிகவும் அவசியமாகிறது. கொஞ்சம் தவறினாலும் வன்முறை, பாலியல் வக்கிரங்கள், ஆரோக்கியமின்மையெல்லாம் மிக எளிதில் தொற்று வியாதியாகக் குழந்தைகளுக்கு ஒட்டிக் கொண்டு விடும் அபாயம் மிக அதிகமாக இருக்கும் நிலையிலுள்ளது இன்றைய கால கட்டம்.

இங்கு ஓர் இல்லத்தரசி இன்றைய யுகத் தாய்மார்களுக்காக மிக அழகாக ஒரு கட்டுரைத் தொடர் எழுதுகிறார். 'குழந்தைகளின் மன நிலை, அன்னையரின் கடமைகள், நடைமுறையில் குழந்தைகளின் வளர்ப்பு' என அழகாக விவரிக்கிறார்.

தாய்மார்களுக்கு மட்டுமல்லாமல் படிக்கும் குழந்தைகளுக்கும், கல்லூரி வயது இளம் தலைமுறையினருக்கும் கூட இங்கு நிறைய செய்திகள் இருக்கின்றன...

இருபத்தோராம் நூற்றாண்டின் குழந்தைகளுக்காக...

குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பது ஆன்றோர் வாக்கு. இத்தகைய தெய்வத் தன்மை வாய்க்கப் பெற்ற குழந்தைகள் வளரும்போது பல பிரச்சனைகளுக்குக் காரணமாவதைக் காண்கிறோம். அவர்கள் தாங்களும் துன்புற்று பிறரையும் துன்பமடையச் செய்வதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, அவர்களின் வளமான வாழ்க்கைக்கு அடிகோல வேண்டியது பெரியவர்களின் தலையாய கடமையாகும். பெரியவர்களின் அறியாமையாலோ அல்லது அலட்சியத்தினாலோ பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகள்தான். பிறக்கும் போது தெய்வத் தன்மையுடன் பிறந்த குழந்தைகள், தங்களைச் சுற்றியிருப்போரின் தன்மையைப் பெற்று, அதன்படி மாறுகின்றனர். அவர்கள் சிறப்புடன் வாழ பெரியவர்களின் பங்கு என்ன என்பதை பார்க்கலாம்.

தாயின் பங்கே பெரிது!

இறைவன் தன் அன்பை ஒரு தாயின் மூலமாக வெளிப்படுத்தி குழந்தை வளரத் துணை புரிகிறார். பிறந்த ஓரிரு வருடங்கள் குழந்தையை வளர்க்க தாய் சிரமப்பட வேண்டியிருந்தாலும், அதைச் சிரமமாக கருதாமல், தன் நலத்தை தியாகம் செய்து தாய் பாசத்துடன் குழந்தையை வளர்க்கிறாள். குழந்தை வளர வளர, அநேகமாக இவர்களிடையே இடைவெளி ஏற்பட்டு விடுகிறது. ஏன்? அன்பு குறைந்து விட்டதா எனில் இல்லையென்றே கூறலாம். அந்த அன்பை மறைக்கும் காரணிகள் யாவை? புறக்காரணிகள் சிலவே. ஆனால் தாய்தான் அதற்கு முக்கிய காரணமாவாள்.


படம்: யோகா

தன்னலமற்ற அன்பை வெளிப் படுத்திய தாய் குழந்தை வளர வளர தன்னல மிக்க அன்பை வெளிப்படுத்துகிறாள். இந்த மாற்றம் குழந்தையைத் தடுமாற வைக்கிறது. இதன் காரணமாக பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. தாயின் அன்பில் தன்னலமா என நீங்கள் திடுக்கிடலாம். உண்மைதான். அன்பு எப்போதும் உள்ளது. ஆனால் கலப்படம் அற்ற அன்பு நாளாக கலப்படம் உள்ள அன்பாக மாறி விடுகிறது. கலப்படமுள்ள அன்பில் தெய்வீகத் தன்மை போய் விடுகிறது.

1 முதல் 5 வயது வரை

குழந்தையின் எதிர்கால வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ள இந்தப் பருவம் மிக முக்கியமானதாகையால் தாயின் பங்கும் அதிக கவனத்திற்குரியது. குழந்தையின் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி இப்பருவத்தில் நன்கு கவனிக்கப்பட வேண்டும். சத்தான ஆகாரத்தைத் தந்து குழந்தையை உடல் நலமுடன் இருக்கச் செய்வதில் அநேகமாக எல்லாத் தாய்மார்களும் தங்கள் பங்கை செவ்வனே செய்கின்றனர். அதற்காக பல தியாகங்களையும் செய்கின்றனர். இதற்குக் காரணம் ஒப்பிட இயலாத தாயன்புதான்.

ஆனால் இந்த அன்புடன் அறியாமை சேரும்போது பாதிப்புகள் ஏற்படுகின்றன. முதலில் அறியாமையால் உடல் வளர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைப் பார்ப்போம். குழந்தை கேட்பதை வாங்கிக் கொடுப்பது தன் கடமை என எண்ணி உடல் நலத்தைக் கெடுக்கக் கூடியதை, அதன் விளைவை அறியாமல் அதிகப் பணத்தையும் செலவழித்து வாங்கித் தருகிறாள் தாய்.

உதாரணமாக தன் குழந்தை சரியாக சாப்பிடுவதேயில்லை. அதற்கு நல்ல பசி ஏற்பட மருந்தை தருமாறு மருத்துவமனைக்கு குழந்தையை அழைத்து வரும்போது, அக் குழந்தையின் கையில் பசியையும், பற்களையும் பாதிக்கும் இனிப்பு வகைகள் இருப்பதைக் காண்கிறோம். குழந்தைக்கு வயிற்றுப்போக்கு என அழைத்து வரும்போது அந்த மருத்துவமனைக்கு வெளியே உள்ள கடையில் ஈக்கள் மொய்க்கும் போண்டா, பஜ்ஜி போன்றவற்றை வாங்கிக் கொடுப்பது அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சி. ஆகவே குழந்தையின் உடல் நலத்தைப் பாதிப்பதை, அக் குழந்தை விரும்பினாலும் வாங்கித் தராமல் அதன் கவனத்தை மாற்ற வேண்டும்.

பெரியவர்களுக்கு அதிக உழைப்பு, மிகக் குறைவான உழைப்பு அல்லது அதிக உணவு, குறைவான உணவு அல்லது சுகாதாரம் அற்ற சுற்றுப்புறம் ஆகியவை காரணமாக நோய் ஏற்படலாம். ஆனால் குழந்தைகளுக்கு இந்த வயதில் நோய் ஏற்படக் காரணம் பெரும்பாலும் உணவில் தாய் கவனம் செலுத்தாமை தான்.

மற்றொரு வகையிலும் உடல் நலம் கெடுகிறது. குழந்தைக்கு ஓடியாடி விளையாடும் சூழலை ஏற்படுத்தித் தராமைதான். இந்த வயதுக் குழந்தைகள் அதிகம் விளையாட வேண்டும். எப்படி விளையாடுகிறது என்பதை தாய் தவறாமல் கண்காணிக்க வேண்டும். இல்லாவிடில் எதிர்விளைவு ஏற்பட வாய்ப்பு உண்டு. சில இடங்களில் குழந்தையை உடன் அமர்த்தி தொலைக்காட்சியைக் காணல், அல்லது பிறருடன் தேவையற்றவற்றை பேசுதல் போன்றவற்றால் மிகவும் பாதிக்கப்படுவது குழந்தையின் உடல் வளர்ச்சியே. அந்த நேரங்களில் குழந்தையை பிற குழந்தைகளுடன் விளையாட விட்டு தாய், அடி படாதவாறு குழந்தைகள் விளையாட உடனிருக்க வேண்டும்.


ஒரு தாய், தன் குழந்தையின் முதல் 5 வருடங்களில் அதிக கவனம் செலுத்தி அதைப் பண்படுத்த வேண்டும். பிறகு குழந்தையை சமுதாயத்தில் கலக்க விடும்போது குழந்தை மனத் தெளிவுடனும், தன்னம்பிக்கையுடனும், திறமையுடனும் முன்னேறுகிறது.

குழந்தை பிறக்கும்போது அளப்பரிய தன்

பள்ளிக்கு அனுப்ப...

சின்னக்குழந்தைகளுக்குக் கலர் கலரான சாதம் பிடிக்கும். பீட்ரூட் மெல்லியதாக துருவி, இதனுடன் சிறிது வெங்காயம் வதக்கிப் போட்டு, உப்புடன் கலங்கள். பீட்ரூட், ரெட் ரைஸ் தயார்.

-மஹிமா





காரட் மெல்லியதாக சீவி, தக்காளியுடன் லேசாக வதக்கி உப்பு போட்டு சாதத்துடன் மிக்ஸ் பண்ணுங்கள். (ரெட் கலர் காரட் கிடைத்தால்) ரெட் கலர் சாதம்.

-மஹிமா

னம்பிக்கையுடன் பிறக்கிறது. அதனால் தான் பெரியவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் தானே செய்ய விரும்புகிறது. தன்னம்பிக்கை உள்ளதால்தான் விழுந்து எழுந்து நடக்கக் கற்றுக் கொள்கிறது. பெரியவர்களைப் போல தானே எடுத்துப் போட்டுச் சாப்பிட விரும்புகிறது. ஆனால் தாய் செய்வது என்ன? கீழே சிந்தி, அதை சுத்தப் படுத்தும் வேலைப் பளுவை தவிர்க்க 'உனக்குத் தெரியாது, உன்னால் முடியாது, அம்மா உனக்காகச் செய்கிறேன்' என்று கூறி 'முடியாது' என்ற எண்ணத்தை குழந்தையிடம் தோற்றுவிக்கிறாள்.

இது ஒவ்வொரு சிறு காரியத்திலும் தொடருவதால் குழந்தை 'தன்னால் எதுவும் முடியாது' என்ற நிலையை ஏற்படுத்திக் கொள்கிறது. ஒவ்வொரு செயலுக்கும் பெரியவர்களையே சார்ந்திருக்கிறது. தன்னம்பிக்கை முழுவதுமாக நீங்கி விடுகிறது. வளர்ந்த பின், தாய் சொல்லும் வேலைகளை செய்ய முடிவதில்லை. அப்போது ஆரம்பிக்கிறது பிரச்சினை. ஆகவே குழந்தையால் முடியக் கூடிய செயல்களை, குழந்தைக்கு எக் கஷ்டத்தையும் தராத செயல்களை, அதிக நஷ்டம் அளிக்காத செயல்களை குழந்தை செய்ய தாய் அனுமதிக்க வேண்டும். அத்தகைய குழந்தை தான் தன்னம்பிக்கையுள்ள குழந்தையாக வளர முடியும்.

இந்த வயது குழந்தையிடம் தாய் கண்டிப்பு காட்டக் கூடாது. ஆனால் மிகுந்த கண்காணிப்பு தேவை. பல தாய்மார்களுக்கு தங்கள் குழந்தைகளை கண்காணிக்க நேரமின்றி ஓயாத வேலை இருக்கும். அவர்கள் எவ்விதத்திலாவது ஒரு நாளைக்கு ஓரிரு மணி நேரமாவது தங்கள் குழந்தைகளுடன் நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவழிக்க வேண்டும். ஓடி, ஓடி சம் பாதிப்பதன் நோக்கம் தங்கள் குழந்தைகள் எதிர்காலத்தில் சுகமாக இருக்க என திருப்தி கொள்பவர்கள், ஒன்றை மறந்து விடுகின்றனர். நல்ல குழந்தையாக வளர்க்கவில்லையெனில் இவர்கள் பல ஆண்டுகள் பாடுபாட்டுச் சேர்த்த செல்வத்தை ஒரு சில மாதங்களிலே கூட அழித்து, தாமும் அழிவர். இதற்கு எடுத் துக்காட்டுகளை ஏராளமாக ஆங்காங்கு காணலாம்.

சில தாய்மார்களுக்கு வேலை இருக்காது. ஆனால் தங்களைச் சுற்றியிருப்போரின் பாராட்டைப் பெற, தேவையற்ற பேச்சு, தேவையற்ற செயல் ஆகியவற்றில் ஈடுபட்டு தங்கள் நேரத்தை குழந்தையுடன் செலவழிக்காது வீணாக்குகின்றனர். சிலர் வீணான பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு தங்கள் கடமையை மறந்து குழந்தைகளின் எதிர்காலத்தை இருட்டாக்குகின்றனர்.

இப்பருவத்தில் நிகழும் பெரும் பாதிப்பு ஒன்று உண்டு. மூன்று வயதிலேயே பள்ளியில் குழந்தையைச் சேர்த்துவிட்டு, தன் குழந்தை முதல் மதிப்பெண் வாங்க வேண்டும் என்ற விருப்பத்தில் அதிக நேரம் குழந்தையை எழுதப் படிக்கச் செய்வதால் குழந்தையின் உடல் நலம் குன்றுகிறது.

பல கதைகள்மூலம் குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டி, தானே படிப்பதில் மகிழ்ச்சியடையுமாறு செய்ய வேண்டும். படிப்பதற்கென ஒரு நேரத்தை ஒதுக்கி அந்த நேரத்தில் முடிந்தவரை வீட்டில் உள்ளோரும் படித்தால் குழந்தையும் தானே படிக்க ஆரம்பிக்கும். சில காரணங்களால் குழந்தையுடன் அதிக நேரம் இருக்க முடியாத தாய், கிடைக்கும் குறைந்த அளவு நேரத்தையாவது குழந்தையுடன் செலவழித்து, நீதிக் கதைகளைக் கூறி, எதிர்கால வாழ்க்கைக்குக் குழந்தையைத் தயார் செய்ய வேண்டும். தேவையற்ற வேலைகளைத் தவிர்க்க வேண்டும். அவசியமற்ற பயணங்களையும் தவிர்க்க வேண்டும். இந்த வயதில் முக்கியமாக 1) இறையுணர்வை ஏற்படுத்துதல், 2) இசையில் கவனம் செலுத்தச் செய்தல், 3) உடல் வலிமையை அதிகரிக்கச் செய்தல், 4) மன வலிமையை வளர்த்தல் (கதைகள் மூலம்) 5) நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்துதல் போன்றவற்றில் தாய் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். குழந்தையாக இருக்குப்போது சொன்னால் புரியாது.

தேவையில்லை, பெரியவனாகும்போது பார்த்துக் கொள்ளலாம் என தாய் நினைக்கக் கூடாது. 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.'

ஒரு பெரியவர் பிரசங்கம் செய்யும்போது தாய்மார்களை நோக்கி, 'உங்கள் ஆறு மாதக் குழந்தையையும் அழைத்து வாருங்கள். நல்ல விஷயங்கள் காதில் விழும்போது நல்லவனாக மாறுவான்' என்பார். தாயின் கருவில் இருக்கும்போது கேட்ட நல்ல விஷயங்களால் இறையருளைப் பெற்ற பிரகலாதனைப் பற்றி அறியாதவர் நம் நாட்டில் யார்? அறிவியல்பூர்வமாக ஆராய்ந்து தற்போது விஞ்ஞானிகள் வெளியிட்ட கருத்துக்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அறிந்து செயல்பட்டவர்கள் நம் முன்னோர்கள். குழந்தையிடம் சிறிதுகூட கடுமையாக நடந்து கொள்ளாமல், குழந்தையை மதித்து நடக்க வேண்டும். குழந்தை கேட்கும் கேள்விகளுக்கு பொறுமையாக பதிலளிக்க வேண்டும். குழந்தை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என நாம் நினைக்கிறோமோ, அதேபோல நாம் நடந்து காட்ட வேண்டும். இதைப் பற்றிய ஒரு கதை உண்டு...

ஒரு குழந்தை அதிக இனிப்பு சாப்பிடும். தாய் சொன்னால் கேட்பதில்லை. அதன் உடல் நலம் குன்றியது. அக் குழந்தையை ஒரு பெரியவரிடம் தாய் அழைத்துச் சென்று "நீங்களாவது, என் மகனுக்கு 'இனிப்பு சாப்பிடக் கூடாது' என அறிவுறுத்துங்கள்" என வேண்டினாள். அதற்கு அப்பெரியவர் ஒன்றும் கூறாமல் ஒரு வாரம் கழித்து அழைத்து வரச் சொன்னார். அவ்வாறே சென்றபோது பெரியவர் அக் குழந்தையிடம் இனிப்பு சாப்பிடுவதால் ஏற்படும் பாதிப்பு களைக் கூறி குறைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அதைக் கேட்ட தாய், "ஐயா, இந்த அறிவுரையை சென்ற வாரம் நாங்கள் வந்தபோதே கூறியிருக்கலாமே" என்று கூறினார். அந்தப் பெரியவர், "நீங்கள் உங்கள் மகனுடன் சென்ற வாரம் வந்தபோது என் முன்னால் தட்டில் இனிப்பு வைக்கப்பட் டிருந்தது. அப்போது இனிப்பு சாப்பிடக் கூடாது என நான் கூறினால் குழந்தை என்னை ஏமாற்றுக்காரன் என நினைத்து, நான் சொன்னதை ஏற்று நடக்காது. மேலும் குழந்தைகளுக்குச் சொல்ல, நான் அவ்வாறு நடக்க வேண்டும். அப்போது தான் என் சொற்கள் பலனளிக்கும். ஆகவே இனிப்புப் பிரியனான நான் இந்த ஒரு வாரமாக இனிப்புச் சாப்பிடும் உணர்வைக் கட்டுப்படுத்தினேன். இன்று குழந்தைக்கு அறிவுறுத்தும் தகுதி பெற்றேன்" என்றார்.

1-5 வயதுவரை குழந்தை தாயிடமே அதிக நேரத்தைச் செலவழிப்பதால், தாய் அந்தப் பெரியவரின் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். குழந்தை தவறு செய்தால் கண்டிக்காமல், தன் கவனக் குறைவால்தான் குழந்தை அவ்வாறு நடந்து கொள்கிறது என்பதை உணர்ந்து தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தாய் ஒரு விஷயத்தை மறக்கவே கூடாது. தனக்கும் குழந்தைக்கும் உள்ள வயது வித்தியாசத்தை நினைத்துப் பார்க்கும்போது, தன் குழந்தையும் தன்னளவு பக்குவமாக நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. அந்த வயதில் நானும் அக் குழந்தையைப் போலவே நடந்திருப்போம் என கருதி, தனக்குள்ள maturity குழந்தைக்கும், தன் வயதாகும்போது வந்து விடும் என்பதை ஏற்க வேண்டும். அப்போது குழந்தையிடம் கோபமே ஏற்படாது.

குழந்தை தவறு செய்வது இயற்கை. பொறுமையாக திருத்த வேண்டியது தாயின் கடமை. கண்டிப்பதால் பிஞ்சு மனம் கருகும். இதனால் ஏற்படும் விளைவுகள் இரண்டு. முதலாவதாக அக்குழந்தை தன்னம்பிக்கை இழந்து, எதையும் செய்ய இயலாத அறிவிலியாக மாறிவிடும் அல்லது அளவுக்கு மீறிய கண்டிப்பால் அசுரத்தன்மை வெளிப்பட்டு, எப்போதும் தீய செயல்களைச் செய்து தனக்கும் மற்றவர்களுக்கும் துன்பத்தைத் தேடிக் கொள்ளும்.

கறிவேப்பிலையை நன்றாக அலம்பிக்கொண்டு, நைசாக அரைத்துக் கொண்டு சீரகம், 2 வற்றல், மிளகாய் தாளித்து, கறி வேப்பிலை விழுதையும் சிறிது நேரம் வதக்கி சாதத்துடன் உப்பு போட்டு கலங்கள். 'கம கம வாசனையுடன் கீரின் ரைஸ்' ரெடி. உடலுக்கு மிகவும் நல்லது.

-மஹிமா



21st Century's

"Family-Deposit"



உங்கள் குழந்தைகளின் உறுதியான நம்பிக்கை

CRISIL
FA+

A happy family, is a 21st Century Family.

உங்கள் குழந்தைகளின் வளமான எதிர்கால பாதுகாப்பு என்று
வரும்பொழுது, உங்கள் குடும்பத்தின் ஈடுபாடும்,
உறுதுணையும் என்றுமே மாறுவதில்லை.

காலந்தோறும் முக்கியத்துவம் பெற்ற பாதுகாப்பு மற்றும்
நம்பிக்கை என்னும் குடும்ப மரபினால், **ஃபேமிலி டெபாசிட்**
என்னும் திட்டம் **ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரியிலிருந்து** வருவது
உங்களுக்காகவே!

நான்கே ஆண்டுகளில் இந்நிறுவனம்
ரூ. 50 கோடியை எட்டியுள்ளது. CRISIL-ன் FA+ மதிப்பீட்டை
பெற்றிருக்கும் **ட்வெண்ட்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரியின்**
'ஃபேமிலி டெபாசிட்' உங்கள் செல்லக் குழந்தைகளின் நெஞ்சக்
கனவுகளை நனவாக்கும். எனவே இன்றே **'ட்வெண்ட்டி ஃபர்ஸ்ட்
செஞ்சுரி'** குடும்பத்துடன் இணைந்து கொள்ளுங்கள்.

ட்வெண்டிஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்

நிர்வாக அலுவலகம்: 'ஸ்ரீவித்யா' 32, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018. போன்: 4995155, 4994821, 4970151, 4970152. ஃபேக்ஸ்: 044-4994826.

கிளைகள்: • **சென்னை: (குரோம்பேட்டை) :** 12, அனுமார் கோயில் தெரு, ராதா நகர் - 600 044. • **(அம்பத்தூர்) :** 'சப்தகிரி', எம்டிஎச் ரோடு - 600 053 • **மும்பாய்:** 603 B/604, தலமால் சேம்பர்ஸ், 29, நியு மெரைன் லைன்ஸ் - 400 020 போன்: 022-2006811/2004153/ 2004154/2004160 பேக்ஸ்: 022-2004163. • **கோயம்புத்தூர்:** 79/40, சேரன் டவர்ஸ், 78 அரசினர் கலைக்கல்லூரி சாலை - 641 018 போன்: 218094, ஃபேக்ஸ்: 0422-213673. • **ஐதராபாத்:** 204/205, 6-3-550, மூன்றாம் தளம், ஆகாஷ் கங்கா, மெடிரோவா எதிரில், சோமாஜிகுடா - 500 082 போன்: 319371, ஃபேக்ஸ்: 040-312806. • **திருநெல்வேலி:** 177, A-14, பார்வதி சங்கர் சன்ஸ் காம்ப்ளெக்ஸ், திருவனந்தபுரம் சாலை, வண்ணாரப்பேட்டை - 627 003 போன்: 0462-72827. • **திருச்சி:** 6, சுந்தரம் ஆர்கேட், 13-A வில்லியம்ஸ் ரோடு, (திருச்சி சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டு எதிரில்), திருச்சி கண்டோன்மென்ட் - 620 001. • **பெங்களூர்:** 403, ஈடன் பார்க், விட்டல் மால்யா ரோடு - 560 001. போன்: 080-2225535

ஃப்ரான்சைஸி: • **கும்பகோணம்:** 105, சாரங்கபாணி கிழக்கு (மாடி) - 612 001 போன்: 0435-30487. • **மதுரை:** 18-A, பூக்கார சந்து, தானப்ப முதலி தெரு - 625 001 போன்: 0452-30481. • **நெல்லூர்:** 16/II/227, வசந்த் விஹார், அர்பன் பேங்க் அருகில், கேடி நகர் - 524 001 போன்: 0861-31289. • **சென்னை (அடையார்) :** 5/9, முதல் மெயின் ரோடு, கஸ்தூரிபாய் நகர் - 600 020 போன்: 4918669.

Sane - 21/TCMS/960191

This advt. appears further to the statutory advt. published by the company in Makkal Kural and Trinity Mirror on 29th August and 18th November 1995. The text of the statutory advt. is also printed on the application form, which may be referred to before investing in the company's Deposit Schemes.



வீட்டில் 'ஓடோனில்' கட்டி மெல்லியதாய் ஆகிவிட, வாசனையும் குறைவாகவே இருக்க, அதை தண்ணீரில் கலந்து டைனிங் டேபிள், வாஷ்பேசின், சிங்க் முதலியவற்றை சுத்தம் செய்தேன். வீடும் 'கமகம'வென இருந்தது. இவைகளின் மேல் ஊறும் சிறு சிறு பூச்சிகளும் தற்போது குடி மாறி விட்டது.

-அனுபல்லவி

ஒரு குழந்தை கெட்டவனாக மாறாது. மாற்றப்படுகிறது. அப்படியிருக்கக் குழந்தை எப்படி தீய செயலுக்கு பொறுப்பாகும். கண்டிக்க வேண்டியது தாயையும், பிற பெரியவர்களையும்தான். பலருக்கு இதை ஏற்றுக் கொள்ள கஷ்டமாக இருக்கும். குழந்தையைக் கண்டிக்காமல் விட்டுவிட்டால் அடங்காத தன்மை ஏற்பட்டுவிடும் என்பது பலர் கருத்து. தாயின் திட்டமிட்ட பராமரிப்பு இருந்தால் கண்டிக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏதாவது ஒரு பொருளைக் கேட்டு குழந்தை அழுதால், அது குழந்தையிடம் கொடுக்கக் கூடிய பொருளாக இருந்தால் உடனே கொடுத்து விட வேண்டும். அழுது அடம் பிடித்தபின் கொடுக்கக் கூடாது. சிறிது நேரம் அழுதால் கிடைத்து விடும் என்ற எண்ணம் குழந்தைக்கு ஏற்பட்டு விடும். அடிக்கடி அழ ஆரம்பிக்கும். குழந்தையிடம் கொடுக்க முடியாத பொருளாக இருந்தால் என்ன செய்வது? குழந்தையின் கவனத்தைச் சாமார்த்தியமாக தாய் மாற்ற வேண்டும். அழுகையைத் தொடராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குழந்தை தவறு செய்யக் காரணம் அதற்கு ஏற்படும் குழப்பத்தால்தான். குழந்தைக்கு உணவை ஊட்டும் தாய் அடிக்கடி கூறுவது, "நீ சாப்பிடாவிட்டால் இதை வேறு யாருக்காவது கொடுத்து விடுவேன். அவர்களுக்கு தர வேண்டாம். நீயே சாப்பிட்டு விடு" என்பதாகும். யாருக்கும் எதையும் தரக் கூடாது என்று குழந்தையை நினைக்கச் செய்வது தாய். தன் பொருளை வேறு குழந்தை எடுக்கும் போது அடிக்கிறது. மறுக்கிறது. அந்தச் சமயத்தில் தாய் திட்டும்போது குழப்பம் அடைகிறது. பிறர்க்கு தரக் கூடாது என்று கூறிய தாய், தான் தராவிட்டால் மட்டும் ஏன் கோபமடைகிறார் என்று புரியாமல் தவிக்கிறது. இத்தகைய முரண்பாடுகள் வாழ்நாளில் அடிக்கடி ஏற்படுவதைக் காண்கிறோம். வள்ளலாக இருக்க வேண்டும் என்பது ஒருபுறம். சிக்கனம் தெய்வ சம்பத்து என்பது மறுபுறம். பெரியவர்களே தடுமாறும்போது குழந்தை என்ன செய்யும்?

இதைச் செய்யாதே என்றால் செய்ய நினைப்பது குழந்தையின் இயல்பு. அதற்கு மாறாக, 'ஏன் செய்யக் கூடாது. செய்தால் ஏற்படும் விளைவு என்ன' என்பதைத் தாய் தக்கபடி எடுத்துக் கூறினால் குழந்தை நிச்சயம் கேட்கும். குழந்தையிடத்து தெளிவை உண்டாக்க வேண்டியது தாயின் கடமை. கடுமையான குரலில் பேசினால்கூட அதன் மிருதுவான உள்ளம் பாதிக்கப்பட்டு, தன்னம்பிக்கை இழந்து கோழையாகிறது. அதிக கோபத் தன்மை அசுர குணத்தைத் தூண்டுகிறது. தன்னை தாய் அடிப்பாள், திட்டுவாள் என்ற பயம் குழந்தையின் மனதில் ஏற்படவே கூடாது. இதனால் குழந்தை அடங்கியிருப்ப

மனித உறவுகள்

திருமணத்திற்கு முன்பும் பின்பும், எந்தப் பருவத்திலும் ஏற்படும் மனித உறவுகளில் தெளிவாகவும், உறுதியாகவும் நேர்மையான வகையில் எல்லைகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியம். இதுவே பல பிரச்சினைகளுக்கு இடமளிக்காமல் நிம்மதியாக வாழ வழி வகுக்கும்.

- எஸ்.மாலதி



தாகத் தோன்றினாலும் முரட்டுத்தனம் மனதில் வளர்ந்து, சந்தர்ப்பம் வாய்க்கும் போது வெளிப்பட்டு அழிவை ஏற்படுத்துகிறது. பெரிய குற்றங்களைச் செய்தவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்த உளநூல் வல்லுநர்கள், அந்தக் குற்றவாளிகள் குழந்தைகளாக இருந்தபோது போதிய அன்பு கிடைக்காமல் தவித்தவர்கள் அல்லது அடக்கப்பட்டவர்கள் என அறிந்தனர்.

குழந்தை தன்னம்பிக்கையுடன் வளர தாய் பல நல்ல கதைகளைக் கூறி வீர உணர்வை ஊட்ட வேண்டும். டி.வி. நிகழ்ச்சி ஒன்றில் கூறிய ஒரு கதையை இங்கு எழுத விழைகிறேன். ஒரு ஊரில் ஒரு சர்க்கஸ் கம்பெனி தன் நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்ததாம். ஒரு சிறுவன் ஒருநாள் காலை அவர்கள் தங்கியிருந்த இடத்தை சுற்றிப் பார்த்தபோது, ஒரு பெரிய யானை சிறிய தூணில் சாதாரண கயிற்றால் கட்டப்பட்டு இருந்ததைக் கண்டான். ஆனால் ஒரு சிறிய யானைக் குட்டியோ பெரிய தூணில் வலுவான கயிற்றால் கட்டப்பட்டு இருந்தது. அவனுக்கு வியப்பாக இருந்தது. தவறுதலாக கட்டியுள்ளார்கள் என எண்ணி உள்ளே சென்று முதலாளியிடம் விஷயத்தைக் கூறினான். அந்த முதலாளி அவனிடம் கூறியது, "தம்பி, யானைக் குட்டியின் ஆற்றல், தன்னம்பிக்கை அதிகம். தன்னால் முடியும் என எந்தச் செயலையும் முயற்சி செய்து பார்க்கிறது. அதைச் சிறிய கயிற்றால் கட்டி வைத்தால், அதன் ஆற்றல், தன்னம்பிக்கை காரணமாக எளிதில் கயிற்றை அறுத்துக் கொண்டு தப்பிச் செல்லும். ஆகவே இரும்புச் சங்கிலி போன்ற வலுவான கயிற்றால் கட்டப்பட்டுள்ளது. அப்போதும் முயற்சி செய்து கொண்டேயுள்ளதைப் பார். அந்தப் பெரிய யானையும் குட்டியாக இருந்தபோது வலுவான சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து முயற்சி செய்தும் தப்பிக்க முடியாததால் தன்னம்பிக்கை இழந்து தன்னால் முடியாது என்ற நிலைக்கு வந்து விட்டது. முயற்சியை முழுவதுமாக கை விட்டு விட்டது. ஆகவே அதற்குச் சிறிய கயிறே போதும்" என்றார். இதேபோல குழந்தை அளப்பரிய ஆற்றலுடன், துடிப்புடன் எதையும் தானே செய்ய விரும்புகிறது. ஆனால் அதன் தன்னம்பிக்கை பெரியவர்களால் நீக்கப்படுகிறது என்றே கூறலாம்.

பெரியவர்களின் உணர்ச்சிகளை அதாவது கோபம், பயம், துக்கம் போன்றவற்றைக் குழந்தையின் முன் வெளிப்படுத்தக் கூடாது. முக்கியமாக பிறரது குறைகளையே பேசிக் கொண்டிருக்கக் கூடாது. அந்தத் தன்மை குழந்தையிடத்துப் படிந்துவிடும். வளர்ந்த பிறகு மாற்றுவது மிகக் கடினம். சண்டைக் காட்சிகள், மரண ஓலம் போன்ற காட்சிகளை குழந்தைகள் பார்க்கக் கூடாது என அதனால்தான் அந்தக் காலப் பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் குழந்தைகளின் உள்ளத்தில் அதிர்ச்சி ஏற்படும்.

தாயின் கருவில் இருக்கும்போதே குழந்தைக்கு மனம் உடையதாகிறது. அதனால்தான் தாய் கருவுற்று இருக்கும்போது நல்லவற்றையே எண்ண வேண்டும், படிக்க வேண்டும், சுறுசுறுப்பாக இருக்க வேண்டும், நல்ல அறிவுரைகளைக் கேட்க வேண்டும் என்று கூறப்படுகிறது. மனத்தின் குணங்கள் மூன்று. ஒன்று தமோ குணம், இரண்டு ரஜோ குணம்; மூன்று சத்வகுணம். இந்த மூன்று இயல்புகளுடன் குழந்தை பிறக்கிறது. முதல் ஐந்து வயதில் எந்த இயல்பு மேலோங்குகிறதோ அந்த இயல்பே வாழ்நாள் முழுவதும் மேலோங்கியிருக்கும். இவற்றை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)



வெண்டைக்காயை அலம்பி, சிறிது பெருஞ்சீரகம் தாளித்து, வெண்டைக்காயை கொஞ்சம் பெரிதாக (சாம்பாருக்கு) நறுக்குவது போல நறுக்கி ஒரு ஸ்பூன் தயிர், உப்பு, காரப் பொடி கலந்து வதக்கி சாதத்துடன் கலங்கள். சூப்பர் ஆக இருக்கும்.

-மஹிமா

சவாலாக ஏற்றுக் கொண்டேன்!

பிரதமராக இருந்தவரை மாநில முதல்வர் பதவி தருவதாக அழைத்தால் வருவாரா? நிச்சயம் மாட்டார். ஆனால் கல்லூரி முதல் வராக இருந்த பெண்மணி ஒருவர் பள்ளி முதல்வராக பொறுப்பு ஏற்று இருக்கும் வித்தி யாசமான செய்தி அறிந்து, கொடைக்கானல் பிரகாசபுரத்தில் கம்பீரமாக புதிய கட்டிடத் தில் தலை நிமிர்ந்து நிற்கும் செயின்ட் ஜோசப் பப்ளிக் ஸ்கூல் பிரன்சிபால் டாக்டர் குமாரி.இந்திராணி மைக்கேல் அவர்களை சந்தித்தோம்.

"நான் சென்னை பெண்கள் கிறிஸ்துவக் கல் லூரி முதல்வராக பதிமூன்று வருடங்கள் பணி புரிந்து ஓய்வு பெற்று எனது ஊரான ஊட் டிக்குச் சென்றுவிட்டேன். முப்பத்தியாறு வருட கல்விப்பணி அனுபவம் உள்ள என் னால், இந்தப் பள்ளியை புதுநோக்குடன் புது நடை போட வைக்கமுடியும் என்று நினைத்து என்னை அழைத்தார்கள். நான்



இந்தப் பதவியை சம்பளத்திற்காக ஏற்க வில்லை. எந்தவித லாப நோக்கமும் இல்லா மல் தரமான உயர்கல்வியை அனைத்து மாணவர்களும் பெற வேண்டும் என்ற லட் சியத்தோட கடந்த ஆண்டில் புதிதாக இந்தப் பள்ளியை ஏற்று, புத்துணர்ச்சியுடன் செயல் படும் இளைஞர் திரு.சாம் ஆபிரகாம் அவர் களுக்காக பணியாற்ற வந்தேன்.

கல்லூரி முதல்வராக இருந்த போது பள்ளி களைக் குறை சொல்லியது உண்டு. அந்தக் குறைகளை அகற்றும் வாய்ப்பு தேடி வந்த தால் சவலாக ஏற்றுக் கொண்டேன். இதில் எனக்கு எந்தக் கௌரவக் குறையும் வந்ததாகக் கருதவில்லை. பதினேழு வயதிற்கு மேற்பட்ட மாணவிகளுடன் கல்லூரியில் பழகிய எனக் குக் குறைந்த வயது கோ-எஜிகேஷன் மாணவ-மாணவிகளுடன் பழகுவது வித்தியாசமான சுவையான அனுபவமாக இருக்கிறது. இதனை பலரும் போற்றும் பள்ளி ஆக்கிடுவோம்" என்று ஆர்வத்துடன் கண்களில் நம்பிக்கை ஒளி பளபளக்க பிரின்சிபால் கூறியதும் பள்ளியின் மாறுபட்ட செயல் பாடுகளை கேட்டோம். சொன்னார்...

"மாணவ-மாணவிகளுக்கு தனித்தனியே பாதுகாப்பான ஹாஸ்டல் வசதி செய்து தந் துள்ளோம். உணவுதான் குழந்தைகளின் அறிவை நிர்ணயிக்கிறது என்பதால் சுவை யான தரமான உணவு வகைகளை வழங்க வேண்டும் என அதிலும் நிறைய கவனம் செலுத்துகிறோம். மருத்துவ சிகிச்சை

அளிக்க டாக்டர் இருக்கிறார்.

தமிழ்நாட்டின் அனைத்து ஊர்களில் இருந்தும், வெளி மாநி லங்களில் இருந்தும், வெளி நாடுகளில் இருந் தும் மாணவ-மாணவிகள் ஹாஸ்டலில் தங்கிப் படிக்க போதிய வசதிகள், அனைத்தும் செய்து வைத்திருக்றோம். ஆசிரியர்கள் ஹாஸ்டலில் தங்கிப் பணிபுரிகிறார்கள். கொடைக்கானல் மாணவர்கள் வந்து படிக்க புதிய பள்ளிக்கூட பஸ் வாங்கி இருக்கிறோம். ஹாஸ்டல் வார்டன் என்று தனியாக ஒருவரை நியமிக் காமல் எங்கள் பள்ளி ஆசிரியரே 'வார்டன்' ஆக இருப்பதால் மாணவர்கள் ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் இருக்க முடிகிறது. பாட சந்தேகங்களை வார்டனாக உள்ள ஆசிரியரிடமே கேட்டுத் தெளிவு பெற முடியும்."



• இந்திராணி



• சாம் ஆபிரகாம்

"இது கம்ப்யூட்டர் உலகம். கம்ப்யூட்டர் பற்றித் தெரியாமல் வாழ முடியாத நிலை வந்துவிட்டது. எனவே எல்.கே.ஜி. முதலே கம்ப்யூட்டர் பற்றித் தெரிந்து கொள்ள பாடப் பயிற்சி வைத்துள்ளோம்."

"மாணவ-மாணவிகளின் உடல், உள்ள வலு அதிகரிக்க மலை ஏறும் சிறப்புப் பயிற்சி தருகிறோம். அனைத்து விளையாட்டுப் பயிற்சி களும் கொடுக்கிறோம். மாணவிகளுக்கும் வாலிபால், புட்பால், பேஸ்கட் பால், கிரிக் கெட் விளையாட பயிற்சி தருகிறோம். சிறப் பான மாடல் லைப்ரரி அமைக்க இருக் கிறோம். பாடல் பயிற்சி, கராத்தே பயிற்சி யும் கொடுக்கிறோம்."

"நன்கு படிக்கும் ஏழை மாணவர் சிலருக்கு ஸ்காலர்ஷிப் அளித்து உதவி செய்துள்ளோம்." கேள்வி-பதில் முறையை எதிர்க்கிறோம். பொது அறிவு பெருகவும், சிறு சிறு கைத் தொழில்களை அறியவும் செய்கிறோம். கார் பெண்டரி, டெய்லரிங் கற்றுத் தருகிறோம். நுழைவுத் தேர்வு, ஸ்பெஷல் கிளாஸ், ட்யூசன் இவைகளைத் தவிர்க்கிறோம்."

பிரின்சிபால் விளக்கம் தந்துவிட்டு, உலகம் முழுவதும் சுற்றி அனுபவம்



பெற்றவரும், கொடைக்கானலில் பாரடைஸ் ஹில் ரிசார்ட்ஸ் போன்ற எட்டு கம்பெனிகளின் மானேஜிங் டைரக்டராக இருப்பவரும், சமீ பத்தில் அண்ணாமலை பல்கலைக் கழக சிண்டிகேட் மெம்பராக கவர்னரால் தேர்வு செய்யப்பட்டவரும், சிறந்த மனிதாபிமானி யாக கல்வித் தொண்டு செய்து வருபவரும், எம்.ஏ.பட்டதாரியுமான பள்ளித் தாளாளர் திருசாம் ஆபிரகாம் அவர்களை நமக்கு அறி முகம் செய்து வைத்தார். கம்பீர தோற்றமுடன் நம்மைக் கவர்ந்த சாம் சரளமாக நம்மிடம் பேசினார்.

"இருபத்தி ஐந்து வருடமாக கொடைக் கானல் நகர்ப் பகுதியில் வாடகை இடத்தில் செயல்பட்டு வந்த இந்த செயிண்ட் ஜோசப் பப்ளிக் ஸ்கூலை 'குட் சமாரிட்டன் சேரி டபிள் ட்ரஸ்ட்' கீழ்

ஏற்று, பிரகாசபுரத்தில் சொந்தமான 25 ஏக்கர் நிலத்தில் புதிய கட் டிடம் கட்டி பிரகாசமாக கல்வியை மாண வர்கள் பெற வேண்டும் என்ற லட்சியத் துடன் நடத்தி வருகிறேன். நான் 'கொடைக்கானல் கிறிஸ்துவ மெட்ரிகுலேசன் ஹையர் செகன்ட்ரி ஸ்கூல்' என்று பெயர் மாற்ற இருக் கிறேன். கல்வியிலும் மாற்றங்கள் கொண்டுவர நினைக்கிறேன்:

மாணவர்களின் புத்திசாலித் தனமும் திறமைக்கு மார்க் போட வேண்டுமே தவிர மனப்பாட சக்திக்கு மார்க் போடக் கூடாது. படிப்பில் மட்டும் சிறந்து இருப்பதில் பயன் இல்லை. அன்றாட உலக விஷயங்களை அறிவதும் அன்றாட வேலைகளை கற்றுக் கொள்வதும்தான் பயன்படும். எனவே படிப் பிற்கு முக்கியத்துவம் தருவதோடு பல்ப் மாட் டுவது முதல் பியூஸ் போடுவது வரை எல்லா நடைமுறை விஷயங்களையும் சொல்லித் தரு கிறோம். Leadership Quality-யைத் தலைவர், தலைவி ஆகும் தகுதியை மாணவ மாணவி களுக்கு பயிற்சி அளித்து தலைவர்களை... தலைவிகளை உருவாக்கி இந்த நாட்டிற்கு வழங்குகிறோம். மாணவர் திறனை வெளிக் கொண்டு வரும் 'ப்ராஜெக்ட் வொர்க்' நிறைய செய்கிறோம். அதற்கு ஏற்ப ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கிறோம். மாணவ மாணவிகள் பாடங்களை மனப்பாடம் செய்யாமல் சுய மாக சிந்தித்துச் செயல்படும் திறனை வளர்க் கிறோம். ஆங்கிலப் பேச்சுப் பயிற்சியில் தனிக் கவனம் செலுத்துகின்றோம். இதனால் தாழ்வு மனப்பான்மை' நீங்குகிறது. மலை மீது ஒரு மகத்தான மாறுபட்ட உலகத்தரம் வாய்ந்த பள்ளியாக இதனை மாற்ற கடுமையாக உழைத்து வருகிறோம்.

எங்களோடு சேர்ந்து தங்கள் குழந்தை களை சாதனை படைக்கும் குழந்தைகளாகச் செய்ய விரும்பும் பெற்றோர்கள் செயின்ட் ஜோசப் பள்ளி ஸ்கூல், பிரகாசபுரம், கொடைக்கானல்-4 என்ற முகவரியில் அனுப்பி விவரம் பெறலாம். (04542) 41176, 41156 நம் பருக்கு போன் செய்தும் விவரம் கேட்கலாம். சென்னையிலும் எங்கள் பள்ளி அலுவலகம் 29, 3-வது தெரு, கிழக்கு அபிராமபுரம் சென்னை-4 என்ற முகவரியில் இயங்குகிறது. 4995333 (அ) 4995366 தொலைபேசி நம்பர்களும் இருக்கின்றன" என்கிறார் சாம்.

- பேட்டி, படங்கள்: ஆர். சுமதி.

ஒரு வாசகியின் கேள்வி!

இந்தக் கட்டுரையில் பேசப்பட்டிருக்கும் விஷயத்தைப் பற்றி மற்ற வாசக, வாசகியரும் தங்கள் கருத்துக்களை எழுதலாம்...

சமீபத்தில் டீ.வி. ஒளிபரப்பிய ஒரு நிகழ்ச்சி என்னை எந்த அளவிற்கு பாதித்தது என்பதைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட கணவன், மனைவியைப் பேட்டி காண்கிறார்கள். அவர்கள் ஒருவரை யொருவர் எங்கு எப்படிச் சந்தித்தார்கள்? திருமணம் பற்றிய பேச்சு வார்த்தைகளை முதலில் ஆரம்பித்தது யார்? அதற்கு இருதரப்பிலும் பெற்றோர் சுற்றத்தாரின் ஆதரவு இருந்ததா? என்றெல்லாம் கேள்விகள் கேட்டு விட்டு இறுதியில் ஒரு கேள்வி. எதிர்காலத்தில் அவர்களின் குழந்தைகள் சுயமாக தன் வாழ்க்கையை நிர்ணயிக்க நினைத்தால் அதற்கு அவர்கள் உடன் படுவார்களா? என்று இதற்கு பிறகு குழந்தைகளைப் பற்றிய தன் கருத்துக்களை முக்கியமானப் பிரமுகர் ஒருவர் வெளியிட்டார். அதைப் பற்றித்தான் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அவர் சொன்னது இதுதான் –

"குழந்தைகளுக்கு 14 வயது ஆகிவிட்டாலே சுயமாக சிந்தித்து முடிவெடுக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது. இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரு குடும்பம். கணவன் – மனைவி, ஒரு ஆண் பிள்ளை என்று அடங்கியது. இதில் மனைவியோ சீக்கியர் அல்லாத பஞ்சாபி. கணவன் சீக்கியர் (முடி வளர்த்து தாடி வளர்த்து இடுப்பில் கத்தி, கங்கணம் காப்பு) என்று இருப்பவர். ஒருமுறை நான் அந்தக் குடும்பத்தைச் சந்திக்க விரும்பி அங்கு சென்ற போது அவர்களின் அந்த 14 வயது பையன் என்னிடம் கூறினான். "ஆன்ட்டி, என்னுடைய தாய் என்னை ஒரு பஞ்சாபியாகவும், என் தந்தை ஒரு சீக்கியனாகவும் வளர்க்க நினைக்கிறார்கள். ஆனால் நான் இரண்டுமே கடைபிடிக்க மாட்டேன். எனக்குப் பிடித்த மதத்தைத்தான் பின்பற்றுவேன். குழந்தைகளுக்கு 14 வயது ஆகி விட்டாலே தங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது. அதில் பெற்றோர்கள் குறுக்கிட கூடாது" என்று அந்த அம்மையார் கூறி முடித்ததும், அனைவரும் அதை வரவேற்கும் முறையில் கைதட்ட நிகழ்ச்சி முடிந்தது. இந்த நிகழ்ச்சியைப் பார்த்ததிலிருந்து என்னுள் சில கேள்விகள் எழுகிறது. அவை நியாயமானவைதானா என்பதை தாங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

1. குடும்பம் என்பது என்ன? குடும்பம் என்பது தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, குழந்தைகள் என்று வெறும் உறவுமுறையில்தானா? அந்தக் குடும்பத்திற்கென்று இருக்கும் சில பழக்க வழக்கங்கள், கலாசாரம் சென்டி மென்ட்ஸ் போன்றவற்றை கடைபிடிப்பது ஒவ்வொரு உறுப்பினரின் கடமையில்லையா?

2. நாம் அடிக்கடி சொல்கிறோமே, எங்கள் குடும்பத்தில் இதுதான் பழக்கம். எங்கள் மூதாதையர், பாட்டி, தாத்தா இப்படித்தான் இருந்தார்கள். நாங்களும் இதைத்தான் பின்பற்றுவோம் என்று. அதே போல இன்றைக்கு நம் பெயருக்குப் பின்னால் இத்தனை பட்டங்கள் சேர்த்துக் கொண்டு பெருமையுடன் சொல்கிறோமே. (நான் டாக்டர், நான் இன்ஜீனியர், நான் பிஸினஸ்மேன் என்று) இதெல்லாம் நாம் அடைய வேண்டும் என்பதற்காக நம்மைக் கண்டித்து,



அறியாமையால் தவறான பாதையில் போக நேர்ந்த போது நமக்கு நல்வழி காட்டினார்களே? அன்று நம்மை அந்தப் பருவ வயதில் நம் பெற்றோர் சரியாகக் கவனியாமல் விட்டிருந்தால் இன்றைக்கு நாம் என்னவாக இருப்போம்? அந்தப் பிரமுகர் சொன்னது போல் நம்முடைய பெற்றோர் நம்மை அந்த இளம் வயதில் நம் மனம் போன போக்கில் விட்டிருந்தால் இன்று... நாம்...? பலர் சொல்லலாம், 'நான் சொந்த முயற்சியில், கடின உழைப்பில் இதை சாதித்தேன். இதில் என் பெற்றோரின் பங்கு இல்லை' என்று. ஆனால் உங்கள் மனத்தில் நீங்கள் இதைச் செய்ய வேண்டும். இதைச் சாதிக்க வேண்டும் என்று விதையை விதைத்தது யார்? பெற்றோர்கள்தான் என்றால்...

இன்றைய பெற்றோர்களாகிய நமக்கு நம் குழந்தைகளுக்கு வழிகாட்டும் உரிமை இல் லையா? நாளை நம் குழந்தைகளில் யாராவது ஒருவர் எனக்கு 14 வயது ஆகிவிட்டது. நான் என்ன வேண்டு மானாலும் செய்வேன். அதற்கு எனக்கு உரிமை இருக்கிறது என்று கூறி தவறான பாதையில் சென்றால் அவர்களைத் திருத்த வேண்டாமா?

இதெல்லாம் போகட்டும். சுதந்திர உணர்வு, தனி மனித விருப்பம் எனும் பெயரால் நாளைக்கு அவர்கள் குடும்பம், குழந்தை என்று ஆனதும் மனைவி ஒரு வழி, கணவன் ஒரு வழி என்று போனால் அவர்களின் குழந்தைகளுக்கு நல்லது, கெட்டது கற்றுக் கொடுக்க யார் இருப்பார்கள்? நான் சமீபத்தில் ஒரு புத்தகத்தில் படித்தேன். ஜெர்மனியில் மக்கள் தொகையில் முதியோர்களின் எண்ணிக்கையை விட இளம் தலைமுறை யினர் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று எதனால்? ஏனெனில் அங்கு இளம் தலைமுறையினர் திருமணம், குடும்பம் என்ற அமைப்பை விரும்பு வதில்லை. ஆணும், பெண்ணும் சிறிது காலம் சேர்ந்து இருந்து விட்டுப் பிறகு பிரிந்து விடு கிறார்களாம். விளைவு இனப்பெருக்கம் குறைந்து விட்டதாம். இதை ஏன் கூறுகிறேன் என்றால் நாம் அடிக்கடி சொல்கிறோமே நாமெல்லாம் படித்த வர்கள். நாகரிகம் அறிந்தவர்கள். நம் பெற்றோரைப் போல நாம் நம் குழந் தைகளை கட்டுப்பெட்டியாக வைக்க மாட்டோம். அவர்களுக்கு முழு சுதந்திரம் அளிப்போம் என்று.

கொஞ்சம் சிந்தியுங்கள் நம் நாடு சுதந்திரம் அடைந்து சுமார் 50 வருடம் ஆகப் போகிறது. இந்த 50 வருடத்தில் நாம் சாதித்தது எத்தனை சதவீதம்? துன்பப்படுவது எத்தனை சதவீதம்? என்பது சமீபத்தில் அரசியல்வாதிகளின் முறை கேடான நடத்தையினாலேயே நாம் தேர்ந் தெடுத்த தலைவர்களைக் கொண்டே நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும் போது சுதந்திரம் என்ற பெயரால் குழந்தைகள் தம் மனம் போன போக்கில் நடந்து ஓடி, ஆடி திரிந்து இறுதியில் களைத்துப் போய் இனி வாழ வழியே இல்லை. (நேர்மையாக) என்ற நிலை வரும்போது, முதலில் அவர்கள் யாரை சபிப்பார்கள்? நம்மை. இன்றைய இளம் பெற் றோரை. குடும்பம் என்பது ஆலமரம் என்று கூறுவார்களே. அப்படியென்றால் நம் விழுதுகள் வளர்ந்து நிலத்தில் உறுதியாக நிற்கும் வரை ஆதாரமாக இருக்க வேண்டியது நம் கடமை இல்லையா? என் நாடு, எங்கள் பாரதத்தின் கலாசாரம், என் குடும்பத்தின் பெருமை என இவற்றையெல்லாம் நாம் நம் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப் போவதில்லையா?

- மனம் குமுறும் ஒரு வாசகி



சானிடரி நாப்கின் பாக்கெட்களில் வரும் எலாஸ்டிக்கை பலரும் உப யோகப்படுத்துவதே இல்லை. இவற்றை குழந்தைகளின் ஜட்டி, ஸ்கர்ட் போன்றவற்றில் கோர்க்க வும். குழந்தைகளின் ஷூக்களில் 'லேஸ்'களுக்கு பதிலாகவும் உப யோகப்படுத்தலாம். இளம் தோலின் மீது அழுந்தாமல் மிருது வாகவும் அதே சமயத்தில் உறுதியா கவும் இருக்கும்.

— உஷா



அட்டைப் போடுகிறார் அண்ணாசாமி

பத்மா

தனக்குள் பொருமிக் கொண்டிருந்தான்...

'படிக்கிறது ஒண்ணாம் கிளாஸ். சுமக்கிறதோ ஒம்பது கிலோ நோட்டுப் புத்தகம். அது என்ன படிப்பாளோ! என்ன சொல்லித் தருவாளோ! ஜி.கே., என்விரான்மெண்டல் சயின்ஸ், அது இதுன்னு நோட்டும் புத்தகமுமாய்ச் சேர்த்து மொத்தம் இருபது உருப்படி. இன்னும் ஏதோ கொஞ்சம் சொச்சம் மிச்சம் இருக்காப்ல இருக்கு. இரண்டு நாள் கழிச்சுத் தருவாங்களாம்.

படாபடா ஸ்கூல். ஆளைத் தேனைப் பிடித்துத்தான் இடம் கிடைச்சுது. லீவ் நாளிலேயே ஃபீஸ் கட்டின கையுடன் நோட்டு, புத்தகமெல்லாம் கொடுத்தாச்சு. இதையெல்லாம் சுமக்கப்போற குட்டி கூட ஊரில் இல்லை. லீவுக்கு சித்தி வீட்டுக்குப் போயிருக்கு. நாளைக்குத்தான் வரா. அவ வரத்துக்குள்ளே எல்லாத்துக்கும் அட்டைபோட்டு, லேபிள் ஒட்டி, ரெடியா வைச்சாகணும்.

இன்னிக்கு இந்த மனுஷன் ஆபீசிலிருந்து வந்ததும் ஈஸிசேரில் மல்லாந்துக்க விடக் கூடாது. ரெக்கமண்டேஷன், இண்டர்வ்யூக்குன்னு நாம இத்தனை அலை அலைஞ்சிருக்கோம். ஒரு ஒரு மணி நேரம் உட்கார்ந்து அட்டையாவது போடட்டும். அட ஆயுசு நூறு!' நடையில் சைக்கிள் பெல் சத்தம், அப்புறம் செருப்பு சத்தம் கேட்டது.


"உஸ்ஸப்பாடா இன்னிக்கு வெய்யில் தாளிச்சிடுத்து. கட்டாயம் நூத்தியஞ்சு இருக்கும். டி.வி.யிலே நியூஸ் சொல்லும்போது கேட்கணும். நான் சொல்றதையே சொல்லுவான். முன்னே பின்னே ஒரு டிகிரி குறையாது பார்."

"உன்னே வரச்சேயே அலட்டலா? எனக்குப் பத்திண்டு வருது 110டிகிரி கோபம்!"

"அப்ப உன் தலையிலேயே வெந்நீர் போட்டுடலாம் காஸ் செலவு மிச்சம்."

டிபன் பாக்ஸை ஸிங்க்கில் போட்டுவிட்டு ஆபீஸ் உடையிலிருந்து மப்டிக்கு மாறி, சளார் புளார் என்று முகத்திலும் கழுத்திலும் தண்ணீரை அடித்துக் கொண்டு ஹாலுக்கு வந்தார் அண்ணாசாமி.

"என்ன ப்ரௌன் பேப்பர் வாங்கி வச்சி'ருக்கே நோட்டுக்குக்கு அட்டை போடப்







போறியா?''

''போடப் போறியாவா? நீங்கதான் அத்தனை நோட்புக்குக்கும் இன்னிக்கே, இப்பவே, இங்கேயே



போடப்போறீங்க.''

"அட்டையா? நானா?" மசாலா விளம்பரம் மாதிரி பின் வாங்கினார்.

"இதோ பாருங்க. நாளைக்குக் குழந்தை வறா. உங்கப்பாதான் அட்டை போட்டுக் கொடுத்தா ரென்று சொல்ல வேண்டாமா?"

"சரி நீ சொன்னதுக்காகப் போடலே. நம்ம பாப்புக் குட்டிக்காகப் போடறேன்" என்ற வாறே ப்ரௌன் பேப்பரையும் நோட்டுப் புத்தகங்களையும் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தார்.

"சித்தே அந்த 'கம்'மையும் கத்தரிக்கோலையும் எடுத்துக் கொடேன்."

''சபக்குன்னு

சிந்தாநதி

ப்ரெளன் பேப்பரை மட்டும் எடுத்து வைச்சுண்டு உட்காந்துட்டா ஆச்சா? அதை எடு இதை எடுன்னு அதிகாரம் பண்ணிண்டு. எல்லாத்தையும் நீங்களே எடுத்து வைச்சுண்டு உட்காருங்க."

"அப்ப நீயே போடு. குழந்தைக்காகத்தான் அட்டை போடறேன். உனக்காக இல்லை."

"ஐயோ சாமி! இந்தாங்க 'கம்'. இந்தாங்க கத்ரிக்கோல். ஒரு வேலையான உருப்படியா செய்யுங்க."

"ஐயோ சாமி இல்லைடி. அண்ணாசாமி."

"இன்னும் ஒரே ஒரு ரிக்வெஸ்ட். இந்தப் பயலை விட்டுட்டுப் போறேன் கால் மணியிலே வந்துடறேன். இன்னிக்கு வெள்ளிக் கிழமை. கோவில்லே கூட்டம் நெரிச்சுடும். இவனையும் அழைச்சிகிட்டுப் போனா நசுங்கி நண்ட வண்டலாயிடுவான்."

"போ. போ. நீ இல்லைன்னா நான் நிம்மதியா வேலை பண்ணுவேன்."

பெரிது பெரிதாய் இருந்த ப்ரெளன் பேப்பரை இரண்டாய் மடித்து நாலாய் மடித்து கையில் அழுத்தி நீவிவிட்டுக் கொண்டே சொன்னார் அண்ணாசாமி. பத்மா படி இறங்கிப் போனாள்.

'அடடா ப்ளேடு எடுத்து வைச்சுக்க மறந்துட்டோமே பத்மா.... ஆ...'

அட அவ பறந்து போய் ஒரு நிமிஷம் ஆச்சு. 'அவள் பறந்து போனாளே', பாடினவாறே ப்ளேடைத் தேடிப் போனார். அவர் போன அடுத்த நிமிஷம் ப்ரெளன் பேப்பரும் திசைக் கொன்றாய்... ஃபேன் காற்றில் பறந்தது.

ப்ளேடுடன் திரும்பியவர் 'அட சனியனே விட்டேனா பார் உன்னை' என்று ஒவ்வொன்றாய் ஓடி ஓடிப் பொறுக்கினார்.

ஒன்றரை வயது அஸ்வின் 'ஐய் அப்பா ஓட்டா! அப்பா ஓட்டா!'' என்றான் கை கொட்டியபடி.

"ஓட்டாவா! ஓடமாட்டேண்டா ஓடமாட்டேன்!'' என்று எல்லாவற்றையும் மீண்டும் அடக்கி மடக்கி கம் பாட்டிலை வெயிட்டுக்கு வைத்தார்.

'முதல்லே நியூஸ் பேப்பர் அட்டை. அதுக்கு மேலேதான் ப்ரெளன் பேப்பர்' எப்போதோ வாரத்தில் ஒரு சனிக்கிழமை ஞாயிற்றுக் கிழமை லீவுநாள் என்று அபூர்வமாய்தான் நியூஸ் பேப்பர் வாங்குவது வழக்கம். அங்கே இங்கே கிடந்த நியூஸ் பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தார். ப்ரெளன் பேப்பரைப் பொறுக்கின வேகத்தில் ப்ளேடை எங்கோ வைத்து விட்டார்.

'ப்ளேடை எங்கே வைத்தேன்? ஒரு செட் ப்ளேடு அப்படியே கொண்டுவந்தேனே. நாளைக்கு ஷேவ் பண்ணிக்க வேணுமே? ஷேவிக்கவேண்டும் ஐயா! தினம் தினம் ஷேவிக்க வேண்டும் ஐயா' என்று தன் முன் போல் முளைத்த தாடியைத் தடவிக் கொண்டே கர்நாடகப் பாட்டு பாணியில் இழுத்தார்.

'சரி போ. என் கையே எனக்குதவி' கையாலேயே கிழிடறேன் கிசி' மீண்டும் உட்கார்ந்தார். நியூஸ் பேப்பரை மடித்து. அழுத்தி நீவி விட்டார். பையன் அஸ்வின் 'தேமே'ன்னு ஒரு மூலையில் எதையோ நோண்டிக் கொண்டிருந்தான்.

நன்றாய் நியூஸ் பேப்பரை நீவிட்டபின் கிழித்தார் சர்...சர்... சர்.... மெளண்ட் ரோட்டிலிருந்து சைதாப்பேட்டைக்கு நேரே போகாமல் நுங்கம்பாக்கத்துக்காய் திரும்பி விட்டது. படு கோணல் படுகோணல். 'சே சே எல்லாம் சதி. அவ கால்மணி ஆகும்னா, அரைமணியாகும் வர்றதுக்கு. பத்து நோட்டுகளுக்கான அட்டை போடணும் என்று தன் சதியை நினைத்துக் கொண்டே அந்த உத்தம பதி அலவட்சணமாய் கிழித்த நியூஸ் பேப்பரை பலங்கொண்ட மட்டும் நசுக்கி, உருண்டையாக்கி தூக்கித் தூக்கி எறிந்தார். அவை குழந்தை அருகில் போய் விழுந்தன.


குழந்தை திடீரென்று "வீல் வீல்" என்று கத்தியது. "ஏண்டா மேலே படாமே தானேடா போட்டேன். நீ வேற ஏன் அழறே?"

ப்ரெளன் பேப்பர், நோட்டுப் புத்தகம், ஸ்கேல், கத்தரிக்கோல், கம், நியூஸ்பேப்பர் உருண்டை, எல்லாத்தையும் 'தமா திமா'என்று அவசர அவசரமாய் தாண்டிக்குழந்தையிடம் ஓடினார். அவர் தேடிய 'ப்ளேடு' குழந்தையின் கையில். ரத்தம் 'கடகட'வென்று கொட்டியது. குழந்தையை அள்ளி எடுத்துக் கொண்டு வாஷ் பேஸினுக்கு ஓடினார். ரத்தத்தை அலம்பி குழந்தைக் கதறக் கதற பஞ்சில் டெட்டால் வைத்து அமுக்கி, வேர்த்து விறுவிறுத்துப் போனார் அண்ணாசாமி. குழந்தையை மடியில்

உலர்ந்துவிட்ட நெயில் பாலிஷில் கொஞ்சம் நெயில் பாலிஷ் ரிமூவரை ஊற்றிக் குலுக்கி மூடி வைத்தேன். இரண்டு நாட்களில் மீண்டும் புதிதுபோலவே சரியான பதத்தில் நெயில் பாலிஷ் இளகியிருந்தது.

— உஷா





என் பெண் எல்.கே.ஜி. படிக்கிறாள். விடுமுறை நாளில் ஏதாவது வார்த்தைகளுக்கு ஸ்பெல்லிங் சொல்லித் தரலாம் என்றால் 'வீவு நாள்ல கூட படிப்பா?' என்பது போல் அலுப்பாள். உடனே என் கணவரின் யோசனைபடி அத்தை, மாமா, பாட்டி என்று உறவினர்களுக்குப் பத்து வார்த்தைகளில் நலம் விசாரித்துக் கடிதம் எழுத பழக்கினேன். தான் கடிதம் எழுதுகிறோம் என்ற மிதப்பில் நான் சொல்லும் ஸ்பெல்லிங்கை எழுதுவாள்.

– கி. மஞ்சுளா

போட்டு சமாதானம் செய்து முடிக்க பத்து நிமிடம் ஆயிற்று. விசித்து விசித்து அழுது கொண்டே குழந்தை தூங்கிப் போனான்.

'டொக் டொக்'– கதவுச் சத்தம் 'ஐயையோ வந்துட்டானே' கதவைத் திறந்தால், ஒரு ரெட்டைப் பின்னல் குட்டைப் பாவாடை. "மாமா எங்க வீட்டு தினமணி பேப்பர் மாமி மத்தியானம் வாங்கிண்டா. எங்கப்பா கேக்கறா." தினமணியா?... அண்ணாசாமிக்கு மூளையில் ஏதோ பொறிதட்டியது.

"அது... அது மாடிலே தாடி மாமா வாங்கிட்டு போயிருப்பார். ஓசி அடிக்கலாம். தப்பில்லே. ஆனா ஓசிலே ஓசி ரொம்ப தப்பு. ரொம்ப ரொம்ப தப்பு. மாமி கோவிலுக்குப் போயிருக்கா. வரட்டும். வாங்கித் தரச் சொல்றேன்."

பாதிக் கதவைத் திறந்து பதில் சொல்லிட்டு பட்டென்று கதவைச் சாத்தினார். காலண்டரைப் பார்த்தார். பத்து தேதி பத்து.

சற்று முன் பந்து விளையாடிய பேப்பர் உருண்டை காலடியில் ஓடி வந்தது. எடுத்தார்; உருண்டையைப் பிரித்தார்: 'பத்து!' பத்து! அதிலும் பத்து.

'பேப்பர் ஓசி வாங்கின பத்தூ... உன்னை ஒரே மொத்து' காலை ஓங்கி ஒரு உதை உதைத்தார் 'பசக்' இதென்ன? காலைத் தூக்கினால் ப்ரௌன் பேப்பர் காலுடன் வந்தது.

"ஐய்யைய்ய."

சூம் அத்தனையும் கொட்டி... காலில் ஒட்டிய ப்ரௌன் பேப்பரை லாவகமாய் காலிலிருந்து கழற்றினார். பேப்பரிலிருந்து நீளமாய் பிசுக்காய் பாகுமாதிரி 'கம்' வழிந்து கொண்டிருந்தது. 'அட சனியனே பனியனெல்லாம் வழியறதே! கையில் இசுக் பிசுக். காலில் இசுக் பிசுக். பனியனில் இசுக் பிசுக். காலை பூமியில் முழுவதும் பாவ முடியாமல் கோந்து, காலிலும் தரையிலும் ஒட்ட ஒட்ட மீண்டும் பாத்ரூம் நோக்கி 'ததகா' 'புதகா' என்று நடக்கையில் கால்பட்டு அடுக்கி வைத்திருந்த நோட்டும் புத்தகங்களும் மடமட என சரிந்தன.

தண்ணீர் ஊற்ற இசுக் பிசுக் கொழ மொழ என்றாகி அலம்புவதற்குள் போதுமென்றானது. பனியனில் கோந்து நாத்தம் குடலைப் பிடுங்கியது. 'பனியனைத் தூக்கி எறி' என்று அவிழ்த்துக் கடாசினார்.

மீண்டும் வாசலில் டொக்டொக். கோவிலுக்குப் போன பத்மா வந்தாள், இரண்டடி உள்ளே காலை வைத்ததும் 'இசுக் பிசுக்'.

'என்ன இது?' குனிந்து பார்த்தாள் ரத்தம் சொட்டு சொட்டாய் பாத்ரூம் வரை ஒரு பக்கம் பிசின் பிரவாகம் நாலைந்து பேப்பர் உருண்டைகள். ஸ்கேல், ப்ரௌன் பேப்பர் நோட்டுப் புத்தகம் எல்லாம் இறைந்து கிடைக்க வீடு ரணகளமாய் இருந்தது.

அண்ணாசாமி சோடா பாட்டில் கண்ணாடிக்குள் மலங்க மலங்க முழித்துக் கொண்டிருந்தார்.

"போறுண்டா சாமி! நீங்க அட்டையும் போட வேண்டாம் சட்டையும் போட வேண்டாம்."

"இத பாரு நீ அப்பப்ப எம்பேர்ல பாதிய சொல்றே. அதிலேயும் அவமரியாதையா'டா' போடறே மரியாதையா பேசு."

"போறுங்க. சாமிங்க நானே போடறேன் உதடு தேயறத்துக்கு உள்ளங்கால் தேயலாம்பா. சரியாத்தான் இருக்கு." மடமடவென்று வீட்டைச் சரிபண்ணி நோட்டுப் புத்தகங்களுக்கு அட்டை போட்டாள். அண்ணாசாமி ஈஸி சேரில் சாய்ந்தார்.

ஒரு மணி நேரத்தில் அத்தனை நோட்டும் புத்தகமும் 'நிகு நிகு' என புதுச்சட்டை போட்ட பையன்கள் போல கம்பீரமாய் இருந்தன.

மீண்டும் கதவு சத்தம். மீண்டும் ரெட்டைப் பின்னல் குட்டைப்பாவாடை.

"மாமி எங்கம்மா ஒரு டம்ளர் காபிப்பொடி கேட்டா. அட புது நோட்டா? பாப்புக்குட்டியோடதா? அவளை எங்க ஸ்கூல்ல சேத்துடலங்க இல்லையா? இதென்ன அட்டை? எங்க ஸ்கூல்ல அவங்ககொடுக்கிற ப்ரௌன் பேப்பர்ல தான் அட்டைபோடணும். மேலே ஸ்கூல் பேர் ப்ரிண்ட் பண்ணியிருக்கும். ஸ்கூல் படம் கூட போட்டிருக்கும். ரெண்டுநாள் கழிச்சி தரேன்னாங்களே உங்களுக்குத் தெரியாதா மாமி?"

இப்போது அண்ணாசாமி கொக்கரித்தார்.

கால்களையும் அழகாக வைத்துக்கொள்ள வேண்டும்!

தலைமுதல் கால்வரை நம்மை அழகாக வைத்துக் கொண்டு விட்டால் அதைவிட மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடியது வேறு என்ன இருக்க முடியும்? அழகு என்பது முகத்தை மட்டும் சேர்ந்ததல்ல. அது எல்லா அவயவங்களையும் சேர்ந்ததுதான்.

பொதுவாகக் கால்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே நம்மில் பலரிடம் இருப்பதில்லை. இதுதான் பல நோய்களின் ஆரம்பமாகிறது. முதலாவதாக கால்களுக்கு ஏற்ற வகையில், அதிக அழுக்கு சேருவதற்கு இடம் தராத வகையில் உள்ள காலணிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.



கால்களைப் பாதுகாக்க ஒருசில நிமிடங்களே போதும். முதலில் வாயகன்ற பேசினில் சூடான சோப்புத் தண்ணீர் எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒரு சில துளி எண்ணெய் விட்டுக் கொள்ளவும். உங்கள் கால்களை அந்தத் தண்ணீரில் பதிய வைத்துச் சிறிது நேரம் ஊறவையுங்கள். முடிந்தால் சிறிது ஹைட்ரஜன் பொராக்சைட் திரவத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். சிறிது நேரம் கால்கள் நன்றாக ஊறிய பிறகு கால்களை வெளியே எடுத்து, உலர்ந்த துணியால் துடைத்து விட வேண்டும். இதற்குப் பிறகு, ஒரு நல்ல pumic கல்லை எடுத்து, உள்ளங் கால்களையும், குதிக்கால்களையும் ஐந்து நிமிடம் ஒத்தடம் செய்தபின், குதிக்கால்களி லும், உள்ளங்கால்களிலும் கிரீம் தடவ வேண்டும். பிறகு சூடு பறக்கத் தேய்த்து விட வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் பித்த வெடிப்பைத் தவிர்த்து ஆரோக்கியமான அழகான கால்களை பெறலாம். இதற்கெல் லாம் ஏது நேரம் எனச் சலிக்க வேண்டாம். சாதாரணமாக டி.வி. பார்க்கும்போது, குடும்பத்துடன் பேசும்போது இதைச் செய்து விடலாம்.

சில பெண்களுக்குக் கைகள் மிகவும் கடினத் தன்மையாக இருக்கும். காய்கறிகள் நறுக்குவதாலும், துணிகள் துவைப்பதாலும், வீட்டு வேலைகள் செய்வதாலும் கைகள் மிருதுவாகவே இருக்காது.

இரவில் வேஸலின் அல்லது ஆலிவ் எண்ணெயை கைகளுக்குத் தடவி, காலையில் கொஞ்சம் கடலை மாவால் கழுவ வேண்டும். வாரத்திற்கு ஒருமுறை நகங்களுக்கு 'நெயில் பாத்' கொடுக்க வேண்டும். அதாவது ஆலிவ் எண்ணெயைக் கொஞ்சம் காய்ச்சி, ஒரு கிண்ணத்தில் ஊற்றி, அதில் நகங்களை நனைய வைத்து 10 நிமிடங்கள் கழித்து எடுத்து, சற்று நேரம் கழித்து, மசாஜ் செய்ய வேண்டும்.

இவ்விதம் செய்தால் நகங்களுக்கு மிகவும் நல்லது.

கை நகங்களைப் பாதுகாக்கும் முறை:

மிதமான சூடான வெந்நீரில் ஷாம்பு போட்டுக் கைகளை அதில் நனைய வைக்கவும். 10 நிமிடங்கள் கழித்து எடுத்து நகங்களைச் சுத்தம் செய்து நகக் கத்திரியால் அல்லது நெயில் கட்டரால் ஓவல் ஷேப்பில் நகங்களை வெட்டவும். கைகளின் மத்திய பாகம், விரல்கள், நகங்கள் ஆகியவற்றை ஆலிவ் எண்ணெயினால் மசாஜ் செய்தபின் வெந்நீர் ஒத்தடம் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் கைகளுக்கு நல்ல பளபளப்பு ஏற்படும். சில வகை ரசாயன முறையினாலோ, டிடர்ஜெண்ட் முறையினாலோ, நம் கைகள் கடினமானால், ரோஸ்வாட்டரும், கிளிசரினும் சரி சமமாக எடுத்துக் கைகளுக்குத் தடவினால் கைகள் மிருதுவாக ஆகும்.

சிலருக்குக் கைகளில் முட்டியில் மிகக் கறுப்பாக இருக்கும். கறுப்பு மறைய முதலில் கைமுட்டியில் எலுமிச்சை சாறு தடவி அரை மணி ஊறிய பின் கடலைமாவில் மஞ்சள் பொடி கலந்து பேஸ்ட்போல் தடவி 5 நிமிடம் ஊறிய பின் கழுவினால் கை முட்டி கறுப்பு மறையும். மழைக்காலத்தில் கட்டாயம் வெண்ணெய், பாலேடு, பாதாம் எண்ணெய் ஏதேனும் ஒன்றைத் தடவ வேண்டும். அதுபோல் வெய்யிலில் தோல் கறுத்தது போல் காணப்படும். நல்லெண்ணெயுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவி 2 மணி நேரம் கழித்துக் கடலைமாவு கொண்டு கழுவினால் நல்ல பலன் கிடைக்கும்.


நகங்கள் நன்றாக வளர வேண்டுமானால் பால், கால்ஷியம், வைட்டமின் சி, வைட்டமின் டி. அதிகமாக சாப்பிட வேண்டும்.

கால், கை, முடிகளை அகற்ற 'வேக்ஸிங்' முறை சிறந்தது. குறிப்பாக என் மாணவிகளுக்கு ஹெர்பெல் முறையை சொல்லித் தருகிறேன். ஹெர்பெல் வேக்ஸிங் செய்த பின்பு ஹெர்பெல் எண்ணெய் மசாஜ் செய்கிறோம். அவ்வாறு செய்வதால் சருமம் நன்கு பளபளப்பு அடையும்.

தலைமுடி உதிர்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. சருமம், கண், கேசம், நகம், பற்கள் இவை உறுதியான ஒளியுடன் இருப்பதற்கு இன்றியமையாத உயிர்ச் சத்தான வைட்டமின்கள் A,C,D,K. மிக முக்கியம். Aயும், Cயும் தோல், கண் கேசம் இவற்றை ஆரோக்கியமாக, நகம் பற்கள் இவை உறுதியாக இருப்பதுடன் தொத்து நோய் தடுப்புச் சக்தியும் அளிக்கிறது. நாம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும். முக்கால் பகுதி நாம் உண்ணும் உணவே நமக்கு அழகு சாதனம். சருமம் வெளுக்க மாசு மறுவின்றி இருக்க காரட், தக்காளி, கொத்தமல்லி, கீரை, கறிவேப்பிலை உணவில் பச்சையாக அவசியம் உண்ண வேண்டும்.

வயது ஆகிவிட்டதே என்று நினைக்காமல் சருமத்திற்கு ஆரோக்கியம் அளித்தால் எப்போதும் இளமையாக இருக்கலாம். இயற்கை முறையில் மூலிகைகளைக் கொண்டு தலைக்கான எண்ணெயைத் தயார் செய்து வருகிறேன். கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி, பொன்னாங்கண்ணி சம அளவு எடுத்துப் பிழிந்து சாறு எடுத்து ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெய் விட்டுக் காய்ச்சி நெய் போல வாசனை வந்ததும் இறக்கி நன்கு ஆறியதும் பாட்டிலில் வைத்து உபயோகித்தால் நன்கு முடி வளரும். அழகு ஆலோசனைகள் பற்றி உங்களுக்கு என்னிடம் பேச வேண்டுமென நினைத்தால் 6383596 எனும் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.

- ஹேமாலக்ஷ்மண்,
அழகு மற்றும் சிகை அலங்கார நிபுணர்.



தத்தம் வீட்டுக்குள் நுழையுமுன் ஒவ்வொரு வரும் வாசல்படியில் நின்று, 'வீட்டிலுள்ளவர் கள் நலமுடன் நிம்மதியாகவும், மனநிறைவு டனும் வாழ வேண்டும்' என்று எல்லாம்வல்ல இறைவனை மனமாற வேண்டுவதனால், பல பெரிய பெரிய கஷ்டங்கள் மாறி அமைதி கிடைக்கும்.

–ஜானகிநாகராஜன்

"என் வீட்டுக்காரருக்கு நான்னா பிடிக்கறதில்லை. என்ன சொன்னாலும் எதிர்த்து சொல்வார். அவர் இஷ்டம்தான் எல்லாம்" இது சில மனைவிமார்களின் புலம்பல்.

"என் ஹஸ்பெண்ட் என்னை சட்டை செய்யறதே இல்லை. எப்பப் பார்த்தாலும் ஒரே அதட்டல் உருட்டல்தான். என்ன பண்றதுன்னே தெரியலை." இது சில மனைவி மார்களின் ஆற்றாமை.

எது எப்படியோ எல்லா மனைவி மார்களுக்கும் தங்கள் கணவன் எப்போதும் தங்களவராகவே இருக்க வேண்டும் என்று ஆசைப் படுவதில் தப்பில்லை. சில யோசனைகள்...

உங்கள் கணவரிடம் உள்ள குறைகள் எதையும் நேரடியாகச் சொல்லாதீர்கள். உதாரணமாக உங்கள் கணவர் எதிலும் பங்சுவல் இல்லையா? இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? ரொம்ப சிம்ப்பிள். உங்கள் வீட்டிற்கு வரும் நெருங்கிய உறவினர் அல்லது நண்பரிடம் "என் ஹஸ்பெண்ட் ரொம்ப பங்ச்சுவல். ஒரு இடத்திலே இத்தனை மணிக்கு இருக்கணும்னா டாண்ன்னு இருப்பார். அவருடைய பங்சுவாலிட்டி எனக்கு கட்டுப் போட்டாலும் வராது" என்று ஒரே போடாகப் போடுங்கள். (உங்கள் கணவர் காதுபட என்பது முக்கியம்) தான் ரொம்ப பங்ச்சுவல் போலிருக்கு. அதுதான் இவ இவ்வளவு பெருமையா சொல்லிக்கிறா என்று உங்கள் கணவர் மனதில் பதிய

உங்க'ளவர்' உங்களுடனே!



அடுத்தடுத்த நாள் அவர் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஆஜர்.

கணவரைக் கவர்ந்து இழுக்க எளிய வழி உங்கள் கைவரிசையை கைமணத்தை சமையலில் காட்டி தூள் கிளப்புவதுதான். அவர் எந்த உணவு வகையைப் பார்த்து முகம் களிப்பார்? எந்த வகை உணவை ஒரு பிடிபிடிப்பார்? என்று ஒரு பட்டியல் தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். நாக்கிற்கு அடிமையாகாத மனிதரே இல்லை எனலாம். என்றாவது ஒரு நா வெளியில் சாப்பிட நேர்ந்தாலும் சாப்பிடப் பிடிக்காமல் உங்கள் நினை உங்கள் சமையலின் கைமணம் அவர் மனதை வருடுமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

வயதையோ, நிறத்தையோ, உருவத்தையோ மறந்தும் கேலி செய்யாதீர்கள். உங்கள் கணவருக்கு வயது 40ஐ தாண்டிவிட்டதா? "என்ன உங்களுக்குப் பொல்லாத வயசாயிடுச்சு. ரஜினி, கமல் வயசுதானே ஆறது..."

என்று சூப்பர் ஸ்டாரையும், ஆக்ஷன் ஹீரோவையும் நினைவூட்டலாம். யாருக்குமே தன்னைப் புகழ்பெற்ற சில மனிதர்களோடு ஒப்பிடும்போது மனதில் சந்தோஷ அலை வீசத்தான் செய்யும். அதேபோல் உங்கள் கணவர் உடல் பெருத்தவரானால் கிண்டல் செய்யாதீர்கள். "கொஞ்சம் ஸ்கிப்பிங், எக்ஸர்சைஸ் பண்ணினா டிஷர்ட், ஜீன்ஸ் எல்லாம் உங்க ஃபிகருக்கு ரொம்ப அசத்தலா இருக்கும்" என்று அசத்தலாகப் பேசுங்கள். அடுத்த நாள் காலை கையில் காப்பி டம்ளருடன் உங்கள் கணவரை வேறு எங்கும் போய் தேடாதீர்கள். மொட்டைமாடியில் மூச்சிரைக்க ஸ்கிப்பிங் ஆடிக் கொண்டிருப்பார்.

நாளை உங்கள் மாமனார், மாமியார் ஊரிலிருந்து வருகிறார்களா? இன்றே அல்வாவும், திரட்டுப் பாலும் தயார் செய்யுங்கள். (பாவம்... அவர்களுக்கு ஷுகர் ஏறி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்) மாமியார் வரும் பின்னே ஏலக்காய் மணம் வரும் முன்னே" என்ற புதுமொழியைக் கடைப்பிடியுங்கள். அவர்கள் ஊருக்குச் சொல்லும்வரை அன்பு மழையில் குளிப்பாட்டி அனுப்பிவையுங்கள்.. நீங்கள் உங்கள் மாமியாரை விழுந்து விழுந்து கவனித்தால் அவர் அவர் மாமியாரை விழுந்து விழுந்து கவனிக்க' மாட்டாரா என்ன?


மாலை மணி ஐந்தடிக்கப் போகிறதா? இன்னும் சிறிது நேரத்தில் உங்கள் கணவர் ஆபீஸிலிருந்து வந்து விடுவாரா? 'சட்'டென உங்களை சிறிது ஃப்ரெஷ் அப் செய்து கொள்ளுங்கள். அதற்காக பார்ட்டிக்குப் போவது போல் அலங்கரித்துக் கொள்ள வேண்டியதில்லை. சிம்பிள் மேக்-அப்பில் 'பளிச்'சென்று இருங்கள். அலுவலகத்தில் வேலை முடிந்து உங்கள் எண்ணெய் வழியும் முகமும், கலைந்த தலையும், கசங்கிய உடையும் எரிச்சலைத் தரலாம். மாலை நேரத்தில் உங்கள் அழகு உங்கள் கணவரின் அலுவலக அலுப்பை மறக்க வைத்து மறுபடியும் உங்களை அழைத்துக் கொண்டு வெளியில் சுற்ற எண்ணும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

"என் ஹஸ்பெண்ட் என்னை எதற்கும் தேடறதில்லை. அவர் வேலையை அவரே பார்த்துப்பார்" என்று சிலர் பெருமையாகக் கூறிக் கொள்வார்கள். இதில் ஒன்றும் பெருமை தேவையில்லை. "அவ வீட்டிலே இல்லாட்டா என்ன? குடும்பம் நடக்கலையா? சொல்லப் போனா இன்னும் நிம்மதியா இருக்கேன்" என்கிற மாதிரி நடந்து கொள்ளாதீர்கள். கணவரின் சின்னச் சின்னத் தேவைகளில் வலதுகரமாகச் செயல்படுங்கள். மொத்தத்தில் "அவளின்றி ஒரு அணுவும் அசையாது" என்று அவர் உணரும்படி நடந்து கொள்ளுங்கள். நாளடைவில் அவரும் உங்களுக்குச் சின்னச் சின்ன விஷயங்களில் கூட உதவ முன் வருவார்.

நாத்தனாருடன் சண்டையா? மாமியாருடன் வாக்குவாதமா? "நைட் பெட்ரூமிற்கு அவர் வரட்டும் அவர்கிட்டே கொட்டி ஒரு மூச்சு அழுது தீர்க்கலாம்" என்று இரவை எதிர்நோக்கி இருக்காதீர்கள். மொத்தத்தில் படுக்கை அறைக்குள் உங்கள் வீட்டுப் பிரச்னைகளையும், உறவினர் பற்றிய புகார்களையும் மறந்தும் நுழைக்காதீர்கள். எந்தக் கணவனும் அந்த இனிமையான நேரத்தில் பிரச்னைகளை எதிர் கொள்ள விரும்புவதில்லை. படுக்கை அறை என்பது பிரச்னைகளைத் தீர்க்கும் நீதி மன்றமல்ல.

வீட்டுச் செலவிற்கென உள்ள பணத்தில் சிறிது மிச்சப்படுத்துங்கள். (கணவருக்குத் தெரியாமல்) ரொம்பவும் பணநெருக்கடி சமயத்தில் விழிபிதுங்கிக் கொண்டிருக்கும் உங்கள் கணவரிடம் 'டக்' என்று எடுத்து நீட்டுங்கள் (முழுப் பணத்தையும் அல்ல) அவசரத்திற்குக் கைகொடுக்கும் தெய்வமாகிய உங்கள் கைக்குள் என்றென்றும் உங்கள் கணவர் இருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

- கீதா தெய்வசிகாமணி.



மனிதன் பிறக்கின்ற பொழுதே அவனுடைய விதி நிர்ணயிக்கப்படு கின்றது என்று நம்முடைய சாத்தி ரங்களும், இதையே வலியுறுத்தி ஜோதிட சாத்திரமும், பிரம்ம தத்துவ சூத்திரமும் கூறுகின்றது. மனிதன் நிச்சயமாக ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பதே பிரம்மா படைப்பின் இரகசியமாகும். அதன்படி பார்க்கின்ற பொழுது, அவன் ஒரு கோடீஸ்வரனாகவோ, குறைந்தது லட்சாதிபதியாகவோ வாழ வேண்டும். இன்று ஒரு சிலர் நல்ல வசதியாகவும், பலர் தரித்திரத் திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள். இதன் காரணங்களை ஆராய்ந்து பார்த்தால், மனிதனே தனக்கு விதிக் கப்பட்ட விதியின் வழியே வாழ

சலையே குறைத்துக் கொள்ளும். தன் எல்லை யைத் தானே குறைத்துக் கொள்கிறது.

அதன்படியே மனிதனும் தான் கட்டிய கிரகத்தினால் தன்னுடைய வாழ்க்கை பெரியதாகவோ, சிறியதாகவோ வாழ்வதைத் தானே நிச்சயித்துக் கொள்கிறான். தான் கட்டிய கிரக பலத்தினால் தான் செல்வ செழிப்போடு பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்வதோ, தன் வாழ்வை சிறுமை படுத்திக் கொள்வதோ, தன்னுடைய சிந்தனையிலேயே, தன்னுடைய கையிலேயே விதி இருப்பதை மறந்து போகின்றான். மனிதனுடைய விதியை மதியால் வெல்ல இந்த வாஸ்து சாஸ்திரம் பெரிதும் வழி காட்டுகின்றது. கிரகத்திற்குச் சரியான திசைகளையும், அதன் தன்மைகளை யும் நன்கு அறிந்து அந்த திசைகளை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள மனிதன் மதியைப் பயன்படுத்தித் தன் விதிவழியே கிடைக்கக் கூடியதை முழுமையாக பெற்றுக் கொள்ள லாம்.

முதலில் வாஸ்து சாஸ்திரப்படி திசைகள் எப்படிப்பட்டவை அவை நமக்கு என்ன செய்கின்றது. அந்தத் திசைகளின் கடவுளர்கள் யார்? துர்த்தேவதைகள் யார்? இவர்களால் நம் வீட்டிற்கு ஏற் படும் நன்மை தீமைகள் என்ன என்ப தனை தெரிந்து கொள்வோம்! இவைகள்



வாஸ்து எனும் புதையல்

• பிஜே.ரவிராஜ்

...தன்னை தானே கெடுத் துக் கொள்கிறான் என்பது புலப் படும்.

இதற்கு ஒரு சிறு உதாரணம் கூறலாம். கிராமங்களில் இன்றும் மேய்ச்சல் நிலத்தில் ஒரு குச்சியை அடித்து ஒரு நீளமான கயிற்றில் மாட்டை மேய்ச்சலுக்காக கட்டி விடுவார்கள். கயிற்றின் நீளத்திற்கு ஏற்ப அது மேய்ந்து கொள்ள முடியும். தூரத்துப் பச்சை கண் ணுக்கு அழகு. அதன்படி மாடு தான் மேய்ந்து கொண்டிருக்கும் இடத்தை விட்டு எதிர் திசைக் குச் செல்லும். மீண்டும் எதிர் திசையிலிருந்து மறு திசைக்கு மாறி, மாறி சென்று தன்னுடைய கயிற்றின் நீளத்தைக் குச்சியில் சுற்றி சுற்றி குறைத்துக் கொண்டு தனக்குக் கொடுக்கப்பட்ட மே...

அனைத்தும் நம் ரிஷிகளாலும், முனிவர்களா லும் கொடுக்கப்பட்ட சாத்திர உண்மைகளா கும். கீழே உள்ள வரைப்படத்தினால் திசைகளையும் கடவுளர்களையும் அறி...

வடமேற்கு		வடக்கு		வடகிழக்கு
	வாயு	குபேரன்	ஈசன்	
மேற்கு	வருணன்	பிரம்மா	இந்திரன்	கிழக்கு
	இராட்சசன்	எமன்	அக்னி	
தென்மேற்கு		தெற்கு		தென்கிழக்கு

வடக்குத் திசையை மூன்று கடவுளர் ஆட்சி செய்கின்றனர். அவர்களின் குணநலன்கள் புராணங்களில் கூறப்பட்டுள்ளது போலவே மனிதனின் வாழ்வில் அவன் கட்டிய கிரகத்தில் பிரதிபலிப்பதை நன்கு உணரலாம். வடக்கு திசையில் அதிக காலி இடத்தை மனையிலோ அல்லது வீட்டிலோ விட்டு வடக்குத் திசையில் வாசல் வைத்துக் கிரகத்தைக் கட்டினால் குபேரன் போன்று வசதியான வாழ்வு கிடைக்கும். குபேரன் அந்த "பரமாத்மா கோவிந்தனுக்கே" கடன் கொடுத்தவன் என்பதை நாம் நன்கு அறிவோம். வடகிழக்கில் உள்ள வடக்கு ஈசன் நம்முடைய பெண் குழந்தைகளின் வாழ்வைச் சீராக்கி நம் சந்ததியை வளம்பெற செய்கின்றார். வடமேற்குப் பகுதியில் வடக்குப் பகுதி வாயு நம்முடைய தொழில் வளர்ச்சியுடன் பொருளாதார மேம்பாட்டை வளர்க்கின்றார். ஆகவே இந்த வடக்கு திசை முழுமையாக மனிதனுடைய தொழில், பொருளாதாரம், நம் பெண் குழந்தைகளின் வளர்ச்சி ஆகியவற்றைக் குறிக்கின்றது. இந்தத் திசை சரியாக நம் வீட்டிற்கு அமையாவிட்டால், தொழிலில் வீழ்ச்சி, பணத்தட்டுப்பாடு, பெண் பிள்ளைகளால் அவப் பெயர் மற்றும் துன்பங்கள் ஏற்படும் என்பதனை சாத்திரங்கள் கூறுவது மட்டும் இன்றி அனுபவ உண்மையும் காட்டுகின்றது.

கிழக்கு திசை வடக்கு திசையைப் போன்றே மிக முக்கியமானதாகும். இந்தத் திசையையும் மூன்று கடவுளர் ஆட்சி செய்கின்றனர். இந்தக் கடவுளர்களின் குண நலன்களே வாழ்வை முழுமையாக பிரதிபலிக்கின்றது. கிழக்கு திசையில் அதிக காலி இடத்தை மனையிலோ அல்லது வீட்டிலோ விட்டு கிழக்கு திசையில் வாசல் வைத்து கிரகத்தைக் கட்டினால் இந்திரன் போன்று அதிக அழகுடன், பொன் பொருள் ஆபரணங்கள் கிடைக்கும். வடகிழக்குப் பகுதியின் கிழக்குப் பகுதி ஈசன் நம்முடைய ஆண் குழந்தைகளின் வாழ்வைச் சீராக்கி நம் சந்ததியை வளர் பெறச் செய்கின்றார். கிழக்கிலிருக்கும் அக்னிபகவான் நம்முடைய பெண்களின் உடல் நலத்தைக் காத்து அவர்களை புகழ் பெறச் செய்கின்றார். இந்த கிழக்கு பாகம் சரியாக அமையாவிட்டால், ஆண் குழந்தைகளால் துன்பம், பொன் பொருள் இழப்பு, மனைவிக்கு வியாதி, துன்பம் மற்றும் விவாகரத்து மற்றும் பெண்களுக்கு அதிக உதிரப்போக்கு முதலியன ஏற்படுவதை நாங்கள் அனுபவப் பூர்வமாக கண்டறிந்த உண்மைகளாகும்.

தெற்கு திசை, இது மிக மிக முக்கியமானதும் நன்கு யோசித்து ஆராய்ந்து அனுபவம் பெற்ற வாஸ்து வல்லுனர்களை வைத்து எதையும் செய்ய கூடிய திசையும் ஆகும். இந்தத்

திசையை ஒரு கடவுளும் இரண்டு துர்தேவர்களும் ஆட்சி செலுத்துகின்றனர். தெற்குப் பகுதியில் குறைவான இடத்தை விட்டு, ஆராய்ந்து அறிந்து வாயிற்படிகளை அமைக்க வேண்டும். இப்பகுதியில் தெற்கு பாகத்தினால் நல்ல உடல் ஆரோக்கியமும், தென் மேற்குப் பகுதியினால் புகழும், கீர்த்தியும், ஸ்திரமான வருமானங்களும் ஏற்படும். இந்தப் பகுதி சரியாக அமையாமற் போனால் கோர்ட் வழக்கு, கடன் படுதல், தொழில் முடக்கம், கொடிய வியாதி, தற்கொலை எண்ணங்கள் நிச்சயம் ஏற்படும். இது ஏதோ பயமுறுத்தும் விஷயம் இல்லை! நம்மை நாம் சீர் செய்து கொள்ள துன்பங்களை களைந்து கொள்ள அறிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். தெற்குப் பகுதி இராட்சசன் மற்றும் எமனை அடக்கி வெற்றி கொள்ள வேண்டும்.

மேற்கு திசையும், தெற்கைப் போன்றே மிகவும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய திசையாகும். மேற்குப் பகுதியை இரண்டு கடவுளர்களும், ஒரு துர் தேவனும் ஆட்சி செய்கின்றனர். இங்கு குறைவான காலி இடத்தை விட்டு வீடு கட்டினால் மனிதனுக்கு ஓர் உயர்ந்த அந்தஸ்து இந்தச் சமூகத்தில் கிடைப்பதுடன் ஸ்திரமான சந்ததிகளுக்கும் போதுமான பொருள் கிடைக்கும். தொழிலில் போதுமான பணப் புழக்கங்கள் ஏற்படும். பெண்களால் வீட்டிற்குப் பெருமைகள் கிட்டும். இந்தப் பகுதி சரியாக அமையாமற் போனால் புகழ் மங்குதல், எதிலும் தோல்வி, விபத்து, அவமானம், பெண்களுக்குக் கெடுதல் மற்றும் துன்பங்கள், ஸ்திரத்தன்மை இல்லாத எண்ணங்கள் ஏற்படும்.

பழங்கால வீடுகளை நாம் ஆராய்ந்து பார்த்தோமேயானால் மனிதன் தன்னுடைய பாதுகாப்பிற்கும், புகழ் மங்கா பண்பிற்கும், தீய எண்ணங்கள் இல்லாத நல் வாழ்விற்கும் நம் ஆரோக்கிய வாழ்விற்கும் ஏற்ற வீடாக வாஸ்து சாத்திர முறைப்படி, பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகாயம் இவற்றின் இயற்கை அதிர்வுகளை தங்கள் இல்லங்களில் இருக்கும் படியாக படுக்கை அறை, குளியல் அறை, சமையல் அறை, பொக்கிஷ அறை மற்றும் விருந்தினர் அறை ஆகியவற்றை இயற்கை விஞ்ஞானத்திற்கு முரண்பாடு இல்லாத வீடாக அமைத்துக் கொண்டார்கள். இன்றும் கிராமங்களில் இப்படிப் பட்ட வீடுகளைப் பார்க்கலாம். ஆனால் இன்று தன்னுடைய வசதி ஒன்றையே மனிதன் கருத்தில் கொண்டு வீடு கட்டுகின்றான். இன்றைய நாகரீகமான வீட்டினால் மனிதன் இயற்கைக்கு முரண்பாடான வாழ்வை வாழ்ந்து கொண்டு புதிய புதிய துன்பங்களைத் தானே தேடிக் கொள்கிறான்.


மனிதன் இயற்கையால் கொடுக்கப்பட்ட திசைகளை நம் முன்னோர்கள் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கண்டறிந்த உண்மைகளைக் கொண்டு சரியாக அமைத்துக் கொண்டு நல்ல திசைகள் உள்ள மனிதனாக மாறி, தன் ஜாதக தெசா புத்திகளின் முழு பலனை பெற்று, தோல்வி, பயம், வழக்கு, வியாதி, வீழ்ச்சி, அவப் பெயர், பொருளாதார வீழ்ச்சி இவைகளிலிருந்து விடுபட்டு வாழலாம். நம் விதியை நம் முன்னோர்களால் கொடுக்கப்பட்ட மதியின் வாயிலாக வென்று வாழலாம்.

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஏற்பட்ட தோல்வி, துன்பம், அவமானம், ஆகியவையே இந்தத் துறைக்கு என்னை கொண்டு வரச் செய்தது. தஞ்சை, மதுரை போன்ற இடங்களில் கிடைத்த ஓலைச் சுவடிகள் மற்றும் பழைய கிரந்தங்கள் ஆகியவை என்னை இதில் ஆராய்ச்சிகள் செய்யத் தூண்டியது. என்னை நான் முதலில் மாற்றி வெற்றிகளை பெற்றதன் வாயிலாக அநேகருக்கு ஆலோசனைகள் வழங்கி இன்று பல தொழிற்சாலைகள், வீடுகள் சிறப்புற நடைபெறுவதை, நினைத்து நம் வாஸ்து சாஸ்திரம் எவ்வளவு துல்லியமாக இருக்கின்றது என்பதை உணர்ந்து வியந்து கொண்டும், புதிய அனுபவங்கள் பலவும் பெற்றும் வருகிறேன். சென்னையில் திங்கள், செவ்வாய், புதன் மூன்று நாட்களும் 13 பந்தலவேணுகோபால தெரு, திருவல்லிக்கேணி, சென்னை -5 (தொ:840084) ஆம், மற்ற நான்கு நாட்களும் 43, பாரதி நகர் 2-வது தெரு, பீளமேடு, கோவை -4(தொ:577907)லும் இருக்கிறேன்.

நான் பெற்ற இன்பம் ஒவ்வொருவரும் பெற வேண்டும் என்ற தீராத தாகம் என்னுள் இருக்கின்றது. இனிவரும் இதழ்களில் நாம் இப்பொழுது வசிக்கும் வீட்டின் அமைப்பை எப்படி சரி செய்து கொண்டு மேலும் நாம் எப்படி வளர்ச்சி பெறுவது என்பதனை வாஸ்து சாஸ்திர வாயிலாக உணர்ந்து புதையலை நோக்கிச் செல்வோம்!

- பி.ஜே.ரவிராஜ்

(தொடரும்)



வாழைப்பூ அடை செய்யும்போது பூவை அப்படியே நறுக்கிப் போடுவதற்கு பதில் முக்கால் பதத்திற்கு வேக வைத்து பிறகு பட்டும்படாமலும் அரைத்து, விழுதை மாவில் கலந்து அடை வார்த்தால் வாசனையும் சுவையும் கொடிகட்டிப் பறக்கும்.

—கி. மஞ்சுளா.

• மாமியார் மருமகள் சண்டையைப் போக்கும் காசினிப் பூக்கள்.

• சூதாட்டம் பொய் பேசுதல், திருட்டுப் பழக்கத்தை குணமாக்கும் அக்ரோட் பூக்கள்.

• மனக்கவலைகளை மறக்கடிக்கும் ஆலிவ் மலர்கள்.

• பயத்தைப் போக்கும் கடுகுப் பூக்கள்.

• வெற்றியைத் தேடித்தரும் ஸ்க்ராலந்தஸ் பூக்கள்.

• சந்தேகத்தைப் போக்கும் ஹோலி மலர்கள்.

• சோம்பேறித்தனத்தைப் போக்கும் லார்ச் மலர்கள்.

• பைத்தியத்தைப் போக்கும் அஸ்ரோல் வேர்.

ஆச்சர்யமாக இருக்கிறதா, உண்மைதான். சிலருக்கு வந்திருக்கும் நோயைப் பற்றிய விபரங்கள் அறிய எக்ஸ்-ரே, ஸ்கேனிங், ரத்தப் பரிசோதனை இப்படிப் பல பரிசோதனைகள் செய்தும் நோய் குணம் பெற்றதாக தெரியாது. டாக்டர்களே சோர்ந்து போய் உங்களுக்கு எந்த நோயும் கிடையாது, உங்களுக்கு வீண் சந்தேகம் தான் காரணம் என்று கூறிவிடுவார்கள். ஆயினும் நோயாளி வேதனையால் துடித்துக் கொண்டேதான் இருப்பார். இதைதான் 'மன நோய்' என்று யுனானி மருத்துவம் கூறுகிறது.

வட ஆர்காடு அம்பேத்கர் மாவட்டம் வாணியம்பாடி, நியூடவுன், மசூதி வீதியில் (தொ. எ: 04174-24095) அன்புக்கரங்கள். மறுவாழ்வு மையம் என்று ஓர் அமைப்பை கடந்த 18 ஆண்டு காலமாக நடத்தி வருகின்றேன். அங்கு வருபவர்களில் இளைஞர்களும் வயதானவர்களுமே அதிகளவில் மனநோயால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொள்ளும் எண்ணங்களோடு வருவதைக் காண முடிகிறது.

இளைஞர்களின் பிரச்னைகள் :

துள்ளி விளையாடிக் கொண்டிருக்கும் பெண் குழந்தைகள் 11 வயதிற்கு மேல் பருவம் அடைவார்கள். அக்காலத்தில் அவர்களுக்கு பெற்றோர்கள் அறிவுரைகளை வழங்கி நல் வழிப்படுத்துவார்கள். ஆனால் இளைஞர்களுக்குப் பெற்றோர்கள் பாலுணர்வு சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கத் தவறிவிடுவார்கள். சுய இன்பம் பெறுபவன் அரை மனிதனா? ஆண்மை இழந்தவன் நடைபிணமா? ஆண்மைக் கோளாறா? இப்படிக் குழப்பத்தை உண்டாக்கும் விளம்பரங்களால் இளைஞர்கள் திசை தடுமாறி மனப்பதட்ட நோயாளியாக மாறிவிடுகின்றனர்.



மனநோயைப் போக்கும் மூலிகை மருந்துகள்!

சமீபத்தில் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞருக்கு பெரிய இடத்தில் திருமண ஏற்பாடு செய்யப்பட்டு முகூர்த்த தேதியும் குறிக்கப்பட்டது. பத்திரிகையும் அச்சடிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் அவர் யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டே ஓடிவிட்டார். பல மாதங்கள் பல டாக்டர்களிடம் பல விலை உயர்ந்த மருந்துகளைச் சாப்பிட்டும் பலன் கிடைக்கவில்லையென்ற ஏக்கத்தில் கடைசியாக நான் நடத்தும் இலவச தங்கும் விடுதிக்கு வந்தார். மிகவும் பதட்டத்துடன் காணப்பட்ட அவரிடம் விசாரித்தேன். திருமண பரிட்சையில் இல்லற வாழ்வில் வெற்றிபெற முடியுமா என்ற சந்தேகம் இருக்கிறது. சுய இன்பம் பெற்றிருக்கின்றேன்.


டாக்டர் ஹகீம்
எஸ். அக்பர் கவுஸர்

அதனால் இல்லற வாழ்க்கை பாதிக்கப்படும் என விளம்பரங்களை பத்திரிகைகளில் படித்திருக்கின்றேன். அந்த பயத்தால் வீட்டை விட்டே ஓடி வந்துவிட்டேன். நீங்கள்தான் எனக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென கண்ணீர் விட்டார்.

அவரைச் சமாதானப்படுத்தி நம்பிக்கை யூட்டி கடுகுப் பூக்களையும் சர்பகந்தி வேரையும் மருந்தாகக் கொடுத்தேன். அடுத்தவாரம் அவர் என்னைச் சந்தித்த போது சந்தோஷமாகக் காணப்பட்டார். தற்போது அவருக்குத் திருமணமாகி ஆரோக்கியமாக இருக்கின்றார். நாட்டு மருந்துக் கடைகளில் கடுகுப் பூக்கள் 'மஸ்டர்ட்' என்ற பெயரில் விற்கப்படுகின்றது. 5 சொட்டு மஸ்டர்ட் மருந்தை ஒரு கப் தண்ணீரில் கலந்து தினசரி 3 வேளை குடிக்கலாம். சர்பகந்தி வேரைப் பவுடராக்கி ஒரு கிராம் வீதம் காலை மாலை 2 வேளை தண்ணீருடன் சாப்பிடலாம். மென்ட்டல் டிப்ரஷன் என்னும் மூளை தளர்வுக்கு மேற்கண்ட மருந்தை தரலாம். எதிர் காலம் எப்படி இருக்குமோ என்ற பயம், தொழிலில் போட்டி இருக்கும் போது தன் தொழில் என்ன ஆகுமோ என்ற பயம், தான் மற்றவர்களைவிட அழகாக இல்லையே, அதனால் எனக்குத் திருமணம் நடைபெறுமா என்ற பயம், நான் ஒல்லியாக இருக்கின்றேன், அல்லது குண்டாக இருக்கின்றேன் இதனால் என் இல்லற வாழ்க்கை ஆரோக்கியமாக அமையுமா என்ற பயம், இதைப் போக்க மேற்கண்ட மஸ்டர்ட், சர்ப்பகந்தி மருந்துகளைச் சாப்பிட்டால் வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடும் மனநிலை உண்டாகும்.

நடுக்கம் :

காசினிக் கீரையை பற்றி உங்களுக்குக் கூறியுள்ளேன். இது கிட்னி பெயிலியர் நோய்க்கு டயாலிஸிஸ் இன்றி, அறுவை சிகிச்சை இன்றி மீண்டும் சிறுநீரகங்களை செயல்படுத்தும் அற்புதக் கீரையாகும். சிறுநீரகங்கள் கல்லீரல், மண்ணீரல் பாதிக்கப்படும் போது, டாக்டர்கள் கடுமையான பத்தியத்தைக் கடைபிடிப்பார்கள். இதனால் ரத்தத்தில் 13.5 மில்லி கிராம் முதல் 14.5 மில்லி கிராம் வரை இருக்க வேண்டிய சோடியம் உப்பு குறைந்து விடும். அவர்கள் பயம், பிதற்றல் தூக்கமின்மை, கைகால் நடுக்கம் ஏற்பட்டு கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவு படுத்திக் கொண்டு அழுது கொண்டே இருப்பார்கள். இனி நான் பிழைக்க மாட்டேன், மருந்து வேண்டாம் என்று பிடிவாதமாக இருப்பார்கள். அப்போது உணவில் உப்பு கலந்து சில நாள் சாப்பிடவைப்பார்கள். அல்லது குளுகோசில் சோடியம் உப்பு கலந்து உடலுக்குள் ஊசி மூலம் செலுத்துவார்கள். ஆயினும் அவர்களுக்கு அந்த நோய் தொடர்ந்து வந்து கொண்டேதான் இருக்கும். இதைக் குணமாக்க காசினிப் பூக்கள் பயனுள்ளதாக அமைந்துள்ளது. கணவன் மனைவி சண்டை, மாமியார் மருமகள் சண்டை மற்றவர்களுடன் பகைத்துக் கொள்ளும் குணம் கொண்டவர்கள், குடும்பச் சண்டை, அரசியல் தலைவர்களின் பதவிப் போராட்டம், குடும்பத் தலைவனின் இளையவர்கள் மீது ஆதிக்கம், இந்தப் பிடிவாத ஆதிக்க குணத்தால் ரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய் இதயக் கோளாறுகள், தூக்கமின்மை, சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படும். இவர்கள் காசினிப் பூக்களின் சாற்றை மருந்தாக பயன்படுத்தலாம். ஆங்கிலத்தில் காசினிப் பூக்களுக்கு சிக்கரி பூக்கள் (Chicory flowers) என்பார்கள். இது ஹோமியோபதி மருந்துக் கடைகளில் கிடைக்கும். 5 சொட்டுக்கள் சிக்ரி மருந்தை சிறிது தேனில் கலந்து தினசரி 3 வேளை குடித்தால் மனநோயும் குணமாகும். மனநோயால் உண்டாகும் மேற்கண்ட கொடிய நோயும் குணமாகும்.



உருளைக் கிழங்கு மசாலா
தோசை செய்யும் போது,
மசாலாவை வைப்பதற்கு முன்பு
தேங்காய் சட்னி 2 ஸ்பூன் எடுத்துத்
தோசையின் மேல் பரவலாக
தேய்த்து, பிறகு மசாலாவை வைத்து
மூடி எடுக்கவும். இந்த தோசைக்குக்
கிடைக்கும் வரவேற்பைப்
பாருங்களேன்.

– கலைவாணி



ஸ்தாபிதம் : 1870

126TH YEAR OF PIONEERING AND DEDICATED SERVICE

(Estd. 1870)

தி எக்மோர் பெனிபிட் சொசைட்டி லிமிடெட்

எண். 13, பிளவர்ஸ் சாலை, சென்னை - 84

போன்: 6413341, 6413342

கிளை அலுவலகம் : எண். 56, தெற்கு உஸ்மான் ரோடு,

தி. நகர், சென்னை - 17. போன் : 4346068

கீழ்க்கண்ட வைப்பு நிதிகளை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

திட்டம் -I நிரந்தர வைப்பு திட்டம் - மாதந்தோறும் வட்டி வழங்கல்

3 மாதங்கள்	6 மாதங்கள்	1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	4 வருடங்கள் குறைந்த பட்சம் ரூ. 10,000 /-
15%	16%	18%	19%	20%	21%

நிரந்தர வைப்பு ஓய்வூதியத் திட்டம்** - மாதந்தோறும் வட்டி வழங்கல்

3 மாதங்கள்	6 மாதங்கள்	1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	4 வருடங்கள் குறைந்த பட்சம் ரூ. 10,000 /-
16%	17%	19%	20%	21%	22%

** First Named Depositor should be Pensioner & proof of Pension should be attached along with the application.

திட்டம் -II ரொக்கச் சான்றிதழ் (ரூ. 1,000/-க்கு)

12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	43 மாதங்கள்
ரூ. 1,196	ரூ. 1,454	ரூ. 1,795	ரூ. 2,010

திட்டம் -III தொடர் வைப்புத் தொகை

மாதந்தோறும் செலுத்த வேண்டிய தொகை ரூ.	முதிர்வுத் தொகை					
	12 மாதங்கள் ரூ.	24 மாதங்கள் ரூ.	36 மாதங்கள் ரூ.	60 மாதங்கள் ரூ.	72 மாதங்கள் ரூ.	84 மாதங்கள் ரூ.
10	129	282	468	962	1282	1667
50	645	1410	2340	4810	6410	8335
100	1290	2820	4680	9620	12820	16670

சேமிப்பு கணக்கு திட்டம் - 9%

கடன் உதவி : (தங்க நகைகளின் மீது)

வருட வட்டி	22.2%
ஒரு கிராமுக்கு	ரூ. 300/-
பணம் கட்டியவுடன் உடனடியாக நகைகள் கொடுக்கப்படும்	

வேலை நேரம் : வார நாட்கள் : காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை

மாலை 2.00 மணி முதல் 4.00 மணி வரை

ஞாயிறு : காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை

வாராந்திர விடுமுறை : வெள்ளி மற்றும் ஞாயிறு பிற்பகல்

N.P.V. ராமசாமி உடையார்
தலைவர்

சொசைட்டியின் நடவடிக்கைகள் பங்குதாரர்களுடன் மட்டும். மற்றும் ரூ. 5/- செலுத்தி பங்கு பெறும் புதியவர்களுடன்.

நிறைய துணிகள் காயப் போடும் போது, அத்தனைக்கும், காற்றில் பறந்து விடாமலிருக்க, 'க்ளிப்'கள் போடுவது பெரிய வேலை. அதிலும் கர்சீப், ஜபலா போன்ற சின்னச் சின்ன துணிகளாக இருந்து விட்டால், அத்தனைக்கும் 'கிளிப்'கள் தேட முடியாது.

கொடி கட்டும் போது, ஒற்றைக் கயிறாகக் கட்டுவதற்குப் பதில் இரட்டைக் கயிறாகக் கட்டுங்கள். காயப் போடும் போது ஒரு துணியை ஒரு கயிற்றில் போட்டால், அடுத்த துணியை மறு கயிற்றில் போடுங்கள். இப்படி மாற்றி மாற்றிப் போடுவதால் எந்தத் துணியுமே பறக்காது. (இரண்டு கயிறும் இழுத்துக் கட்டியிருக்க வேண்டும்.)

— எஸ். பட்டம்மா

தீய பழக்கங்களை விரட்டும் வால்நெட் பூக்கள் :

பாதாம், பிஸ்தா, அக்ரோட் பழங்களைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அவைகளில் அக்ரோட் பழத்திற்கு வால்நெட் பூக்கள் என்று பெயர். 5 சொட்டு வால்நெட் பூக்களின் சாற்றைத் தண்ணீரில் கலந்து குடித்தால் மது கஞ்சா, போதைப் பழக்கம் நீங்கும். சூதாட்டம், குதிரைப் பந்தயம், லாட்டரி சீட்டு பழக்கம், செக்ஸ் படங்கள், செக்ஸ் புத்தகங்களின் பழக்கம், பொய் பேசுதல், திருட்டு பழக்கம் போன்ற கட்டுக்கடங்காத தீய பழக்கங்கள் குணம்பெறும் என்று மலர் மருத்துவம் கூறுகிறது. பல ஆயிரம் பேருக்கு இதைக் கொடுத்து அறிவுபூர்வமாக அதன் பலனையும் கண்டுள்ளோம்.

உடலில் சுறுசுறுப்பை உண்டாக்கும் ஆலிவ் மலர்கள் :

நம் நாட்டில் தென்னை மரங்கள் பரவலாக இருப்பதைப் போல் அரபு நாடுகளில் ஆலிவ் மரங்கள் காணப்படுகிறது. அம்மரத்தின் பூக்களைப் பிரித்து அதன் சாறு ஆலிவ் மலர் மருந்து என்ற பெயரில் நம் நாட்டில் விற்கப்படுகிறது. இதைச் சாப்பிட்டால் சோர்ந்து போன உடல் எப்போதும் சுறுசுறுப்பாகவே காணப்படும். ஓய்வின்றி உழைப்பவர்களுக்கு, அசதியைப் போக்க இது சிறந்த டானிக் மருந்தாகும். 5 சொட்டுக்கள் தேவைப்படும் போது சாப்பிடலாம்.

திடமான மனநிலையை உண்டாக்கும் ஸ்க்ராலந்தஸ் பூக்கள் :

இன்றைய வேலைகளை நாளைக்கு முடிக்கலாம் என்று நினைக்கும் சுபாவம் கொண்டவர்கள், பரீட்சைக்கு உரிய நேரத்தில் படிக்கலாம் என்று நினைக்கும் மாணவர்கள், ஒரு பிரச்னையை உடனடியாகக் கவனிக்காமல் நிலைமை ஒன்றும் அவ்வளவு மோசமாக இல்லை, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நோயை வளர்த்துக் கொள்வார்கள். மனத்தில் அதிகமான இட்டங்களை வைத்துக் கொண்டு பலவிதமான தொழில்களை துவங்க முயற்சி செய்து கடைசியில் ஒன்றுமே முடிக்காமல் விட்டு விடுவார்கள். இவர்களுக்கு ஸ்க்ராலந்தஸ் மலர் மருந்து பயன் தரும். காலையில் ஜுரம், மாலையில் குளிர் காய்ச்சல், இரவில் தலைவலி, திடீர் திடீர் என்று அவ்வப்போது தோன்றும் வலிகள், மற்றும் எக்ஸ்-ரே மூலம் கண்டுபிடிக்க முடியாத நோய்களுக்கு ஸ்க்ராலந்தஸ் மலர் மருந்தைத் தரலாம். காலத்தை வீணாக்கும் அன்பர்களுக்கு இது சிறந்த மருந்தாகும்.

ஸ்க்ராலந்தஸ் மலர் மருந்தை வேளைக்கு 5 சொட்டுக்கள் வீதம் தினசரி 3 வேளை சாப்பிட்டால் இன்றே செய், நன்றே செய், வெற்றி நிச்சயம் என்ற அடிப்படை மனநிலை உண்டாகும். மனமும் சந்தோஷம் அடையும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

சந்தேக நோயை அகற்றும் ஹோலி மலர்கள் :

சந்தேகம், பொறாமை, வெறுப்புணர்வு, மற்றவர்களைக் கண்டால் பிடிக்காமை மற்றும் அனைத்துப் பிரச்னைகளுக்கும் நான் தான் காரணம் என்று தன்னைத்தானே குற்றவாளியாக்கிக் கொள்ளும் மனசுபாவம் கொண்டவர்

களுக்கு 'ஹோலி மலர் மருந்து' பயன்படும். வேளைக்கு 5 சொட்டுக்கள் வீதம் சிறிது தண்ணீரில் கலந்து தினசரி 3 வேளை சாப்பிட்டால் மனத்தில் நம்பிக்கையும் ஆரோக்கியமும் உண்டாகும். மேலும் சந்தேகத்தால் ஏற்படும் உடல் பிரச்னைகளும் குணமாக்கப்படும்.

சந்தேகம் என்னும் மனநோயால் மூளை நரம்பு, இருதயம், ஆண்மை, பெண்மை ஆகியவை கடுமையாக பாதிக்கப்படும். இதை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கும், தீர்க்க முடியாத வியாதியாகவும் அமைந்து வாழ்நாள் முழுவதும் பின் தொடரும்.

தைரியம் தரும் ராக்ரோஸ் மலர் மருந்து :

குடும்பத் தலைவன் (அல்லது) தலைவி பிள்ளைகள் உறவினர்கள் இறந்து விட்டால் குடும்பத்தில் துயரம் ஏற்படும். அவர்கள் ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருப்பார்கள். யாருக்காக நான் வாழ வேண்டும், என் பிள்ளைகளை எப்படி வளர்ப்பேன் என்ற மனக்கவலையில் இருப்பார்கள். இவர்களுக்கு ராக்ரோஸ் என்ற மலர் மருந்தை வேளைக்கு 5 சொட்டு வீதம் தினசரி 3 வேளை தண்ணீரில் கலந்து கொடுத்தால் தைரியம் உண்டாகும்.

மனநோய்க்குப் பயன் தரும் இதர மருந்துகள் :

• செர்ரி பிளாம் மலர் : இது தற்கொலை, கொலை செய்யும் எண்ணங்களை அகற்றும்.

• கிளிமாட்டிஸ் மலர் : கனவுக் கோட்டைகளை கட்டிக் கொண்டிருப்பவர்களின் கனவை நனவாக்க உதவும்.

• இம்பேஷண்ட் மலர் : அவசர குணத்தை மாற்றும்.

• ஹார்ன் பீம் மலர் : திறமைசாலிகள், தங்களின் திறமைகளை செயல்படுத்த உதவும்.

• கிரேப் ஆப்பிள் மலர் : உடலில் செதில் செதிலாக உதிரும் சொரியாசிஸ் என்னும் தோல் நோய், மூளை சம்பந்தமான நோயாகும். இதை குணமாக்கும் தன்மை கிரேப் ஆப்பிள் மலருக்கு உள்ளது.

• லார்ச் மலர் : இது சோம்பேறித்தனத்தைப் போக்கும்.

• அக்ரிமோனி மலர் : அளவு கடந்த வெட்கம், தங்கள் குறைபாடுகளை மூடி மறைத்து வைக்கும் பழக்கம் உள்ளவர்களின் நிலையை குணமாக்கும்.

• ஹீதர் மலர் : தன் மனவேதனைகளை மற்றவர்களுக்கு உட்கார வைத்துச் சொல்லும் சுபாவம் கொண்டவர்களின் பிரச்னைகளை குணமாக்கும்.

• வெர்டெய்ன் மலர் : நினைத்ததை உடனடியாக முடிக்கும் சுபாவம் கொண்டவர்களுக்கு ஏற்படும் நோய்களை இது குணமாக்கும்.

• கவிட்செட்நெட் மலர் : தன் வியாதியை எந்த மருந்தாலும் குணமாக்க இயலாது என்ற மனநிலையை மாற்றி புது நம்பிக்கையை தர இம்மருந்தை பயன்படுத்தலாம்.

• ஃஹோர்ஸ் மலர் : காலம் கடந்தாலும் தன் பிரச்னைகளை இறைவன் தீர்த்து வைப்பான் என்ற நம்பிக்கை கொண்டவர்களுக்கு இது நல்ல மருந்தாகும்.

• பீச் மலர் : மற்றவர்களை கேலி செய்தும் கொடுமைப்படுத்தியும் அதில் ஒருவிதமான சந்தோஷம் அடையும் மனநிலையைக் கொண்டவர்களை இது குணமாக்கும்.

• வாட்டர் வயலெட் மலர் : ஒருவரின் தீய குணங்களை நிராகரித்துவிட்டு நல்லவைகளை மட்டும் எடுத்துக் கொள்ளும் மனநிலையை கொண்டவர்களுக்கு இது மிகவும் பயன்படும்.


• வைலட் ரோஸ் மலர் : எவ்வளவு கஷ்டம் ஏற்பட்டாலும் இறைவனைத் தவிர மற்றவர்களிடம் கூற மாட்டார்கள். இவர்களுக்கு இதைத் தரலாம்.

• மிமுலஸ் மலர் : காரணமின்றி பயப்படுதல், அடிக்கடி கவலை கொள்ளுதல் போன்ற மனநிலையைப் போக்க இம்மருந்தைத் தரலாம்.

எனவே மனநோய்க்கு உடனடியாக மருத்துவம் அளிக்கப்பட வேண்டும். தவறினால் அதுவே பெரிய நோயாக மாறலாம் என்று யுனானி மருத்துவம் எச்சரிக்கின்றது.

ஐவ்வரிசி வடாம் அடிவண்டல் துகள் கொஞ்சம் மொத்தமாக வந்து விட்டதா? அவற்றை பஜ்ஜி மாவில் இரண்டு நிமிடம் ஊறப் போட்டு விட்டு பிறகு எண்ணெயில் போடுங்கள். பிரமாத சுவை தரும்.

– மஞ்களா கிருஷ்ணன்



உறவுகள் வேறாகும்போது...

சித்ரா நீட்டிய கோப்பையுடன் ஒரு பத்திரிகையும் இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். சித்ரா சமையலறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள்.

"ஏய், சித்ரா! என்ன பத்திரிகை?"

"பிரிச்சுத்தான் பாருங்களேன். அதுக்குள்ளே அவசரமா?"

போய் விட்டாள்.

யாராயிருக்கும்? ஆவல் தாங்கவில்லை. காப்பியை வைத்து விட்டு, பத்திரிகையைப் பிரித்தேன்.

"ஓ மறந்தே விட்டது. தங்கை குழந்தைக்கு அப்த பூர்த்தி விழா!"

சித்ரா உள்ளே போய் கடச்கட தோசை, வெங்காய சட்னியுடன் வந்தாள்.

"என்ன, ஐயா முகம் பிரசன்னவதனமாயிடுச்சு?"

சிரித்தவாறே கேட்டாள்.

பத்திரிகையுடன் ஒரு கடிதமும் இணைக்கப் பட்டிருந்தது.

அன்புள்ள அண்ணா என்று உறவில் ஆரம்பித்து, சில பல ஆதங்கங்களுடன். அவளுடைய நிறைவேற்றப்படாத ஆசைகள் (கட்டளைகள்!) என்னால் நிறைவேற்றப்பட வேண்டியவை, தெரிவிக்கப்பட்டு இருந்தன.

என் பிரிய தங்கை புவனா! அவள் கேட்பவற்றைச் செய்ய வேண்டியது என் கடமை தானே! ஆனால் சித்ரா... என்ன தடங்கல் சொல்லப் போகிறாளோ?

நண்பன் ரவி சொன்னது நினைவுக்கு வந்தது.

"மூர்த்தி! நீ புதுசா கல்யாணமானவன். மனைவியை வளைச்சுப் போட சத்துக்கோ. மாமியார் வீட்டுக்கு எதுனாச்சும் செய்யணும்னா மூஞ்சியைத் தூக்கு வாங்க. அவங்க பொறந்த வீடுன்னா... சந்தோஷமா தோள் மேல தூக்கிப்பாங்க."

"அதுக்கு என்ன செய்யணும்கறே ரவி?"

"ஒண்ணுமில்லேடா. கொஞ்சம் நடிக்கணும். நம்ம வீட்டு செலவுன்னு வெச்சுக்கோ, இஷ்டப்படாத மாதிரி பேசு. அப்புறம் பாரு நடக்கறதை..."

ரவி சொன்ன மாதிரியே செய்தால் என்ன?

"என்ன, திடீர்னு பேச்சையே காணோம்? அப்செட் ஆயிட்டீங்களா?"



முகத்தை சோகமாக வைத்துக் கொண்டேன்.

"சித்ரா! லெட்டர் படிச்சியா? அவ பாட்டுக்கு ஒரு பெரிய லிஸ்ட்டே போட்டிருக்கா. என் நிலைமை அவளுக்குத் தெரியாதா?"

ஊடுருவும் பார்வையுடன் என் மனைவியைப் பார்த்தேன். அவள் முக பாவத்திலிருந்து எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

சரியான அழுத்தக்காரி! என்ன சொல்லப் போகிறாள்?


என் தங்கை புவனாவுக்கு எல்லாமே நான் தான். தாய், தந்தை காலமான பின் பொறுப்பு என் தலை மேல்.

எனக்குச் சுமாரான வேலைதான். திடீர் செலவுகளுக்கு ஆட்டம் காண்பிக்கும் சம்பளம்.

புவனா நல்ல அழகு! பணக்கார இடத்திலிருந்து வலிய வந்து, அவளை மருமகளாக்கிக் கொண்டதில், எனக்கு ஏகப்பட்ட பெருமை.

புவனாவின் பிரசவம் 'சிசேரியன்' ஆகிவிட்டதில், அதிகப்படி செலவு. குழந்தைக்கு எதுவும் செய்ய முடியவில்லை. அந்த ஆதங்கம்தான், புவனா கடிதத்தில் இருந்தது.

"புண்யாஹவாசனத்திற்குக் கூட எதுவும் பண்ணவில்லை. அதனால குழந்தையின் ஆண்டு நிறைவுக்கு 2 பவுனில் சங்கிலி, வெள்ளி



Make your Money work for you with Sindhoori Deposit Schemes

Special Customer Service

HIGHLIGHTS

- Free Master Health check-up at Apollo Hospitals.
- Personal Accident coverage for the first named depositor.
- Concessional terms on Car financing.
- Postdated interest warrants along with Deposit Receipt.
- Outstation repayments will be made by way of demand draft.
- Outstation cheques accepted at par.
- CARE Rated Company.

SCHEME I FIXED DEPOSITS

Period of Deposit	Rate of Int. per annum	
	Monthly	Quarterly
12 months to 60 months	15%	15.19%

SCHEME II CUMULATIVE DEPOSIT

Period of Deposit	Maturity amount on every Rs. 3000/- of deposit	Effective Annual yield
1 Year	3,482	16.08%
2 Years	4,042	17.37%
3 Years	4,692	18.80%
4 Years	5,446	20.38%
5 Years	6,321	22.14%

For full text under Non-Banking Financial Companies & Miscellaneous Non-Banking Companies (Advertisement Rules 1977) refer advertisement released in the Trinity Mirror & Makkal Kural on 18-10-95

OM SINDHOORI CAPITAL INVESTMENTS LTD.

A Part of the Apollo Hospitals Group

Registered Office: Ali Towers, 22, Greams Road, Madras - 600 006. Ph: 8233702, 8233680.
Branch Offices : Bangalore - Ph: 2281529 Cochin - Ph: 368401, Hyderabad - Ph: 316335.
(Applications are also accepted at the offices of the various Managers to the Scheme)

அரைஞாண் கயிறு, கொலுசு, டிரஸ், வேஷ்டி, புடைவை இத்யாதி... இத்யாதிகளுடன், அண்ணியைக் கட்டாயம் அழைத்துக் கொண்டு வரவும்."

"என்ன அப்படியே பிரமிச்சுப் போய் உட்கார்ந்துட்டீங்க? தங்கை கேட்டதை செஞ்சுட வேண்டியதுதானே?"

சிரித்துக் கொண்டே என்னை உலுக்கினாள் சித்ரா. அவள் விளையாடுகிறாளா? நிஜமாகவே சொல்கிறாளா? எனக்குப் புரியவில்லை.

இரண்டு தோசை காலியாகி, மூன்றாவது தோசை தட்டில் விழுந்தது. நான் எதுவும் பேசாமல் தோசையை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தேன்.

"எப்படி செய்யப் போறோங்கற கவலை தானே? விடுங்க எல்லாம் நல்லபடியா நடக்கும்."

என் தங்கைக்கு நிறைய செய்ய வேண்டும் என்ற ஆசையின் குறுக்கே நிற்கிறதே பணம்! ரவி சொன்ன யோசனையின்படி சித்ராவுக்கு சம்மதம் என்று தெரிந்து போயிற்று.

ஆனால் பணம்! இவள் என்ன செய்யப் போகிறாள்? கேள்விக்குறியுடன் சித்ராவைப் பார்த்தேன்.

"எப்படி... எப்படி? புவனாவுக்கு செய்யலாம் தான், ஆனா வழி என்ன? இப்ப..."

"பி.எஃப். லோன் கூட போட முடியாது. தெரியும். கவலைப்படாதீங்க. உங்க கௌரவத்தைக் காப்பாத்த வேண்டிய பொறுப்பு எனக்கும் இருக்கு இல்லியா?"

கை அலம்பி துடைத்தபடி வந்தேன். எனக்குக் கொஞ்சம் ஆச்சரியம்தான், எந்த முட்டுக் கட்டையும் இல்லாமல் எனக்கு இணங்கி வந்ததில்.

"அப்படி இப்படின்னு சேர்த்து வெச்ச பணம் அஞ்சாயிரம் இருக்கு. மீதிக்கு, இந்தாங்க. இந்த செயினை வெச்சுப் பணம் வாங்கிட்டு வாங்க. தாராளமா போதும்."

அவள் கழுத்தில் மஞ்சள் கயிறு பளபளத்தது. எல்லாமே ஏற்பாடு செய்திருக்கிறாள்.

எனக்கு என்னவோ, நன்றி சொல்லத் தோன்றவில்லை. எனக்கே உரித்தான ஈகோ!

குழந்தையின் ஆண்டு நிறைவு, நினைத்ததற்கு மேலும் நன்றாகவே நடந்தது. புவனாவின் உபசரிப்பில் எனக்கு ஒரே மகிழ்ச்சி.

ஊர் திரும்பி மறுநாள். மஞ்சள் தடவிய அந்தக் கடிதத்தை, சித்ரா என்னிடம் கொடுத்தாள்.

என் மச்சினன், சித்ராவின் அண்ணன் பாஸ்கரின் பெண்ணுக்குப் பூப்பு நீராட்டு விழா.

மற்றொரு செலவா? என் இயற்கை சுபாவம் சட்டென்று வெளிப்பட்டு விட்டது.

"இப்பத்தான் இவ்வளவு செலவு பண்ணிட்டு போயிட்டு வந்தாச்சு. இப்ப எங்க உடனே போறது? அதெல்லாம் முடியாது."

எரிச்சலும், கோபமுமாக வார்த்தைகள் வெடித்தது. புவனா குழந்தைக்குச் செய்தது போல அண்ணன் மகளுக்கும் செய்ய வேண்டும் என்று மனைவி சொல்வாளோ என்ற வேகம் எனக்கு.

"தேதியைப் பார்த்தீங்களா?"

சித்ரா அமைதியாகக் கேட்டாள்.

பார்த்தேன். முதல் நாள் தேதி. புவனா குழந்தை ஆண்டு நிறைவு நடந்த அதே நாள்.

"நேத்திக்கே சொல்லித் தொலைக்கறதுக்கு என்ன? இப்ப வந்து சொல்றியே?"

மறுப்பதற்கு வழி. என் கோபத்தின் அர்த்தம், எனக்கே புரியாதது. மீண்டும் செலவுக்கு என்ன செய்வது என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பா? என் தங்கை குழந்தை என்ற உறவு முறை அண்மை இதில் இல்லையா?

"ஏன் அனாவசியமா டென்ஷன் ஆறீங்க? ரெண்டு லெட்டரும் ஒண்ணாத்தான் வந்தது. ரெண்டையும் சேர்த்துப் பார்த்தா, ரெண்டு இடத்துக்கும் போகணும். ரெண்டு பேருக்கும் நல்லா செய்யணுமேன்னு ஆதங்கப்படுவீங்க."

என் மனைவியின் கண்களில் லேசான தளும்பல். அவளை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ?

நான் பதில் எதுவும் சொல்லாமல் அவளைப் பார்த்தேன். அவளே தொடர்ந்தாள்.

"உங்க தங்கையைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்த இடம் பெரிய இடம். அதுக்கேத்தா மாதிரி பண்ணினாத்தான் உங்களுக்குக் கௌரவம். அதைத்தான அவங்களும் விரும்பறாங்க. அதனால அவங்களுக்குத்தான் முதலிடம். ஆனா... எங்க அண்ணன் நம்மை, நம்முடைய சூழ்நிலையைப் புரிஞ்சுப்பான்."

அவள் பார்வையின் கோணத்தில் இருந்த ஆரோக்கியம், என் பார்வையின் கோணத்தின் வக்ரத்தைத் தகிக்க ஆரம்பித்திருந்தது.


அவளை நிமிர்ந்து பார்க்க மனம் கூசியது.

எனக்குக் கோபம் என்று நினைத்துக் கொண்டாள் போலும்.

"ப்ளீஸ், இங்கே பாருங்களேன். இப்ப எதுவும் பண்ண வேண்டாம். உங்க தங்கை எனக்கு வாங்கிக் கொடுத்தாளே, அந்தப் புடைவையையே கவிதாவுக்குக் கொடுத்துடலாம். அப்புறம் முடிஞ்சப்ப ஏதாவது செஞ்சுக்கலாம். இன்னைக்குப் போய்ப் பார்த்துட்டு மட்டும் வந்துடலாமா?"

என்னைப் புரிந்து கொள்ள வைக்கும் பரிவு, நிதானம் அவளிடம். நான்தான் குன்றிப் போனேன்.

வீழ்வது வெட்கமல்ல; ஆனால் வீழ்ந்து கிடப்பது வெட்ககரமானது.
தகவல் : வி. வி. ஜனனி




பிரம்மாண்டமான அதிநவீன தங்க நகை



ஏற்றுமதி உற்பத்தி தொழிற்சாலை

திட்டத்திற்கான டெபாசிட்டுகள்



சேகரிப்பு விழா


30% வட்டி + **7%** ஊக்கத்தொகை + **2 கிராம்** தங்க நாணயம் இலவசம்

மற்றும் கீழ்கண்ட சிறப்புப் பரிசுகள்

டெபாசிட்	ரொக்க பரிசுகள்
ரூ. 10 ஆயிரம்	ரூ. 150
ரூ. 25 ஆயிரம்	ரூ. 400
ரூ. 50 ஆயிரம்	ரூ. 1000
ரூ. 1 லட்சம்	ரூ. 2250
ரூ. 2 லட்சம்	ரூ. 4800
ரூ. 3 லட்சம்	ரூ. 7500
ரூ. 5 லட்சம்	ரூ. 13000

+

ரூ.10,000 முதலீடு செய்யும் முதல் 1000 நபர்களுக்கு ஒரு வெள்ளி விளக்கு இலவசம்.



• அகிலாண்டேஸ்வரி


சக்தி...!

உடம்பில் சக்தி இருந்தால் தான் எழுந்து நடமாட முடியும். இல்லையென்றால் 'சிவனே!' என சும்மாகிடக்க வேண்டியதுதான். ஒருவர் 'சும்மா' இருக்கிறார் என்றால் அதுவும் லேசுப்பட்ட காரியமல்ல. சிந்தையில் எந்த உணர்வுகளும் இல்லாமல் ஒரு நிமிடம் சும்மா இருக்க முடியுமா எனப் பாருங்கள். அது ஒரு யோகநிலை. உயர்ந்த ஆன்மீக நிலை. எனவேதான் சும்மா இருக்கும் சிவமும், நடமாடும் சக்தியும் இணைந்த சிவசக்தி ஐக்ய சொரூபம்தான் நம் வாழ்க்கை. வாழும் வாழ்வையே இறைவடிவாகக் கண்டு விட்டால் அப்புறம் அங்கு சூதுவாது பொறாமை பேராசை இதற்கெல்லாம் ஏது இடம்?

இப்படி உன்னத உணர்வுகளை' நம்முடைய இயந்திர வாழ்க்கை தருவதில்லை. புண்ணிய ஸ்தலங்களுக்கு, உயர்ந்த தத்துவங்களை நினைவூட்டும் மகாபுனிதமான கோயில்களுக்குச் செல்லும் போதுதான் எழுகிறது. அங்கங்கு நெறிகெட்டு ஓட நினைக்கும் மனிதர்களுக்குக் கடிவாளம் போட்டு நல்வழிக்கு வழிகாட்ட நம் ஆலயங்கள் விண்முட்ட உயர்ந்து நிற்கின்றன.

திருவானைக்கா-திருச்சியிலிருந்து சில கிலோ மீட்டர்கள் பக்கத்தில். இங்கு குடி கொண்டிருக்கும் ஜம்புகேசவரரும், அகிலாண்டேஸ்வரியும்தான் நம் வாழ்க்கைக்கு எத்தனை தத்துவங்களை உணர்த்திக் கொண்டு இருக்கிறார்கள். எல்லா கோயில்களிலும் படிப்படியாக மேலேறிச் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டும். இங்கே ஒவ்வொரு படியாக கோயில் பிரதான கோபுரத்திலிருந்தே குறைத்துக் கொண்டு வந்து இறைவனை காவிரியாற்றின் நீர்மட்ட அளவில் அமைத்திருக்கிறார்கள். அதனால்

அருள்தரும் அன்னை அகிலாண்டேஸ்வரி!



• திருவானைக்கா - கோபுரதரிசனம்

எப்போதும் ஜம்புகேசுவரரைச் சுற்றி நீர் ஊறிக் கொண்டே இருக்கிறது. காவிரிப் பெருக்கெடுத்தோடும் நாட்களில் ஜம்பு கேசுவரரே நீரில் மறைந்து விடுவாராம். நீரை இறைத்த பின்னரே பூஜைகள் நடத்தப்படு கின்றன.

மிகப்பழமையான கோயில். ஜம்புகா முனிவர் நாவல் மரங் கள் நிறைந்த இந்த வனத்தில் லிங்கத்தை வழிபட்டு வந்த தாகவும், அவரை ஒரு கணம் குறைவாக நினைத்த பார்வதி தேவி சாபத்தினால் இங்கேயே வந்து இறைவனை வழிபட்டு சாபவிமோசனம் பெற்ற தாகவும் சொல்கிறார்கள். அதேபோல சிலந்தியொன்று லிங்கத்தின் மேல் கூடுகட்டி மா இலைகள் எம்பெருமான் மேல் விழாமல் தடுத்ததாம்.


அதேபோல யானையொன்று தினமும் ஈஸ்வர பூஜை செய்தபோது இதென்ன இங்கொரு சிலந்திக் கூடு என கலைத்துக் கொண்டே வந் திருக்கிறது. இதனால் கோபம் கொண்ட சிலந்தி யானையின் தும்பிக்கை வழியாக



• அம்மன் பாவனையில் சிவனைப் பூஜிக்கச் செல்கிறார்...

நுழைந்து யானையைக் கொன்று தானும் மடிந்ததாம். யானை மோட்சம் அடைய சிலந்தி சோழ வம்சத்தில் கோச்செங் கணா னாகப் பிறந்து இந்தக் கோயிலை அமைத்த தாக வரலாறு. தன் காலத்தில் பல கோயில்களை எழுப் பிச் சிறப்புப் பெற்ற கோச்செங்கணான் கட்டிய முதல் கோயில் இதுதான். நால்வர் தேவாரம் பாடிச் சிறப்புப் பெற்ற தலம்.

அம்பிகைக்கு வருவோம். இவளின் பெருமையினைக் கேட்கக் கேட்க மனம் பரவசமானது. அகிலாண்டேஸ்வரி! அகில அண்டங் களையும் காக்கும் ஈஸ்வரியல்லவா இவள். எனவே இவளே இச்சா சக்தி, க்ரியா சக்தி, ஞான




• வெக்காளியம்மன்

சக்தியாகவும் விளங்குகிறாள் போலும். இத் திருத்தலத்தில் அன்னையே ஈஸ்வரனை பூஜை செய்து வழிபட்டதாக ஐதீகம் இருப்பதால் இப்போதும் உச்சிகால பூஜைக்குக் கோயில் குருக்கள் அம்பிகையாகத் தன்னைப் பாவித்து புடைவை சுற்றிக் கொண்டு ஜம்புகேஸ் வரரை பூஜிக்கிறார். பிறகே அன்னைக்கு இங்கு பூஜை!

'த்ரிமூர்த்யை நம' என ஆதி சங்கரர் வழி பட்டது இவளைத்தான். வெகு விசேஷமான அம்சமாக அன்னை இங்கு எழுந்தருளி இருக் கிறாள். காலையில் பார்வதியாகவும், உச்சி காலத்திற்குப் பிறகு மகாலெட்சுமியாகவும், மாலையில் சரஸ்வதியாகவும் வடிவெடுக் கிறாள் அன்னை அகிலாண்டேஸ்வரி. அப் படித்தான் மூன்று விதமாக அலங்கரிக்கப்

சரஸ்வதிகடாட்சம் பெற்ற அவரே காளமேகப் புலவராக புகழ்பெற்றார். (அகிலாண்ட கோடி நாயகியாக அன்னை இங்கு முதலில் ஈஸ் வரனை வழிபட்டுத் தவக் கோலத்தில் இருந்த தால் முதலில் உக்ரதேவியாகக் காட்சியளித் துக் கொண்டிருந்தாளாம். இவள் சினம் தணிக்க வேண்டி ஆதிசங்கரர் சக்தியந்திரம், சிவயந்திரம் இரண்டையும் பூஜித்து அன்னை யின் செவிகளிலே தாடங்கமாக அணிவித் திருக்கிறார். இன்றும் அவைகள் அன்னையின் இரு செவிகளிலும் அழகுற வீற்றிருக்கின்றன. காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் சமீபத்தில் கூட இங்கு தங்கியிருந்து அன்னையின் தாடங் கங்களைச் செப்பனிட்டுத் தந்திருக்கின்றனர். மேலும் இவள் சாந்த சொரூபியாக மாற அன்னைக்கு நேரெதிரே செல்லப் பிள்ளை

• சிவனின் கோபம்



• கோரிக்கைச் சீட்டுக்கள்



பெறுகிறாள். மூவரு ந்தேவியா கவும் இவளே இங்கு 'த்ரி மூர்த்யை நம:' என வழிபாட்டுக் குரியவளாக விளங்குவதால்தான் இங்கு திருக்கல்யாண உற்சவம் இல்லை. இவள் இங்கு கன்னிகை வடிவில் எழுந்தருளி இருப்பதா கவும் சொல்கிறார்கள்.

மாலையிலே சரஸ்வதியாக உருவெடுக்கும் இவள், இக்கோயி லில் தன்னை வேண்டித் தவம் இருந்த ஒரு முனிவருக்கு அருள் தரச் சென்றிருக்கிறாள். யாரோ ஒரு பெண் என நினைத்து 'சீச்சீ' எனத் துரத்தினாராம் அந்த அபாக்கியவான். முறுவலித்தபடி அகன்றவள், அங்கே தூங்கிக் கொண்டிருந்த காளமேகத்தை எழுப்பித் தாம்பூலத்தைத் தந்தி ருக்கிறாள். இப்படித்தான் யோக மடித்தது அந்தப் பாமரனுக்கு,



• சுப்பையா



• மார்த்தாண்டன்

யாம் பிள்ளையாரை எழுந் தருளப் பண்ணி இருக்கிறார் கள். நேர்ப்பின்னே முருகன் சுரம்தர எழுந்தருளி இருக் கிறான்.

அன்னையை வேண்டி அகிலாண்டேஸ்வரியோடு, பிள்ளையாரையும் பனிரெண்டு நாட்கள் சுற்றி வலம் வந்து வேண்டிக் கொள்ள நினைத்த காரியங்கள் சித்தியடைகின்றன என்றார் சுப்ரமண்ய பண்டிதர். அதனால்தான் நிறைய பெண் மணிகள் ஆடி, தை வெள்ளிக் கிழமைகளில் வந்து குவிகிறார் கள். அம்மைக்குப் பூப்பா வாடை சாத்துகிறார்கள். எவ் வளவோ பேருக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்குபவள் இந்த அகிலாண்டேஸ்வரி" என்கிறார் அங்கு பணிபுரியும் நாகராஜன்.

வாழ்க
வளமுடன்!

வளர்க
எங்களுடன்!!

PBF

பர்பெக்ட்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

(மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 'நிதி' நிறுவனம்)

"In the service of providing Nidhi to the Needy"

தலைமை அலுவலகம்
50, ஹால்ஸ் சாலை, எழும்பூர்
சென்னை - 600 008.
போன் : 8250296

கிளை அலுவலகங்கள்

புரசைவாக்கம்
69, புரசைவாக்கம் நெடுஞ்சாலை
சென்னை - 600 007.
போன் : 6414903

அண்ணா நகர்
W-110-3வது அவின்யு
(ரவுண்டானா அருகில்)
சென்னை - 600 040.
போன் : 6285387

பிராட்வே
202, பிராட்வே
(மண்ணடி அருகில்)
சென்னை - 600 108.
போன் : 5233099

தி. நகர் :
22, ரங்கநாதன் தெரு
தி. நகர், சென்னை - 600 017.
போன் : 4342789

வேலை நேரம்
வார நாட்கள் : 9.00a.m. to 5.30 p.m.
ஞாயிறு : 9.00a.m. to 12.30 p.m.

பர்பெக்ட் 'FD' பாண்டு — PBA

முதலீடு	காலம்	வட்டி விகிதம்
ரூ 50,000	5 வருடம்	22%

பர்பெக்ட் 'RID' பாண்டு — PBC

முதலீடு	காலம்	வட்டி விகிதம்
ரூ 25,000	5 வருடம்	ரூ 75,000/-

சீனியர் சிட்டிசன் 'FD' — SCD

குறைந்த பட்ச முதலீடு	காலம்	வட்டி விகிதம்
ரூ 5,000	1 வருடம்	20.5%
	2 வருடம்	21%

சீனியர் சிட்டிசன் 'RID' — SCC

குறைந்த பட்ச முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ 5,000	1 வருடம்	ரூ 6,125
	2 வருடம்	ரூ 7,505
	3 வருடம்	ரூ 9,200
	40 மாதம்	ரூ 10,000

சுந்தரா பாண்டு — PSB

குறைந்த பட்ச முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ 6,000	10 வருடம்	ரூ 44,444/-
	15 வருடம்	ரூ 1,11,111/-
	18 வருடம்	ரூ 1,81,000/-

சிறப்பு ஊக்கத்
தொகை

1.5%

குறைந்த பட்ச
முதலீடு
ரூ 5,000
காலம் 1வருடம்
16.0.96 முதல்
15.7.96 வரை

இயக்குநர்கள் குழு

Dr. K. சுந்தரம் B.Sc., F.C.A., A.I.C.W.A, B.L., Ph.D.,
- நிதி மற்றும் வருமான வரி ஆலோசகர்
- இயக்குநர் - P.B. கன்ஸ்ட்ரக்ஷன் (இந்தியா) லிட்.

Dr. P.M. பழனி, M.D.,
- தலைவர் தி புரசைவாக்கம் பர்மனென்ட் பண்டு லிட்
- இயக்குநர் புரசைவாக்கம் சாந்தத சங்க நிதி லிட்

Dr. R. விவேகானந்தன், B.Com., M.B.A.,
- சேர்மன்-பார்க்டவுன் பெனிபிட் பண்டு லிட்
- இயக்குநர்- S.I.C-ஹயர் பர்ச்சேஸ் & லீசிங் லிட்

S. முரளி, B.Com., F.C.A., - தணிக்கையாளர்

கோமதி சுந்தரம், B.Sc., - இயக்குநர் - பார்க்டவுன் பெனிபிட் பண்டு லிட்

K. சத்தியநாராயணா, - தொழில்

R. லக்ஷ்மணசுவாமி B.A.(C.S.)., M.B.A
- இயக்குநர் S.I.C. குரூப்
- P.B. கன்ஸ்ட்ரக்ஷன் (இந்தியா) லிட்

இலவச வருமான வரி ஆலோசனை	நகை, வைப்புத் தொகை மற்றும் சென்னை மாநகராட்சி எல்லையை ஒட்டிய புறநகர் வீடுகளின் பேரிலும் கடன் வசதி	பரிமாற்றம் பங்கு தாரர்களுடன் மட்டும்.

அன்னையின் ஐம்பத்தியோரு சக்தி ஸ்தலங்களிலே ஒன்றாகவும் இத்திருத்தலம் விளங்குகிறது.

மிகப் பழமையான இத்திருக் கோயிலில் இன்னும் எத்தனை எத்தனையோ சிறப்புக்கள். ஒன்பது தீர்த்தங்களும், உயிரோவியமாக கல்லிலே இருக்கின்ற சிற்பங்களும் நாளெல்லாம் பார்க்கும்படி இருக்கின்றன. 'திருநீறிட்டான் மதில்' என்பது ஐந்தாவது ப்ராகார மதில். இதனை ஆண்டவனே வந்து கட்டியதாகவும். உடன் வேலை செய்தவர்களுக்கு அவரவர் வேலை செய்ததற்கேற்ப திருநீறு கொடுக்க, அது பொன்னாக மாறியதாகவும் ஸ்தல வரலாறு சொல்கிறார்கள்.

• சிலந்தியும் யானையும் வழிபட்ட தலம்




பல யுக்கர் ஷேஸ்த்ரவைத்தில் யோக மார்க்கத்தைக் குறிக்கும் பல நிலைகளையும், வாழ்வியலுக்குத் தேவையான சக்தியினையும் ஒருங்கே அமையப் பெற்ற ஜம்புகேஸ்வரத்தின் ஐந்து கோபுரங்களையும் காணுங்கள். 'கோபுர தரிசனம் பாப விமோசனமல்லவா!'

'ஆகட்டும். எனக்கு எதுவுமே வேண்டாம். நான் வெட்ட வெளியிலே மழையோ காற்றோ வெய்யிலோ இப்படியே இருக்கேன்' எனவும் இதே சக்தி மற்றொரு சொரூபமாக, காளி ஸ்வரூபமாக 'வெக்காளி'யாக அருள் பாலித்தும் வருகிறாள். திருச்சியின் பக்கத்தில் உறையூரில் அழகே வடிவாக, அருளே தன் குணமாக வெட்டவெளியில் வெக்காளி அமர்ந்திருக்கிறாள். இவளுக்கு என்ன கோபம்? என்ன காரணம்? கோபமில்லை, மக்களின் மேல் கொண்ட கருணையினாலே இப்படி இன்றும் எழுந்தருளி இருக்கிறாள்.

தாயுமான ஸ்வாமிக்காக நந்தவனம் அமைத்துப் அப்பூக்களைக் கொண்டு வழிபட்டு வந்தார் சரமா முனிவர். தன் மனைவி புவனமாதேவியின் கூந்தலுக்காக அங்கிருந்த எங்கும் கிடைக்கப் பெறாத அருள் மலர்களை எடுத்து வரச் செய்தானாம் பராந்தகச் சோழன். இறைவனுக்குச் சூடும் பூவை மானிடப் பெண்ணிற்குச் சூட்ட நினைப்பதா என முனிவர் மனம் பதறியிருக்கிறார். அரசனைக் கேட்க முடியுமா? அவனையும் படைத்த இறைவனிடம் முறையிட்டார். கோபம் கொண்ட ருத்ரன் உறையூரில் மண் மாரிப் பொழிந்து இருக்கிறான்.

உறையூரில் அன்னை வெக்காளியாக வாழ்ந்து



• திருவானைக்காவில் அன்னை மூத்தவளுடன் சனிபகவான்

வந்த அன்னை. இந்தக் கோபத்தினால் ஒன்றுமறியாத தன் மக்கள் வீடுவாசல் இழந்து துன்பப்படுவதைக் கண்டு ஓடோடி, ஈஸ்வரனின் சினம் தணிக்கக் கருணைக் கடலாக அவர் முன்னே நின்றிருக்கிறாள். ஊரிலே மண்மாரி பொழிவது நின்றது. ஆயினும் வீடுவாசல் இழந்து துயருற்ற தன் மக்கள் அனைவரும் இருக்க இடம் கிடைத்து இன்பமாக வாழும்வரை எனக்கு வெட்ட வெளியே போதும், வெயிலிலேயே இருக்கிறேன் எனத் திறந்த வெளியில் வெக்காளியாக அமர்ந்து விட்டாள்.

மக்களின் துயர் துடைக்க வந்ததால் எல்லைத் தெய்வமான காளி இங்கே கோப ஸ்வரூபிணியாக இல்லாமல் சாந்த சொரூபிணியாக அமர்ந்திருக்கிறாள். திரிசூலம், உடுக்கை, பாசம், அக்ஷய பாத்திரம் என நான்

கும் நான்கு கைகளில் ஏந்தி, எங்கும் இல்லாத வகையில் வலது கால் மடித்து. இடது காலினை அசுரகணத்தின் மேல் வைத்துக் கருணையே வடிவாக வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தரக் காத்திருக்கிறாள் வெக்காளி அம்மன். இவள் காளி எனக் காட்டுவது வெளி நீண்டிருக்கும் கடைவாய்ப்பற்கள் மட்டுமே. கண்களோ நிலவென தண்ணமுதத்தைப் பொழிந்து வருகிறது.

நாங்கள் போனபோது பனிரெண்டு மணி அபிஷேக நேரம். பனிரெண்டு மணி தொடங்கி ஒரு மணிநேரம் குளிரக்குளிர அவளுக்கு அபிஷேகம் நடக்கிறது. அம்மையிடம் வேண்டிக் கொண்டவர்கள் கிணற்றிலிருந்து குடம் குடமாக நீரைக் கொண்டுவந்து அண்டாவில் நிரப்புகிறார்கள். பாலும், பன்னீரும், பஞ்சாமிர்தமும், தேனும் அன்னைக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. எதிரே எந்த விசேஷமும் இல்லாத அன்றும் கூட நூற்றுக் கணக்கில் பக்தர்கள். எப்போதும் பக்தர்களுக்காகவே கசிந்துருகி அமர்ந்திருப்பதால், வேண்டுதல்களை கோரிக்கைச் சீட்டில் எழுதி அம்பிகைக்கு முன்னுள்ள சூலத்தில் கட்டிவிட வேண்டும். அப்படி எழுதப்பட்ட கோரிக்கைகள் நிறைவேறிவிட்டதைத்தான் அங்கு பக்தர்கள் விதவிதமாக நேர்த்திக்கடன் செய்வதிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.

செயல் அலுவலர் சுப்பையா கோவில் தலவரலாறு பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். சிறுவயதிலிருந்தே தன்னுடைய தந்தை வெக்காளிக்குச் செய்யும் சேவையைக் கண்டு தானும் அப்படியே செய்ய ஆரம்பித்து, இன்று தலைமை பூசிப்பவராக இருக்கும் மார்த்தாண்டன் மிகவும் சிரத்தையாக தன் பணியைச் செய்கிறார். அவர் அன்னைக்கு அபிஷேகம்- செய்யும் அழகையும், பின்னர் அலங்கரிக்கும் அழகையும் இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

• முகப்புத் தோற்றம்...




"என் வாழ்க்கையிலே பல அற்புதங்களை வெக்காளியம்மன் செஞ்சிருக்குதுங்க., எவ்வளவோ, பக்தர்கள் வந்து எவ்வளவோ கோரிக்கைகளை எழுதிக் கட்டறாங்க. அப்படியே நிறைவேறிப் போறதை பார்த்துக்கிட்டுதான் இருக்கோம். இங்கே சதசண்டி ஹோமம் பண்ணினோம். இப்பவும் ஒவ்வொரு வருஷமும் பண்றோம். அதனால அம்மாவோட சக்தி நாளுக்குநாள் கூடிக்கிட்டு வருவதை எங்களால நல்லாவே உணர முடியுது" என்கிறார் இவர் மெய்சிலிர்ப்புடன்.

இப்பொழுதெல்லாம் கோரிக்கைச் சீட்டு மூன்று ரூபாய் எனப் போட்டிருக்கிறார்கள். கோயில் மண்டபத்தில் அமர்ந்து பலரும் தங்கள் மனக்கிடக்கைகளை எழுதிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது.

மீனாட்சியோ, காமாட்சியோ, அகிலாண்டேஸ்வரியோ, வெக்காளியம்மனோ அனைவரும்மே அகில உலக நாயகியின் பல்வேறு சொருபங்கள். இந்த உலகில் பல பிரச்னைகளில், மனக்கிலேசங்களில் நாளும் சுழன்று மனம் நொந்திடும்போதெல்லாம் ஒரு பிடி, ஒரு பற்றுக்கோடு, ஒரு நம்பிக்கை தேவையாக இருக்கிறது. மனம் அம்மா என அலறுகிறது. அங்கே அன்னை கார்த்தையாக அமர்ந்து அருள்பாலிக்கும்போது பொங்கும் மனம் சமனமாகிறது. உலகில் தெளிவாக நம் பயணம்தொடர, நடக்க அன்னையின் அருட்கரம், கருணைப்பார்வை அவசியம். அதனால் தான் ஆதிசங்கரர் எடுத்தவுடன் ஸ்ரீ மாத்ரே நமஹ என அன்னையை அழைத்தார். அந்த அகிலத்தின் அன்னையின் தாள் பணிவோம். அம்மா நமக்கு நல்லதுதான் செய்வாள்!

• கோயிலினுள்...



- மஞ்சுளாரமேஷ்


- படங்கள்: ஜி. சுரேஷ்

மூல நாயகியரின் படங்கள் உதவி: திருவானைக்கா மற்றும் வெக்காளியம்மன் கோயில் அதிகாரிகள்.



• லலிதா சேதுராமன் • பத்மாசினி • சியாமளா சிவராமன்

மக்களிடையே உடல் நலம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு மருத்துவ மனையும், மங்கையர் மலரும் இணைந்து இதுவரை பல மருத்துவ சந்திப்புக்களை பல மாவட்டங்களில் நடத்தினோம். தமிழ்நாடு மருத்துவமனை தொடங்கி ஐந்து ஆண்டுகள் சமீபத்தில் வெற்றிகரமாக நிறைவு பெற்றிருக்கிறது. அதனைக் கொண்டாடும் வகையில்–



பார்வையாளர்கள்

சாந்தி

தமிழ்நாடு மருத்துவமனையும், மங்கையர் மலரும் இணைந்து ஏற்பாடு செய்த 'மகளிர்-மருத்துவர் சந்திப்பு' சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்தது. இதில் கும்பகோணம், தஞ்சை, நாகை-மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

திருமதி. சியாமளா சிவராமன் கடவுள் வாழ்த்துப் பாட, தொடங்கிய நிகழ்ச்சியில் மங்கையர்மலர் வாசகிகளிடையே நன்கு அறிமுகமான திருபுவனம் பட்டுக் கூட்டுறவு சொஸைட்டியின் மேலாளர் நடராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்துப் பேசிய,

திருமதி. மஞ்சுளா ரமேஷ்:– "மக்களிடையே உடல் நலம்பற்றிய விழிப்புணர்வு வரவேண்டுமென்பதற்காகவே பல மாவட்டங்களிலும் இதுபோன்ற சந்திப்புக்களை நடத்தி வருகிறோம். குழந்தைகளுக்கோ, கணவருக்கோ உடல் நலம் சிறிது பாதிக்கப்பட்டாலும் பதறி ஓடும் பெண்கள் தங்களுக்கு எந்த நோயானாலும் தள்ளிப் போடுவது– அப்படியே இனி முடியாது என்ற நிலை வந்து விட்டால் மட்டும் தானே டாக்டரிடம் செல்கின்றனர்? அப்படி ஒரு நெருக்கடியான நிலையின் போது மருத்துவர்கள் சொல்லும் வியாதியின் பெயர்கள் நம் வாயில் கூட நுழையாது; அந்த நேரத்தில் அவர்களிடம் எந்த சந்தேகம் கேட்கவும்

வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட சிகிச்சை உண்டா?

கணவருக்



• விழா மேடையில்....

முடியாது. இதற்காகவே இது போன்ற சந்திப்புக்களை ஒரு இயக்கமாகவே நடத்தி வருகிறோம்."

(இடையில் உப்பிலியப்பன் கோவில் பட்டாச்சாரியார் வந்து மேடையில் உள்ளவர்களுக்குப் பிரசாதம் வழங்கினார்)

தலைமை உரையாற்றிய தமிழ்நாடு மருத்துவமனையின் தலைவரும், நிர்வாக இயக்குனருமான வேலுசாமி: "முன்பெல்லாம் மக்கள் நோய் கண்டால் மட்டுமே மருத்துவமனைக்கு வருவார்கள். ஆனால் தற்போது அறிகுறி தெரிந்தாலே வந்து விடுகின்றனர். அந்த அளவு விழிப்புணர்வு ஏற்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும். இது போன்ற சந்திப்புக்கள் நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகள்– தவிர்க்கப்பட வேண்டியவைகள் போன்றவற்றைப் பற்றிய விழிப்புணர்வு தரும்."

டாக்டர் ரவிராஜகோபாலன்: "இங்கே நோயாளிகளில் 95% பேர் நோய் தீவிரமடைந்த பின்புதான் பரிசோதனை செய்து கொள்ள வருகின்றனர். அல்லது வேறு ஏதாவது சோதனைகளின் போது 'சர்க்கரை' போன்ற நோய்கள் இருப்பது 'ஆக்ஸிடென்டலாக' தெரிய வருகிறது. 35 வயது தாண்டியவர்கள் உயர்ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவைகள் உள்ளதா என்பதைத் தாமாகவே வந்து பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்."

டாக்டர் வசந்தா: "பல நோய்களை வராமலேயே தடுக்க முடியும்– ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் பூரணமாகக் குணப்படுத்தவும் முடியும்– இது பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே வேண்டுமென்பதற்காகத்தான் இப்படி சந்தித்துப் பேசுகிறோம். கருப்பை வாய் புற்று நோயை எளிதாகத் தடுக்க முடியும். ஆண்டுக்கு ஒருமுறை கருப்பை வாயைப் பெண்கள் சோதனை செய்து கொள்ள வேண்டும். பாப்ஸ்மியர் எனப்படும் இந்தச் சோதனையை வெளி நாடுகளில் 30 வயதாகிவிட்ட பெண்கள் இரண்டாண்டுகளுக்கொருமுறை தவறாமல் செய்து கொள்வர். மாதவிலக்கு 40 வயதில் மாறிமாறி வந்தால் அது மெனோபாஸ் என்று எண்ணி அதைக் கவனிக்காமல் விடுவது தவறு.

• கேள்வி கேட்ட வாசகியர்






டாக்டர் வைத்தீஸ்வரன்: "புற்று நோய் என்பது ஒரு தொற்று நோயல்ல. நம் உடலில் உள்ள செல்களின் தேவையில்லாத– அதிகமான வளர்ச்சிதான். நம் நடைமுறை வாழ்க்கை, சுகாதாரமுறை, நம் லைஃப் ஸ்டைல், பாரம்பரியம், பழக்க வழக்கங்கள் போன்றவைகளும் இதற்குக் காரணமாகும். இந்தப் புற்று நோய்கள் குணப்படுத்தக் கூடியவைதான். இதில் 4 நிலைகள் உண்டு. முதல் இரு நிலைகளில் (ஆரம்பநிலை) எளிதில் பூரணமாகக் குணப்படுத்த முடியும். பின்னிரு நிலைகளில் மேலும் பரவாமல்



• சிவகாமி தியாகராஜன்



• உப்பிலியப்பன் கோவிலிருந்து....





• டாக்டர் ரவிராஜகோபால்

தடுக்க முடியும். பலவித சிகிச்சை முறைகள் உண்டு.

(மருத்துவர்களிடம் கேள்விகேட்டவர் களில் பலர் தங்கள் பெயரைச் சொல்ல வில்லை– பெயர் சொன்னவர்கள் பெயர்கள் மட்டும் கேள்வி களுடன்)

கேள்வி: "தோலில் வறட்சி ஏற்படாமலிருக்க தேங்காய் எண்ணெய் தடவினால் போதுமா? தோலின் துவாரங்கள் வழியாக எண்ணெய் இறங்கி பளபளப்பு தருமா?"



• வேலுசாமி

டாக்டர் வசந்தா:– எண்ணெய் தடவுவது மஸாஜ் போலத்தான். வறட்சிக்கு முக்கியமான காரணத்தைக் கண்டுபிடிக்க வேண் டும். தைராய்டினால் கூட இருக்கலாம். தோல் வைத்திய நிபுணரைப் பார்த்து ஆலோசனை பெறவேண்டும்."

கேள்வி: "ஒரு பெண்மணி ரொம்பநாள் தொண்டை வலி என்றாள் பின்பு தைராய்ட் கோளாறு என்று டாக்டர் சொன் னார்கள். அயோடைஸ்ட் சால்ட் பயன்படுத்தினல் இது வராதா?"



• டாக்டர் வசந்தா

டாக்டர் ரவி:– "தைராய்டில் இரண்டு விதம் உண்டு. அதிகமாக சுரக்கும் நேரம் உடல் எடை குறையும். நெர்வஸாக இருக்கும்–தைராய்ட் குறைவாக சுரந்தால் டல்லாக மேற் சொன்னவைகளுக்கு எதிராக இருக்கும். இவைகளுக்குக் கழுத் தில் அடையாளம் கிடையாது. தைராய்ட் வீங்கியிருந் தால் தொட்டால் வலிக்கும். இதற்கு அயோடின் குறைவு காரண மாகும்."

அமுதாசக்திவேல்:– "38 வயதில் மாதவிலக்கு நின்றுவிட உடம்பு மிகவும் பெருத்துப் போகிறதே!"

டாக்டர் வசந்தா:– காலத்துக்கு முன்பே இப்படி நின்று விட்டால் ஹார் மோன்கள் கோளாறுகளினால் இப்படி ஏற்படலாம். ஃபேமலி ஹிஸ்டரி, கருமுட்டைப் பைகள், தைராய்ட்– போன்றவைகளையும் கவனிக்க வேண் டும்."

கிருஷ்ணம்மாள் (மணிமேகலை மன்றம்):– "குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டால் உடல் பெருத்து விடும்- மாத விலக்குக் கோளாறுகள் ஏற்படும் என்கிறார்களே!"



• திரிபுவனம் பட்டு ந

டாக்டர் வசந்தா: "துளிகூட சம்பந்தமில்லை. அளவில்லாமல் உண்ணு தல்– உடற்பயிற்சியை மறந்து விடுதல் இவைதான் உடல் பெருக்க முக்கிய காரணம்."

கேள்வி:– "தொண்டைப்புற்று பற்றி..."


டாக்டர் வைத்தீஸ்வரன்: "புகையிலைதான் முக்கிய காரணம். எந்த விதத்திலும் புகையிலை கூடாது. தொண்டை புற்றுக்கான சிறப்புப் பரிசோதனை தமிழ்நாடு ஆஸ்பிடலில் உண்டு."

சிவராமன்: "சர்க்கரை நோய் உள்ளவர் என்னதான் கட்டுப்பாட்டில் இருந்தாலும்– ஆண்டு களின் எண்ணிக்கை கணக்கு என்கிறார்களே?


PKL
LIMITED

காலை வணக்கங்கள்

மகிழ்ச்சிக்கு!



காலை நேரங்களின் அவசரம் இனி இருக்கவே இருக்காது. க்ளிக்ஸ் வீட்டில் இருக்கையில் மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் மட்டுமே தென்படும். அதன் அகன்ற பர்னர் நீங்கள் திறமையாகவும், துரிதமாகவும் சமைக்க உத்தரவாதமளிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அதன் 'பிளேம் நாபை' திருப்ப வேண்டியது மட்டுமே. அதன் பின்னர் மகிழ்ச்சி ஒவ்வொரு காலையிலும் உங்கள் வீட்டில் மலரட்டும்.

one & only

CLIX

கேஸ் சமையலின் வசதிக்காக

Corporate Office: *8-3-1087, Plot No. 48, Srinagar Colony, Hyderabad-073. Ph.: 3740227/3740548/3747658. Fax: 91-40-3741096.* **Regional Offices:** ***North:*** M/s. PKL Limited, 45/4, East Patel Nagar, New Delhi – 110 008. Ph.: 5759902 • **South:** M/s. PKL Limited, 'Anmol', 89/1, 2nd Floor, Gandhi Bazar, Main Road, Bangalore - 560 004. Ph.: 6603630/6804459/6627677 • **East:** M/s. PKL Limited, 41-A, Syed Amir Ali Avenue, 1st Floor, Calcutta-19. Ph.: 2479744/2401573 • **West:** M/s. PKL Limited, 4, Basement, Monalisa, Hariniwas Circle, Naupada, Thane - 400 602 Ph. 5331997/5366432

• டாக்டர் வைத்தீஸ்வரன்







• சிவராமன்



பெண்களுக்கு மாதவிலக்கு நின்ற பின்பு தனிமை-மனக் கவலை இவைகள் அட்ரினலைத் தூண்ட- இன்சுலின் சுரக்க- நான் இன்சுலின் மருந்துகள் உண்டா?

வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட ஈஸ்டிரஜன் (ஹார்மோன்) சிகிச்சை உதவுமா? இதனால் பக்க விளைவுகள் உண்டா?

டாக்டர் ரவி:– "இன்சுலின் சுரக்காத நிலையில்தான் இரத்தத்தில் சர்க்கரை அளவு கூடுகிறது. இதைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர-இன்சுலினை சுரக்க வைக்க முதலில் மாத்திரைகள்- முடியாத நிலையில் இன்ஜக்ஷன்.. சர்க்கரையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் பாதிப்பு இராது. டயபடிக் இல்லை என்றாலும் வயது ஏறஏற கண்களில் சதை வளர்தல் போன்றவை வருமே! 'ஜீன்' நன்றாக இருந்தால் இது போன்ற 'நரை, திரை' தாமதமாக வரும்."

டாக்டர் வசந்தா:– " சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைத்து நல்லதொரு வாழ்க்கை வாழ்வோருக்கு எந்த பாதிப்பும் இல்லை. மாதவிலக்கு தன் வேலையை நிறுத்திய பின்பு உடலில் நிறைய மாறுதல்கள் வரும். தேவையான அளவில் சரியான முறையில் தரப்படும் ஹார்மோன் தெரபி நல்ல பலன் தரும். குறிப்பிட்ட ஈஸ்டிரஜனை- குறிப்பிட்ட சரியான அளவை ஒரு டாக்டரின் மேற்பார்வையில் தர உண்மையிலேயே நல்ல பலன் தரும். இது போன்ற சிகிச்சை பல வழிகளில்- க்ரீம், இன்ஜக்ஷன், பேட்சஸ் போன்ற பல வழிகளில் தரப்படும். ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் மருத்துவரைப் பார்த்து ஆலோசனை பெற வேண்டும். மன நிலையையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல புத்தகங்கள், நிறைய புதிய இடங்கள் காணுதல் என நாம்தான் நம்மை ஃப்ரெஷ்ஷாக வைத்துக் கொள்ள வேண்டும்."

ஜெயலட்சுமிபராங்குசம்:– "மணமாகாத பெண்களில் பலர் 20 நாட்களுக்கொருமுறை மாதவிலக்கு ஆகி- அது நான்கு நாட்கள் இருக்க- அந்த நேரம் வயிற்று வலி ஏற்பட வலி நிவாரணி மாத்திரைகள் சாப்பிடுகின்றனர். கிராமபுறங்களில் வேப்ப இலைத்தூள் உண்டால் சரியாகும் என்கின்றனரே?"

டாக்டர் வசந்தா:– "இது நிறைய பேருக்கு உண்டு. 1,2மாத்திரைகள் சாப்பிடுவதில் தவறு இல்லை. ஒரு குழந்தை பிறந்த பின்பு இந்த வயிற்று வலி தீர்ந்து விடும்."

கேள்வி:– "தலைவலி அடிக்கடி வரும்போது தலைவலி மாத்திரைகள் சாப்பிடலாமா?"

டாக்டர் வைத்தீஸ்வரன்:– "சாதாரண தலைவலி என்றால் பரவாயில்லை. செல்ப் மெடிகேஷன் தவறானது. இங்கு நம் நாட்டில் நோயைச் சொல்லி மருந்து கேட்டால் கொடுப்பார்கள். ஆனால் வெளிநாடுகளில் இது கிடையாது. தனக்குத் தானே- மருத்துவர் உதவியில்லாமல் வைத்தியம் செய்து கொள்ளக் கூடாது என்பதை நீங்கள் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும்."

கேள்வி:– "டயபடிக்கினால் வாதநோய் வருமா?"

டாக்டர் ரவி: "டயபடிக் என்றாலே இரத்தக் குழாயில் பிராப்ளம் வரும். ஹார்ட் அட்டாக், பெரலிடிக் போல எதுவும் வரலாம். ஜாக்கிரதையாக இருந்தால் இவைகளைத் தடுக்கலாம்."



கேள்வி:- "40 வயதான பின்பு வரும் மூட்டி. இடுப்பு வலி - பருப்பு மற்றும் உருளைக் கிழங்கு உண்பதால் அதிகமாகுமா? சர்க்கரைநோய் இல்லை. மருந்துகள் சாப்பிட்டால் இவைகளை உண்ணலாமா?"

டாக்டர் ரவி:- "உடற்பயிற்சி இல்லாமை, கேல்ஷியம் குறைவு. மற்றும் ஹார்மோன்கள் குறைவு- உடல் எலும்புகள் தேய்தல் இதனால் மூட்டு வலிகள் வரும். இப்போது பாலில் கொழுப்புச் சத்து உள்ளது என அதை ஒதுக்கி விடுகிறோம். வெற்றிலை பாக்கும் போடுவ தில்லை. கட்டுப்பாடு இல்லாமல் எடை ஏறு வதாலும் இந்தப் பிரச்னை."

கேள்வி:- " 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர்களுக்கு இருந்த ஆரோக்கியம் இன்று உள்ள இளையவர்களுக்கு இல்லையே? ரொம்பவும் பலஹீனமாக இருப்பது ஏன்? அதிகம் நடக்கக் கூட முடியவில்லை."

டாக்டர் ரவி:- "1947க்கு முன்பு நம் இந்தியரின் சராசரி வயது 27தான். இப்போதைய சராசரி வயது 57 அப்போது பலத்துடன் இருந்தவர்கள் இப்போது நீண்ட ஆயுளுடன் இருக்கிறார்கள்."

டாக்டர் வசந்தா:- "முன்பு இத்தனை வாகன வசதி ஏது? அப்போது ஒரு வீட்டில் 10 குழந்தைகள் பிறந்தால் 4,5தானே தங்கும்? இன்று மூளைக்கு வேலை அதிகம்- வாழ்க்கையும் வேகமானது தானே? பழக்கம் வேறு- ஆரோக்கியம் வேறு. உடலும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இத் தனைய கட்டங்கள்."

கேள்வி:- "கருப்பை நீக்கம் என்பது இப் போது அதிகமாகி உள்ளதே? கருபபை புண் என்றாலே நீக்கம் செய்ய வேண்டுமா?"

டாக்டர் வசந்தா:- "புண்ணுக்காக மட்டுமே கருப் பையை நீக்கம் செய்வதில்லை. புண்கள் ஆறாமல் இருந்து- அதனால் பின்னால் வரும்பாதிப் புக்களுக்காகத்தான் நீக்கம். முதலில் பரிசோதனைகள் செய்து - கணவன், மனைவி இருவருக்குமே சிகிச்சை தருவோம். கருப்பையில் கட்டி, அதிக மான நிற்காத இரத்தப் போக்கு- இப்படி இருந்து அந்தப் பெண் குழந்தைகள் பெற்று முடித்திருந்தால் மட்டுமே- கருப்பை நீக்கம் செய்யப் படும்."

இந்திரா கோபாலகிருஷ்ணன்:- "35-45 வயதில் கருப்பை நீக்கம் செய்ய குடும்பக் கட்டுப்பாடு முறைகளும் காரணமா?"

டாக்டர் வசந்தா:- "கட்டாய மிருந்தால் மட்டும்தான் நீக்கம் செய்யப்படுகிறது. அந்தக் காலத்தில் அதிகமான இரத்தப் போக்கினால் பலவீனமாகி விடுவார்கள். என்னவென்று தெரியுமுன்பே கேன்ஸர் போன்ற பிரச்சனைகள் வரும். இப்பாது அப்படி இல்லை. குடும்பக் கட்டுப்பாடு முறைகளுக்கும் கருப்பை நீக்கத்திற்கும் சம்பந்தமில்லே. எடுத்த பின்பு மாதவிலக்கோ- குழந்தைகளோ கிடையாது என்பதைத் தவிர பெரியப் பிரச்னைகள் எதுவும் வராது. அறுவை சிகிச்சைக்கான வலிவேதனை மட்டுமே இருக்கும். அறுவை சிகிச்சை முடிந்த 4-ம் நாளே நான் வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன். 45 நாட்கள் வரை பளு தூக்கக் கூடாது. ஓரளவு ரெஸ்ட்டில் இருக்க வேண்டும். அவ்வளவுதான்."

கேள்வி:- "வெள்ளை படுதல் பற்றி- அதுக்கு சிகிச்சை?"

டாக்டர் வசந்தா:- இரண்டு மாத விலக்குகளுக்கு நடுவில் வெள்ளை படலாம். எரிச்சல், மஞ்சள், அதிக வெள்ளை



ஆப்டிமா அனுபவம் - 2



"டச் ஆஃப் ஜாய்" - மும்பையின் பிரபலமான பியூட்டி பார்லரின் உரிமையாளர் - ஃபாட்டி.

"எனக்குத் தெரியும்
உலர்வான, சிக்கலான
கூந்தலினால் எவ்வளவு
தொந்தரவாக இருக்குமென்று.
ஆப்டிமா என்னுடைய
கூந்தலை மிகவும்
மிருதுவாகவும், மிகவும்
அடர்த்தியாகவும் விளங்க
வைத்தது. என்னுடைய
கூந்தல் தோற்றமளிக்கும்
பாங்கு மிகவும் பிடிக்கிறது
என்று எனது வாடிக்கையாளர்
ஒருவர் கூறினார்".

மும்பையின் பிரபலமான பியூட்டி பார்லர் 'டச் ஆஃப் ஜாயின்' ஃபாட்டி, அறிவார் ஆப்டிமா கூந்தலை எழிலாய் மிருதுவாக்குகிறது என்று. அவரைப் போலவே நீங்களும் ஆப்டிமா அனுபவம் பெறுவீர்
உங்கள் கூந்தலுக்கு புத்துயிர் அளியுங்கள்.
ஆப்டிமாவின் ஒப்பற்ற கேரடின் ட்ரீட்மென்ட் ஃபார்முலா சேதமுற்ற கூந்தலை சரி செய்கிறது மேலும் வேரிலிருந்து நுனிவரை ஊட்டமளிக்கிறது. மற்ற ஷாம்பூகளால் முடியாத அளவிற்கு, உங்களுடைய கூந்தலை வலிமையானதாகவும், இஷ்டப்படி படிந்து கொடுப்பதாகவும் ஆக்குகிறது. ஆசைப்படி நாட்டியமாடும் உங்கள் கூந்தல்

புதிய!

ஆப்டிமா

கேரடின் ட்ரீட்மென்ட் ஷாம்பூ

கூந்தல் அசைந்தாடும் உங்கள் ஆசைப்படி

Rediffusion-DY&R/Bom/CP/2/CTM



ஸ்டாம்ப் சேகரிப்பவர்களாக இருந்தால், கவர்களில் ஒட்டியிருக்கும் ஸ்டாம்பை கிழிக்காமல் எடுக்க ஒரு வழி: குக்கரில் ஆவி வரும் போது (வெயிட் போடுவதற்கு முன்) - ஸ்டாம்ப் ஒட்டியுள்ள பகுதியை ஆவியின் மேல் ஓரிரு நிமிடங்கள் காட்டினால், ஸ்டாம்ப் சேதமின்றி கழண்டு விடும். மில்க் குக்கர் ஆவியிலும் காட்டலாம்!

- எஸ். பட்டம்மா

இல்லாமல், முதுகு வலி இல்லாமல் இருந்தால் வெள்ளை படுதல் தேவலாம். ஆனால் இன்ஃபெக்ஷன் இருந்தால் – 'கல்சர் டெஸ்ட்' கணவன், மனைவி இருவருக்குமே சிகிச்சை தொடர்ந்து 3 முறைகள் தர வேண்டும். இதனால் பூரண குணம் கிடைக்கும்."

ஒரு மணிநேரத்திற்கும் மேலாக வாசகியர் சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டனர். பிறகு சோழன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் பாலசுப்ரமணியம் சமூகப் பொறுப்புடன் நடத்தப்படும் இத்தகைய நிகழ்ச்சிகளை சிலாகித்துப் பேசினார். கும்பகோணம் சிட்டி யூனியன் வங்கி மேலாளர் நாராயணன் வினாடி வினா நிகழ்ச்சியில் பரிசு பெற்ற டி.எஸ்.ஆர். குடும்பத்தைச் சார்ந்த பத்மாசினி, கல்பகம் தம்பு, இந்திரா பானுமதி, செல்வராணி, ஸ்டெல்லா, சம்பத்கௌரி, சித்ரா ஆகியோருக்குப் பரிசுகளை வழங்கினார்.

கும்பகோணத்தில் இந்நிகழ்ச்சியினை நடத்தப் போகிறோம் என்று சொன்னதி லிருந்தே மிகுந்த ஆர்வத்துடன், பல்வேறு பிரிவினர்களிடம் தொடர்பு கொண்டு மங்கையர் மலர் வாசகிகளுக்குத் தகவல் தெரிவித்துப் பம்பரமாகச் செயல்பட்டவர்கள் மங்கையர் மலர் விற்பனைப் பிரதிநிதிகள். கும்பகோணம் வெங்கிடசுப்ரமணியம், திருநாகேஸ்வரம் சண்முகம், தஞ்சாவூர் ஜெயராமன் மற்றும் சுவாமிமலை பஞ்சநாதம். அய்யம்பேட்டை, மன்னார்குடி, மயிலாடுதுறை சார்ந்த செல்வராஜ், செல்வமுத்து, நடராஜனும் விழா சிறப்பாக அமைய பங்கேற்றிருந்தார்கள். எல்லோரும் ஒரு குடும்பமாகச் செயல்பட்டதைப் பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

கும்பகோணத்திலும் சும்மா சொல்லக்கூடாது. விழா நடந்த ராயாமஹாலின் உரிமையாளர் ராயா கோவிந்தராஜன், ஈவ்ஸ்கிளப் தலைவி லலிதா சேதுராமன், இன்னர் வீல் க்ளப்பைச் சேர்ந்த சிவகாமி தியாகராஜன் மற்றும் பல உறுப்பினர்கள், துர்கா மாதர் சங்கத் தலைவி ராசாத்தி, அவருடைய மன்ற உறுப்பினர்கள், எழுத்தாளர் டி.எஸ். சீதாராமன் என நிறைய வந்திருந்தனர். தஞ்சாவூர் ஜெயராமன் தஞ்சாவூரைச் சார்ந்த மணிமேகலை மகளிர் மன்றம் மற்றும் இரண்டு மகளிர் மன்ற உறுப்பினர்களை வேன் வைத்தே அழைத்து வந்து விட்டார்.

கலையுணர்வுடன் கட்டப்பட்டு, கண்ணியமான பணியாளர்கள் நிறைந்த ராயாமஹாலில் கோலாகலமாக நேருக்கு நேர் நிகழ்ச்சி நடந்து விருந்துபசாரத்துடன் முடிந்த போது மனம் நிறைவாக இருந்தது.

தொகுப்பு: **வைதேகி தேசிகன்**

படங்கள் : **ஜி. சுரேஷ்**

தேங்காயைத்துருவி லேசாக வதக்கிக் கொண்டு அத்துடன் பச்சை மிளகாய், உப்பு இவற்றைச் சேர்த்து கெட்டியாக மிக்ஸியில் கொஞ்சம் கூடவே அரைத்து வைத்துக் கொண்டால் ஒரு அவசரத்திற்கு மிகவும் பயன்படும். காலை அவசரத்திற்கு மிக்க உபயோகமாக இருக்கும்.

– உஷா நாராயண்.





பேசுங்களேன்!' என நான் இப்படி இழுத்துச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர்... 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்ற பழமொழிகளைப் பற்றி இன்று யோசிக்க வேண்டியதாக உள்ளது. எந்த உறவிலும் விரிசல்கள் தோன்றக் கூடும். ஆனால் இன்று நம்மைப் பூதாகாரமாகத் தாக்கியுள்ள பிரச்னை சாதாரண விரிசல்கள் இல்லை. முறிவுகள். அச்சுறுத்தும் மணமுறிவுகள்.

''நாங்கள் எங்க பெண்ணுக்கு என்ன குறை வைத்தோம். படிப்பு, புத்திசாலித்தனம் மற்றும் இன்றைய ஸ்டேட்டஸ்கள்... பொருளாதார சுதந்திரம், மனித நேயம், திறமை இப்படி எத்தனையோ... தேடித் தேடி, ஜாதகம் பார்த்து, பொருத்தம் பார்த்து, சகுனம் பார்த்து, படிப்பு, அந்தஸ்து, அழகு, குடும்பச் சூழல் எல்லாம் விசாரித்துத்தானே கல்யாணமும் செய்தோம். ஒரே வருடத்தில் இப்படிப் பிரிந்து வந்து நிற்கிறாளே...'' என்று பெண்ணைப் பெற்றவர்களும்,

''என் பிள்ளை நல்ல குணமுடையவன். ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. படிப்பு, அந்தஸ்து, பணம் எல்லாம் இருக்கு. மாமியார், மாமனார் தொந்தரவு என்று சொல்லக் கூட வழியில்லாமல் நாங்கள் எங்கோ தில்லியில் இருக்கிறோம். அந்தப் பெண்ணும் சூதுவாது தெரியாத நல்ல பெண்தான். பின் ஏனிப்படி...'' என்று பிள்ளையைப் பெற்றவர்களும் புலம்ப, தவறு எங்கே நிகழ்ந்தது?

ஒரு சின்ன சாம்பிள். சுரேஷ் ஒரு வங்கியில் வேலையிலிருக்கிறான். நல்ல குணமுடைய வீட்டுக்கடங்கிய பையன். அவன் வேலை செய்யும் வங்கியும் பிரச்னையில்லாதது. கூட்டமில்லாத ப்ராஞ்ச். காலையில் எட்டு மணிக்குச் சென்றால் மூன்று மணிக்குள் வீடு திரும்பி ஒரு குட்டித் தூக்கம் போட்டு விட்டு



திருமணத்திற்கு முன் மனம் விட்டுப் பேசுங்களேன்!



மாலையில் நண்பர்களுடன் இலக்கியம், ட்ராமா, சினிமா அலைசல் என்று பொழுதைக் கழிப்பான். "எப்படிப்பட்ட பெண் வேணும்" என்று அம்மா கேட்டபோது, "பார்க்க ரொம்ப மோசமில்லாம, கொஞ்சம் லிட்ரரி மேட்டர்ஸில் இன்ட்ரஸ்ட் உள்ள பெண்ணாப் பாருங்க. வேலைக்குப் போற பெண்ணா இருந்தா பெட்டர். நான் முழுவதும் பொழுதுபோக்கு அது எப்படி என்று கஷ்டப்பட மாட்டா" என்...



[illegible]

எத்தனையோ நூறு ஜாதகப் பொருத்தங்கள் பார்த்த பிறகு சந்தியாவின் ஜாதகத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். சுரேஷுக்கும், சந்தியாவுக்கும் முதல் பார்வையிலேயே பிடித்து விட்டது. "நீ கேட்ட எல்லாமே உனக்குக் கிடைச்சுடுத்து. வேலைக்குப் போற பெண்... லிட்ரரி மேட்டர்ஸில் ஆர்வமுள்ள பெண் வேணும்னே... அவ வேலையே லிட்ரரி தான்" என்று அம்மா சந்தோஷப்பட்டாள். சந்தியா ஒரு விளம்பர நிறுவனத்தில் காபி ரைட்டராக இருக்கிறாள். எக் காரணம் கொண்டும் கல்யாணமான பிறகு வேலையை விட மாட்டேன் என்று அவள் முடிவு செய்திருந்ததால், சுரேஷ் வேலையைத் தொடரச் சொன்னதில் அவளுக்கும் சந்தோஷம்.

மகிழ்ச்சியான தேனிலவுக்குப் பிறகே பிரச்னைகள் தோன்றத் துவங்கின. சந்தியா அழகாக வீடு வைத்துக் கொள்வாள். அதிகாலையில் எழுந்து விதவிதமாக சமைத்து வைத்தாள். இதிலெல்லாம் எந்தக் குறையுமில்லை. பிரச்னை வேறு. பெரும்பாலான நாட்களில் சந்தியா வீடு திரும்ப வெகு நேரமாயிற்று. "நானும்தான் வேலைக்குப் போகிறேன். இதென்ன யாரும் செய்யாத மாதிரி வேலை... தினம் எட்டு மணி, ஒன்பது மணி என்று" என்று ஆரம்பத்தில் முணுமுணுத்தான் சுரேஷ். சில நாட்கள் ராத்திரி மணிக்கு அவன் ஆபீஸுக்கே வந்து.

இன்றைக்கு வருமானம்



"ஆயிரம் காலத்துப் பயிராக
ஆண்டாண்டு காலமாக வளரும்
அன்பை வெளிப்படுத்தும் பாசப்பிணைப்பு.....
அதை உறுதிப்படுத்தும் ஒரு நல்ல பரிசு—
தன விருக்ஷா."

உங்கள் டெபாசிட்
ரூ.15,000/- மட்டுமே....

அதன் மூலம் உங்களுக்கு கிடைப்பதோ -
21% வட்டி
+
ரூ.6,000/- மதிப்புள்ள
தேக்குப் பண்ணை
+
5 ஆண்டுகளுக்குப் பிறகு
உங்கள் டெபாசிட் ரூ.15,000/-
+
20 ஆண்டுகளுக்குப் பிறகு
தேக்குப் பண்ணை வருமானமாக
ரூ. 5 லட்சம்

ஆக, மொத்த வருமானம்
ரூ.5,36,750/-

யார் தருவார் இந்த அருமையான வாய்ப்பு?

அனுபவ் மட்டுமே!

அனுபவ்
தன
விருக்ஷா

பிக்சட் டெபாசிட் திட்டம்

அனுபவ் பல துறைகளில் ஈடுபட்டு சிறப்புடன் வளர்ந்து வரும் பல கோடி மதிப்புள்ள ஒரு குரூப். இந்தியா முழுவதும் 70 அலுவலகங்களில் பணி புரியும் 1,800 நிபுணர்களுடன், 70,000க்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களின் நல்ல நம்பிக்கையைப் பெற்றுள்ளது இந்த குரூப்.

நிதி நிர்வாகம் மற்றும் தேக்கு மர வளர்ச்சி ஆகியவற்றில் பெற்ற தேர்ச்சியையும், அனுபவத்தையும் இணைத்து அனுபவ் அளிக்கும் தன விருக்ஷா டெபாசிட் திட்டத்தில் உங்கள் டெபாசிட் தொகைக்கு கிடைக்கும் பயன்களை இந்த அட்டவணையில் காணலாம்.

"சீக்கிரம் கிளம்பு" என்று தொந்தரவு செய்தான்.

சந்தியா அவனுக்கு விளக்கினாள்- "எல்லா வேலையும் ஒரே மாதிரி இருக்குமா சுரேஷ்.. விளம்பர நிறுவனங்களிலெல்லாம் இருபத்தி நாலு மணி நேரமும் வேலைதான். திடீரென்று ஒரு க்ளையண்ட் ஒரு ப்ரிண்டில் மாறுதல் வேணுமென்றால் இரவு முழுவதுமானாலும் உட்கார்ந்து முடித்துக் கொடுத்து விட்டுத்தான் போக முடியும். மணி ஆகி விட்டது என்று பேங்க் கவுண்டரை மூடுவது போல் இழுத்து மூட முடியாது. அதற்குப் பதிலாக வாரத்தில் இரண்டு நாள் முழுவதுமாக விடுமுறை கிடைக்கிறதே சுரேஷ்.. we can plan a lot of things... எங்க ஆபிஸிலே மாக்ஸிமம் பெண்கள்தான் வேலை செய்யறாங்க... எத்தனையோ பேருக்குச் சின்னக் குழந்தைகள், வீட்டில் வயதானவர்கள் என்று பிரச்னைகள்... இருந்தாலும் இந்த வாழ்க்கைக்கு அட்ஜஸ்ட் ஆகி விடுகிறார்கள்..." என்றாள்.

சுரேஷ் அவளிடம் திட்டமாகக் கூறினான். "இதென்ன பெரிய வேலை.. காபிரைடர் வேலை.. பேசாமல் பாங்க் வேலைக்கோ, கவர்மெண்ட் வேலைக்கோ அப்ளை செய்" என.

"யார் வேண்டுமானாலும் அரசாங்க வேலைக்கோ, பாங்க் வேலைக்கோ போகலாம். ஆனால் காபிரைடர் போன்ற கிரியேடிவ் வேலையை பல லட்சத்தில் ஒருவரால்தான் செய்ய முடியும். ஐ லவ் மை ஜாப். அதற்கானத் தனித்திறமை எனக்கு இருக்கு... நான் இந்த வேலையைக் கட்டாயம் விட மாட்டேன்" என்று திட்டவட்டமாக சந்தியா கூறிவிட்டாள். அவளுடைய இந்தக் கருத்து, தன்னைக் கேலி செய்வதாக அமைந்ததாக சுரேஷ் எண்ணினான். மெல்ல மெல்ல இருவர் மத்தியிலும் மன விரிசல் தோன்றத் துவங்கியது.

பிரச்னையின் உச்சமாக சந்தியாவிற்கு பதவி உயர்வுடன் பங்களூருக்கு மாற்றல் கிடைத்தது. இப்போதாவது சந்தியா வேறு வேலை தேடுவாள் என சுரேஷ் நினைக்க, "நான் பங்களூரில் வேலை ஏற்கிறேன். வார இறுதி நாட்களில் சந்திக்கலாம். ஆறு மாதத்தில் நம்மில் ஒருவர் இடம் மாற்றிக் கொள்ளலாம்" என சந்தியா பிரச்னையை சாதாரணமாக்கி விட சுரேஷ் திகைத்து விட்டான். "நான் தனியாகக் குடும்பம் நடத்தவா" என்று சுரேஷ் குமுற.... "அராபிய நாடுகளிலெல்லாம் நம்ம ஆண்கள் எத்தனை வருஷம் தனியே குடும்பம் நடத்துகிறார்கள். பெங்களூர் என்ன ரொம்ப தூரமா. வாரா வாரம் சந்திக்கலாம்" என்று சந்தியா புதுப் பதவியை ஆவலுடன் எதிர்நோக்கிக் கிளம்பி விட்டாள். இந்தப் பிரிவு அவர்கள் வாழ்க்கையின் கடைசிப் பிரிவாகவும் ஆகி விட்டது.

இந்தப் பிரிவின் அடிப்படைக் காரணம் பெண் வேலைக்குப் போவது பற்றிய இரு மாறுபட்ட கண்ணோட்டமே. சுரேஷின் சகோதரி ஒரு கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கிறாள். சுரேஷைப் பொருத்தவரை பெண்கள் வேலைக்குப் போவது என்பது சம்பாதிப்பதற்கும் பொழுதைக் கழிப்பதற்கும் மட்டுமே. "எங்கக்காவும்தான் வேலைக்குப் போறா. புருசன் குழந்தைகளுடன் சேர்ந்து கிளம்பி, அவர்கள் திரும்பு முன் தான் வீடு திரும்பி அவர்கள் தேவைகளைக் கவனித்து... குழந்தைகள் கோடை விடுமுறையின் போது அவர்களுடன் வீட்டிலிருந்து.. என் மனைவியை விட அதிகம் படித்த அக்காவே குடும்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் போது, வெறும் பி.ஏ. படித்தவள் என்ன திமிராக நடந்து கொள்கிறாள்" என்று மனைவியைப் பற்றிப் பொருமினான்.

"பெண்கள் வேலைக்குப் போகணும், சம்பாதிக்கணும். ஆனால் கணவன் எதிர்பார்க்கும் சமயத்தில், எதிர்பார்க்கும் இடத்தில் இருக்க வேண்டும். என்ன பேத்தல் இது. சுரேஷின் வேலை அதிக டிமாண்ட் இல்லாததாக இருப்பதால், என் வேலையும் அப்படியே இருக்க முடியுமா. எனக்குக் குடும்பத்தில் இருக்குமளவு ஈடுபாடு என் தொழிலிலும் இருப்பது தவறா. வாழ்க்கை என்பது பல அட்ஜெஸ்ட்மெண்ட்ஸ் செய்து தான் வெற்றி பெறுவது. சுரேஷ் இவ்வளவு குறுகிய நோக்கம் உள்ளவராக இருப்பார் என நான் எண்ணவில்லை" என்று வருந்தினாள் சந்தியா.



மாலை சிற்றுண்டிக்கு ஏதாவது புதிதாக வேண்டும் என்று குழந்தை கேட்க, கடலை மாவை பஜ்ஜி செய்வதற்கு ஏற்றார்போல் கரைத்து, ப்ரெட் சிலைஸ்களை அதில் நனைத்து தோசைக் கல்லில் போட்டு எண்ணெய் வார்த்து எடுக்க மிகவும் சுலபத்தில் ருசியான டிபன் ரெடி. நெய் ஊற்றினால் இன்னும் பிரமாதம்.

— நளினிஜெயபால்

டெலிபோனில் மணக்க மணக்கப் பேசுவதற்கு 'சென்ட்' இல்லையென்றால் ஆஃப்டர் ஷேவ் லோஷனையோ, அல்லது 'யூடிகொலோனையோ பஞ்சில் நனைத்துத் துடைத்தால் நல்ல வாசனையாக இருக்கும்.

– திருபுரா ஸ்ரீராம்



இந்தத் திருமண முறிவு ஏன் ஏற்பட்டது? ஒரே விஷயத்தைப் பற்றிய இரண்டு முற்றிலும் மாறுபட்ட கருத்து இருந்ததே காரணம். இது தவிர்த்திருக்கக்கூடிய முறிவு. திருமணத்திற்கு முன் ஜாதி, கோத்திரம், ஜாதகம், சகுனம் என்று ஏகப்பட்ட பொருத்தங்கள் பார்த்தவர்கள், சுரேஷுக்கும், சந்தியாவுக்குமான வேலைப் பொருத்தத்தைப் பற்றி யோசிக்கக் கூட இல்லை. படித்து, வேலையிலிருக்கும் மறுபாலரிடம் பேசிப் பழகும் முதிர்ச்சியான மனிதர்கள் என்ற வகையில் சுரேஷும், சந்தியாவும் திருமணம் பற்றிய தங்கள் எதிர்பார்ப்புகளை மனம் திறந்து பேசியிருப்பார்களானால் இன்று இந்த மனவலி ஏற்பட்டிருக்குமா?

சினிமாவில் காண்பது போல திருமணம் என்பது கலர் கலராக வெட்கப்படும் விஷயமல்ல. அதனால் தோன்றும் உறவும் கனவல்ல. இன்றைய நிலையில் ஆணுக்குப் பெண் நிகராகக் கல்வி அறிவு பெறுகிறாள். சுயமாகச் சிந்திக்கும் திறனுள்ளவளாகத் திகழ்கிறாள். அவளுக்கு என்று தனியான கருத்துகள் உண்டு. இருபது ஆண்டுகளுக்கு முன் எம்.ஏ.எம்.எட். படித்து ஆறு ஆண்டுகள் பள்ளி ஆசிரியையாக இருந்த என் தோழி ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை மணந்த போது, அவர் நான் உயர் பதவியிலிருக்கும் போது என் மனைவி ஒரு பள்ளி ஆசிரியையாக இருப்பதை நான் ஏற்க மாட்டேன் என்று கூற, அவள் வேலையை விடச் சம்மதித்து, ஐ.ஏ.எஸ். மனைவியாக மட்டும் இருக்க ஒத்துக் கொண்டாள். இன்று சமுதாயத்தின் கணிப்புகள் மாறிய நிலையில் இது தனிமனித உரிமையின் அபகரிப்பாகக் கருதப்படுமே தவிர பெரிய தியாகம் என எண்ணப்படாது.

இன்றைய நிலையில் திருமணம் பற்றிய தங்கள் எதிர்பார்ப்புகள், ஆசைகள் இவற்றை ஒரு ஆணும், பெண்ணும் திருமணத்திற்கு முன் பேசி முடிவெடுப்பது என்பது மிக அவசியமாகிறது. "நாலு நாள் பொது இடத்தில் பேசுவதால் ஒரு மனிதரைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியுமா எனக் கேட்கலாம். முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அடிப்படை முரண்பாடுகளை ஓரளவு அறிந்து கொள்ள முடியும். பார்ட்டி, டான்ஸ், ஆர்ட் என்று மேல்மட்ட வாழ்க்கையை விரும்பும் பெண், ஆபீஸிலிருந்து வந்ததும் புத்தகமும் கையுமாக உட்காரும் ஆணுடன் வாழ்க்கை நடத்த முடியாது என்று புரிந்து கொள்வாள். தன் மனைவி அறிவாளியாகத் தன்னுடன் பழக வேண்டும் என விரும்பும் ஆண் ஒளியும், ஒலியும் மட்டுமே விரும்பும் பெண்ணுடன் வாழ்வது மிகக் கடினம். மருத்துவரைப் போல் இன்று வாழ்விலும் ஒவ்வாமை நிறைந்து விட்ட நிலையில், இதைத் தவிர்ப்பது மிக அவசியமாகிறது.

சந்தோஷமான மணவாழ்வு அமைப்பதில் பெற்றோரின் பங்கும் மகத்தானது. தங்கள் பெண்ணோ, ஆணோ திருமணத்திற்குத் தயாரான நிலையில், அவர்கள் தங்கள் திருமணத்திலிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை விவரமாகப் பேச வேண்டும். இன்று படித்தவர்களிடையே வெறும் அழகைப் பார்த்து மயங்கும் குணம் நிறையக் குறைந்து விட்டது. அப்படி வெறும் அழகை மட்டுமே, ஒரு ஆணோ, பெண்ணோ எதிர்பார்த்திருந்தால், அவர்கள் திருமணத்திற்கு இன்னும் தயாராக வில்லை என்றே அர்த்தம். அந்தவகை கனவுகளை மட்டுமே கொண்ட பிள்ளைகளிடம், பெற்றவர்கள் திருமணம் என்பது வெறும் கற்பனையோ, கனவோ இல்லை என்று விளக்குவது மிகவும் அவசியம்.

நம் சமூகத்தில் திருமணத்தை ஒரு இயற்கையான உறவாக எண்ணாமல், அத்துடன் அனாவசியமான ஒரு கிளாமரையும் இணைத்துள்ளனர். பெண்களுக்குத் திருமணம் என்றவுடன் புடவை, நகை, தேன்நிலவு இவைதான் நினைவுக்கு வருகின்றன. ஆண்களுக்கோ திரையில் பார்த்த கதாநாயகியின் பற்றிய கற்பனை. திருமணமாகி ஓரிரண்டு மாதங்கள் கழித்து இந்த கற்பனைகள் எதுவுமே தொடராது. அப்போதுதான் சேர்ந்து வாழ்

வதிலுள்ள நிஜங்களும், பிரச்னைகளும் வெளிப்படும்.

பெற்றோர்கள், குறிப்பாகப் பெண்ணைப் பெற்றவர்கள் செய்யும் மாபெரும் தவறு ஒருமுறை ஒரு ஆணை நிராகரித்தாலோ அல்லது நல்ல சம்பளத்தில் இருப்பவனை ஏற்றுக் கொள்ளாவிடிலோ, தங்கள் பெண்ணுக்குத் திருமணமே நடக்காது என்கிற எண்ணத்தைத் தாங்களும் வளர்த்துக் கொண்டு, பெண்களிடமும் வளர்ப்பது. எம்.பி.ஏ. படித்த உயர் பதவியிலுள்ள ஒருவனை லதாவின் பெற்றோர் தேர்ந்தெடுத்திருந்தனர். சம்பிரதாயமான பெண் பார்த்தலுக்குப் பிறகு திருமண நாள் குறிக்கப்பட்டது. லதா மணக்கப் போகும் பையன் பெண்கள் விஷயத்தில் ஒழுக்கமானவனல்ல, எனும் விஷயம் லதாவுக்கு ஆபீஸில் தெரிந்தது. இவ்வளவு உயர் பதவியிலுள்ள இன்னொரு மணமகன் தனக்கு மறுமுறை கிடைப்பானோ என்ற பயத்தில் லதா யாரிடமும் இதைச் சொல்லாமல் மறைத்து விட்டாள். திருமணம் நடந்தது.

பல சமயங்களில் அவன் நடத்தை அவளுக்கு மிகவும் அவமானம் தேடித் தருவதாக இருந்தது. இரண்டே ஆண்டுகளில் வேறு வழியின்றி அவள் இந்த உறவிலிருந்து வெளியே வந்தாள். அவன் தாயார், "ஆண் பிள்ளைகள் அப்படி, இப்படித்தான் இருப்பாங்க. நீதான் ஒத்துப் போகணும்" என்ற போது லதா திடுக்கிட்டு விட்டாள். எதில் ஒத்துப் போவது? பெண்களுடன் கும்மாளம் போடுவதற்கு ஒத்துப் போக முடியுமா இல்லை தன்னை சிறுமைப்படுத்துவதைத் தொடர்ந்து பொறுத்துப் போக முடியுமா?

மணமுறிவேற்பட்ட ஆறே மாதத்தில் லதாவின் அலுவலகத்தில் பழகி நன்கு அறிந்த ஒருவர் அவளை மணந்தார். இரண்டு குழந்தைகள் பெற்று இன்று சந்தோஷமாக வாழும் லதா கூறுவாள், "ஒரு ஆணை மணக்க மறுப்பதால் தங்களுக்குத் திருமணமே ஆகாது என்று பெண்கள் நினைப்பது எவ்வளவு தவறு என்று இன்று புரிகிறது. இரண்டு ஆண்டுகள் ஒருவருடன் வாழ்ந்த எனக்கே திருமணம் நடந்துள்ளதே. சந்தேகத்துடனோ, முழுத் திருப்தியின்றியோ ஒரு ஆணையோ, பெண்ணையோ திருமணம் செய்து கொள்வது கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும்."

தனித் திறமைகள் பெற்றவர்களின் திருமணமும் மிகவும் கவனத்துடன் முடிவெடுக்க வேண்டிய ஒன்று. பாட்டிலோ, நடனத்திலோ, சிறந்து அதைத் தொழிலாகத் தொடர விரும்பும் பெண்கள், நாடகம், சமூக சேவை என்று ஆர்வமுடைய ஆண்கள் போன்றவர்கள் தம் தேவைகளைப் பற்றித் திருமணத்திற்கு முன் தெளிவான மனநிலையில் பேச வேண்டும். திருமணமானபின் "இது என்ன வீடா வேறு ஏதாவதா, பாட்டும் டான்சும்" என்றோ, "தினம் தினம் நாடக ரிகர்ஸல் என்று கூத்தடித்தால் நான் பிறந்த வீடு போகிறேன்" என்றோ பொறுமும் வாய்ப்புத் தோன்றாது.

இன்றைய சூழலில் வெறுமே அரைமணி நேரம் பெண் பார்த்து, நடையையும், அழகையும், எடுத்து வரும் சீரையும் மட்டுமே கணித்துத் திருமணம் செய்து கொள்வது மிகவும் அர்த்தமற்ற செயலாகும். வயது, மனமுதிர்ச்சியுடன் மனம் விட்டுப் பேசி ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செய்து கொள்ளும் திருமணங்கள் கட்டாயம் அவசரத் திருமணங்களை விடச் சிறப்பாகத்தான் அமைகின்றன. ஆயினும், இன்றைய தமிழ்க் குடும்பங்களில் எத்தனை பேருக்கு இத்தகைய வாய்ப்பு கிடைக்கிறது அல்லது எத்தனை பெற்றோர்கள் பரந்த மனதுடன் தங்கள் குழந்தைகள் மன உணர்வுகளை மதித்து நடக்கிறார்கள்? பெற்றோர்களின் ஈகோவினால் சீர்குலைந்து போகும் திருமணங்கள் எத்தனை. "நான் பார்த்த பெண்ணை மணக்காவிட்டால் உன் முகத்திலேயே விழிக்க மாட்டேன்" என்று மிரட்டும் பெற்றோர்கள் பலர். தங்கள் குழந்தைகளை 'எமோஷனல் பிளாக்மெயில்' செய்து தாங்கள் விரும்பும்படி அவர்களை நடக்க வைப்பவர்கள் சாதிப்பது எதனை?

இன்றைய சமுதாயம் சமூகக் கட்டுக் கோப்பிலிருந்து விடுபட்டுத் தனிமனிதத் தேவைகளின் அடிப்படையில் அமைந்து வருகிறது. இன்றையத் திருமணங்களை வாழ விடப் போவது கட்டாயமாகக் கோத்திரமோ, ஜாதகப் பொருத்தமோ அல்ல. தனிமனித உடன்பாடுகளும், பொருத்தங்களும்தான் திருமணத்தின் முக்கிய அம்சங்களாக அமைகின்றன. இருதரப்புக் குடும்பங்களும் தனிமனித உறவுக்குப் பக்கபலமாக மட்டுமே அமைய முடியும். இதைப் பெற்றவர்கள் புரிந்து கொண்டு தங்கள் குழந்தைகள் இனிமையான தாம்பத்யம் அமைத்துக் கொள்ள வழிவகுக்க வேண்டும். திருமணத்திற்குக் காத்திருக்கும் ஆண், பெண்ணுடன் அவர்கள் பெற்றோருக்கும் இன்றைய தேவை மனமுதிர்ச்சி... மற்றும் பிராக்டிகல் அப்ரோச்.

கிச்சடி செய்பவர்கள் தண்ணீரின் பங்கில் ½பங்கு தேங்காய்ப் பால் சேர்த்துச் செய்துபாருங்களேன். தனி ருசி தரும்.
- மஞ்சுளாகிருஷ்ணன்.

"நான் எத்தனையோ வைத்தியம் பார்த்துவிட்டேன்; மறைகிறது, மீண்டும் மீண்டும் வந்து விடுகிறது. இந்த சோரியாஸிஸ்க்கு மருந்தே இல்லையா?" என்று மனவேதனையால் அல்லல் பட்டு கவலையால் நோயை அதிகப்படுத்திக் கொள்ளும் சோரியாஸிஸ் நோயாளிகளுக்கு ஹோமியோபதி மருந்துகளால் முழு நிவாரணம் பெறலாம் என்கிறார் பிரபல ஹோமியோபதி மருத்துவர் டாக்டர் ஆர். ஞானசம்பந்தம்

தொற்று வியாதி அல்ல:

சோரியாஸிஸ் (Psoriasis) எனப்படும் செதில் உரிதல் நோய் தொற்று வியாதி அல்ல. நிச்சயமாக ஒருவருக்கி ...னவர்

ஏராளமான செதில்கள் உதிர்ந்து கிடப்பதைப் பார்த்துத் தளர்ந்து விடுவார்கள். குளிர்காலத்தில் அதிகமாக இருக்கும். வெயில் காலத்தில் குறையும்.

சோரியாஸிஸ் நோய் இருந்தால் அரிப்பு அதிகமாக இருக்காது. வெண்மையாக இருப்பதை மறைக்க எண்ணெய் பூசிக் கொள்வார்கள். அல்லது சுரண்டி எடுப்பார்கள். சுரண்டப்பட்ட பகுதி இரத்த சிகப்பாக தடிப்பு போல காணப்படும். அங்கங்கே குண்டூசியில் குத்தியது போல இரத்தம் மொட்டு மொட்டாக தெரியும். இந்த ரத்தக் கசிவு இடங்களில் நோய்க் கிருமிகள் தாக்கி சீழ்கட்டிகள் சிறுசிறு அளவில் தோன்றுவதும் உண்டு.

பொடுகைப் போல :

தலையில் தோன்றும் செதில் உரிதல் நோய் பொடுகைப் போல தோன்றும்.



யாஸிஸ்

பொடுகு
எண்ணெய்ப் பசை

கொண்டே இருக்கும். இந்த இயக்கம் சீராக இருக்கும். சோரியாஸிஸ் நோயாளிகளுக்கு பாதிக்கப்பட்ட இடங்களில் வெளி அடுக்கு செல்கள் அதிகமாக பிரிவதால் செதில் உரிதல் ஏற்படுகிறது. பொதுவாக ஒரு செல் அடுக்கு உண்டாக 21 நாட்கள் பிடிக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். செதில் உரிதல் நோயாளிகளுக்கு நான்கு நாட்களில் பாதிக்கப்பட்ட இடங்களில் செல் பிரிந்து உதிரும்.

அதிகமாக செல்கள் பிரிவதால் இரத்த ஓட்டம் அதிகமாகி சிகப்பாக புண்போல காட்சி அளிக்கிறது.



• சிகிச்சைக்கு முன்...

மூட்டு வலி :

சோரியாஸிஸ் நோயாளிகள் பலருக்கு மூட்டுவலி (Psoriatic Arthritis) இருக்கும். இது வளர்சிதை மாற்றங்களின் சீரின்மையால் ஏற்படுகிறது.

உணவுக் கட்டுப்பாடு :

பொதுவாக எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும். உணவில் மீன், முட்டை, மாமிசம், பால், தயிர் போன்றவைகளையும் நீக்க வேண்டும். சிலருக்கு பட்டாணி, கண்டல், பூசணி, கத்தரிக்காய் போன்றவைகளை சாப்பிட்டதால் அதிகமாகி விட்டது என்று கூட கேள்விப்பட்டிருக்கிறேன்" என்கிறார் இவர்.

சிகிச்சை :

தோல் வியாதிக்கு சிகிச்சை என்றதும் நம் நினைவுக்கு வருவது களிம்பு போட வேண்டும். எண்ணெய் தடவ வேண்டும். உள் சாப்பிடும் மருந்துகளால் பலன் இருக்காது என்பார்கள்.

ஹோமியோபதி மருத்துவம் சரும நோய் சிகிச்சையில் வித்தியாசமானது. உள்ளே சாப்பிடும் மருந்துகளால் மட்டுமே முழுமையான நிவாரணம். களிம்பு போட்டு குணம் பெற்றால் (Supression) மீண்டும் மீண்டும் வரும்.

அடிப்படைக் காரணமான நச்சு (Psora) உடலில் இருக்கிறது. அதை முறையாக



...சிகிச்சைக்குப் பின்

நீக்க வேண்டும். இல்லையெனில் மீண்டும் வந்து விடுகிறது. ஒரு சிலர் சில நாட்கள் சிகிச்சை பெற்றதும், பரவாயில்லை என்று நிறுத்தி விடக் கூடாது. ஒருமுறை நச்சு வெளியேறினாலும் மீண்டும் வராமல் இருக்க சில நாட்கள் தொடர வேண்டும். நோயாளிகளுக்கு முழுநிவாரணம் சிகிச்சை இல்லை என்ற ஆதங்கத்தை ஹோமியோபதி மருந்துகளால் போக்கலாம்.

டாக்டர் ஆர். ஞானசம்பந்தம் ஈரோடு அரசு மருத்துவமனை எதிரில் கிளினிக் மற்றும் ஏ.கே.பி. ஹோமியோபதி ஆராய்ச்சி மையம் நடத்தி வருகிறார். போன் (0424) 219314. சென்னை வாயிட்ஸ் ரோடு, இராயப்பேட்டை சிவா மருத்துவமனைக்கு வெள்ளி, சனி தோறும் வந்து சிகிச்சை அளிக்கிறார்.

T.S.S. NIDHI LTD.

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Off. : 230, R.K. Mutt Road, Mylapore, Madras - 600 004 Ph : 4942303/4943365

BRANCHES

THIRUVANMIYUR : 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras - 41. Ph: 410059.
TONDIARPET : 667, T.H. Road, Madras - 81. Ph : 5950472. **SAIDAPET :** 11, Jones Road, Madras - 15. Ph : 4851468.

FIXED DEPOSIT SCHEME

Period (Months)	12	24	36	60
Rate of Int. P.A.	17%	18%	19%	20%

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs. 1,000/-

Period (Months)	12	24	36	45	67
Maturity Value Rs.	1190	1425	1760	2025	3025

SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit
Rs. 10,000/-

Period
12 Months

20% p.a
MONTHLY INTEREST

21% p.a.
ANNUAL INTEREST

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

Minimum Deposit Rs. 10,000/-

Period (Months)	Maturity Value
120	Rs. 66,000
180	Rs. 1,82,000

RECURRING DEPOSIT SCHEME

Monthly Deposit Rs. 100/-

Period in Months	12	24	36	48	60	72
Maturity Value Rs.	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

BUSINESS HOURS

	Week Days		Sunday	Holiday
Regd. Office Mylapore	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Friday
Branch Offices	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Tuesday

HIGH LIGHTS

- Recognised as a NIDHI COMPANY by Central Government of India.
- Company is in 23rd year of service.
- Transaction with members only. (Rupees two only for membership)
- Premature repayment facility as per terms and conditions.
- Monthly interest Warrants would be despatched in advance for the year of Deposit.

P.S. SAMBASIVAM - Secretary   G. KUMARAVELU - Vice-President   K.R.V. RAMANI - President

ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்

முப்பத்து மூன்று வருடங்களாகக் கம்ப்யூட்டர் ப்ரோக்ராம் போட்டது போலச் சிறு பிசிறு இல்லாமல் நடக்கும் வேலைகள், முதல் தடவையாக இன்று தடம் மாறிப் போயிருக்கின்றன. காலை நான்கு மணிக்கு எழுந்து, பல் துலக்கி, முகம் அலம்பி, விளக் கேற்றும் பொழுது அவர் எழுந்து விடுவார். காப்பி குடித்து அவர் தாமிரபரணிக்குக் குளிக்கச் சென்றதும், வாசல் தெளித்துக் கோலம் போட்டுப் பின், பின் வாசல் துளசி மேடை அலம்பிக் கோலம் போடும் பொழுது திரும்பி வருவார். மஞ்சள், ஸ்நானப்பொடி, குடம், சவுக்காரம் எடுத்துக் கொண்டு மங்களம் தாமிரபரணிக்குக் கிளம்புவாள். குளித்து, ஈரப்புடவையுடன் புதுக் கிராமம் பிள்ளையார் கோவில் வாசலில், குடத்துத் தண்ணீர் கொஞ்சம் தெளித்துக் கோலம் போட்டுப் பிறகு பழைய கிராமம் பிள்ளையார் கோவில் வாசலில் மீறித் தண்ணீரைத் தெளித்து கோலம் போட்டு வீட்டில் நுழையும் பொழுது 'கம்'மென்று ஊதுபத்தி வாசனை வர வேற்கும். சஹஸ்ர நாமம் கணீரென்று ஒலித்துக் கொண்டு இருக்கும். இனிமையான இல்லறம். சிக்கலில் லாத வடம் போல. மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு சிறு முடிச்சு. நெஞ்சு வலி என்றார். மிக மிக மைல்ட் ஹார்ட் அட்டாக். பயமே இல்லை. ஜாக்கிரதையாக இருந்தால் போதும் என்று சொல்லி விட்டார் மூன்றாம் வீட்டு டாக்டர்.

மங்களம் அவரது உணவு விஷயத்தில் படு கவனமாகத்தான் இருக்கிறாள். மலை யாளத்துக் காரரையும், திருநெல்வேலிக் காரரையும் தேங்காய், தேங்காயெண்ணெய் சாப்பிடாதே என்று சொன்னால் உயிரையே விட்டு விட மாட்டார்களா? ஆனாலும் இவர் பொறுமைசாலிதான். எத்தனையோ மாற்றிக் கொண்டு விட்டார். நேற்று யாரோ தெரிந்தவர்கள் சண்டிகர் போகிறேன் என்று சொன்னார்கள். புழுங்கல் சம்பா அரிசியை யும் தேங்காயையும் சம அளவிலே அரைத்து, மண்டை மண்டையாக உருட்டி, மணக்க மணக்கத் தேங்காயெண்ணெயிலே பொரித் துக் கொடுத்து அனுப்பித்தாள் மங்களம், நன் மகன் ரவிக்கு. பாபப்பட்டு நாலைந்து சீடைகளைத் தன் கணவருக்கும் கொடுத்து விட்டாள். அதுதானோ என்னமோ. இரவு நெஞ்சு வலிக்கிறது, மூச்சு விட சிரமமாக இருக்கிறது என்று சொன்னார்.

மங்களம் பதறிப் போய் விட்டாள். கக்குக்கு மிஞ்சின மருந்துண்டோ. சுப்பிர மணிய ஸ்வாமிக்கு மேலே தெய்வம் உண்டோ? திருச் செந்தூர் பன்ர விபூதியை அவர் நெற்றியிலே இட்டு, சற்று சுக்கு வெந்நீர் கொடுத்து விட்டு, டாக்டரிடம் ஓடினாள்.

டாக்டர் பரம ஆப்தர். உடனே விரைந்து வந்து பார்த்தார். "ஒன்றும் பயப்படும்படி யாகத் தெரியவில்லை. தூங்குவதற்கு மருந்து கொடுக்கிறேன். காலையில் ஹெக்ரௌண்ட் டாக்டரிடம் காண்பித்து விடலாம்" என்று சொல்லி மருந்து கொடுத்துச் சென்றார்.

அதுதான், வழக்கத்துக்கு மாறாக இன்னமும் தூங்கிக் கொண்டு இருக்கிறார். மங்களத்திற்குக் கலக்கமாக இருந்தது. பையன்கள் இரண்டு பேரும் வடக்கே இருக்கின்றார்கள். "எங்களி டம் வந்து விடுங்கள்," என்று கூப்பிடுகிறார்கள். இவருக்குத் தான் பிடிவாதம். "நமது உடம்பிலே பலம் இருக்கும் வரை யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது" என்று அடிக்கடி சொல்வார். நம் குழந்தைகளையே யாரோ என்று நினைப்பதா?

மங்களத்திற்குப் புரியவில்லை. இத்தனை வருட இல்லறத்திற்குப் பின்பும் கணவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று சொன்னால் யாராவது சிரிப்பார்கள். தங்கள் தாம்பத்யம் அன்யோன்யமானது தானா?

'சின்னச் சின்ன ஆசை' பாட்டைக் கேட்டால் மங்களத்துக்குச் சிரிப்பாக வரும். அவளுக்கும் நிறைய சின்னச் சின்ன ஆசைகள் உண்டு. "உனக்கு எது கிட்டுமோ, அதற்கு மட்டும் ஆசைப்பட வேண்டும்" என்று அறிவுரை சொல்லுவார். எட்டாததற் கும், கிட்டாததற்கும் ஏங்குவது தான் வாழ்க் கையின் சுவாரஸ்யம். தங்கத்தை 'பொம்'மென்று அமுக்கி வைத்தால் என்ன அழகு?

அகிலா கிருஷ்ணன்

சின்னச் சின்ன நகாசு வேலைகள் தான் அதை அழகு படுத்தும். இவரிடம் எதைக் கேட்டாலும் சலனமற்று இருப்பார். ஹரித்துவார், ரிஷிகேசம், பத்ரி, கேதார் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருந்தாள். இவர் எங்கே இனி கூட்டிப் போகப் போகிறார் என்று நினைத்து ஓய்ந்து விட்ட பொழுது ரிடையர் ஆனார். பிஎப் பணத்தில் சௌகரியமாகக் கூட்டிப் போய் வந்தார். குழந்தைகள் வசதியாக இருக்கிறார்கள். கேட்கக் கூடாது. கொள்கை. வெங்காயம்!

உறங்கிக் கொண்டிருந்தவர் லேசாகப் புரண்டு படுத்தார். இவரில்லாமல் தன்னால் ஒரு நொடி இருக்க முடியுமா? நினைப்பே, அக்னியாக அடி வயிற்றிலிருந்து உருண்டு வந்து தொண்டையை அடைத்தது. உறவின் இறுக்கம் பிரமிப்பாக இருந்தது. பிரம்ம முடிச்சை விட அழுத்தமானதா இந்த மூன்று முடிச்சு? இந்தக் காலத்துக் குழந்தைகள், எப்படி எடுத்தேன் வைத்தேன் என்று



'டைவர்ஸ்' எளிதாகச் செய்து கொள்கிறார்கள்? "சோமசுந்தரி மாங்கல்யப் பிச்சை கொடும்மா," என்று உரக்கவே வேண்டிக் கொண்டாள்.

பிரார்த்தனை செய்யும் பொழுதே, பழைய நினைவு ஒன்று வந்து நெஞ்சில் திகிலை எழுப்பியது. மூன்று வருடங்களுக்கு முன்பு இவருக்கு ஹார்ட் அட்டாக் வந்த பொழுது, கோடி வீட்டு அம்மணி மாமி சொன்னாள், "மங்களம், லக்ஷம் மஞ்சள் கிழங்குகள் சுமங்கலிகளுக்குக் கொடுப்பேன் என்று வேண்டிக் கொள். உன் சௌபாக்கியத்திற்கு ஒரு குறைவும் வராது" என்றாள். 'எத்தைத் தின்னால் பித்தம் தீருமோ' என்ற நிலை. மங்களம் உடனே 'லக்ஷம்மஞ்சள்' பிரார்த்தனை செய்து கொண்டு விட்டாள்.

இவருக்கு உடம்பெல்லாம் சரியான பிறகு ஒரு நாள் சாவகாசமாகத் தன் பிரார்த்தனையைப் பற்றிச் சொன்னாள். தனக்கே உரிய நிதானத்துடன் கொஞ்ச நேரம் யோசித்து விட்டுச் சாவகாசமாகச் சொன்னார்.

"இன்றைய விலையில் ஒரு லக்ஷம் மஞ்சள் சுமார் 12 ஆயிரம் ரூபாய் ஆகும். அவ்வளவு செலவு செய்ய நமக்கு முடியாது. இரண்டாவது, இந்தக் காலப் பெண்கள் யாரும் மஞ்சள் பூசிக் குளிப்பதாகத் தெரியவில்லை. ஆபத்தான காலங்களில் நாம் அவசரமாகச் செய்யும் காரியங்களுக்கு எந்தவித அர்த்தமும் இல்லை. அம்பாள் நம்மைப் புரிந்து கொள்வாள். நீ நன்றாகப் பிரார்த்தனை செய்து, பின் அபராத காணிக்கை போட்டு விடு. பரம ஏழையான ஒரு பெண்ணிற்கு மஞ்சள் புடவை வேண்டுமானால் வாங்கிக் கொடு."

மங்களம் ஆடிப் போய் விட்டாள். "என்ன இப்படிச் சொல்கிறீர்கள். உங்களால் முடியவில்லை என்றால் ரவி, சோமுவிடம் கேட்டுச் செய்கிறேனே!" என்று அழுது பார்த்தாள்.

அவர் பிடிவாதமாக மறுத்து விட்டார். அவரை மீறி எதையும் செய்து பழக்கமில்லை. 'ஒருவேளை பிரார்த்தனையை முடிக்காததால் தெய்வ குற்றமாக இப்பொழுது உடம்புக்கு வந்திருக்கின்றதோ?

வாசலில் நிழலாடியது. வள்ளிக் குட்டி வேலைக்கு வந்து இருக்கிறாள். "ஏம் மாமி இப்படி உட்கார்ந்திருக்கியேள்? மாமாவிற்கு என்ன உடம்பு. தூங்கறாரே," என்று பதறிப் போய் விட்டாள்.

"ஒன்றுமில்லையடி குட்டி. மாமாவுக்கு சித்த மேலுக்கு முடியலை. நீ பாத்துக்கறையா? நான் ஸ்நாநம் செய்து விட்டுப் பிள்ளையாரை நமஸ்காரம் செய்து விட்டு வந்து விடுகிறேன்."


மஞ்சள் கிழங்கை எடுத்துக் கொண்டு குளிக்கக் கிளம்பினாள். துறையில் இன்னும் இரண்டு மூன்று பெண்கள் குளித்துக் கொண்டு இருந்தனர். மங்களம் பரபரப்போடு முங்கி எழுந்தாள். பக்கத்தில் யாரோ ஒரு இளம் பெண். பார்த்த நினைவும் வருகிறது. யாரென்று விளங்கவும் இல்லை. அந்தப் பெண்ணே பேசினாள்.

"மாமி நீங்க குளிக்க வருவேள் என்று தான் காத்திண்டு இருந்தேன்."

"யாருன்னு தெரியலையே."

"நான் ஹெட்மாஸ்டரோட அக்கா பெண். இரண்டு வருஷம் முன்னால் வந்திருந்தேன்." நின்று பேச நேரமில்லை. மனமும் இல்லை. "சந்தோஷம் அம்மா. வீட்டுக்கு வந்து விட்டுப் போ என்ன?" மங்களம் புறப்பட்டாள் பரபரப்புடன்.

அந்தப் பெண் 'சட்'டென்று கைகளைப் பிடித்துக் கொண்டு விட்டாள். "மாமி, என் கணவருக்கு ஒரு கட்டி வந்திருந்தது. ஆபரேஷன் செய்து, பயாப்சி செய்து பார்க்கக் கொடுத்து விட்டு, திருச் செந்தூர் தரிசனம் செய்து வர இங்கே வந்தோம். சஞ்சலமாகக் குளிக்க வந்தேன். நீங்கள் குளித்துக் கொண்டு இருந்தீர்கள். 'ஆற்றங்கரையில் மஞ்சள் இட்டுக் கொள்ளாமல் குளிக்கக் கூடாது




ரயிலில் பயணிக்கும் போது சாதாரண 'ஹவாய்' செருப்புகளையே பயன்படுத்துவது நல்லது. அங்கிருக்கும் டாய்லெட்களுக்கு அணிந்து சென்று விட்டு வந்து வீட்டுக்கு வந்ததும் சுத்தமாக கழுவிக் கொள்ளலாம். அதே லெதர் செருப்புகளை அவ்வாறு செய்ய முடியாது. மேலும் செருப்புகளை கீழே விடும்போது (அப்பர் பெர்த் கிடைக்கும்போது) தொலைந்தால் போனால் போகிறது என்று ஹவாயை விட மனது வரும்.

– அனுபல்லவி

கோஸ் பிடித்த குழந்தைகளுக்கு, கோஸ் பச்சை பட்டாணி கறியுடன் சாதம் கலந்து வையுங்கள். கோஸும் சாதமும் சுவையே தனி.

-மஹிமா



என்று சொல்லுவார்களே. அபசகுனமாக இருக்கிறதே' என்று அதிர்ந்து நின்றேன். நீங்கள் அகஸ்மாத்தாக, என்னிடம் ஒரு மஞ்சள் கிழங்கைக் கொடுத்து, 'இட்டுக்கோ குழந்தே' என்று சொன்னீர்கள். நீங்கள் கொடுத்த ஒரு மஞ்சள் கிழங்கு, ஒரு லக்ஷம் மஞ்சள் போல எனக்குத் தோன்றியது. ஊருக்குப் போனபின், இவருடைய பயாப்சி ரிஸல்ட் கான்சர் இல்லை என்று வந்து விட்டது. உங்களை அடிக்கடி நினைத்துக் கொள்வேன்'' அவள் குரல் தழுதழுத்தது.

மங்களம் திக் பிரமித்து நின்றாள். 'ஒரு மஞ்சள், ஒரு லட்சம் மஞ்சள் போல' என்ற வார்த்தைகள் காதிலே மணியடிப்பது போல ஒலித்தன.

''குழந்தே எல்லாம் அம்பாள் செயல். அவளுடைய விருப்பத்தை அவளே அழகாகச் செய்து கொண்டு விடுவாள். வீட்டிற்கு வந்து வெற்றிலை பாக்கு வாங்கிப் போ'' என்று பரபரப்புடன் கிளம்பினாள்.

வீட்டு வாசலில் கார் ஒன்று நின்றிருந்தது. மங்களத்திற்குப் படபடப்பு ஏறியது. இவருக்கு உடம்பு ஏதேனும் அதிகமாகி இருக்குமோ?'

ஹைகிரெண்ட் டாக்டர் தான் காரில் வந்திருந்தார். உள்ளூர் டாக்டரும் வந்திருந்தார். மூன்று பேரும் சிரித்துப் பேசியபடியே காப்பி குடித்துக் கொண்டிருந்தனர்.

''வாருங்கோ மாமி. நேற்று ராத்திரி டாக்டர் ஃபோன் செய்தார். இன்று ஞாயிற்றுக் கிழமை. திருச்செந்தூர் போகலாம். அப்படியே, வழியில் மாமாவையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று காலையிலேயே புறப்பட்டு வந்தேன். மாமாவிற்கு எந்தக் கோளாறுமே இல்லை. வெறும் 'காஸ்'தான். நேற்று ஏதோ ஹெவியாகச் சாப்பிடக் கொடுத்து இருக்கிறீர்கள். சதாபிஷேகத்திற்கு எனக்கு நாலு விரற்கடை ஜரிகை போட்டு வேஷ்டி வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன்'' என்று கலகலவென்று சிரித்தார்.

மனசு நிம்மதியாயிற்று. எல்லோரும் போனபின் சாவகாசமாகக் குளித்துப் பூஜையை முடித்து ஈஸிச் சேரில் நிதானமாக அமர்ந்தார்.

''பைத்தியமே, பதறிப் போய் விட்டாயா?''

வெட்கமாக இருந்தது. தனக்கேற்பட்ட குழப்பங்களையும் சொன்னாள். ஆற்றங்கரையில் நடந்ததையும் சொன்னாள்.

''லக்ஷம் மஞ்சள் கொடுக்கலையே தெய்வ குற்றமோ என்று பயந்து கொண்டிருந்தேன். அவள், ஒரு மஞ்சள் ஒரு லக்ஷம் மஞ்சள் போல் என்று சொன்னதும் உடம்பெல்லாம் சிலிர்த்து விட்டது.'' மங்களத்தின் குரல் தழுதழுத்தது.

சற்று நேரம் மௌனமாக இருந்தார். ''மங்களம் உனக்கும் வயது ஆகி விட்டது. அஞ்ஞானத்தை விட்டு விட்டு விவேகமாகச் சிந்திக்கும் பக்குவம் வரணும். கசந்து முகர்ந்து எந்தக் காரியமும் செய்து பலனே இல்லை. அடிக்கடி, 'பிள்ளைகள் நிறைய சம்பாதிக்கிறார்களே' என்று சொல்கிறாய். நீ படி அரிசி ஐம்பது பைசாவிற்கு வாங்கினாய். இன்று பதினாறு ரூபாய்க்கு வாங்குகிறார்கள். ரவிக்கு பத்தாவது படிக்கும் பொழுது ஃபீஸ் இரண்டரை ரூபாய். இன்றைக்கு அவன் குழந்தைக்கு எல்.கே.ஜி.க்கு ஃபீஸ் இருநூற்று ஐம்பது ரூபாய்! முடிந்த வரை நாம் தொந்தரவு செய்யக் கூடாது என்ற ஞானம் வேண்டும்.


கோடி வீட்டு சமையல் ராமுவின் அம்மா பரம சாயிபக்தை. மாமிக்கு நடக்கவும் முடியாது. ஆர்த்ரைடீஸ், வயது வேறு. இதில் சீரடி போக வேண்டும் என்று புலம்பிக் கொண்டே இருப்பாள். 'பெரியாத்துப் பாப்பா அவ அம்மாவை ப்ளேனில் வைத்து சீரடி கொண்டு போய்க் காண்பித்திருக்கிறாள். இந்த ராமுவுக்கு என்ன கேடு. பெரியவாளை சம்ரக்ஷிக்கிறதே இல்லை. அதுதான் சீரழிய றான்' என்று புலம்பிக் கொண்டே இருப்பாள். பெரியாத்துப் பாப்பாவின் சம்பளத்தில் நூறில் ஒரு மடங்கு கூட ராமுவிற்கு இல்லை. நித்யகர் பிணி மனைவி. உண்ண உணவும் இல்லாமல், உடுக்க உடையும் இல்லாமல் அவலமாய்க் குழந்தைகள்.''

''அந்த மாமிக்கு பாபா பக்தி அவ்வளவு.


ஓர் இல்லத்து புரட்சித்தலைவியின் கருத்து.











பாக்கெஜ் செய்தது போல் தூய்மையானது
தனியே அளந்து வாங்குவது போல் விலை குறைவானது

	பாக்கெட் செய்த எண்ணெயின் விலை (1 லிட்டருக்கு)	வென்டீ நிலையத்தில் (1 லிட்டருக்கு)	உங்கள் சேமிப்பு
சூப்பர் ரிஃபைண்ட் சூரியகாந்தி எண்ணெய்	51.00		
அனுராக் சூப்பர் ரிஃபைண்ட் சூரியகாந்தி எண்ணெய்		43.00	8.00
டபிள் ஃபில்டர்டு கடலை எண்ணெய்	48.00		
டெய்லி டபிள் ஃபில்டர்டு கடலை எண்ணெய்		42.00	6.00
சூப்பர் ரிஃபைண்ட் கடலை எண்ணெய்	54.00		
அபூர்வா சூப்பர் ரிஃபைண்ட் கடலை எண்ணெய்		46.00	8.00
ரிஃபைண்ட் வெஜ்டபிள் எண்ணெய்	45.00		
அனுகூல் ரிஃபைண்ட் வெஜ்டபிள் எண்ணெய்		37.00	8.00

அனுராக்

அபூர்வா
சூப்பர் ரிஃபைண்ட் கடலை எண்ணெய்

அனுகூல்

டெய்லி



நமது திருமண பத்திரிக்கைகளை தமிழில் அடிப்பதுடன் அதன் முதல் பக்கத்தில் ஆங்கிலத்திலும் அச்சடிப்பது ஒரு மரபாக இருக்கிறது. அப்படி அச்சடிக்கும் போது மணமகனின் பெயருக்கு முன் சிரஞ்சீவி என்றும், சௌபாக்கியவதி என்று மணமகளுக்கு முன்பும் குறிப்பிடுகிறார்கள். இதையே ஆங்கிலத்தில் குறிப்பிடும்போது Chi Kannan என்றும் Sow Kamala என்றும் எழுதுகிறார்கள். Chi என்ற வார்த்தை ஆங்கிலத்தில் இல்லை. ஆனால் Sow என்ற வார்த்தை ஆங்கிலத்தில் உள்ளது. இதன் பொருள் வெண்பன்றி என்பதாகும். எனவே தேவையில்லாமல் அறியாமல் ஒரு பெண்ணை வெண் பன்றியாக்கலாமா?

- ஆர். மங்கையர்க்கரசி

ஷீரடிபார்க்கணும்னு அவ்வளவு ஆசை. இது தப்பா."

"அசடே. 'ஈசனோடாயினும் ஆசை அறுமின்' என்று திரு மூலர் பாடுகிறார் தெரியுமா? ராம தாஸர் திருடி நகைகள் செய்து போட்டு ஜெயிலில் இருந்த பொழுது, ராமலக்ஷ்மணர்கள் நவாபிடம் வந்து நகைகளைக் கொடுத்து விட்டுப் போகின்றனர். "ஐயோ, நான் திருடிப் போட்டு அழகு பார்த்தேனே, எனக்குத் தரிசனம் கொடுக்காமல் நவாபிற்குக் கொடுத்தாயே." என்று ராமதாஸர் புலம்புகிறார். "தப்பான வழியில் போயாவது எனக்குச் செய்" என்று கேட்டேனா! என்ற ஆதங்கம் ஸ்ரீ ராமபிரானுக்கே இருந்திருக்கிறது."

மங்களத்திற்குப் புரிந்த மாதிரியும் இருந்தது. புரியாத மாதிரியும் இருந்தது.

"உண்மையான பக்தியும் சிரத்தையும் இருந்தால் பொறுமையுடன் காத்திருந்தால் இறைவன் எதையுமே நிறைவேற்றித் தருவான். பத்து வருடங்களுக்கு நான் லீவுலே அஸ்ஸாம் போய் வந்தேனே, உனக்கு ஞாபகம் இருக்கா. அதுக்குப் பின்னாடி ஒரு சம்பவம் இருக்கு. அப்ப சொல்லலை. இப்ப உனக்காக அதசொல்றேன். எனக்குக், காமரூபமான காமேஸ்வர பீடத்தில் வீற்றிருக்கும் காமேஸ்வரியை அஸ்ஸாம் போய்ப் பார்த்து வர வேண்டும் என்று ரொம்ப ஆசையாக இருந்தது. ஆதி சங்கரர் ஸ்தாபித்த பீடமது. ஆனால் என்னிடம் ஏது வசதி? தினமும் அம்பாளை மனமுருக வேண்டிக் கொள்வேன்."

"ஒரு நாள் ரோடில் நடந்து போய்க் கொண்டிருந்த பொழுது காலில் கூர்மையான கல் குத்தி விட்டது. ரத்தமாகக் கொட்டி விட்டது. ராமகிருஷ்ண மடம் விவேகானந்த கேந்திரத்தின் வாசல் அது. உள்ளே கூட்டிப் போய் கட்டுப் போட்டுக் காப்பி தந்தார்கள். பேசிக் கொண்டிருந்தோம். நான் வாத்தியார். சம்மர் விடுமுறை என்று தெரிந்து கொண்டார்கள். எனக்கு ஆங்கிலம், ஹிந்தி, பெங்காலி மொழிகளில் நல்ல பரிச்சயம் உண்டு என்றதும் இரண்டு மாத விடுமுறையில் அஸ்ஸாம் விவேகானந்த கேந்திரத்தில் சேவை செய்ய முடியுமா என்று கேட்டார்கள். மெய்சிலிர்த்துப் போனேன். அவர்கள் செலவிலேயே மனம் குளிர அம்பாளை தரிசித்து வந்தேன். கடவுளின் கருணை எல்லையில்லாதது. நமக்குக் கிட்ட வேண்டும் என்று விதித்திருந்தால் கிட்டியே தீரும் என்ற விவேகம் வேண்டும்."

மங்களம் பெருமையோடு கணவரைப் பார்த்தாள். 'இவரோடு வாழ என்ன தவம் செய்தேன்.'

மெலிதான குரலில் பாடினார்,

'ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்,
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்.
ஆசைப்படப்பட ஆய் வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே!'

மிளகு சீரகத்தை லேசாக நெய்யில் வறுத்துப் பொடி செய்து, சிறிய வெங்காயம் 4,5 வதக்கி உப்புப் போட்டு கலந்து சாதம் பண்ணுங்கள். சுவையான 'ஜீரா ரைஸ்' ரெடி.

—மஹிமா



வழியா இல்லை பூமியில்?




'வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்?' என்ற வரிகள் கூட ஊக்கமளிக்க முடியாதபடி சோர்ந்து போயிருக்கிறீர்களா?

1914-ம் ஆண்டு டிசம்பர் மாதத்து ஒரு நாளில் நியூ ஜெர்ஸியில் இருந்த தன் ஆய்வுக்கூடம் முழுக்க தீப்பிடித்து சாம்பலான போது 67 வயது எடிஸன் என்ன சொன்னார் தெரியுமா? "அழிவிலும் நமக்கு மதிப்பிற்குரிய ஓர் உண்மை புலனாகிறது பார்த்தீர்களா? நமது இத்தனை ஆண்டுகால தவறுகளும் எரிந்து போய் விட்டன. எல்லாவற்றையும் புதிதாக துவக்கலாம்" என்றாராம். ஒரு மில்லியன் டாலர் மதிப்புள்ள கருவிகள், கடந்த ஆண்டுகளில் செய்த பரிசோதனைகளின் பதிவுகள் எரிந்தும் இப்படி கூறினார் என்றால் அது வாழ்க்கை பற்றி நாம் எத்தகைய கண்ணோட்டத்தில் செயல்பட வேண்டும் என நல்ல பாடம் ஒன்றை கற்பிக்கவில்லையா? கீழ்க்கண்ட யுக்திகள் உங்களுக்கு உதவுகிறதா என்று பாருங்கள்.

எந்த வேலையை செய்யத் துவங்கும் முன்பும், அது ஒரு கடினமான தேர்வாகவோ இல்லை அடுத்த நாளின் பொது நிகழ்ச்சியின் மேடைப் பேச்சாகவோ இருக்கட்டுமே. அதற்காக நீங்கள் முதலில் தயார் செய்ய வேண்டியது உங்கள் மனதைத்தான். நிகழ்ச்சியை நீங்கள் வெற்றிகரமாக முடித்து சாதித்தது போல ஒரு திரைப்படம் போல உங்கள் மனத்தில் நீங்கள் ஓட்டி பார்த்துக் கொள்ளுங்கள். அதன் பின் உங்கள் உழைப்பு உங்களுக்கு நிச்சயம் உயர்வையே தரும் என்பது திண்ணம்.

ஒரு பத்திரிகை ஆசிரியரை சந்திக்க ஒரு கட்டுரையுடன் இருவர்



ஃப்ளாட்டில் வசிக்கும் நாங்கள் காரை (வெள்ளை கலர்) கீழே நிறுத்தி வைப்போம். கீழ் வீட்டுக் குழந்தைகள் பால் பாயிண்ட் பேனாவால் நன்றாகக் கிறுக்கி வைத்து விட்டார்கள். காரின் மேல் சோப் போட்டு எத்தனை துடைத்தாலும் போகவில்லை. துணியில் துளி பேஸ்ட் எடுத்துப் பேனா வரிகள் விழுந்த இடத்தை என் பிள்ளை துடைக்க கறை போன இடம் தெரியவில்லை.

— திருபுரா ஸ்ரீராம்

சென்றார்களாம். கட்டுரையை படித்த ஆசிரியர் பிரசுரத்திற்கு ஏற்றதில்லை என கூறிவிடவே சோர்ந்து போன நண்பர் வேறு வேலை தேட முடிவு செய்தாராம். அவருடன் சென்ற மற்றொரு நண்பரோ, "இதுதான் நமக்கு சரியான சவால். மறுக்க முடியாதபடி இன்னொரு கட்டுரை தயாரிப்போம் வா" என உற்சாகமூட்டி உழைக்க இன்று இவர்கள் எழுத்துக்களை நான், நீ, என வாங்குகின்றன பத்திரிகைகள்.

'முடியும்' என்று நினைப்பதுதான் வெற்றிக்கு முதற்படி. "இப்படி ஒரு முதலாளியின் கீழ் முன்னேறவே முடியாது". ("இப்படி ஒரு கணவர்... அல்லது இவ்வளவு பணப் பிரச்னைகளுக்கு நடுவே" .....) என்று ஒரு போதும் முடிவு செய்யாதீர்கள்.

"பிரெஞ்சுப் புரட்சி"யை எழுதிய தாமஸ் கார்லைல் கதை தெரியுமா உங்களுக்கு? அவரது ஒரே கையெழுத்துப் பிரதியை வேலைக்காரி அடுப்பெரிக்க உபயோகித்த பின் இடிந்து விடவில்லை அவர். வார்த்தைக்கு வார்த்தை வரிக்கு வரி அதை நினைவுபடுத்தி மறுபடி எழுதி பதிப்பித்ததன் பலன் இன்று அது உலக இலக்கியங்களின் வரிசையில் நின்று அவர் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கிறது.

ஒரே மாதிரியான நாட்களும் வாரங்களும் மாதங்களும் வருடங்களும் நிச்சயம் சலிப்பூட்டும் ஒன்றாகும். சவாலான வாழ்க்கையே சுவாரஸ்ய மானது. அதைச் சந்தித்துச் சாதிக்கும்

போது ஏற்படும் இன்பத்திற்கு உவமையாக எதையுமே சொல்ல முடியாது.

ஒரு பணக்கார விதவைக்கு உலகில் தன்னைவிட துன்பம் யாருக்கும் வந்ததில்லை என்ற நினைப்பு. அவருடைய மருத்துவர் ஒரு விலாசத்தைக் கொடுத்து அங்கு அவருக்கு வேலை இருக்கிறது என்றாராம். சென்ற இடத்தில் அவர் சந்தித்தது ஒரு முதிய ஏழை தம்பதியரை. அவர்களைக் கவனித்து அவர்களுக்கு வேண்டியதை செய்வதிலேயே தன் துயரையும் தன் நேரத்தையும் செலவிட்ட அவரைத் தேடி வந்து மருத்துவர் விசாரிக்க வேண்டி இருந்ததாம். அப்போது அவர் ஹெலன் கெல்லரின் வார்த்தைகளை நினைவூட்டினாராம். "வாழ்க்கை நிரம்ப சுவாரசியமானது. அதை நாம் மற்றவருக்காக வாழும் போதோ அது இரட்டிப்பு சுவாரசியமாகிறது."

மற்றொருவர் - தேர்வில் இரண்டாம் முறையும் தோற்று விட்ட அவருக்கு மூன்று முக்கிய விஷயங்கள் நினைவுக்கு வந்தனவாம். 1. நான் எப்படி தோற்றாலும் என் மேல், என் வெற்றியில் முழு



ரசப்பொடி தீர்ந்து விட்டது. மறு நாள் ரசம் செய்யும் பொழுது, சாம்பார் பொடி ஒரு ஸ்பூன் போட்டு, சிறிது மிளகு ஜீரகம் பொடி செய்து அதனுடன் போட்டு நன்றாகக் கொதிக்க விட்டேன். ரசம் சூப்பர் டேஸ்ட்!

— சித்ரா ஸ்ரீதரன்

நம்பிக்கை வைத்த மனைவி.

2. ஆரோக்கியமான உடல்.

3. கால்பந்தாட்டத்தின் தொடர்ந்த பயிற்சியில் முயற்சிக்கத் தயங்காத, தோல்வியை ஒப்புக் கொள்ளாத உள்ளம்.

இதற்குப்பின் அவர் நகரின் சிறந்த வழக்கறிஞர் ஆனார் என்று சொல்லவும் வேண்டுமா? ஆகவே சோர்வை உதறி உற்சாகத்தோடு எழுங்கள். வெற்றி நிச்சயம்!

— ஸ்ரீ சேவிகா ராணி

இருக்கிறது என்றாராம். சென்ற இடத்தில் அவர் சந்தித்தது ஒரு முதிய ஏழை தம்பதியரை. அவர்களைக் கவனித்து அவர்களுக்கு வேண்டியதை செய்வதிலேயே தன் துயரையும் தன் நேரத்தையும் செலவிட்ட அவரைத் தேடி வந்து மருத்துவர் விசாரிக்க வேண்டி இருந்ததாம். அப்போது அவர் ஹெலன் கெல்லரின் வார்த்தைகளை நினைவூட்டினாராம். "வாழ்க்கை நிரம்ப சுவாரசியமானது. அதை நாம் மற்றவருக்காக வாழும் போதோ அது இரட்டிப்பு சுவாரசியமாகிறது."

மற்றொருவர் - தேர்வில் இரண்டாம் முறையும் தோற்று விட்ட அவருக்கு மூன்று முக்கிய விஷயங்கள் நினைவுக்கு வந்தனவாம். 1. நான் எப்படி தோற்றாலும் என் மேல், என் வெற்றியில் முழு

ரசப்பொடி தீர்ந்து விட்டது. மறு நாள் ரசம் செய்யும் பொழுது, சாம்பார் பொடி ஒரு ஸ்பூன் போட்டு, சிறிது மிளகு ஜீரகம் பொடி செய்து அதனுடன் போட்டு நன்றாகக் கொதிக்க விட்டேன். ரசம் சூப்பர் டேஸ்ட்!

— சித்ரா ஸ்ரீதரன்

நம்பிக்கை வைத்த மனைவி.

2. ஆரோக்கியமான உடல்.


3. கால்பந்தாட்டத்தின் தொடர்ந்த பயிற்சியில் முயற்சிக்கத் தயங்காத, தோல்வியை ஒப்புக் கொள்ளாத உள்ளம்.

இதற்குப்பின் அவர் நகரின் சிறந்த வழக்கறிஞர் ஆனார் என்று சொல்லவும் வேண்டுமா? ஆகவே சோர்வை உதறி உற்சாகத்தோடு எழுங்கள். வெற்றி நிச்சயம்!

— ஸ்ரீ சேவிகா ராணி

பணத்திற்கு பாசமும், நேசமும் இல்லை. ஆனால் அதுவே உங்களை கவனிக்கச் செய்ய எங்களால் முடியும்.

நீங்கள் கடுமையாக உழைத்து சம்பாதித்த ஒவ்வொரு காசையும் உங்களுக்காக, உங்களது வளமான எதிர் காலத்திற்காக உழைக்க வைப்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'. 20 வருட அனுபவமும், ரூ.100 கோடிக்கு மேல் வியாபாரமும் உடைய 'ஷாஸன் குரூப்'பின் ஒரு அங்கமான 'ஷாஸன் ஃபைனான்ஸ்' ஸில் முதலீடு செய்வதன் மூலம் உங்கள் பணம் நம்பகமான, பாதுகாப்பான கைகளைச் சென்றடைகிறது. ஏனெனில் அனுபவச் செறிவும், இளமையின் துறுதுறுப்பும் உடைய எங்களால் பணத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளையும், பாதுகாப்பையும் அளிக்க முடியும். இதனை உறுதி செய்யும் வகையில், அசலைத் திருப்பிக் கொடுப்பதிலும், உரிய நேரத்தில் வட்டி வழங்குவதிலும் போதிய பாதுகாப்பிற்கு CARE நிறுவனத்தாரின் மதிப்பீடு பெற்றுள்ளது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'. சேவையிலாகட்டும், உத்திரவாதத்தை உறுதி செய்வதிலாகட்டும் தனது வாடிக்கையாளர்கள் எப்போதும் சிறந்தவற்றையே பெறுதல் வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'.



Member Shasun Group

ஷாஸன் ஃபைனான்ஸ் லிமிடெட்

நிர்வாக அலுவலகம் : 31, வெங்கடநாராயணா ரோடு, பழனி டவர்ஸ், 3வது மாடி, தி.நகர், சென்னை - 600 017. போன் : 4344849, 4348972, ஃபேக்ஸ் : 4346349.

டெபாசிட் மையம் : 2, துரைசாமி ரோடு, தி.நகர், சென்னை - 600 017. போன் : 4348930, 4348931.

கோயம்புத்தூர் : சேரன் டவர்ஸ், 80/27, முதல் மாடி, அரசு கலைக் கல்லூரி ரோடு, கோயம்புத்தூர் - 641 018. போன் : 201256.

பாண்டிச்சேரி : 2வது மாடி, நெ.80, காமராஜ் சாலை, பாண்டிச்சேரி - 605 011.

திருச்சி : 5வது மாடி, கணேஷ் காம்ப்ளெக்ஸ், நெ.6-A, லாசன்ஸ் ரோடு, கண்ட்டோன்மெண்ட், திருச்சி - 620 001.

கொச்சி : பிஸினஸ் கம்யூனிகேஷன் சென்டர், சிராமல் சேம்பர்ஸ், குரிஷீபள்ளி ரோடு, ரவிபுரம், கொச்சி -682 015. போன் : 365492, 369627.

பெங்களூர் : பிரனெவ் காம்ப்ளெக்ஸ், நெ.3, 5வது கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர் -560 003.

Insight-065

வாடிக்கையாளரின் திருப்தியே எமது முயற்சியின் குறிக்கோள்

சட்டபூர்வமான ஃபிக்ஸட் டெபாசிட் விளம்பரம் 11.1.96 தேதியிட்ட 'ட்ரினிட்டி மிரர்' மற்றும் 12.1.96 தேதியிட்ட 'மக்கள் குரல்' பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது.

சொல்ல விரும்புகிறோம்!

◆ மஞ்சுளா ரமேஷின் சில பிரச்னைகள் சில வார்த்தைகளில் 'சிறந்த நிர்வாகியாக இருப்பவர்கள் மட்டுமே சர்க்கஸ் கயிற்றின் மேல் நடக்கும் வித்தைக்காரனைப் போல வெற்றியைப் பெற முடியும். பக்தியா அது பெரியவர்களுக்கு என நாமே ஒதுக்கும் மனப்பான்மை வேண்டாம்' என்று வடித்த வார்த்தைகள்... இன்றைய இளைஞர் களுக்கு நல்ல வழி காட்டும்.
சேத்துப்பட்டு. ஆர். பார்த்திபன்.

◆ 'குழந்தைகளிடம் சுப்பீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்' கட்டுரை படித்தேன். நேர்மாறான ஒரு அனுபவம். ஒரு தம்பதி காரிலிருந்து இறங்கியதும் ஒரு கடை முன்னாலிருந்த ஆடுகுதிரை பொம்மை மீது தங்கள் ஐந்து வயது மகனை உட்கார வைத்தார்கள். மின்சாரத்தால் இயங்கும் அது முன்னும், பின்னும், மேலும் கீழுமாக இயங்கிக் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்யும். குழந்தை உற்சாகமாக ஆட, ஒரு ஜிப்ஸி சிறுவன் கண்கள் விரிய அதையே ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அது நின்றதும் பெற்றோர் "இன்னொரு ரவுண்ட் ஆடுகிறாயா?" என்று கேட்டார்கள். குழந்தை "வேண்டாம். அந்தப் பையனை ஆடச் சொல்லுங்கள்" என்றான். திரும்பிப் பார்த்த தாயார், "சீ! டர்ட்டி அவனை யெல்லாம் இதில் உட்கார விட மாட்டார்கள்" என்றாள். அவன் சிணுங்க ஆரம்பித்தான். தங்கள் குழந்தை முகம் வாடக் கூடாதே என்பதற்காக வேண்டாவெறுப்பாக அவர்கள் காசு செலுத்தி அப்பையனை உட்காரச் சொல்லி விட்டு ஐஸ் கிரீம் பார்லருக்குள் நுழைந்தார்கள். பில் நூறு ரூபாயாவது ஆகும். சேற்றில் மலர்ந்த செந்தாமரையாக இப்படியும் சில குழந்தைகள் வளர்கின்றன.
சென்னை - 64, அ. ஷண்முகசுந்தரம்.

◆ சீதை காட்டிற்கு வருவேன் என்று சொன்னது வேண்டுமானால் தவறாக இருக் கலாம். ஆனால் துன்பம் இராவணன்- அதாவது ஆணினால்தான் ஏற்பட்டது என்பதை மறுக்க மாட்டீர்களே!!
திருவண்ணாமலை, ஜனனிசரஸ்வதி.

◆ எனக்குப் புடைவைமேலே ஆசையே இல்லை யர்து என்பவர்கள் கூட ரகசியமாய் ஒன்றிரண்டு புடைவைகளின் மீது தனி அன்பு வைத்திருப்பர். அதேபோல் பல குடும்பத் தலைவிகள் தங்களுடைய புடைவை எண்ணங்களையும் அதன் மூலம் நிறைவேறிய ஆசைகளையும் பட்டுப் புடைவை பரிசுக் கட்டுரைகள் மூலம் பகிர்ந்து கொள்வது படிக்க நிறைவாய் இருக்கிறது.
திருச்சி, ராஜிராதா.

◆ 'முதிய பெண்மணிகளின் ஜாலி டரிப்' சுவாரஸ்யமான அனுபவங்களைத் தொகுத்து கொடுத்திருந்தது நன்றாக இருந்தது. வயதாகி விட்டால் அருகில் உள்ள இடத்துக்குப் போகக் கூட பயந்து கொண்டு மற்றவர்களையும் நிம்மதியில்லாமல் செய்யும் இன்றைய எத்தனையோ முதியோர்கள் மத்தியில் இப்படியும் சிலரா? அவர்களின் மன உறுதியும், ஆர்வமும் வியக்க வைக்கிறது.
சென்னை - 41, ரவி.உலகநாதன்.

◆ உரிமைப் போராட்டம் சிறுகதை படித்தேன். ஒரே பிராண்டு ஜலதோஷம். ஆனால் ஆணின் ஜலதோஷத்திற்குக் கிடைக்கும் மதிப்பும், கவனிப்பும் உபசரணையும் பெண்ணின் ஜலதோஷத்திற்குக் கிடைப்பதில்லை என்பது இன்றைய வாழ்க்கையின் யதார்த்த நிலையை விளக்கியது. உண்மையிலேயே இந்த மாதிரி சமயத்தில் பெண்களின் நிலைமை பரிதாபமாகத்தான் உள்ளது.
மணியக்காரன்பாளையம். ஏ.ஜி.கல்யாணசுந்தரம்.

பாக்கெட் மேட்டர் 'பேக்ஸ்' மேட்டராக இருந்தது!

◆ கணவன்-மனைவி உறவு என்பது எவ்வளவோ சிறு விஷயங்களில் கருத்து வேறுபாடும், உட்பூசல்களும் மனத்தாங்கல்களும் ஏற்பட்டாலும், அவையனைத்தையும் மீறிய ஒரு ஆத்மார்த்தமான வாழ்க்கைப் பிணைப்பு என்ற அரிய கருத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டியது சோம. வள்ளியப்பனின் 'மனைவி' சிறுகதை.
சென்னை - 24, ஏ. நித்யா ஆனந்தராஜ்.

◆ கோதா பார்த்தசாரதி அவர்களின் "ரம்யா" நல்ல விறுவிறுப்புடன் ஆரம்பித்துள்ளது. "சீப்புக்கு தாடி முளைத்திருக்கும்" என்ற வரி மிகவும் சிரிப்பை வரவழைத்தது. அடுத்த இதழை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.
திருச்சி, எஸ். மீனா.

◆ இந்த இதழில் "பாக்கட் மேட்டர்கள்" யோசனைகள்! ஒவ்வொன்றும் பேக்ஸ் மேட்டராக எங்களை வந்தடைந்தது. எல்லா தகவல்களும் நல்ல பயனுள்ள அருமையான செய்திகளாக அமைந்து அழகுக்கு அழகு சேர்த்திட்டன.
சென்னை - 12, தமிழ்த்தென்றல்.

J.D. மேரேஜ் கேட்டரிங் சர்வீஸ்

J.D. கார்டன் பிளாட் நம்பர் 13 E.B. காலனி 3 வது தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088. தொலைபேசி இலக்கம் : 2348164

M.V. Ramanan
Executive Director

ANDHRA PRADESH
PRODUCTIVITY COUNCIL

Dt. 26-2-96

Dear Mr. Durai,

It is just about a month after the marriage of my daughter, at Sekharan Kalyana Mandapam at Madras. It is only now, that I could find time to write this letter to you and I am writing this letter with a specific purpose of thanking you and your team for the wonderful arrangements made for the marriage.

At the outset, allow me to congratulate you for the professionalism of your team members for which you must have done a lot. What was appreciated by one and all was the extent of co-ordination between the various units of your team to make the entire affair look very simple.

As a practicing Professional I must admit here that a tremendous amount of effort must have gone into reaching such levels of co-ordination. If I tend to be little more than profuse in my praise it is because of the level of comfort I derived during the marriage, inspite of being the Bride's Father. I suupose that is customer service for which I shall be ever thankful to you.

While I thank you once again on behalf of all my guests who were equally appreciative of the services, I would like to close this letter with one word saying that it is easier to scale new heights but very difficult to sustain. Particularly, we, as a nation have the tendency to start compromising on quality. I only wish and hope that you will continue the trend and set the tone for quality service.

With best wishes and warm regards.

Yours sincerely
Sd.
M.V. RAMANAN
Principal Director.

---

1. கல்யாண மண்டபம், 2. மங்கள வாத்யம், 3. வாஸமிகு மலர் மாலைகள் - பூச்செண்டுடன், 4. கல்யாண சீர் பக்ஷணங்கள் இரு வீட்டாருக்கும், 5. அங்குமணி சாமான்கள், 6. வைதீக சாமான்கள், 7. தேவைக்கேற்ப சாத்துக்குடி பை பிரிண்டிங் கவர் உட்பட, 8. தேவைக் கேற்ப தேங்காய் பைகள் (இரு வீட்டாருக்கும்), 9. அலங்கார பத்தமடைப் பாய், 10. பல்சுவை சிற்றுண்டிகள், 11. தரமான சுவையான பில்டர் காப்பி, தேவைக்கேற்ப டீ, பூஸ்ட், 12. மடி சமையலும் ரெடி, 13. திருமண மண்டப வண்ண வண்ண கோலங்கள், 14. ஆரத்தி பச்சைப்புடி ஏற்பாடுகள், 15. கும்ப கோணம் வெத்தலை, பாக்கு, 16. கார் ஏற்பாடுகள், 17. ஸ்டில் போட்டோ, வீடியோ கவரேஜ், 18. வாழை மரம், குருத்தோலை, மாவிலைத் தோரணங்கள், 19. பெட்ரோமாக்ஸ் லைட், 20. மண்டப கிளீனிங் சாமான்கள்.

நிம்பிக்கை, நாணயம், கைராசி இம் மூன்றும் இணைந்ததுதான்....

J.D. GROUPS

- J.D. மேரேஜ் கேட்டரிங் சர்வீஸ் -- 2348164
- ஸ்ரீ குரு ராகவேந்திரா கல்யாண மண்டபம் -- 2345232
- ஸ்ரீ சாய் கிருஷ்ணா சுவீட்ஸ் & ஸ்நேக்ஸ் -- 4996807

எல்லாவற்றையும் விமர்சிக்கும் போக்கு சரிதானா?

இரு மாதங்களுக்கு முன், அப்போதுதான் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் தகுதி பெற்ற சில இளைய சமுதாயத்தினரிடம் "ஜனநாயக அரசை அமைப்பதில் உங்களுக்கும் பங்கு இருக்கப் போகிறது என்பதில் உற்சாகமாக இருக்கிறதா?'' என்று கேட்க, பட்டென்று பதில் வந்தது (ஒட்டுமொத்தமான ஒருமித்த பதில்!) "எவன் வந்தாலும் ஒரே லட்சணம்தான். இதிலே யாருக்கு வோட்டுப் போட்டு என்ன ஆகப் போகுது? நான் ஒட்டு போடப் போவதில்லே."

"எவன் வந்தாலும்"! என்ன ஓர் அலட்சியம்! இந்தப் போக்கு இன்றைய இளைய சமுதாயத்தினரிடம் புரையோடிக் கொண்டிருக்கும் வியாதி. ஆறாவதும், ஏழாவதும் படிக்கும் சிறுவர் சிறுமியர் கூட "குண்டம்மா, வழுக்கை மண்டை, ஆந்தை மூஞ்சி" என்று அரசியல் தலைவர்களை வர்ணிக்கின்றனர். நம் நாட்டின் மிக உயர்ந்த பதவியை வகிக்கும் முதியவரை ஒருமுறை சின்னத் திரையில் காட்டிய போது "கிழபோல்ட்" என்று பனிரெண்டு வயதுச் சிறுமி ஒருத்தி கமெண்ட் அடித்தாள்.

நம் சிறு வயதில் 'ராஜேந்திரபிரசாத்' பற்றிப் புத்தகங்களில் படித்த போது அவரைப் பற்றி எவ்வளவு மரியாதை நம் மனத்தில் ஏற்பட்டது! இன்று ஏன் இப்படி?

அன்றைய அரசியலுக்கும் இன்றைய அரசியலுக்குமிடையே ஏற்பட்ட தர வீழ்ச்சிதான் இதற்குக் காரணம் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து அல்ல. காரணம் பகுத்து ஆராயும் பருவத்தை எட்டுவதற்கு முன்பே இவர்கள் இதுபோன்ற கேலி வார்த்தைகளை இறைக்கிறார்கள். ஓரளவு சுமாரான அரசியல்வாதிகளையும் இப்படி ஒருமையில்தான் குறிப்பிடுகிறார்கள். யாராக இருந்தாலும் கண்ணியத்துடன்தான் விமர்சிக்க வேண்டும் என்ற அடிப்படை நாகரிகம் அவர்களிடையே குறைந்து வருகிறது. எல்லாவற்றையும் விட டீனேஜை எட்டும்போதே "என்ன படிச்சாலும் நமக்கென்னவோ நினைக்கிற மேற்படிப்பில் இடம் கிடைக்கப் போறதில்லேடா" என்பது போன்ற வாக்கியங்களைத் தங்கள் நண்பர்களிடம் கூறுகிறார்கள். ஆக்கபூர்வமான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளத் தவறுகிறார்கள்.



கல்வித் துறைதான் என்றில்லை. காவல் துறை, நீதித்துறை இப்படி நம் சமூகத்தின் தூண்களையே இவர்கள் மேம்போக்காகக் குறைகூறுகிறார்கள்; அவநம்பிக்கை கொள்கிறார்கள்.

ஏன் இந்த நிலை? யாரால் இந்த எதிர்மறை உணர்வுகள்?

யோசித்துப் பார்க்கும்போது இரு முக்கியக் காரணங்கள் புலப்படுகின்றன. ஒன்று வெவ்வேறு மீடியாக்களின் தாக்கம். இன்னொன்று, சாட்சாத் நாம்தான்!

அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் தவறான செயல்பாடுகளைப் பளிச்சென்று படம்பிடித்துக் காட்டும் பத்திரிகைகளின் போக்கு பாராட்டத் தக்கதுதான். ஆனால் கூடவே அரசியல் தலைவர்களின் பருமனான உடல் வாகு, லட்சணமற்ற முகத்





தோற்றம், சிரிக்காத தன்மை இவற்றையெல்லாம் வரைமுறையின்றிக் கிண்டல் செய்வது சரியான போக்கு அல்லவே. இந்தப் பத்திரிகைகளைப் படிக்கும் (அல்லது அவற்றைப் படித்து விட்டு வாய் விட்டு அதை ரசித்து விளக்கும் போது கேட்கும்) சிறுவர் சிறுமியர் அதே போன்று அவர்களை கேலி விமரிசனம் செய்யும்போது பல பெற்றோர்கள் மகிழ்ந்து போகிறார்கள்.

இன்னொரு உதாரணம். இரு மாதங்களுக்கு முன் மாம்பலத்தில் உள்ள ஒரு பள்ளியில் நடைபெற்ற மாறுவேடப் போட்டியில் கோட் அணிந்து இருவிரல்களை உயர்த்தியபடியே ஒரு சிறுமி தோன்றினாள். கூடவே நிறைய நகைகளுடன் இன்னொரு சிறுமி. வேட்டி அணிந்த இரு சிறுவர்கள் வேரற்ற மரம் போல அவர்கள் கால்களில் விழுந்தனர். அரங்கிலிருந்த பெரியவர்களிடமிருந்து வெடிச் சிரிப்பு. புரியாது விழித்த சில சிறுவர்களுக்கு அவர்கள் பெற்றோர் சிரிப்பின் காரணத்தை விளக்கிக் கொண்டிருந்தனர்.

யோசித்துப் பாருங்கள். இது போன்ற நிகழ்ச்சிகளினால் ஒருவித வக்கிர உணர்வையல்லவா நாம் குழந்தைகளின் மனத்தில் புகுத்துகிறோம். சமூகத்தில் உள்ள நல்லவற்றை (அவை குறைவாக இருக்கலாம் என்பது வேறு விஷயம்) எடுத்துக்காட்டாமல் அல்லவற்றை அவர்கள் அறியும்படிச் செய்வதால் நச்சு எண்ணங்கள் தானே அவர்கள் மனத்தில் தேங்குகிறது! இதனால் ஆக்கபூர்வமான சிந்தனையை அவர்கள் இழப்பதுதானே உண்மை?

சொல்லப் போனால் பள்ளிக்கூடத்திலிருந்தே இந்தத் தவறான பழக்கம் தொடங்கி விடுகிறது. "அந்த ஸ்கூலிலே இவனுக்கு இடம் கிடைக்கல்லே. அதனாலேதான் வேறே வழியில்லாம இந்த ஸ்கூலிலே சேர்த்தோம்" என்று பெற்றோர் தன் முன்னாலேயே மற்றவர்களிடம் சொன்னால் அதைக் கேட்கும் குழந்தைக்கு தனது பள்ளிக்கூடத்தின் மீது மரியாதை தோன்றுமா? தன் பள்ளிக்கூடத்தினர் 'பணம் பிடுங்கிகள்', 'பெற்றோரை ஒட்டக் கறப்பவர்கள்', 'அங்கே ஒருவித எக்ஸ்ட்ரா-கரிகுலர் ஆக்டிவிடீஸும் கிடையாது', 'அங்குள்ள ஆசிரியர்களுக்கு விஷயஞானம் போதாது' என்றெல்லாம் வீட்டில் விமரிசனங்கள் எழும்போது அந்தக் குழந்தைக்கும் தன் பள்ளியின் மீதும் ஆசிரியர்கள் மீதும் ஒருவித வெறுப்பும் அலட்சியமும் தோன்றி விடுகிறது. இதுதான் பின்னாளில் சமுதாயத்தின் மீதே அவநம்பிக்கை கொள்ளவும் முக்கிய காரணமாகிறது.

பகுத்தறியும் பக்குவத்தை முழுவதுமாகப் பெற்றிராத குழந்தைகளின் எதிரே பேசும் போது கொஞ்சம் முன்னெச்சரிக்கை தேவை.

தெருவில் பள்ளமா? "இந்தக் கார்ப்பரேஷன் என்னிக்குத்தான் வாழ்ந்தது. ஒரே லஞ்சக் குட்டை."


வீட்டில் மின்வெட்டு. "இதைப் பற்றி மின் சார வாரியத்திலே எவனுக்குக் கவலை? சோம்பேறிகள்."

குழாயில் நீர் வரவில்லை. "இதே அமைச்சருங்க வீடு இருக்கிற தெருன்னா இருபத்தி நாலு மணி நேரமும் தண்ணீர் சப்ளை இருந்துக்கிட்டு இருக்கும்."

அரசியல்வாதிகளாகட்டும், அரசு நிறுவனங்களாகட்டும். அவர்களைப் பற்றிய நமது விமரிசனம் எந்த அளவு நியாயமானது என்பதைப் பற்றி இங்கு நாம் ஆராய முற்படவில்லை. இது போன்ற விமரிசனங்களை நம் குழந்தைகளை வைத்துக் கொண்டே பேசுவது அவர்கள் மனத்தில் எப்படிப்பட்ட சமுதாய வெறுப்பையும், கையாலாகாத உணர்வையும் தேசத்தின் மீதே பற்றில்லாமல் போகும் தன்மையையும் வளர்க்கிறது என்பதை வலியுறுத்துவதற்கே இவற்றைக் குறிப்பிட்டோம்.

- ஜி.எஸ்.எஸ்.

நாலு வருடங்களுக்கு
முன்பு வாங்கின குடை வெளிறிப் போய்,
நிறம் மங்கி 'டல்' அடித்தது. கம்பிகள் எல்லாம் பலமாக
இருந்ததால் தூக்கியெறிய மனமில்லை. சோப்புத் தண்ணீரில்
முக்கிக் காயவிட்டு வெவ்வேறு நிறம் கொண்ட ஃபெவிகால் பேஃபிரிக்
பெயிண்டினால் ஒவ்வொரு பகுதிக்கும் கலர் அடித்தேன். வெண்டைக்காயை
நறுக்கிக் கலரில் தோய்த்துக் குடையின் விளிம்பில் பார்டரும் வைத்தேன்.
புதுக்குடை போல் ஆகிவிட்டது.
— லட்சுமி சுந்தரம்



குழந்தை இல்லையா?

காரணங்கள் - சிகிச்சைகள்

13-14 வயதிலேயே பல பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள் ஆரம்பித்து விடுகின்றன. இது Hormone Imbalance என்று அதிக ரத்தப் போக்கை நிறுத்தவும், இல்லாதவர்களுக்கு மாதா மாதம் வருவிக்கவும் தொடர்ந்து **'ஆர்மோன்' மாத்திரைகளை** சாப்பிட்டு வருபவர்கள் பல நூறு பேர்! கருப்பை நோய்களுக்கான 'ஆர்மோன்கள்' ஒரு சிலவே! வேறு வேறு பெயர்களில் வேறு மருந்துகள் போல தயாராகி வெளிவருகின்றன. ஒவ்வொரு டாக்டரும் வேறு மருந்து தருவது போல எண்ணி இவைகளை பலனில்லாவிடினும் ஆண்டுக்கணக்கில் பலர் சாப்பிட்டு வருகின்றனர். இவை அதிகமானால் பல தீய பக்க விளைவுகளும் உண்டு. இந்த உண்மை பலருக்கு தெரிவதில்லை. (Ref. Shaw's Text Book of Gynaecology)

இம்மருந்துகளை நிறுத்தினால் மீண்டும் பழைய கோளாறுகள்தான். 'திருமணம் ஆனால் இது சரியாகிவிடும்' என்று அறியாமையில் அப்படியே விட்டுவிடுகிறார்கள் பலர். இந்த குறைபாடுகளை சிறுவயதிலேயே சரி செய்யாத பலருக்கு திருமணத்திற்குப் பின் குழந்தைப்பேறு என்பதே கேள்விக்குறி ஆகிவிடுகிறது. இக்குறைகளை நிரந்தரமாகச் சரி செய்ய அற்புதமான சித்த மருந்துகள் எம்மிடம் உண்டு. இன்னும் கருப்பை வளர்ச்சி குறைவு, முட்டை உருவாகாமை, முந்திய, தாமதமான, கறுப்பான, கட்டிகட்டியான மாதவிடாய், கருக்குழாயில் அடைப்பு, கோளக்கட்டிகள், கருப்பை வீக்கம், கருப்பை புண்கள், அடிக்கடி கருக்கலைவு (Cystic Ovaries, Bulky Uterus, hypoplastic Uterus, Falloplan Tube Block, Cervicitis Endometriosis, Missed Abortion etc.) போன்ற பல கோளாறுகள் கருத்தரிக்க தடையாக உள்ளன. குழந்தை பெறும் முன்பே கருப்பையில் கட்டி (Fibroid) தோன்றி அதற்கு மருத்துவம் ஏதுமின்றி கருப்பையையே அகற்றிவிட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள பெண்கள் பலர் உண்டு! பல பெண்களுக்கு 7-வது / 9-வது வாரத்தில் தொடர்ந்து கருச்சிதைவு (Missed Abortion) ஆவது உண்டு. நவீன மருத்துவத்தில் இது புரியாத புதிர்! இந்த குறைகள் நீங்கி குழந்தைப் பேறு பெற வேண்டுமா? உங்களுக்கு உதவிட எமது 180 ஆண்டு பரம்பரை அனுபவம் பெற்ற சித்தர் மருத்துவ சிகிச்சைகள் உள்ளன. ஒவ்வொரு கோளாறுக்கும் தனித்தனி சிகிச்சை அளிக்கிறோம். இதுபோன்ற சிகிச்சை எங்கும் கிடைப்பது அரிது. 10-15 ஆண்டு பல வகை சிகிச்சைக்குப்பின் பெண்கள் 40 வயதளவில் வருவதைவிட ஆரம்பத்தில் வந்தால் விரைவில் பலன் பெறலாம். **உயிரணு இல்லாத ஆண்கள்:** (Azoospermia) ஆண்களின் குறைபாடுகளில் மிகவும் சிக்கலானதும் இன்று உலகளவில் மருந்தே இல்லை என்றும் பிறரிடம் உயிரணு பெறுதல் அல்லது தத்து எடுத்தல் இரண்டு மட்டுமே தீர்வு என்று கருதப்படும் இந்த கோளாறுக்கு வெற்றிகரமான சிகிச்சை எம்மிடம் உண்டு. இதற்கு வெறும் விந்து பெருக்கும் மருந்துகள் எத்தனை ஆண்டு சாப்பிட்டாலும் பலன் இல்லை. எமது சிகிச்சையினால் சமீபத்தில் பலனடைந்த இருவர் 1. S சின்னத்தம்பி, 2. நரசிம்மன் (35) மாதவரம். (இவை (Clinical Test) மூலம் உறுதி செய்யப்பட்டவை.

இந்நோய்கள் பல சிக்கல் நிறைந்தவை. பாட்டி வைத்தியம், கை வைத்தியம், கடைமருந்து வைத்தியம், பத்திரிகை வைத்தியம் என்று முயற்சி செய்வதால் முடிவில் ஏமாற்றமே! காலம்தான் வீணாகும் என்பதை உணரவும்!

30-40 நாள் நிற்காத இரத்தப்போக்கு

கருப்பை புண், கட்டி, வீக்கம் 30-40 நாட்கள் நிற்காத இரத்தப்போக்கினால் 40 வயதை நெருங்கும் பெண்கள் நூற்றுக்கணக்கான பேர் துன்பப்பட்டு வருகிறார்கள். இதற்காக அவசரப்பட்டு ஆபரேஷன் மூலம் கருப்பை அகற்ற தேவையில்லை. எமது மூலிகை மருந்தால் முழுமையாக கட்டுப்படுத்துகிறோம். **கருப்பைக் கட்டி கரைந்தது.** திருமதி கமலா (45) 23, ஜோசியர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 34. இவருக்கு 10.3 செ.மீ. அளவில் இருந்த கருப்பை கட்டி எமது சிகிச்சையால் கரைந்து விட்டது.

புற்று நோய் - மார்பக கட்டி கரைந்தது!

Mrs. P.D லீலா (வயது 49) முகப்பேர், அண்ணா நகர், சென்னை, ஆசிரியையான இவருக்கு மார்பில் 1.5 செ.மீ. அளவு கட்டி தோன்றி தாங்க முடியாத குத்தல்-வலி இருந்தது. ஆபரேஷன்-ரேடியேஷன்-கீமோதெரபி இவைகளை விரும்பாமல் எமது சிகிச்சையை மேற்கொண்டார். 20 நாள் எமது சித்தர் குருமருந்து சிகிச்சையில் கட்டி முழுவதும் கரைந்துவிட்டது! குத்தல் வலி ஏதும் இல்லை! (முழுமையான முகவரி வெளியிட இவர் விரும்பவில்லை). புற்றுநோய் தீராத நோய் அல்ல. கடைசி கட்டத்தில், வருவதைவிட கண்டுபிடித்தவுடன் எமது சிகிச்சை பெற்றால் குணம் அடையும் வாய்ப்பு அதிகம். **கன்னம், மார்பகம், தொண்டை, கல்லீரல், கருப்பை, மலக்குடல், Thyroid அக்குள் சுரப்பிகள், மூக்கு, நாக்கு, மூளை ஆகிய இடங்களில் வரும் புற்றுநோய்க்கு சிறப்பான சிகிச்சை செய்கிறோம்.** 20-நாளில் வலி நின்று விடுவதும், 45 நாளிலேயே குணமாகும், அறிகுறி தென்படுவதும் எமது மருந்துகளின் மகிமையாகும்.

மார்பகத்தில் கட்டியா? பெண்கள் மார்பகத்தில் குத்தல், வலியுடனோ வலி இல்லாமலோ பலவிதமான கட்டிகள் (Fibro Adenoma) வருவதுண்டு. இதில் சில ஆபத்தானவை அல்ல என்று கூறியபோதிலும், அதை கரைத்துவிட சரியான மருத்துவம் இல்லாமல், மாதாமாதம் Chek-up செய்து கொண்டு வருபவர் பலர். சாதாரண கட்டி புற்றுகட்டியாக மாறும் வரை காத்திருப்பது அவசியம்தானா? எமது சிகிச்சையில் எளிதாக குணம் பெறலாம். பயத்துடன் நாட்களை கடத்த வேண்டாம்.

பெண் மருத்துவர் உண்டு. வெளியூர் நோயாளிகள் மருந்து பெற்றுக்கொண்டு உடன் திரும்பிவிடலாம். தங்க வேண்டியதில்லை!



Dr. S. JEYARAM, M.A., M.A., PRAVEEN, HIMP, RMP

3000-க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ சுவடிகளை ஆராய்ந்தவர் மற்றும் ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி ஆங்கில மருத்துவ முறைகளிலும் ஆழ்ந்த ஆராய்ச்சி உள்ளவர்.

நவோதயா சித்தர் மருத்துவமனை

20, ஆற்காடு ரோடு (மாடியில்) கோடம்பாக்கம், சென்னை - 600 024.

(லிபர்டி பஸ் ஸ்டாப் ஓவர் பிரிட்ஜ் அருகில்)

போன் : 4940662 / 4954389 / 8551258 (வீடு)

ஆலோசனை நேரம் : காலை 10 முதல் 1 மணி வரை, மாலை 5 முதல் 8 மணி வரை, ஞாயிறு காலை மட்டும்

தபால் / போன் / நேரில், தேதி-நேரம் குறித்துக் கொண்டுதான் வர வேண்டும்.



குழந்தையை புத்தகத்தை உரக்க வாசிக்கச் செய்யுங்கள்


சமீபத்தில் 'வீக்' எனும் வாரப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருந்தது. ஒரு தாய் தன் குழந்தை நாற்பது எனும் ஆங்கிலச் சொலாகிய ஃபார்ட்டி என்பதை ஃபெளர்ட்டி என்று உச்சரித்ததால் எரிச்சலடைந்து, குழந்தையை (ஆறு வயது) இழுத்துக் கொண்டு சமையலறையில் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு, கத்தியால் குத்தி விட்டார். குழந்தையின் கதறல் கேட்டு, அதனுடைய பாட்டி, அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் உதவியால் கதவை உடைத்து உள்ளே நுழைந்து பார்த்த போது, குழந்தையின் குடல் வெளியே சரிந்து குழந்தை ரத்த வெள்ளத்தில் கிடந்த கோலம் எல்லோருடைய இரத்தத்தையும் உறையச் செய்ததாம். குழந்தையை உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று, அவசர ஆபரேஷன் செய்து குழந்தை உயிர் பிழைத்தது என்பதும் செய்தி.

ஆனால் மனநிலை உடல்நிலை இரண்டும் ஆரோக்கியமாக உள்ள தாய்மார்களும், தங்கள் குழந்தையின் மார்க் அட்டையைப் பார்த்து எரிச்சலடைந்து, குழந்தையை கண் மண் தெரியாமல் அடிப்பது என்பது அடிக்கடி நடக்கும் ஒன்று.

நாம் எல்லோரும் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்தவர்களே என்பதை முற்றிலும் மறந்து விடுவதால் குழந்தைகளை இம்மாதிரி துன்புறுத்துகிறோம். குழந்தைகள் கற்க ஆரம்பிக்கும் போது பல பிரச்னைகளுக்கும், சங்கடங்களுக்கும் உள்ளாகின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது. இவ்விதமான பிரச்னைகளில் ஒன்று - குழந்தை எழுதும் போது எழுத்துக்களை மாற்றி எழுதுவது. இவர்கள் புத்திசாலிகளாக இருந்தாலும் எழுதும் போது சில பிரச்னைகள் எழுகின்றன. இது ஆங்கிலத்தில் டிஸ்லெக்ஸியா (Dyslexia) என்று குறிக்கப்படுகிறது.

குழந்தையின் இந்த பிரச்னை பற்றி பிரிட்டிஷ் டிஸ்லெக்ஸிக் அசோசியேஷன் டைரக்டர் லிண்ட்சே பியர் கூறுவதைக் கேளுங்கள் - ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்கும் போது குழந்தைகளுக்குக் குறை ஏற்படுவதாகவும், ஒரு சில விஷயங்களில் சில குழந்தைகள், சராசரிக்கும் அதிகமான திறமையுள்ளவராக இருக்கிறார்கள் என்றும், ஆனால் இதே குழந்தைகள், மற்றும் சில விஷயங்களில் மிகவும் பின்னடைந்திருந்தனர் என்றும் இவர் கூறுகிறார். இம்மாதிரியான குழந்தைகளை மூன்று விதமாகப் பிரிக்க முடியும் என்கிறார் இவர்.

1. பார்வையால் மிகத் திறமையுள்ளவர்கள். இவர்கள் மிக நன்றாக வரைய முடியும், எழுத முடியும். ஆனால்





இவர்கள் பேச்சு, ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாததாக இருக்கும்.

2. கோர்வையாகப் பேச முடிந்தவர்கள் - ஆனால் இக்குழந்தைகளால் சரியாக எழுத முடியாது. அதாவது, எழுதும்போது இவர்களுக்குச் சில குறைகள் ஏற்படுகின்றன.

3. பார்க்கும் போதும், பேசும் போதும் குறை உள்ளவர்கள் அதாவது பிரச்னை ஏற்படும். ஆனால் இக்குழந்தைகள் கற்கும் வேகத்தில் நிதானம், தாமதம் இல்லை. இவர்கள் மற்ற துறைகளில், அதாவது டிராமா, கலை சம்பந்தப் பட்ட விஷயங்கள், கணக்கு - ஆகியவைகளில் திறமைசாலிகளாக இருக்கிறார்கள்.

இரண்டோடு மூன்று சேர்த்தால் எவ்வளவு என்று வாயால் கேட்கும் போது, ஐந்து என்று பளிச்சென்று பதில் சொல்லும் குழந்தைகள், 2+3 எவ்வளவு என்று கரும்பலகையில் எழுதினால் சரியான விடை கூற மாட்டார்கள். கூற முடியாத நிலை.

ஏனென்றால் கரும்பலகையில் எழுதியதை சரியாகப் படிக்க முடியாத சங்கடம். இக்குழந்தைகளை மற்ற விதத்தில் பரீட்சை செய்து பார்த்த போது இவர்களின் புத்திசாலித்தனம் (ஐக்யூ) மிக உயர்ந்ததாக இருந்தது என்றும், ஆனால் இவர்களுக்குக் கற்பதில் சில பிரச்னைகள் இருந்தது என்பதும் வெளியாகியது. இக்குழந்தைகளுக்கு, தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது நன்றாகப் புரியும். கேள்வி கேட்டால் பளிச்சென்று உடனே பதிலளிப்பார்கள். ஆனால் இதே பதிலை எழுதும் போது பல தவறுகளைச் செய்கிறார்கள். பளிச், பளிச் என்று பதில் கூறிய இதே குழந்தைதானா இப்படி எழுதுகிறது என்று வியக்குமளவுக்கு எழுதும் போது தவறு புரிகின்றனர்.

குழந்தைகளுக்கு டிஸ்லெக்ஸியா எனும் குறைபாடு இருக்கிறது என்பது சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு தெரிய வந்தது. 1896 ல் டாக்டர் பிங்கலே மார்கன் என்பவர் பதினொன்று வயதுப் பையனைப் பற்றிக் கூறும் போது, சாதாரண முறையில் செயல்படவில்லை என்று இவன் பெற்றோர், இவனை டாக்டரிடம் அழைத்து வந்தனர். டாக்டர் இப் பையனிடம் நீண்ட நேரம் பேசிய போது, இவன் மிகப் புத்திசாலிப் பையன் என்பது தெரிய வந்தது. இப்பையனிடம் டாக்டர் தன் (பையனின்) பெயரை எழுதச் சொல்லிய போது Percy என்ற தன் பெயரை Precy என்று எழுதினான். இந்த இரண்டு பெயர்களுக்குமுள்ள வேறுபாட்டை அவனால் இனம் கண்டு கொள்ளவே முடியவில்லை. குழப்பமடைந்த டாக்டர், பையன் படிக்கும் பள்ளிக்குச் சென்று டீச்சர்களை விசாரித்துப் பார்த்ததில், வாய் மூலமாக பதில் கூறுவதில் இப்பையன் முதலிடத்தில் இருந்தான் என்றும் ஆனால் விடைகளை எழுதுவதில் வகுப்பில் கடைசியிலேயே இருந்தான் என்பதும் தெரிய வந்தது.

இக்குறைபாடு எதனால் ஏற்படுகிறது? மூளை சரிவர இயங்காத காரணத்தால். இக்குறைபாடு உள்ளவர்களின் மூளை சாதாரணமாக இருப்பவர்களின் மூளையிலிருந்து வித்தியாசமாக இயங்குகிறது.

நம் ஒவ்வொருவருக்கும் மூன்று விதமான ஞாபக சக்தி இருக்கிறது 1) பார்வைக்கான ஞாபக சக்தி (Visual Memory) 2) ஒலிக்கான ஞாபகசக்தி (Audial Memory) 3) உடல் அசைவுக்கான ஞாபகசக்தி (Physio-Motor Memory) டிஸ்லெக்ஸியா குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு இந்த மூன்றுவிதமான ஞாபகசக்திகளில் ஏதாவது ஒன்று பிரச்னைக்குரியதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒலிக்கான ஞாபகசக்தி அமைப்பில் குறைபாடுள்ள குழந்தைக்கு, வரலாற்றில் முக்கியமான ஆண்டுகளை நினைவில் கொள்வதிலும், அந்நிய மொழிகளைக் கற்பதிலும் பிரச்னை இருக்கும். உடல் அசைவு ஞாபக சக்தியில் குறையுள்ள குழந்தைக்குக் கரும் பலகையில் எழுதப்படும் வாக்கியத்தைப் பார்த்து



எழுதுவதில் பிரச்னை ஏற்படும்.

நம்மில் பலருக்கு, ஒரு வாக்கியத்தைப் படித்து அதே வாக்கியத்தைக் காப்பி செய்யும் போது - முழு வாக்கியத்தையும் படித்து நினைவில் வைத்துக் கொண்டு மறுபடியும் இதே வாக்கியத்தைச் சரியாக எழுத முடிகிறது. ஆனால் Physio Motor Memory யில் குறையுள்ள குழந்தைக்கு, ஒரு நேரத்தில் ஒரு வார்த்தையோ (அ) சில வார்த்தைகளையோ மட்டுமே நினைவில் கொள்ள முடியும். இக்காரணத்தால் இக் குழந்தைகள் எழுதுவதற்கு மிக தாமதம் ஆகிறது. எழுத்துக்களைத் தவறாக எழுதுகிறார்கள் (spelling mistakes). எழுத்துக்கள் வரிசைக் கிரமமாக இல்லாமல் தாறுமாறாக எழுதுகிறார்கள். தான் பார்த்ததை மறுபடியும் காப்பி செய்வதில் மிகக் கஷ்டப்பட்டு அதிகமாகக் கவனம் செலுத்தி விடுவதால், கரும்பலகையில் என்ன எழுதியுள்ளது என்பதைச் சரியாக வாசிப்பதேயில்லை.



இம்மாதிரியான குறைபாடுகள் குழந்தையை மிகச் சலிப்படையச் செய்கின்றன, வெறுப்படையவும் செய்கின்றன. கற்பதைக் கஷ்டமாக உணர்வதால் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விடுகிறார்கள். மற்றபடி, இக்குழந்தைகள் புத்திசாலிகளாக இருப்பதால், பள்ளியிலிருந்து நின்று விட்ட பிறகு, பலவிதமான குற்றங்களைப் புரிவதில் கவனம் செலுத்துகிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்வீடன் போன்ற நாடுகளில் இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடத்திய போது கிடைத்த முடிவுகள் மிகவும் அதிர்ச்சியைத் தரக் கூடியனவாக இருந்தன. ஸ்வீடனில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில், அந்நாட்டில் சிறைக் கைதிகளில் 31 சதவீதத்தினருக்கு, சொற்களைக் கற்பதில் கஷ்டமிருந்தது என்றும், அமெரிக்காவில் நடந்த ஆராய்ச்சியில் சிறைக் கைதிகளில் 50 சதவீதத்தினருக்கு, உரத்து வாசிப்பதில் பிரச்னை இருந்ததாகவும் அறியப்பட்டது. குழந்தையின் வாழ்வில் அதிவிரைவில் டிஸ்லெக்ஸியா குறைபாடு இனம் கண்டு கொள்ளப் படாததால் சமூதாயம் பல இன்னல்களுக்கு ஆளாகிறது.

தற்போது இக்குறைபாடு மிகப் பெரிய அளவில் இனம் கண்டு கொள்ளப்பட்டு எல்லா தேசங்களிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. டிஸ்லெக்ஸியா குறையுள்ள குழந்தையின் மூளையிலுள்ள சில பகுதிகளில் மற்ற பகுதிகளைவிட அதிக செல்கள் இருக்கின்றன என்று அமெரிக்க ஆராய்ச்சியின் முடிவு.

இங்கிலாந்து நாட்டில் 1993 ம் ஆண்டில் இயற்றப்பட்ட கல்விச் சட்டத்தின் காரணமாக, இளம் மாணவர்கள் கற்பதில் குறைபாடு, பிரச்னை உள்ளதா என்று இனம் கண்டு, அதற்குத் தகுந்தவாறு, பள்ளிகள் தாங்கள் கற்பிக்கும் முறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியது பள்ளிகளின் கடமையாகச் செய்யப்பட்டுள்ளது.


மாணவர்களைப் பரீட்சை செய்யும் போது, டிஸ்லெக்ஸியா குறைபாடுள்ள மாணவர்களை, வேறு மாணவர்களிடமிருந்து வித்தியாசமான முறையில் பரீட்சை செய்வது முக்கியமானது. எடுத்துக்காட்டாக, கொலம்பஸ் பற்றி ஐந்து பக்கம் கட்டுரை எழுத மாணவர்களைப் பணிக்கும் போது, டிஸ்லெக்ஸியா குறையுள்ள மாணவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் சில சலுகைகள் கொடுக்க வேண்டும். மிகச்சாதாரண முறையில் எழுதப்பட்ட கொலம்பஸ் பற்றிய சில விஷயங்களைக் கொடுக்க வேண்டும். (அ) கொலம்பஸ் பற்றிய ஒலி நாடாவைக் கொடுக்க வேண்டும். 5 பக்கக் கட்டுரையை எழுதச் சொல்வதற்குப் பதிலாக, கொலம்பஸ் பற்றி சில கேள்விகளைக் கேட்டால், கட்டுரை எழுதுவதை விடக் குறைந்த அளவில் எழுதுவது போதுமானதாக இருக்கும். குறையுள்ள மாணவர்களுக்கு, மற்ற மாணவர்களை விட பரீட்சை எழுதும் நேரம் அதிகம் அனுமதிக்கப்பட வேண்டும்.

புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னால், குழந்தை, தொடர்ச்சியாக சொற்களை சரியாக உச்சரிக்காமல் திக்கி, ம்,ம் என்று தயங்கி வாசிக்கும் போது, குழந்தைக்கு ஏதோ ஒரு குறை, கோளாறு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்களால் வேகமாகப் படிக்க முடியாது. சொற்களைக் கோர்வையாகச் சேர்த்துப் படிக்க முடியாது. மேலும் இவர்களுக்குப் பல சொற்கள் தெரியவே தெரியாது. எதையும் சற்று தாமதமாகவே புரிந்து கொள்வார்கள்.

தற்போது சிறப்புக் கல்வி முறை போன்றவை உடல் ஊனமற்ற (அ) மனவளர்ச்சி

எவர்சில்வர் கரண்டிகள் உடைந்து விட்டால் கரண்டிகளின் பிடியினை வேறு ஒரு அகலமான பாத்திரத்தில் ஒட்டவைத்து பால்காய்ச்சும் pan போல் உபயோகிக்கலாம். பால் காய்ச்சும் pan விலை அதிகம். நம் வீட்டிலேயே வீணாகும் கரண்டி காம்பினை ஒட்டவைப்பது விலை குறைவு.

— என்ஷா



குன்றிய குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தும் படியாக உள்ளன. ஆனால் கற்பதில் நிதானம் காட்டும் குழந்தைகளுக்கென்று தனியான பள்ளிகள் எதுவுமில்லை. இப்படி மெதுவாகக் கற்கும் குழந்தைகள், சாதாரண குழந்தைகளுக்கான பள்ளியிலும் சேர முடியாது, மன வளர்ச்சி குன்றியவர்க்கான பள்ளியிலும் சேர முடியாது.

ஒவ்வொரு பெற்றோரும், தங்கள் குழந்தை பள்ளியில் சேர்ந்த முதல் தினத்திலிருந்தே முதல் ராங்க் வாங்க வேண்டும் என்று நினைக்கிற இந்த நாளில், படிப்பதில் பின்தங்கி விடும் குழந்தைகளின் நிலை மிக்க இரக்கத்திற்குரியதாகும். தன் குழந்தை, தம் கனவை நனவாக்க முடியாது என்று தெரியும் பட்சத்தில் குழந்தையைக் கண்டபடி அடித்து நொறுக்குகிறார்கள். குழந்தை தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு ஒரே வகுப்பில் தங்கி விடும் போது மட்டுமே, பெற்றோர், குழந்தையை, மனோதத்துவ நிபுணர்களிடம் அழைத்து வருகிறார்கள் என்று பிரபல மனோதத்துவ நிபுணர் ஒருவர் கூறுகிறார்.

இந்த நிலையில் இக்குழந்தைகளுக்குத் தாழ்வு மனப்பான்மையோடு வேறு பல விதமான மனது சம்பந்தப்பட்ட பிரச்னைகளும் வந்து விடுகின்றன. வெகுவிரைவில் வெறுப்படைந்து, மற்ற குழந்தைகளிடமிருந்து விலகியே இருக்கின்றன. இக்குழந்தைகளின் முக்கிய குறைபாடு இவர்களின் குறைவான ஞாபக சக்திதான். விஷயங்களைக் கிரஹித்து சரியாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியாத காரணத்தாலேயே, கற்பதில் நிதானம் ஏற்படுகிறது.

பண்டைய காலத்தில், ஏன் இப்போதும் கூட பல பெற்றோர்கள், தாங்கள் வீட்டில் வேலை செய்து கொண்டே பள்ளியில் படிக்கும் குழந்தைகளை, பாடங்களை உரத்துப் படிக்கச் செய்கிறார்கள். இப்பழக்கம் மெதுவாக மறைந்து வருகிறது.

காலை நேர அவசரத்தில் பெற்றோருக்கும், நேரமிருப்பதில்லை, குழந்தைகளுக்கும் நேரம் கிடையாது. மாலையில் பெற்றோர் வீடு வந்து சேருவதற்கே தாமதமாகிறது. குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்பியவுடன், டியூஷன், கராத்தே, கம்ப்யூட்டர் என்று பல. இதில் குழந்தை எப்போது பாடங்களை உரத்து வாசிக்கும்?

குழந்தைகளை பாடப்புத்தகங்களை உரக்க வாசிக்கச் செய்வது மிக முக்கியம். ஏனென்றால் - ஒரு விஷயத்தைக் கவனித்து மனத்தில் இறுத்திக் கொள்வதற்கு மிக முக்கியமானது புத்தகத்தை உரக்கப்படிப்பது. ஒரு குழந்தை, தான் ஒரு விஷயத்தை எளிதில் படித்து அர்த்தம் புரிந்து கொள்ள முடியும் என்று உணரும் போது, அக்குழந்தைக்குத் தன்னம்பிக்கை பிறக்கிறது. தன்னம்பிக்கையினால் உந்தப்படும் போது தானும் ஏதாவது சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை குழந்தைக்கு உண்டாகிறது.

நிதானம் காட்டும் குழந்தைகளுக்கு கற்பிக்க தற்போது ஆக்ஷன் போனிக்ஸ் (Action Phonics) எனும் முறை பின்பற்றப்படுகிறது. இம்முறை குழந்தை திக்கித் திணறாமல் வாசிக்க உதவுகிறது. உடலிலுள்ள தசைகளும், உடலின் வளர்ச்சியும் ஒன்று சேர்வது, மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. எடுத்துக்காட்டாக, குழந்தை முதலில் மல்லாக்கப்படுத்து, பிறகு குப்புறத்தி, தலையை நிமிர்த்தும் போது அதன் வாயிலிருந்து பல சொற்கள் உதிரும். குழந்தை நடக்க ஆரம்பிக்கும் போது, மேலும் சொற்கள் வெளிப்படுகின்றன. ஆனால் குழந்தை வளரும் போது இந்த விஷயத்தை நாம் உணர்வதில்லை.

ஆக்ஷன் போனிக்ஸ் முறையில் குழந்தையின் எல்லா உணர்வுகளும் (பார்வை, கேட்டல், வாசனை, ருசி, தொடுதல்) ஒரே சமயத்தில் பயன்படுத்தப்படுகின்றன. குழந்தை நன்றாகப் பார்க்கும்படியாக பல பயிற்சிகள் மூலம் (Visual Exercises) சொற்களை நான்றாகப் புரிந்து கொள்ள வைக்கப்படுகிறது. அதாவது எழுத்துக்கள் கொட்டையாக, பெரிய அளவில் எழுதப்பட்டு, அதைக் குறிக்கும்படியான வகையில், ஒரு நீண்ட குச்சியை, குறிப்பிட்ட ஒவ்வொரு எழுத்தின் மேல்வைத்து குழந்தைகளை வாசிக்கச் செய்யும் போது. குழந்தையின் கவனம் வேறு எதிலும் செல்லாது. எந்தச் சொல்லுக்கு அருகே குச்சி இருக்கிறதோ, அந்தச் சொல்லிலேயே குழந்தை கவனம் செலுத்த முடியும். சொற்களை உச்சரிப்பதும் வலியுறுத்தப்படுகிறது.

எனவே, பெற்றோர்களே, உங்கள் குழந்தையிடம் புத்தகத்தைக் கொடுத்து உரக்கப்படிக்கச் செய்யுங்கள். இதன் மூலம் பல விதமான கோளாறுகளையும், பிரச்னைகளையும் நீங்கள் தவிர்க்க முடியும்.


— ராஜி

K.R.P. பெனிபிட் பண்ட் லிட்.

Registered Office : JVL ஆர்கெட், 199, வடக்கு உஸ்மான் ரோடு,
தி.நகர், சென்னை-600 017. போன்: 8240120/8240121

Member Service Centres :

1. NEW DELHI : 116/117, Upper Ground Floor, World Trade Centre, Connaught Circus, New Delhi-110 001. Phone: 3310098
2. BOMBAY : 1404, Dalmal Towers, 211, Nariman Point, Bombay-400 021. Phone : 2875662/2885040
3. BANGALORE : 84, E/4 Manish Towers (4th Floor) J.C. Road, Bangalore-560 002.
4. COIMBATORE : 214, New Scheme Road, Pappanaicken Palayam, Coimbatore-641 037. Phone : 214328/216801.



"அகவிருள் அகற்றி அறிவொளி வீசுக"

எங்களுடைய சேமிப்பு மற்றும் முதலீடு அம்சங்களில் நாங்கள் மேற்கண்ட 9 சிறப்புமிக்க பொருளாதார கொள்கைகளை கடைப்பிடிக்கின்றோம்.

1. KRP-யின் "சித்திரை" சிறப்புத் திட்டங்கள் தற்போது அமுலில் உள்ளது.
2. நாங்கள் 30 நாட்கள் முதல் 36 மாதங்கள் வரையிலான சேமிப்பு ஏற்றுக் கொள்கிறோம்.
3. உங்களது சேமிப்பு 36 மாதங்களில் இரு மடங்காகும்.
4. குறைந்தபட்ச வைப்பு நிதி ரூ.1000/- மற்றும் ரூ. 500/-ன் மடங்குகளில்.
5. வருட வட்டி விகிதம் 15.5% முதல் 23.5% வரை.
6. பின் தேதியிட்ட காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படும்.
7. வெளியூர் டிபாசிட்தாரர்களின் நலனுக்காக முழுதும் மாற்றத்தக்க காசோலை வசதி I.O.B-யின் 52 கிளைகள் மூலமாக.

லேவாதேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும்

Dr. லட்சுமி பிரகாஷ், M.Com., Ph.D.,
இயக்குனர்

ADSTART

"பெண்களையும், முதியவர்களையும், உங்களையும் மனதில் கொண்டு பெண்களால் நடத்தப்படும் பண்ட்"

K.R.P. பெனிபிட் பண்ட் லிட்.,

பதிவு அலுவலகம்: JVL ஆர்கேட்,
199, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 600 017.
போன் : 8240120/8240121.

விருள் அகற்றி
திவொளி வீசுக"

"பெண்கள் நாட்டின்
கண்கள்"

கீழ்கண்ட வட்டி விகிதங்களில் டெபாசிட்டுகள் பெற்றுக் கொள்ளப்படும்

டெபாசிட்டுகள் ரூ.1000 மற்றும் ரூ.500/-ன்
மடங்குகளில் பெற்றுக் கொள்ளப்படும்.

வட்டி விகிதம்	15.5 % P.A.	16 % P.A.	17 % P.A.	18 % P.A.	20 % P.A.	21 % P.A.
கால அளவு	30 நாட்கள்	45 நாட்கள்	60 நாட்கள்	90 நாட்கள்	180 நாட்கள்	270 நாட்கள்

K.R.P. சிறப்புத் திட்டம்

முதலீடு	கால அளவு	வட்டி விகிதம்
ரூ. 10,000	1 வருடம்	22.00 % P.A.
ரூ. 10,000	2 வருடங்கள்	22.25 % P.A.
ரூ. 10,000	3 வருடங்கள்	22.50 % P.A.
ரூ. 20,000	1 வருடம்	22.00 % P.A.
ரூ. 20,000	2 வருடங்கள்	22.25 % P.A.
ரூ. 20,000	3 வருடங்கள்	22.50 % P.A.
ரூ. 12,500	1 வருடம்	19.50 % P.A.
ரூ. 12,500	2 வருடங்கள்	19.75 % P.A.
ரூ. 12,500	3 வருடங்கள்	20.00 % P.A.
ரூ. 24,000	5 வருடங்கள்	20.00 % P.A.
ரூ. 7,500	4 வருடங்கள்	21.00 % P.A.

1. பின் தேதியிட்ட காசோலைகள் முன்னதாகவே தரப்படும்.
2. மறு முதலீட்டுத் திட்டங்களில் உங்கள் முதலீடு 36 மாதங்களில் இரு மடங்காகிறது.
3. லேவாதேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும்.

Dr. லட்சுமி பிரகாஷ், M.com.,Ph.D.,
இயக்குனர்

பெண்களையும், முதியவர்களையும், உங்களையும் மனதில் கொண்டு பெண்களால் நடத்தப்படும் பண்ட்"

ADSTART



Mrs. B. MYTHILI

Dip in Hair Dressings, River Academy Hangkong, Dip, in Teachers Training, IVETE South America.

Specialist Member BABTAC, UK

Consultant in Beauty Culture & Beauty Theraphy

மைதிலீஸ்

பெண்கள் அழகுக்கலை நிலையம் மற்றும் பயிற்சிப் பள்ளி அடிப்படை அழகுக்கலை நிபுணர்கள் பயிற்சி :

காலம் : ஒரு மாதம்

கட்டணம் : ரூ. 12,000/-

(அடிப்படை அழகுக்கலை, ஹேர்கட்டிங், எலக்ட்ரோதெரபி, 45 வகையான கொண்டை அலங்காரங்கள், மற்றும் பல.)

மேலும் அட்வான்ஸ் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன. அட்வான்ஸ் பயிற்சிக்கான காலம் : 3 நாட்கள்.

அட்வான்ஸ் பயிற்சிகள் : 1. எலக்ட்ரோதெரபி, 2. அரோமாதெரபி, 3. Hair Colouring, 4. Ear boring, 5. Electrolysis, 6. புருவத்தைப் பெரிதுபடுத்துதல் (Pigment Implanting)

மேலும் அழகுக்கலை நிலையத்தில் வழங்கப்படும் சிகிச்சைகள் :

1) தலைமுடி பராமரிப்பு, முடி உதிர்வதைத் தடுக்க மற்றும் பொடுகு நீக்கும் சிகிச்சை 2. Facial, 3. Bleach, Waxing, 4. Pedicure, Manicure, 5.தேவையற்ற முடியை முகத்தில் இருந்து நீக்கும் Electrolysis சிகிச்சை. 6. சிறந்த முறையில் மணப்பெண் அலங்காரம், 7. Hair Colouring 8. வலியின்றி காது குத்துதல் மற்றும் புருவத்தைப் பெரிதாக்கி அழகுபடுத்துதல்.

மற்றும் Computerised Fitness Machine மூலம் உடம்பின் தேவையற்ற சதையைக் குறைக்கும் நவீன சிகிச்சை!

மற்றும் எங்களது எல்லாவித சிகிச்சைகளும் நவீன மெஷின்கள் மூலம் நடைபெறுகின்றன!

வெளிநாட்டு மாணவிகளுக்குத் தனிக் கட்டணம்.

எங்களது அழகுக்கலை நிகழ்ச்சியை 'ராஜ் டீ.வி'யில் செவ்வாய்தோறும் மாலை 6.30 - 7.00 வரை கண்டுகளியுங்கள்!

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

MYTHILI'S THE SCHOOL OF BEAUTY CULTURE & HAIR DRESSING.	**MYTHILI'S THE SCHOOL OF BEAUTY CULTURE & HAIR DRESSINGS,**
No. 1, Prakasam Road, Panagal Park, T. Nagar, Madras - 600 017. Ph : 8255579.	upstairs, No. 4, 100 feet Road, Gandhipuram, Coimbatore - 641 018.







• சௌம்யா

குளிர்ச்சி தரும் உணவு:

முதல் பரிசு ரூ. 300/-

சாபுதானா டிலைட், தயிர் ராய்தா

தேவையான பொருட்கள்:
சவ்வரிசி - 250
பயிற்றம் பருப்பு - 100 கி
தேங்காய் - 1 மூடி
ப. மிளகாய் - 4
எலுமிச்சம்பழம் - 1
வெள்ளரிக்காய், காரட் துருவல், கொத்து மல்லி, கறிவேப் பிலை - தேவையானது.
ரீபைண்ட் எண்ணெய் - 100 கிராம்.
கடுகு, உ. பருப்பு, க. பருப்பு, முந்திரி - தாளிக்க.

இம்மாத இல்லத்தரசி

செய்முறை :

சவ்வரிசியை நன்கு அலம்பி, அது மூழ்கும் அளவு நீரில் முதல் நாளே ஊற வைக்கவும். காலையில் சாபுதானா டிலைட் தயாரிக்கலாம். காலையில் பயிற்றம் பருப்பை முக்கால் பதமாக வேக வைக்கவும். பின் வாணலியில் ரீபைண்ட் ஆயிலை வைத்து கடுகு, உ.பருப்பு, க.பருப்பு, முந்திரி, இவற்றுடன் ப.மிளகாயையும் கலந்து தாளித்து. பின் அதில் ஊறவைத்துள்ள சவ்வரிசியை போட்டு ஒரு 10 நிமிடம் மேலே தட்டால் மூடி வைக்கவும். சவ்வரிசி நன்கு பதமாக வெந்துவிடும். பின் அதில் முக்கால் பதமாக வெந்துள்ள பயிற்றம் பருப்பையும், தேங்காய்த் துருவலையும் போட்டு, தேவையான உப்பைச் சேர்த்து நன்கு கிளறி 5 நிமிடம் கழித்து கீழே இறக்கிவிடவும். ஆறின பின் இந்த டிலைட்டில் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து நன்கு கிளறவும். பின் இந்த சாபுதானா டிலைட்டை ஒரு அகலமான பேசினில் கொட்டி அதன்மேல் துருவி வைத்துள்ள காரட், வெள்ளரிக்காய் துருவலையும், கொத்துமல்லி, கறிவேப்பிலையும் தூவி அலங்கரிக்கவும், இப்பொழுது இந்தப் பண்டம் பார்ப்பதற்கு க வ ர் க வ ர ா க,
இ வ கு
சுவையாகவும்' இருக்கும்.

இதற்குத் தொட்டுக் கொள்ள தயிர்ராய்தா (விரும்பினால்) தயாரித்துக் கொள்ளவும். ராய்தா தயாரிக்க-

தேவையான பொருட்கள்:
புளிப்பில்லாத தயிர் - 1கப்
வெங்காயம் 2,
தக்காளி 2- பொடிப்பொடியாக நறுக்கியது.
ஓமப்பொடி, காராபூந்தி - 100 கிராம்.
உப்பு, சர்க்கரை - ருசிக்கேற்ப.

செய்முறை:

தயிரை நன்கு கடைந்து அதில் உப்பு, சர்க்கரை சேர்க்கவும். பின் அதில் நறுக்கியுள்ள வெங்காயம், தக்காளி இவற்றையும்





ஓமப்பொடி, காரா பூந்தி இவற்றையும் கலக்கவும்.

இந்த சாபுதானா டிலைட் ஒரு மகாராஷ்டிரா ஸ்பெஷல். இந்த டிலைட்டை கோடைக் காலத்தில், அடிக்கடி தயாரித்து சாப்பிட, உடம்பும் குளிர்ச்சியடையும், பச்சையான காய்கறிகளை சாப்பிடுவதனால் உடம்பிற்கு தேவையான சத்துக்களும் சேரும்.

–ஆர். சுபாஷிணி, செய்யாறு.

இரண்டாம் பரிசு ரூ. 200/–

நெல்லி காய கல்பம்

குளிர்ச்சி என்றவுடனே எங்கள் வீட்டில் பரம்பரை பரம்பரையாக நாங்கள் பயன்படுத்தும் நெல்லி காய கல்பம்தான் எழுதத் தோன்றுகிறது. நெல்லியளவு தினம் உண்டு வர பல நோய்கள் பறந்தோடும். மலச்சிக்கலுக்குக் கைகண்ட மருந்து. மூலச்சூடு தணிக்கும். நாட்பட்ட இருமல் மார்சளி கட்டுக்கு வரும். இதன் இன்றைய மாடர்ன் பெயர் ஜாம் என்று வைக்கலாம். இது 5 வருடங்கள் ஆனாலும் கெடாது. மலை நெல்லிக்காய் நன்கு முற்றியது வைகுண்ட ஏகாதசி கழித்து வாங்கவும். அப்போதுதான் நன்கு முதிர்ந்து இருக்கும்.

தேவையான பொருட்கள்:

நெல்லிக்காய் – ¼ கிலோ,

சர்க்கரை - 1 டம்ளருக்கு 1½டம்ளர்,

நெய் – 1/8 டம்ளர்.

முற்றிய நெல்லிக்காய் கொட்டை நீக்கி மிக்ஸியில் துருவிக் கொள்ளவும். சர்க்கரை அடுப்பில் பாத்திரத்தில் கொட்டி சிறிது தண்ணீர் (¼டம்ளர்) ஊற்றவும். சர்க்கரை கரைந்து பிசுபிசுப்பான பாகு (லட்டு பாகு) வந்தவுடன் நெல்லிக்காய்தூள் கொட்டி 5நிமிடம் கலந்து நெய் சேர்க்கவும். அல்வா போல் திரண்டு வரும் சமயம் இறக்கவும். இதை ஆறியவுடன் பாட்டிலில் கொட்டி வைக்கவும். தினமும் 1 நெல்லியளவு சாப்பிடவும். இது அல்வா போன்று இருக்கும். ரொட்டிக்கு ஜாம்போன்று தடவிச் சாப்பிடலாம். எந்த ஜூஸுடனும் 1 டீஸ்பூன் கலந்தும் சாப்பிடலாம்.

கார பக்குவம்:

நெல்லித்தூள் – 2 டம்ளர்

மஞ்சள்தூள் – ½ டீஸ்பூன்

வறுத்த கடுகு – 1 டீஸ்பூன்

உப்பு - 1/8 டம்ளர்

பச்சைமிளகாய் 20.

பச்சைமிளகாய், உப்பை மிக்ஸியில் துருவி அத்துடன் நெல்லித்தூள் செய்து கலந்து மஞ்சள்தூள், வறுத்த கடுகு அனைத்தையும் பச்சையாகக் கலந்து பாட்டிலில் நன்கு அழுத்தி அமுக்கி வைத்து மூடவும். நிறம் சற்று மாறுமே தவிர 2 ஆண்டுகள் கெடாது. இதனை கடுசோற்றுடன் பிசைந்து சாப்பிடலாம். தேங்காய் சேர்த்துத் துவையல் அரைக்கலாம். தயிர்ப் பச்சடி செய்யலாம். நீர் மோருடன் 2 டீஸ்பூன் கலந்து சாப்பிட மிகமிகக் குளிர்ச்சி. உடலுக்கு ஆரோக்கியம்.

– கே. சௌம்யா, வேலூர் - 6.

மூன்றாம் பரிசு ரூ. 100/-

வெந்தயப் பொங்கல்

தேவையான பொருட்கள் :

பச்சரிசி – 250 கிராம்

வெந்தயம் – 2 டீஸ்பூன்

முழு பூண்டு– 2

தேங்காய் –1

செய்முறை:

முதலில் வெந்தயத்தைப் பொன் வறுவலாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். பூண்டையும் உரித்து வைத்துக் கொள்ளவும். அடுப்பைப் பற்ற வைத்து பாத்திரத்தில் 1 லிட்டர் தண்ணீர் வைத்துத் தண்ணீர் நன்றாகக் கொதிநிலை வந்ததும் அரிசி, வெந்தயம், பூண்டு மூன்றையும் ஒன்றாக வேக விடவும். நன்றாக பசை போல் வெந்ததும் உப்பைத் தேவைக்கேற்ப போட்டு இறக்கி விடவும். பிறகு தேங்காயைப் பால் எடுத்துப் பிழிந்து பொங்கலில் ஊற்றிக் கிளறவும். சாப்பிட மிகவும் நன்றாக இருக்கும்.

வெய்யில் காலத்தில் இது மிகவும் உஷ்ணத்தைத் தவிர்க்கும். மலச்சிக்கலைத் தவிர்க்கும். வயிற்று வலி வயிற்றுப் போக்கு இவற்றுக்குச் சிறந்த மாமருந்து.

- கன்யாகுமரி, புலிவலம்.



குட்டி குட்டி கத்தரிக்காய்களை நான்காக பிளந்து அதற்குள் மசாலாவை அடைத்து குக்கரில் சாதம், பருப்பு வைக்கும் பொழுது ஒரு தட்டில் மேலாக வைத்து குக்கரை மூட வேண்டும். வெயிட் போடும்முன் வெளியே எடுத்து பிறகு வாணலியில் தாளித்து வதக்கினால் மசாலாவெல்லாம் வெளியே வராமல் காயில் நன்றாகப் பிடித்துக் கொண்டு கலபமாக வதங்குவதோடு அழகாக முழு கத்தரிக்காய் ரோஸ்ட்டும் ரெடி. இதே டெக்னிக்கை உருளைக்கிழங்கு ஸ்டஃப்டு காப்ஸிகம் கறி செய்யவும் பயன்படுத்தலாம்.

– பானுமூர்த்தி

மைதிலீஸ்

ஆண்களுக்கான அழகுப் பயிற்சி நிலையம்

அழகுக்கலை நிலையத்தில் வழங்கப்படும் சிகிச்சைகள்

1. தலைமுடி பராமரிப்பு (பொடுகு நீங்க, தலைமுடி உதிர்வதைத் தடுக்க). 2. Bleach, 3. Facial, 4. Pedicure, Manicure (கைகால் பராமரிப்பு), 5. முகத்திலுள்ள மங்கு, பரு நீக்கும் சிகிச்சை, 6. மணமகன் அலங்காரம், 7. Hair Colouring, 8. Lucky Mole (அதிர்ஷ்ட மச்சம்) 9. எலக்ட்ரோதெரபி, 10, அரோமோதெரபி. 11. Fancy ear boring.

மற்றும் Computerised Fitness Machine மூலம். உடம்பின் தேவையற்ற சதையைக் குறைக்கும் மிக நவீன சிகிச்சை.

மற்றும் முகம், முடி பராமரிப்பு அனைத்தும் நவீன மெஷின்கள் மூலம் செய்யப்படுகிறது!

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

MYTHILI'S THE SCHOOL OF BEAUTY CULTURE & HAIR DRESSINGS FOR MEN

No. 1, Prakasam Road II Floor,
Panagal Park, T.Nagar,
Madras - 600 017. Ph. : 8255579

தீராத இடுப்பு வலி- கழுத்து - தோள் - மூட்டு வலியா? இனியும் துன்பப்படவேண்டாம் !



திருமதி ஜி. ஜலஜா (வயது 44) No.8-A, II பாரதியார் தெரு, பழவந்தாங்கல், சென்னை-114. இவர் முதுகு தண்டு வலி, விலா எலும்புகளில் குத்தல் நோவு, மற்றும் இடுப்பு வலி, மூட்டு வலியினால் மிகவும் துன்பப்பட்டார். X-ray எடுக்கப்பட்டு எலும்பு தேய்வின் அறிகுறி உள்ளது; மருந்தால் குணம் கிடையாது என்று கூறப்பட்டது. 6 மாதம் சிகிச்சை பெற்றும் பலனின்றி பிறகு எமது 2 மாத சிகிச்சையில் பூரண குணம் அடைந்துள்ளார். "முன்பு வலி இருந்த சுவடே இப்போது இல்லை..." என்று சான்று கொடுத்துள்ளார். 15 வயதிலிருந்து 90 வயதிலும் கழுத்து, தோள், இடுப்பு, மூட்டு வலி, கை, கால் வலி என்று ஏதோ ஒரு வலி இல்லாதவர்களே இல்லை. கழுத்து எலும்பில் C4 to C7மற்றும் LUMBAR VERTEBRAEவின் குறிப்பாக L4 L5 S1 S2 இணைப்பு எலும்புகள் தேய்வு (DEGENERATIVE CHANGES) காரணமாக கழுத்து வலி, (CERVICAL SPONDYLITIS) இடுப்பு முறிவது போல் வலி (LUMBAGO) இடுப்பு முதல் தொடை, கால் நரம்புகள் இழுப்பது, குடைவது போன்ற வலி, (SCIATICA) மூட்டுகளில் வீக்கம், வலி, (SYNOVITIS, ARTHRITIS) கால்களில் மதமதப்பு, மரத்துப் போதல், TOILETல் உட்கார்ந்து எழுவதில் மிகுந்த கஷ்டம், கை, கால்கள் நடுக்கம், (PARKINSON-ISM) கைகளை உயர்த்த,கால்களை நீட்டி மடக்க முடியாமை, கால் பாதங்களில் வீக்கம், பக்கவாதம், இளம் வயதிலேயே கால்கள் சூம்புதல் / செயலற்று போவது, இன்னும் எத்தனையோ விதமான நரம்பியல் வாத நோய்களுக்கு அபூர்வமான சித்தர் குரு மருந்து சிகிச்சை அளிக்கிறோம். இவைகளுக்கெல்லாம் வெறும் வலி நிவாரண மாத்திரைகளை மட்டுமே சாப்பிட்டுக் கொண்டு காலத்தை கடத்துவது தவறு! Physiotheraphy மற்றும் PLASTRY/OIL MASSAGE சிகிச்சைகளில் ஓரளவே குணம் பெற்றவர்களும் எமது குருமருந்து சிகிச்சையில் 99% பேர் முழுமையான குணம் பெற முடியும்!

வலிப்பு நோய் T.B., ஆஸ்துமா, கல்லீரல் வீக்கம் (Hepatitis) சிறுநீரக கோளாறுகள், நீரடைப்பு, கல்லடைப்பு, அடிக்கடி அரை மணி, ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை சிறுநீர் கழிதல், வெண் படைகள், பிடிவாதமான தோல் நோய்களுக்கும் சிறப்பு மருத்துவம் உண்டு!

நவோதயா சித்தர் மருத்துவமனை

20, ஆற்காடு ரோடு (மாடியில்) கோடம்பாக்கம், சென்னை - 600 024.
(லிபர்டி பஸ் ஸ்டாப் ஓவர் பிரிட்ஜ் அருகில்) போன் : 4940662 / 4954389 / 8551258 (வீடு)

BRINDAVAN NAGAR BENEFIT FUND LIMITED

(Approved by Govt. of INDIA)

REGD. OFFICE : P.Box No. 8717 SIR VENKATESWARA NILAYAM, Mahalakshmi Nagar, 5th Street, Brindavan Nagar, Adambakkam, Madras - 88. H.O. Phone : 2349710

EXTN. COUNTER : 1, Kootu Road, Madipakkam, Madras - 600 091.

21% P.A.

Monthly Interest for Fixed Deposits with incentive for all deposits.

JEWEL LOAN DAILY AVAILABLE

Flats & Building mortgage loans available.
(30 days with document clear.)

SAFE DEPOSITS LOCKERS

Available for without rent (Big & Small Size)

BRINDAVAN GRADUATE DEPOSIT :

Deposit Rs. 990/- only
to get back 50,000 after 21 years.

அசல் பட்டு தயாரிப்புக்களை விற்பனை செய்ய மொத்த/ சில்லறை விற்பனையாளர்கள் தேவை

அசல் பட்டினால் நாங்கள் கீழ்க்கண்ட பொருட்களைத் தயாரிக்கிறோம்.

1. தறியினால் நெய்யப்பட்ட பட்டுத்துணி வகைகள், பனியன் மற்றும் டெர்ரி பட்டுத் துணி வகைகள்.
2. மேற்கண்ட பட்டுத்துணி வகைகளினால் தயார் செய்யப்பட்ட - மகளிர். ஆடவர், குழந்தைகளுக்கான - சுடிதார், சர்ட்டிங். சூட்டிங் போன்ற ஆயத்த ஆடைகள் மற்றும் பர்னிசிங் பேப்ரிக்ஸ்.
3. நிட்டட் / பனியன் பேப்ரிக்கால் தயாரிக்கப்பட்ட பட்டு டி-சர்ட்டுகள், நைட்டிகள் போன்றவை.


இவை அனைத்தும் அசல் பட்டினால் தயாரிக்கப்பட்டவை—
தேவையுள்ளவர்கள் அஞ்சல் மூலமாகவோ,
நேரிலோ தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.
ஏற்றுமதி விசாரிப்புக்கள் வரவேற்கப்படுகின்றன.

பால்சன் எக்ஸ்போர்ட்ஸ் இந்தியா,
சி-268 (8-வது பஸ் நிறுத்தம்)
திருநகர், மதுரை - 625 006. (தொலைபேசி: 883071)

(NOTE:Women who wish to work as our Company's Area Representatives in TamilNadu may also apply to us and appointment will be made on first come basis)

துவரம் பருப்புத் துவையல் தயாரிக்கும் போது சிறிது கொள்ளையும் வறுத்துச் சேர்த்து அரைத்தால் மணமாகவும், சுவையாகவும் இருக்கும். விருப்பப்பட்டால் பூண்டும் சேர்த்து அரைக்கலாம். உடம்பிற்கும் நல்லது.

— சீதாவிஸ்வநாத்.



ஆறுதல் பரிசு ரூ. 50/-

கூல் ஃபலூடா

தேவையான பொருட்கள்:

தயிர் - 2 கப்,
பால் - 4 கப்,
ஜவ்வரிசி - ¼ கப்,
பார்லி அரிசி - 2 டேபிள் ஸ்பூன்,
சன் ஃப்ளவர் ஆயில்- 4 டேபிள் ஸ்பூன்,
வெள்ளரிக்காய் - 1
கேரட் - 1
ஆப்பிள் - 1 (அ) ½
மாதுளை முத்துக்கள் - ¼ கப்
திராட்சைப் பழம் பச்சை (அ) கறுப்பு - 10.
முந்திரி பருப்பு - 6
மிளகுப் பொடி - ¼ டீஸ்பூன்
பொடித்த உப்பு - தேவைக்கேற்ப.

செய்முறை:

தயிரைக் கடைந்து கொள்ளவும், பின்னர்-வாணலியில் எண்ணெய் வைத்துக் காய்ந்ததும் ஜவ்வரிசியைப் பொறித்தாற்போல் வறுத்து ஆற விட்டுத் தயிரில் சேர்க்கவும். இதே போல் பார்லி அரிசியையும் பொறித்தாற் போல் வறுத்து ஆறவிட்டுத் தயிரில் சேர்க்கவும். 3 மணி நேரம் ஊற விடவும்.

பாலைக் காய்ச்சி ஆறவிடவும். வெள்ளரிக் காய், காரட், ஆப்பிள், மூன்றையும் சன்ன மாகத் துருவி பாலில் சேர்க்கவும். பாலில் இவைகளையெல்லாம் நன்கு கலக்கி பாலை குளிர்பதனப் பெட்டியில் வைக்கவும். தயிரில் ஜவ்வரிசி, பார்லி ஊறியதும், குளிர்பதனப் பெட்டியிலிருக்கும் மசாலாப் பாலை எடுத்து, இரண்டையும் ஒன்றாய்க் கொட்டி நன்கு கிளறவும். சிறியதாக ஒடித்த வறுத்த முந்திரி துண்டங்களை சேர்க்கவும்.

தேவையானால் கடைந்த தயிரோ, பாலோ வேண்டியது சேர்த்துக் கொள்ளலாம். அழகிய நீண்ட டம்ளர்களில் மூன்றாவதாய் தயார் செய்துள்ள கலவைகளை ஊற்றவும்.

இந்தக் குளிர்ந்த "கூல் ஃப்லூடா"வில் திராட்சை 1, 2, சில மாதுளை முத்துக்கள் ஒவ்வொரு டம்ளரிலும் கலந்து பரிமாறவும். சத்தும், குளிர்ச்சியும் நிறைந்த வெய்யிலுக் கேற்ற இனிய உணவாகும்.

மேலும் உப்பும் மிளகுப் பொடியும் கலக்கி ஸ்பூனால் பருகவும்.

தேவைப்படுவோர் இதில் சர்க்கரையும், ஏலப்பொடியும் சேர்த்துக் கலக்கி ஸ்பூனால் பருகவும்.

—இந்திராணி சுப்பாராவ்,
சென்னை - 4.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

பச்சைப் பயிறு இன்ஸ்டன்ட் பாத்

தேவையான பொருட்கள்:

பச்சைப் பயிறு - ½ கப்
பச்சை அரிசி - ½ கப்
பொடியாக நறுக்கிய வெங்காயம் - ½ கப்
தக்காளிப் பழம் -2
பச்சை மிளகாய் - 4
பொடியாக நறுக்கிய கொத்தமல்லி - 2 ஸ்பூன்
பட்டை - 1துண்டு
கிராம்பு - 2
ரிஃபைண்ட் ஆயில் - 4 ஸ்பூன்
மிளகு சீரகத்தூள் - ½ ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
நெய் - 1 ஸ்பூன்
தண்ணீர் - 2 கப்.

செய்முறை :

அரிசியையும் பயிறையும் களைந்து 2 கப் தண்ணீர் ஊற்றி வைக்கவும். வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் பட்டை, லவங்கம் போட்டு வறுத்து, வெங்காயம், பச்சை மிளகாய் போட்டு நன்கு வதக்கவும். பின்பு நறுக்கிய தக்காளியைப் போட்டு நன்கு சுருள வதக்கி, உப்பு, கொத்தமல்லிச் சேர்த்து வதக்கி ஊற வைத்த அரிசி, பயிறுடன் சேர்க்கவும். இந்தக் கலவையை குக்கரில் வைத்து 2 விசில் (அ) 10 நிமிட நேரம் வேக வைத்து இறக்கவும்.

பொலபொலவென மணக்கும் பச்சைப்பயிறு பாத் ரெடி. இதில் 1 ஸ்பூன் நெய்யும் மிளகு சீரகத்தூளும் சேர்த்து கரண்டி காம்பால் கிளறி சுடச்சுட தேங்காய் சட்னியுடன் பரிமாறவும்.

— வத்சலா பாலசுப்ரமணியன்,
மைசூர்.

TWIN - EDGED ADVANTAGE



Here's a unique benefit fund from Riches & Cliff group.

Schemes

I. FIXED DEPOSIT

Interest Payable : Monthly/Post-dated Interest Warrants will be issued for each Financial Year
Minimum Deposit : Rs.3,000/- Additional Deposits : Rs.1,000/-

Period	1Year	2 Years	3 Years	4 Years	5 Years
Interest	19.5%	19.75%	20%	21%	22%

II. CUMULATIVE DEPOSIT

Minimum Deposit : Rs. 1000/-Additional Deposits : Rs. 1000/-

Amount of Deposit (Rs.)	12 Months	Maturity Value After 24 Months	36 Months	48 Months
1,000/-	1,230/-	1,520/-	1,870/-	2,380/-
5,000/-	6,170/-	7,600/-	9,370/-	11,900/-
10,000/-	12,330/-	15,200/-	18,730/-	23,800/-

III. CLIFF MONEY DOUBLE / IV. CLIFF MONEY TRIPLE

Minimum Deposit : Rs. 1,000/-

	III. Cliff Money Double	IV. Cliff Money Triple
Period	40 months	60 months
Maturity	Rs. 2,000/-	Rs. 3,000/-

Additional Deposits : Rs. 1,000/-

Transactions with members only.

•Recurring Deposit •Cliff Family Deposit •Long Term Deposit Schemes available.


INCENTIVE 4% TO 7% ON ALL DEPOSITS.

RICHES CLIFF

CLIFF BENEFIT FUND LIMITED

Head Office: No.7, 2nd Floor, Parsn Villa, No.56, Luz Church Road, (Opp. Devaki Hospital), Mylapore, Madras - 600 004. Ph: 4997959, 4970454, 4970983.
Marketing Office: No.43, Veeraperumal Koil Street, Mylapore, (Near Luz Anjaneyar Temple), Madras - 600 004. Ph: 4990373.

Branch Offices: **MADRAS**: No. M-65/1, 7th Avenue Besant Nagar, Madras-600 090. Ph: 4915762. **COIMBATORE**: No.1064, Second Floor, Trichy Road, Next to A.I.R.Station, Ramanathapuram, Coimbatore-641 045. Ph: 218799. **MADURAI**: No.279, Second Floor, Good Shed Street, Madurai-625 001. Ph: 543453. **TRICHY**: City Tower, Third Floor, No.1, Royal Road, Opp. Central Bus Stand, Cantonment, Trichy-620 001. **SALEM**: 22-C/11, Subramanya Koil Street, "Fairlands", Siva Plaza, Opp. Sarada College, Salem-636 016. Ph: 445460. **VELLORE**: No.312, Vijayalakshmi Building, Second Floor, Phase II, Near Murugan Theatre, Sathuvachari, Vellore-632 009. **CHITTOOR**: No.18-746/1, S.K.Complex, High Road, Chittoor-517 001. **RAJAMUNDRY**: 1 Floor, No.77-8-4/1, A.S.Complex, R.T.C.Complex Road, Near Ramakrishna Theatre, Rajamundry-533 103. **VIJAYAWADA**: Swarnalok Complex, First Floor, Eluru Road, Governorpet, Vijayawada-520 002. **BANGALORE**: #8/A-14, East End Main Road, 4th "T" Block, Jaya Nagar, Bangalore-560 041. Ph:6652702.



மனக்கதவு

செருவை நாக ராசனின் சிறுகதைத் தொகுப்பு. நிகழ்காலச் சம்பவங்கள், பிரச்னைகள் குறித்த கதைகள்.

பக் - 164 விலை ரூ. 30.00

(தேவஸி பதிப்பகம், 1151, ராசகோபால புரம் வீட்டு வசதி வாரியம், புதுக்கோட்டை - 622 003.)

முத்துப்போன்ற பத்துப்பேர்!

மாவீரன் அழகு முத்துக்கோன் போன்ற சாதனை படைத்த பத்து பேரைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகள். ஆசிரியர் - பி.எல். ராஜேந்திரன்.

பக் - 86 விலை ரூ. 18.00

(சங்கீதா பதிப்பகம், 14/2 பீட்டர்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 600 014.)

நூற்றெட்டுப் போற்றி வழிபாடு

விநாயகர் முதல் ராகவேந்திரர் வரை தமிழில் போற்றி அர்ச்சனையைத் தொகுத்திருப்பவர். - இரா. இளைய பெருமாள்.

பக் - 61 விலை ரூ. 5.00

ஸ்ரீ சத்ய நாராயண பூஜை

விரதம், கதை, துதிப் பாடல்கள்

பக் - 30 விலை ரூ 3.00

(இரண்டும் சருத்தலை நிலையம், 58, ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி, சென்னை - 600 001.)

பெண்களுக்கு அவசியமான குறிப்புகள்

பெண்கள் குடும்பத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைக் கூறுபவர் வசந்தி அம்மாள்.

பக் - 128 விலை ரூ. 22.00

சைவம் - அசைவம் சமைத்துப்பார்

நூறு வகை சமையல் குறிப்புகள். ஆசிரியர் வசந்தி அம்மாள்.

பக் - 128 விலை ரூ. 22.00

(இரண்டும் மோகன் புத்தக நிலையம், 4, வள்ளலார் தெரு, பத்மநாப நகர், சூளைமேடு, சென்னை - 94.)

உங்களால் வெற்றி பெற முடியும்

தன்னம்பிக்கை நூல்களை எழுதும் மெர்வின் இங்கும் பெரிய அளவில் சுவையான நூலாகப் படைத்துள்ளார்.

பக் 500 விலை ரூ. 80.00

(குமரன் பதிப்பகம், 2. முத்து கிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

Astrology & Cookery

புதுமையான முயற்சி. ராசிக்காரர்களுக்கு ஏற்ற உணவு பற்றிக் கூறுபவர் கடலங்குடி கே.எஸ். சரஸ்வதி.


பக் - 128 விலை ரூ. 35.00

விஞ்ஞான காலத்திலும் சகுன பலன்கள்

வராஹமிஹிரர் எழுதிய சகுன நூலின் தமிழ் உரை கடலங்குடி நடேச சாஸ்திரிகள். தொகுப்பு கே.எஸ். சரஸ்வதி.

பக் - 174 விலை ரூ. 25.00

(இரண்டும் - கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை - 17.)



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் யோசனைகள்

தன்னடக்கம், இரக்கம், துன்பம் என பல தலைப்புகளில் யோசனைகள் கூறுபவர் காவேரிக் கவிராயர்.

பக் - 100 விலை ரூ. 18.00

அவள் ஒரு பருத்திப்பூ

சமூக ப்ரக்ஞையுடன் எழுதும் திலகவதி இங்கு இரண்டு குறுநாவல்களை எழுதியுள்ளார்.

பக் - 164, விலை ரூ. 32.00

(இரண்டும் - ராஜேஸ்வரி புத்தக நிலையம்,

22, 6வது தெரு, பக்தவத்சலம் நகர், பழவந்தாங்கல், சென்னை - 114.

நாள் முழுக்க நாடகம்

அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களைக் கொண்டே வாழ்வின் பிரச்னைகளை சுவையாக எடுத்துக் கூறும் அனுராதா ரமணனின் இரண்டு குறு நாவல்கள்.

பக் - 232 விலை ரூ. 40.00

இருட்டு அரண்மனைகள்

கல்கி ராஜேந்திரன் எழுதிய துப்பறியும் நாவல். உலகம் முழுக்க உள்ள மாஃபியா கும்பல் இங்கும் நாம் நாட்டை சீரழிப்பதைத் தடுக்கும் முகமாகச் செயல்படும் சுதாநாயகனின் கதை. விறுவிறுப்பான நாவல்.

பக் - 236 விலை ரூ. 40.00

(இரண்டும் கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.)

சுவையான காதல் கவிதைகள்

காதலர்களுக்கான முழுமையான கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் எஸ். அறிவு மணி.

பக் - 148 விலை ரூ. 28.00

சிந்தனைக்கு விருந்தாகும் சுவையான செய்திகள்

தண்ணீரில் மிதக்கும் கான்கிரீட் போன்ற சுவையான செய்திகள். ஆசிரியர் கே.எஸ். சுப்ரமணி.

பக் 188 விலை ரூ. 35.00

(இரண்டும் மணிமேகலை பிரசுரம், த.பெ. எண்: 1447, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17.)

குழந்தை வளர்க்கும் கலை

தாய்தந்தையர் படிக்க வேண்டிய நூல். ஆசிரியர் பி.எஸ்.ஆர். ராவ்.

பக் - 168 விலை 30.00

ஹிப்னாடிச பயிற்சியும் வாழ்க்கை முன்னேற்றமும்.

நாமே பயிற்சி செய்து முன்னேறுவதற்கான வழிகளைக் கூறுபவர் பி.சி. கணேசன்.

பக் - 104 விலை ரூ. 18.00

(இரண்டும் நர்மதா பதிப்பகம், 16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 17.)

சனி, குரு, ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

ஆசிரியர் ஸ்ரீ ஜெகஜீவ கருணாலய நிதி. பொதுப்பலன்கள், எண் கணிதம், கைரேகைப் பலன்கள்.

பக் - 298 விலை ரூ. 30.00

(பராசக்தி நிலையம், 127, தெற்காவணி மூல வீதி, மதுரை - 625 001.)

மனதைத் தொடாதே

ஏ. நடராஜனின் சிறுகதைத் தொகுப்பு. பண்பாடு மாறாது சுவையாகச் சொல்லப்படும் சிறுகதைகள்.

பக் - 207 விலை ரூ. 40.00

அடிகளார் ஓர் உறவுப் பாலம்

குன்றக்குடி அடிகளாரின் துறவும், சமூக சேவையும் இணைந்த உயரிய வாழ்க்கை பற்றி பல அறிஞர்களின் கட்டுரைத் தொகுப்பு.

பக் - 224 விலை ரூ. 50.00

(இரண்டும் வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.)

வெற்றியை விட வெற்றிகரமான தோல்வி நிறைய அனுபவங்கள் தரும்.

— மான் டெயின்

தகவல் : கே.வி. சீனிவாசன்





ஊசியைப் பார்த்து சல்லடை சொல்கிறது,

உன்னுடைய வாயில் ஒரு ஓட்டை இருக்கிறது என்று.

தகவல் : வி.வி. ஜனனி சரஸ்வதி

வீட்டு கைவைத்தியப் 'பொக்கிஷம்!

கை வைத்தியம் என்பது பாரம்பர்யமாக நம்மிடம் இருந்த அற்புதமான மருத்துவக் கலை. நவீன உலகில் அருகிவரும், பின் விளைவோ பக்க விளைவோ இல்லாதது அம் மருத்துவமுறை. இதனை வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்பி திருச்சி - 17 ல் தென்னூரில் ப்ரியா நர்ஸிங்ஹோம் வைத்திருக்கும் பிரபல சித்த மருத்துவ நிபுணரும், தற்பொழுது மத்திய அரசின் ஆயுர்வேதா மற்றும் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சிக் கழகத்தின் அறிவியல் ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் உள்ள டாக்டர் இரா. கண்ணனைக் கேட்டோம். இங்கு அவர் நம் வாசகிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

கேள்வி : நான் சிவப்பு நிறம் உடையவள். என் முகத்தில் புதிதாக மச்சங்கள் புள்ளி போல் அதிகமாக வருகிறது. இந்த மச்சங்கள் மறையவும், வராமல் இருக்கவும் கைவைத்தியம் கூறுங்கள் டாக்டர்.

எம். ஜெயந்தி, பாளையங்கோட்டை.

பதில் : தங்களுக்கு வந்திருப்பது மச்சமா அல்லது வேறு வகையா என



நேரில் பார்த்தால்தான் கூற முடியும். சில சமயங்களில் மங்கு மற்றும் பாலுண்ணி, மரு போன்றவை கூட மச்சங்கள் போல காணப்படும்.

இவற்றிற்கு நீங்கள் சீமை அகத்தி இலைச் சாற்றைத் தடவிப் பார்க்கலாம். அல்லது "குங்குமாதி லேபம்" என்ற தயாரிப்பு மருந்தைத் தொடர்ந்து தடவி வந்தாலும் பலன் தரும்.

கே. : என் மகள் ப்ளஸ்டூ படிக்கிறாள். அவள் எல்லோரிடமும் சகஜமாகப் பேசுவாள். இரண்டு வருடத்திற்கு முன் கீழ்த்தாடையில் இரண்டு பல் பிடுங்கினோம். தினமும் நன்றாகத்தான் பல் துலக்குகிறாள். அவள் பேசும் போது

மருத்துவ அறிவியல் கழகத்தின் சார்பில் குரல்வள பாதுகாப்புப் பற்றிய அகில இந்திய டாக்டர்கள் மாநாடு அண்மையில் நடைபெற்றது. இம் மாநாட்டில் சித்த மருத்துவ நிபுணரும், ஜனாதிபதியின் கௌரவ டாக்டருமாகிய டாக்டர் இரா. கண்ணனின் சித்த மருத்துவப் பணிகளை பாராட்டி கேடயமும் வழங்கி சிறப்பித்தார்கள். இதனை தமிழக ஆளுநர் மேதகு சென்னாரெட்டி அவர்கள் வழங்கி னார்கள்.

பல வாசகியரின் வேண்டுகோளுக்கிணங்க டாக்டர் கண்ணனின் முகவரியை இங்கு தருகிறோம். டாக்டர் கண்ணன், ப்ரியா நர்ஸிங் ஹோம், 8, ராமராயர் . தெரு, தென்னூர், திருச்சி - 17. தொ.பேசி எண்: 468565

வாயில் இருந்து துர்நாற்றம் அடிக்கிறது. இதற்கு எளிய மருத்துவம் ஒன்று கூறுங்கள்.

கௌரிசங்கர், கீழக்கோட்டை.

கே : என் சிநேகிதிகள் பலர் Gum bleeding ஆல் அவதிப்படுகிறார்கள். பல் வைத்தியரிடம் சென்றால், அடிக்கடி பற்களை சுத்தம் செய்வதால் பற்களும் பலவீனமாகி பணமும் செலவழிகிறதே தவிர பூரண குணம் கிடையாது. இதற்கு நல்லதொரு பரிகாரம் கூறுங்களேன்.

லலிதா பிரபாகர், சேலம் - 7.

ப : வாய் துர்நாற்றம் சம்பந்தமாக பல வாசகிகள் கேள்வி கேட்டு இருக்கிறார்கள். இந்த மாதிரியான வாய் துர்நாற்றம் பல் ஈறுகளில் வைரஸ் தொற்று இருந்தாலும் பல் சொத்தை இருந்தாலும் பல்லில் அதிக அளவில் காரை படிந்து இருந்தாலும் வயிற்றில் அஜீரணக் கோளாறுகள் ஏன் சில சமயங்களில் மலக்கட்டு இருந்தாலும் வரலாம். மேலும் பலர் முறையாக பல் துலக்குவதில்லை. நோய்கள் இருந்தால் அவற்றிற்கு முறையான சிகிச்சை செய்து கொண்டால் வாய் துர்நாற்றம் குணமாகும்.

காலையில் எழுந்த உடன் ஒரு முறை, இரவு படுப்பதற்கு முன் ஒருமுறை கட்டாயமாக பல் துலக்க வேண்டும். அதே போல் உணவு உண்ட பிறகு கை விரல்களால் பற்களை நன்கு துலக்கி வாய் கொப்பளிக்க வேண்டும். பல வகையான பற்பசைகளை பயன்படுத்துவதை விட திரிபலா சூரணம், மாசிக்காய் சூரணம் இவைகளைக் கொண்டு பல் துலக்கினால் பல் ஈறுகளிலிருந்து ரத்தம் வடிவது நின்று பல் ஈறுகள் பலம் பெறும். ஈறு பற்றிய எந்த நோய்களும் அண்டாது. வாய் துர்நாற்றத்திற்கு திரிபலா சூரணத்தைக் கொண்டு வாய் கொப்பளித்து வர வேண்டும். கருவேலங்குச்சி, ஆலம் விழுது இவைகளைக் கொண்டு பல் துலக்கலாம். சிறப்பாக கருவேலம் பட்டையைத் தூள் செய்து பயன்படுத்தி வர ஈறுகள் பலம் பெறும்.

கே : அநேகம் பேருக்கு முகத்தில் அதுவும் கன்னங்களில் 'மங்கு' எனப்படும் தோல் வியாதி ஏற்பட்டு முகத்தின் அழகை கெடுக்கிறது. இதில் 'பொங்கும் மங்கு', 'மங்கும் மங்கு' என வேறுபாடு உண்டு எனக் கூறுகிறார்களே? இதைப் போக்கவும், முகம் பொலிவுடன் இருக்கவும் நல்ல கை வைத்தியம் கூறுங்களேன்?

பார்கவி, பெங்களூர்.


ப : "பொங்கும் மங்கு", "மங்கும் மங்கு", "தங்கும் மங்கு" என்றெல்லாம் ஒன்றும் கிடையாது. பெரும்பாலும் இது பெண்களுக்கு மாத விடாய் நிற்கும் காலத்திலும் அல்லது மாத விடாய் நின்ற பிறகும் காணப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் இது நாளமில்லா சுரப்பிகளின் விகற்பத்தாலும் ஏற்படுகிறது.

இதற்குக் கைமுறை வைத்தியமாக எலுமிச்சம் பழச்சாற்றைத் தடவி வந்தால் படிப்படியாக மங்கு மறையும். சித்த மருத்துவத்தில் தயாரிக்கப்பட்ட மருந்தான "வங்க விரணக் களிம்பு" என்ற மருந்தினையும் வெளிப் பிரயோகமாகத் தடவி வரலாம். திருநீற்றுப் பச்சிலைச் சாற்றுடன் சிறிது எலுமிச்சம் பழச்சாறு, தேன் கலந்தும் தடவி வரலாம்.

• பரிசு பெற்ற கேள்வி

கே : என் மகனுக்கு வயது இருபத்தி ஒன்று. அவனுடைய தலைமுடி வெளுக்க ஆரம்பித்து இருக்கிறது. 10-15 முடிகள் நரைத்திருக்கிறது. இதனால் அவன் மிகவும் மனச்

வித்தியாசமான ப்ரேக்ஃபாஸ்ட்



கார்ன்ஃப்ளேக்ஸ், வீட் ஃப்ளேக்ஸ் தான் நல்ல சத்துள்ள சுலபமான காலை உணவா?

ஒரு கப்பில் காரப் பொரியைப் போட்டு அதில் சிறிது கட்டித் தயிர் கலந்து காலை உணவாக சாப்பிட்டுப் பாருங்கள். அமர்க்களமாக இருக்கும். குழந்தைகளும் பெரியவர்களும் போட்டி போட்டுக் கொண்டு சாப்பிடும் ருசியான, கொழுப்பில்லாத, சத்தான உணவு இது.

— உஷா

சங்கடம் அடைகிறான். மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டு இருக்கிறான். இதை வராமல் தடுக்க, போக்க வீட்டிலேயே செய்து கொள்ளும் கை வைத்தியம் கூறுங்கள் டாக்டர்.

பார்கவி, பெங்களூர்.

ப : இளநரை நம் இளைய சமுதாயத்தினரை பாதிக்கக் கூடிய ஒரு தலையாய பிரச்னைதான். இது முடிக்கு கறுமை நிறத்தைக் கொடுக்கக் கூடிய மெலனின் நிறமிகள் குறைவதால் தோன்றுகிறது. சிலருக்குப் பரம்பரையாகவும் இளநரை ஏற்படும். சிலர் வெண்குஷ்ட நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் போது அந்த இடங்களில் உள்ள முடிகள் நரைத்துக் காணப்படும். சிலருக்கு நாள்பட்ட நோய்களுக்காக தொடர்ந்து மருந்துகளை உட்கொள்வதாலும், அதி தைராய்டு சுரப்பி நோய், நீரிழிவு, ரத்த சோகை, புற்று நோய்களுக்கான கதிர் வீச்சு சிகிச்சையில் ஏற்படும் ஒவ்வாமைகளாலும், முறை காய்ச்சலிலும் நரைமுடி தோன்ற வாய்ப்பு உள்ளது. சிலருக்குப் பருவ நிலை மாறுபாடுகள், உணர் மாற்றம், தொழிற்சாலைகளில் ரசாயனத் தொடர்புடைய வேலை செய்பவர்களுக்கும் இள வயதிலேயே நரை ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது.

நரைமுடி எதனால் ஏற்பட்டுள்ளது எனக் கண்டறிந்து சிகிச்சை செய்து கொள்வது சிறந்தது.

பொதுவான நரை முடிக்கு நல்ல சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும். ரத்த சோகை இருந்தால் உடனடியாக சிகிச்சை பெறுவது அவசியம். ரசாயனப் பொருட்களாலான ஷாம்பு, சோப்புகளைத் தவிர்த்து சுத்தமான சீகைக்காய்த் தூளை பயன்படுத்த வேண்டும். கதிர் வீச்சுகளுக்கு அதிக நேரம் உட்படாமல் இருப்பது நல்லது.

வீட்டிலேயே செய்து கொள்ளும் எளிய முறை :

1. கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, மருதாணி, செம்பருத்தி, ஆகிய இலைகளை இடித்துப் பிழிந்த சாற்றுடன் சம அளவு தேங்காய் எண்ணெய் கலந்து நன்கு காய்ச்சி மணல் பதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இத்தைலத்தை நாள்தோறும் பயன்படுத்தி வந்தால் கருமையான, செழுமையான கூந்தலைப் பெறலாம்.

கே : உடலில் வளரும் தேவையற்ற முடிகளை நீக்குவது எப்படி? எளிமையான வைத்திய முறையைக் கூறுங்கள்.

கே : என் முகத்தில் சொர சொரப்பாக இருக்கிறது. அதனை நீக்கி முகம் பளபளப்பாகவும், மென்மையாகவும் இருக்க ஒரு வைத்தியம் கூறுங்கள்.

எஸ். குருபிரியா பூபதி, இடப்பாடி.


ப : உடம்பில் தேவையற்ற முடிகள் வளர்வது நாளமிலா சுரப்பிகளின் விகற்பத்தால் ஏற்படும். இதற்குத் தினமும் மஞ்சளைத் தேய்த்துக் குளித்து வந்தால் உடம்பில் தேவையற்ற முடிகள் வளர்வதைத் தடுக்கலாம். நாட்டு மருந்துக் கடைகளில் அரிதாரம் அல்லது தாளகம் என்று ஒரு மருந்துப் பொருள் கிடைக்கும். இது நஞ்சுத் தன்மை உடையது. அரிதாரம் இரண்டு பங்கு, வெற்றிலைக்குப் போடுகிற சுண்ணாம்பு ஒரு பங்கு இரண்டையும் கலந்து தேவையற்ற முடிகள் வளருகின்ற இடத்தில் தடவி வந்தால் நல்ல பலன் கிடைக்கும். ஆனால் இதை சித்த மருத்துவரின் ஆலோசனையோடுதான் செய்ய வேண்டும்.

ப : முகம் பளபளப்பாகவும், மென்மையாகவும் மாற பாலேட்டினையும், சிறிது எலுமிச்சம் பழச்சாற்றையும் கலந்து முகத்தில் பூசி ஒரு மணி நேரம் சென்ற பின்னர் குளிர்ந்த நீரில் கழுவி விட வேண்டும். இதைத் தொடர்ச்சியாக செய்து வந்தால் முகம் மிருதுவாகி, பளபளப்பாக இருக்கும். வெள்ளரிக்காய் சாற்றையும் தினந்தோறும் பூசி வருவது நல்லது. சோப்புகளை பயன்படுத்தாமல் கடலை மாவு அல்லது பாசிப் பயிற்று மாவால் முகம் கழுவுவதும் சிறந்த பலன் அளிக்கும். பாலாடையுடன் சிறிது மஞ்சள் பொடியைக் கலந்தும் முகத்தில் பூசி இருபது நிமிடங்கள் சென்ற பின்னர் குளிர்ந்த நீரில் கழுவி வர முகம் பொலிவு பெறும்.




நீங்கள் நம்புவீர்களா, நான் இந்த ஐஸ் க்ரீமை
வீட்டிலேயே செய்தேன்!
Mango
Strawberry
Kesar Pista
Vanilla
Chocolate
Black Currant
Pineapple
Butter Scotch
WEIKFIELD
Freeze
VANILLA
WRITE FOR
FREE
RECEIPE BOOKLET
Freeze
WeiKFiELD®
Weikfield Products Co. (India) Pvt. Ltd. Nagar Road, Pune-411 014.

மேஷ ராசி :



அசுவினி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்.

சூரியனும் சுக்கிரனும் சுகத்தைத் தந்தாலும், கேதுவும் சனியும் அதைக் கெடுக்கப் பார்க்கிறார்கள். ஆயினும் குருவின் பார்வை ராசிக்கும், களஸ்திரத்தானத்திற்கும், 9ம் இடத்திற்கும் இருப்பதால் கவலை தேவையில்லை. செய்யும் தொழிலில் இலாபம் உண்டு. அரசுப் பணியானாலும், அல்லது தனியார் துறையானாலும் ஆலைகளில் பணிபுரிபவர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கலாம். ராகுவினால் தனலாபமும், லஷ்மி தேவியின் பரிபூரண அருளும், துர்க்கையின் உதவியும் கிடைக்கும். எனவே, நேர்காணல் சோதனைகளில் வெற்றி உண்டு. மாதாவழி பாட்டனார் உடல் நிலை கவலை அளிக்கலாம். சிற்சில சமயங்களில் வயிற்றுக் கோளாறும் உண்டாகலாம். அவசரப்பட்டு எதையும் பேசவும் வேண்டாம். யாருக்காகவும் எதற்காகவும் வாக்கு தருவது, ஜாமின் நிற்பது போன்ற செயல்களில் இறங்காதிருப்பது நல்லது. சிலருக்குக் கடன் தொல்லை மனோவியாகூலத்தைத் தந்தாலும், குருவின் அருளால் அதற்கொரு எதிர்பாராத உதவி கிடைக்கும். சனீஸ்வரனையும், விநாயகரையும் தொழுவது நல்லது.




ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 ஆம் பாதங்கள்.

மாதத்தின் பிற்பகுதி ஏற்றமுடையதாக இருக்கும். தொழிலில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஓரளவுக்குப் பொருளாதார நிலை சீராக இருப்பது போன்ற நிலை உண்டு. ஆயினும், பணப் பற்றாக்குறை பல விதத்திலும் மனதிற்குத் தொல்லையைத் தரும். சுக்கிரன் மாதம் பூராவும் தாம்பத்திய உறவிலும் சரி, மற்ற வெளிவட்டாரத்திலும் சரி உற்சாகமான சூழ்நிலையை உருவாக்குவார். குருபலம் இல்லை என்றாலும், தசாபுத்திகளில் குருதசை, குருபுத்தி, மற்றும் சந்திரதிசை நடப்பவர்களுக்குச் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைத் தருவதுடன் புதியதொரு நட்பினையும் ஏற்படுத்தித் தருவார். இரும்பு, கல் மற்றும் இரசாயன வியாபாரிகள், அல்லது அத்தகைய தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், பணிபுரிபவர்கள் வெளிநாட்டிலிருந்து ஆதாயம் பெறுவர். செவ்வாய் பலவிதங்களில், பல கோணங்களில் சற்று மனநிம்மதியைக் கெடுப்பார். அமைந்திருக்கும் நல்ல கிரகங்களின் பலன்கள், மற்ற கிரக அமைப்பின் காரணமாக அடிப்பட்டுப் போகலாம். இதற்கு துர்க்கை, மற்றும் ஸ்ரீலஷ்மி ஸ்தோத்திரங்களைப் படிப்பது நல்லது. புதுத் தொழில்களை ஆரம்பித்தால் சில அவசியமற்ற பிரச்னைகள் தோன்றலாம். எனவே எதையும், கவனித்துச் செய்யவும். சூரியனுக்குரிய அர்ச்சனை, ஜபம் போன்றவற்றைச் செய்வதின் மூலம் நன்மையை அடையலாம்.




மிதுன ராசி :



மிருகசிரிஷம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

இந்த மாதத்தில் இராசி நாதன் முதல் வாரம் முடிய மிதுனத்தில் இருந்து கொண்டு, குருவின் பார்வையையும் பெறுவதால், சுபநிகழ்ச்சிக்கு வாய்ப்பு உண்டு. ஆனால் அதற்குப் பின் இரண்டாம் வீட்டில் இருந்து கொண்டு உங்களுக்குச் சில வகைகளில் மனக்கவலை, அவமானம், அபவாதம் இவைகளை ஏற்படுத்தலாம். இதற்கு முன் இருந்த உங்களது மேலதிகாரியின் சொற்களை கேட்டுச் செய்து முடித்திட்ட பணிகளில், தற்போதுள்ள அதிகாரி குற்றங்களைக் கண்டு பிடித்துக் கண்டனம் தெரிவிக்கும் வாய்ப்பும் உண்டு. எனினும், குருவின் பார்வையும், சுக்கிரனது அருளும் எதையும் தாங்கும் மனப்பக்குவத்தையும், குழப்பங்களிலிருந்து விடுபடும் சூழ்நிலைகளையும் உங்களுக்கு உண்டாக்கலாம். இந்த நிலை அடுத்த மாதமும் தொடரலாம். குரு சுக்கிரனைத் தவிர இதர கிரகங்கள் உதவும் நிலை இல்லை. எனவே, ஆழ்வாராதிகளின் நாலாயிரத்திவ்யப் பிரபந்தங்களிலிருந்து சில பாடல்களை மனமுருகிப் படித்துப் பிரார்த்திப்பதும், ஸ்ரீசுதர்ஸன மகா மந்திரத்தை ஜபிப்பதும் மனதிற்கு அமைதியையும், ஆனந்தத்தையும் அளிக்கும்.


கடக ராசி :



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

சுக்கிரனும், ராகுவும் மாத ஆரம்பத்தில் செவ்வாயும் உதவும் நிலை. மற்ற கிரகங்களின் கோட்சாரம் சற்று சஞ்சலத்தைத் தரும் நிலையில்தான் உள்ளன. வீடு மாற்றம் அல்லது இடமாற்றம் ஏற்படலாம். இராகுவால் எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும் நிலை. ஆனால் 9ல் உள்ள சனி அதைத் தடுக்கும் வாய்ப்பும் உண்டு. எனவே எந்த முயற்சியைச் செய்தாலும் அது கைகூடும் வரை யாரிடமும் கூறிவிட வேண்டாம். ரியல் எஸ்டேட் சம்பந்தமாகத் தீவிர முயற்சியில் இறங்கினால் வெற்றி கிடைக்கும். சுக்கிரன் 11ல் சுயவீட்டில் இருப்பது கூடுதலான ஆதாயத்தைத் தருகின்ற நிலை. நன்கு கவனித்துக் காரியத்திலேயே கண்ணாயிருந்து முடிக்கவும். குறிப்பாகக் கடக ராசிக்காரர்களுக்கு 7, 8, 9, 10 ஆகிய இடங்களில் கோட்சாரப்படி சனி வரும் போது, குரு பார்வையில்லையெனில் சுமார் 10 வருடகாலம் சற்று ஏற்றத் தாழ்வான நிலைதான் ஏற்படும். எனினும் தசாபுத்திகள் நன்முறையில் அமைந்திருந்தால் இந்த கோட்சாரம் ஏதும் செய்திட முடியாது. பணப்பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும். திடமான மனதும், தூய்மையான அன்பும், நன்னடத்தையும் கொண்டவர்களுக்கு எந்தவிதக் கவலையும் இல்லை. அருள்மிகு வெங்கடாஜலபதி படத்தைத் தனியாக, கிழக்கு நோக்கி வைத்து, அருணோதயத்திற்கு முன் நீராடி 12 தாமரை மலர்களை ஒவ்வொன்றாகக் கையில் வைத்துக் கொண்டு, ஸ்ரீவெங்கடேசாய நம என 12 முறை கூறி அந்தப்படத்தைச் சுற்றி வந்து ஒவ்வொரு மலராக அர்ச்சித்து, நமது வேண்டுகோளை மனத்தில் தியானிக்க வேண்டும். இவ்வாறு 12 முறை சுற்றி, அந்த 12 மலர்களையும் சாற்றி முடித்து பிறகு தூப, தீப நைவேத்தியம் (கற்கண்டு, திராட்சை, கொப்பரை, பழங்கள்) செய்து பூஜையை முடிக்கவும். இவ்வாறு 12 நாட்கள் தொடர்ந்து செய்பவர்களுக்கு நினைத்த காரியம் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

சிம்ம ராசி :




மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்.

சிம்ம ராசிக்காரர்களுக்கு அஷ்டமத்துச்

துணி துவைக்கும் பிளாஸ்டிக் பிரஷ்ஷின் குச்சங்கள் தேய்ந்து விட்டது. அந்த பாகத்தை எடுத்து விட்டு கைப்பிடி உள்ள பாகத்தில் அதன் ஷேப்பிலேயே 1½" கனத்திற்கு ஒரு ஸ்பான்சை வெட்டி, ஃபெவிகால் போட்டு ஒட்டி விட்டோம். இந்த பிரஷ்ஷை சோப்புத் தண்ணீரில் நனைத்து பாத்ரூம் டைல்ஸை துடைக்க டைல்ஸ் எல்லாம் பளப்பள. கைப்பிடி இருப்பதால் எவரும் எளிதாக உபயோகிக்க முடிகிறது.

— ஜானகி ஸ்ரீனிவாஸன்





The most EFFECTIVE WEAPON against COCKROACHES AND MOSQUITOES

SSCG&B * HF * 1 * 2416

சனீஸ்வரனும், அனைத்து நிலையிலும் ஏதேனும் ஒருவிதத்தில் மனச்சஞ்சலம், பணநஷ்டம், மனக்கஷ்டம் என சிரமத்தைத் தந்தாலும், அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தியை உங்களுக்குத் தனது அருட்பார்வையால் குரு தருகிறார். மாத ஆரம்பத்தில் சுக்கிரனும், செவ்வாயும் கூட, குடும்ப நிலையில் ஏதேனும் குழப்பத்தைத் தருவார்கள். ஆயினும், சூரியனது உதவி மாதத்தின் ஆரம்பத்தில் உங்களது செல்வாக்கை உயர்த்தும். பிற்பகுதியில் செவ்வாயும் உதவுவார். அதனால் உங்களுடைய எதிரிகளின் தொல்லை குறையும். வீணான வார்த்தைகளினாலோ, பிறரது தலையீட்டினாலோ சில விவகாரங்கள் குறுக்கிடலாம். தேர்வு செய்யப்பட்ட பணியில் அமர வேண்டிய நிலையில் கூட, உங்களது பொறுமையைச் சோதிக்கும் வண்ணம் காலதாமதம் ஏற்பட்டாலும், ராசிநாதனின் அருளாலும், குருவின் பார்வையாலும், புதனின் கடாட்சத்தாலும், மாத ஆரம்பத்திலேயே சில இனங்களில் வெற்றியும் கிடைக்கும். எதிர்பார்த்த பணிக்குச் சேர உத்திரவும் வரும்.

இரண்டாம் இடத்தில் உள்ள இராகு குடும்ப விஷயத்திலும், சமுதாயப் பணியிலும் உங்களுக்குச் சற்று மன அமைதியை இழக்கச் செய்வார். யாரோ செய்த தவறுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் வரலாம். சரியான முறையில் வேத விற்பன்னர்களைக் கொண்டு, ஸ்ரீகார்த்தவீரியார்ஜுன ஹோமம், தக்ஷிணாமூர்த்தி ஹோமம், ஹேரம்ப கணபதி ஹோமம் செய்தால் கட்டாயம் உங்களுக்கு நன்மையே கூடுதலாக நடக்கும். வசதியில்லாதவர்கள், கூட்டுறவு முறையில் நடக்கின்ற கோவில் ஹோமங்களில் கலந்து கொள்ளலாமே! அத்துடன் முடியுமளவுக்கு புனருத்தாரணத்தின் பொருட்டும், புதுப்பிக்கப்படும் மடாலயங்கள், திருக்கோவில்களுக்கு உங்கள் பெயரில் நிதியை அனுப்பினால் அதுவே சிறந்த பரிகாரமாக இருக்கும்.



செலவில்லாத விளக்கு

'கரண்ட் கட்' சமயங்களில் ஏற்ற சிம்னி விளக்கு, லாந்தர் விளக்கு, மெழுகுவர்த்தி என்றுதான் வேண்டுமென்பதில்லை. நிமிடத்தில் வீட்டிலுள்ள இருமல் மருந்து, டானிக் பாட்டில்கள் ஏதேனும் ஒன்றின் மூடியில் சிறு துளையிட்டு பாவாடை, சூடிதார் நாடா வகைகளில் ஒன்றைத் துருத்தி, மண்ணெண்ணெய் விட்டு ஏற்ற அதிக செலவில்லாத, நீடித்தெரியும் விளக்கு தயார்.

— ர. சாரதா

கன்னி ராசி :



உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்.

உங்களது லக்னம் ரிஷபமாகவோ, மகரமாகவோ இருந்தால் ஏழாமிடத்தில் சனியைப் பற்றிய கவலை தேவையில்லை. களஸ்தானத்தில் கயவீட்டில் உள்ள குரு ஆதிபத்திய தோஷத்திற்கு ஆளாகி இருக்கும் நிலை. எனினும் செவ்வாய், சூரியன் ஆகியவர்களில் செவ்வாய் மாதம் பூராவும், 7, 8 என்ற நிலையில் தனது பார்வையை குருவின் மீது செலுத்தி, ஆதிபத்திய தோஷத்தை நிவர்த்திக்கிறார். சூரியன் முற்பகுதியில் ஒரு கீர்த்தியைத் தர இருக்கிறார். 11 ம் இடத்திற்கு சூரியன் வரும் காலகட்டத்தில் உங்களுக்கு எதிர்பாராத வெற்றி கிடைக்கும். அரசாங்கத்தாரால் சிறு தொல்லைகள் வரலாம். ஆனால் சூரிய, சுக்கிர கடாட்சத்தினாலும், உங்கள் துணைவியின் மட்டற்ற பிரார்த்தனையாலும் உங்களுக்கு நல்லதே நடக்கும். கவலை வேண்டாம். 7 ல் உள்ள சனிகேது சற்று மனத்தில் உற்சாகத்தை குறைத்து, ஒருவித தனிமை உணர்வைத் தங்களுக்குத் தரலாம். இந்த மாதத்தில் உங்களது வாழ்க்கையின் பெரியதொரு லாபத்தின் வாயிற்படியைத் தட்ட இருக்கிறீர்கள். கட்டாயம் அதனால் ஆதாயம் உண்டு. ஆலங்குடி யானையும், அரவணைத்துச் செல்லுகின்ற கடல் அலைகளின் ஓரத்தில் எழுந்தருளி, தனது அளப்பறிய அலங்காரத்தால் மற்றவர்களின் அகங்காரத்தைப் போக்கும் இருந்நீறுச் செல்வனாம், செந்தில் வேலவனையும் அடைந்து, அவனது அருட்பார்வையைப் பெறுங்கள். அனைத்தும் தூசாகி, மனம் லேசாகிப் புத்துணர்வுடன் பொலிவீர்கள். திருநாகேஸ்வரத் திற்கும் சென்று ஜென்ம ராகுவுக்குப் பரிகார மாக அபிஷேகம் செய்து விட்டும் வரலாம்.



லேஸ் நாடா!

புதியதாக வாங்கிய சல்வார் கமீசைப் பிரித்தேன். பைஜாமாவுக்கு நாடா கோர்க்கப்படவில்லை. வெளியே கிளம்பும் அவசரம். எங்கே அலைந்து பாவாடை நாடா வாங்க. ஸ்போர்ட்ஸ் ஷூவின் லேஸ்களை உருவி இரண்டையும் சேர்த்து முடிந்து (சும்மா சொல்லக்கூடாது... இப்போதெல்லாம் நல்ல நீளமாகவே ஷூ லேஸ் தயாரிக்கிறார்கள்!) பைஜாமாவில் கோர்த்து ஜோராய் அணிந்து கொண்டேன்.

— உஷா



துலா ராசி :

சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

கேது, சனி, உதவுவார்கள். எனவே, வாகன அதிபர்கள், இரும்பு வியாபாரிகள் ஆகியவர்கள் பயன் பெறுவார்கள். இராசிநாதனாகிய சுக்கிரன் மாதம் பூராவும் உங்களுக்குத் தேவையான மகிழ்ச்சியையும், சுகத்தையும் உங்கள் குடும்பத்தாரால் கொடுக்கச் செய்வார். வேலைக்குச் செல்லும் சகோதரிகள், தொழிற்சம்பந்தமான கல்விக் கூடங்களுக்கு விண்ணப்பித்துள்ள மாணவ மாணவிகள், அரசியல் துறையினர் ஆகிய அனைவருக்கும் அவரவர்கள் விரும்பிய வண்ணம் அவர்களது ஆசைகளை நிறைவேற்றியும் வைப்பார். பதவி உயர்வும் சிலருக்குக் கிடைக்கலாம். சந்திரன் கோட்சாரப்படி உச்ச ராசியில் உள்ள பொழுதும், ஆட்சியில் அமரும் நாட்களிலும், எதிர்பாராத தனலாபத்தைத் தருவார். அதே சமயம் உங்கள் ராசியில் உலாவும் பொழுதும், கஜகேசரியோகத்தைத் தருவார். சந்திராஷ்டம நாட்களில் சிரமங்களையும் தரலாம். ஸ்ரீலக்ஷ்மியின் படத்தை வைத்து, விடிவதற்கு முன் எழுந்து குளித்து, மடியுடுத்து, 12 முறை வலம்வந்து, 12 மலர்களால் அர்ச்சித்துப் பாருங்கள். இவ்வாறு 12 நாட்கள் செய்ய வேண்டும். நீங்கள் நினைக்கும் காரியம் நிறைவேறும். இதனால் பாதகமான சூழ்நிலையில் சஞ்சரிக்கும் கிரகங்கள் உங்களுக்குச் சாதகமானவற்றைச் செய்வார்கள். ஆனால் நம்பிக்கையுடன் செய்வது மிக மிக அவசியம்.


விருச்சிக ராசி :



விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

குருபலம் ஓங்கியுள்ளது. எனவே, ஆலங்குடிக்கோ, அல்லது காட்டு மன்னார்கோயிலுக்குச் செல்லும் வழியில் உள்ள ஓமாம்புலியூர் தட்சிணாமூர்த்தித் தலத்திற்கோ சென்று வழிபடுங்கள். மேலும் அனுகூலம் பெறுவீர்கள். தடங்கல்கள் அகலும். சுபநிகழ்ச்சிகள் கைகூடும். எதிலும் வெற்றி உண்டு என்பதை ராகு பகவானின் சஞ்சாரத்தால் அறியலாம். தானிய மண்டிக்காரர்களுக்குச் சிறப்பான, செழிப்பான யோக கால கட்டம். நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். ரோகம், கடன், சத்ருஸ்தானமாகிய 6ம் இடத்தைக் குரு பார்ப்பது மிகவும் விசேஷம். அதனால் கடன்களை அடைப்பீர்கள். ஏழாம் இடத்தில் உள்ள சுக்கிரனால் மாதம் பூராவிலும் ஏதோ ஒரு விதத்தில் கணவன் மனைவியினிடையே கருத்து வேறுபாடுகள், கோப தாபங்கள் இவை ஏற்படலாம். மற்ற கிரகங்கள் மகிழ்ச்சியான நிலையில் சஞ்சரிக்கின்றன. எனவே, தக்ஷிண பிருந்தாவனமான பாப்பாரப்பட்டி ஸ்ரீராகவேந்திரரின் சன்னிதானத்துக்குச் சென்று ஆராதித்து வரலாம். நன்மைகள் கூடுதலாக ஏற்படும்.

தனுசு ராசி :




மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.

மாதத்தின் முற்பகுதியில் செவ்வாய் மட்டுமே உதவும் நிலை. கோர்ட் விவகாரத்தில் ஜெயம் ஏற்படும். மற்றபடி எந்த கிரகமும் உதவும் நிலையில் இல்லை. எனவே, இந்த மாதத்தில் உங்களது உணர்வுகளைக் கட்டுப்படுத்திப் பேசும் சொற்களில் பழகும் பழக்கத்தில் நிதானத்துடன் நடந்து கொள்ளுங்கள். யாரோ செய்த தவறுக்கு நீங்கள் பதில் கூற வேண்டி வரும். தேவையற்ற பிரச்னைகள் உங்களை எதிர் நோக்கலாம். அது உறவின் முறையிலும் வரலாம். தொழில் முறையிலும் ஏற்படலாம். குருவும் சந்திரனும் சேர்ந்திருப்ப

தால் பிரசித்தி பெற்ற ஸ்ரீ தட்சிணாமூர்த்தி ஸ்தலங்களான ஆலங்குடி, மற்றும் ஓமாம் புலியூர் குருஸ்தலம் போன்ற இடங்களுக்குச் சென்று ஆராதிக்கலாம். வசதி இல்லாதவர்கள், அல்லது ஏதோ காரணத்தால் போக முடியாதவர்கள், உங்கள் இடத்திலேயே உள்ள சிவஸ்தலத்திற்கும் சென்று அங்குள்ள தக்ஷிணா மூர்த்தியை வழிபடலாம்.

மகர ராசி :



உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்.

சனியும் கேதுவும்

வாஷ் பேசின்கள் துர் வாடை வீசாமல் இருக்க... அவற்றில் ஓரிரு பூச்சி உருண்டைகளை (Napthalene Balls) போட்டு வைக்கவும். மாதமொருமுறை மாற்றவும்.

— உஷா

உதவுவார்கள். அதனால் மாணவ மாணவிகளுக்கு எதிர்பார்க்கும் பாடங்களில், ஆசைப்படும் கல்லூரிகளில் இடம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். கோர்ட் விவகாரங்களில் மாதத்தின் பிற்பகுதியில் ஜெயம் ஏற்படும். இந்த இராசியைச் சேர்ந்த பெண்களின் குழந்தைகள் சற்று கல்வியில் பின்தங்கும், நிலை ஏற்படலாம். குடும்பத்தில் தாம்பத்திய உறவுக்குப் பங்கமில்லை. கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள், தொழிற்துறை ஆலோசகர்கள் ஆகியவர்களுக்கு நல்லதொரு மாதம். பயன்படுத்திக் கொள்வது உங்களது முயற்சியைப் பொறுத்துள்ளது. தூரதேசத்து உறவு முறை நன்கு அமைந்துள்ளதால் ஏற்றுமதித் துறையினர் ஏற்றம் பெறலாம். அரசுப் பணியில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வும், அதன் காரணமாக நிலுவைத் தொகையின் வரவும் மனத்திற்கு உற்சாகத்தைத் தரும். 12 ல் உள்ள குரு பாதகம் ஏற்படுத்தாமல் இருக்க ஆன்றமைந்த சான்றோர்களுக்கும், வேத வித்தகர்களுக்கும் உரிய முறையில் வணக்கம் செலுத்தி ஆசி பெறுங்கள். அதனால் உங்கள் ஆத்மபலம் பெருகும். முடியுமானால் திருச்செந்தூர் சென்று வரலாம்.


கும்ப ராசி :



அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்.

சுக்கிரனால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. சுபநிகழ்ச்சியும் நடக்கும். தீர்த்தயாத்திரையும் செய்யலாம். இரண்டாமிடத்தில் உள்ள இரு கிரகங்களும் இடர்பாடுகளைத் தொழில் ரீதியாகவோ, உத்தியோக ரீதியாகவோ தரலாம். அது போலவே புதனும், சூரியனும் கூட சரியாக இல்லை. அதனால் தந்தையுடனோ, அல்லது தாய்மாமன் வகையுடனோ சற்று மனவேற்றுமை கொள்ளும் நிலைமை உண்டு. உங்கள் அணுகுமுறையைப் பொறுத்து அனுகூலமோ, பிரதிகூலமோ ஏற்படும். தூரதேசத்தில் உள்ள உறவினர்களைப் பற்றிய செய்திகள் உற்சாகமாக அமையும். மாதத்தின் பிற்பகுதியில் சூரியனால் கீர்த்தி ஒன்று கிடைக்கும். அது கலையினாலும் வரலாம். அல்லது நீங்கள் ஈடுபடும் விளையாட்டுத் துறையின் மூலமும் ஏற்படலாம். அஷ்டமத்து ராகுவும், மற்றும் சூரியனும் உங்கள் கீர்த்திக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் சூழ்நிலைகளை உண்டாக்கினாலும் 11 ம் இடத்தில் குருபலம் கூடி இருப்பதால் விபரீதமாக ஏதும் ஏற்படாது. ஸ்ரீ ஆஞ்சநேயரையும், துர்க்கையையும் வேண்டிக் கொள்ளவும்.

மீன ராசி :



பூரட்டாதி, 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

தற்சமயம் சுக்கிரபலம் குடும்பத்திற்கும் சரி, தொழில் அல்லது உத்தியோகத்திற்கும் பக்கபலமாக உள்ளதால் மகிழ்ச்சிக்கும், முன்னேற்றத் திற்கும் குறையிருக்காது. 10 ல் குரு பதவியைப் பறித்து விடுவாரோ என்ற கவலை தேவையில்லை. அவரே ராசிநாதன். அத்துடன் 3 ல் உள்ள செவ்வாய் மாத ஆரம்பத்தில் எல்லா விவகாரங்களிலும் வெற்றியைத்

தர அருள் புரிவார். எனினும் 7 ல் உள்ள ராகு ஒரு பெண் ணால் உங்களுக்குச் சிறு தொல்லை தரலாம். ஆனால் மாதக் கடைசியில் கன்னி ராசிக்குரிய புதன், ஆட்சியிலும், பிறகு இலா பத்திலும் உலாவுவதால் குறையேதும் ஏற் படாது. எனினும் சூரியனுக்குரிய ஸ்தோத்திரங் களைப் படிப்பது நல்லது. வெளிநாட்டுப் பிர யாணம் ஒன்று ஏற்படலாம். இராசிநாதன் ஆட்சியில் உள்ளதால் குழந்தைகளைப் பற்றிய கவலை தேவையில்லை. குருதசை நடப்பவர் களுக்கு எல்லாம் நல்லபடியே நடக்கும். அர சியல் வாதி களுக்குச் சற்று சோதனை மிக்கக் காலமாக அமையலாம். ஆதித்ய ஹிருதயம் படிப்பதால் பகைவரையும் வெல்லும் தன்மை பெறலாம்.

பின் குறிப்பு : சிலர் ஓமாம்புலியூரின் அமை விடத்தைக் கேட்டிருக்கிறார்கள். இது தஞ்சை மாவட்டத்தில் திருச்சி - காட்டுமன்னார்கோயில் பாதையில் அமைந்துள்ள குருஸ்தலம். குறிப்பாக காட்டுமன்னார்கோயிலில் விசாரித்தால் மேற்படி ஸ்தலத்தைக் காட்டுவார்கள். நாவலடியான் எனும் ஊர் சேலம் மாவட்டம் நாமக்கல்லை அடுத்த மோக னூர் பகுதியில், மோகனூர் பேருந்து நிலையத்தி லிருந்து 1½ கிலோமீட்டரில் காட்டுப்புத்தூர் பாதை யில் அமைந்துள்ளது. பஸ் போக்குவரத்து உண்டு. கருப்பண்ணசாமி மூலவர், அம்மன் பெயர் செல்லி யாண்டி அம்மன். பிரார்த்தனையை எழுத்து மூல மாகக் காகிதத்தில் எழுதி, அங்கு கட்டி விட்டு வரவேண்டும். சிரமங்கள் குறைவதை அனுபவப் பூர்வமாக அறியலாம்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்.

திருமதி. பத்மா சங்கர் மாதா வைஷ்ணவதேவியை தரிசித்து வந்த அனுப வத்தை எழுதியிருந்தார்கள். படித்து மெய் சிலிர்த்தேன். நானும் மார்ச் மாதக் கடைசியில் வைஷ்ணவ தேவியைத் தரிசித்துவிட்டு வந்தேன்.

கட்ராவில் மலை ஏற ஆரம்பிக்கும் இடத்தில் குல்ஷன் குமார் (T-Series) ஹிந்தி மியூசிக் டைரக்டர் அவர்களால் தர்ம சாப் பாடு போடப்படுகிறது. மலை ஏறும் அத் தனை பேரும் அங்கு சென்று சாப்பிட்ட பிறகே ஏறத் தொடங்குகின்றனர். தவிரவும் சுத்த நெய்யில் தயாரித்த கோதுமை ரவையில் செய்த கேசரி சுடச் சுட பிரசாதமாக வழங்கப் படுகிறது. க்யூவில் நின்று எல்லோரும் அத னைப் பெற்றுச் செல்கின்றனர். இரவு பகல் பேதமின்றி இத்தர்மம் நடைபெறுகிறது.

குல்ஷன்குமாரின் (T-Series) வெளி யீடுகள்(கேசட்) மாதா வைஷ்ணவி தேவியின் புகழ் பாடும் பாடல்கள் ஒலிபெருக்கியின் மூலம் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. கேசட் விற்பனையும் ஏராளமாக நடக்கிறது.


குகை வழியே நுழைந்து படுத்தபடி ஊர்ந்து சென்று சன்னதியை அடையும் அனுபவத்தை எதிர்பார்த்துச் சென்ற எங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கூட்டம் அதிகமாக, சமாளிக்க முடியாமல் இருப்பதால் அந்த வழியை அடைத்து விட்டார்களாம். சாதாரணமாக, நடந்து சென்று சன்னதியை. அடைந்தோம். திருப்பதியே மேல் என்னும்படி ஹிந்தியில் காணிக்கையை வைத்துவிட்டு முன்னேறும்படி அர்ச்சகர் கூறுகிறார். போய்க்கொண்டே இருக்க வேண்டும். தேவியின் தோற்றம் எப்படி இருக்கிறது என விளங் கிக் கொள்ளக்கூட முடியாதபடி நம்மை விரட்டுகின்றனர். மூன்று குடைகளும் மூன்று கிரீடங்களும் என் கண்களில் பட்டது. அருபியாக தேவியர் காட்சி அளிக்கின்றனர் போலும்.




வெளியேறும்போது தாழ்ந்து நிற்கும் மலைப் பாறைகளின் கீழே, ஓடிக் கொண் டிருக்கும் நீரில் குனிந்து நடந்து வெளி வந் தோம். (வெளியே வந்த தும் என் தங்கை, 'தேவியை நீ பார்த்தாயா? இனி மேல்தான் சன் னதிக்குள்ளே போகப் போகிறோம் என்றல் லவா நினைத்துக் கொண்டிருக்கிறேன். என்ன பார்த்தாய்? எப்படி இருந்தது?' என்ற கேள்விகளை அடுக்கினாள்!)

எனினும் கன்னியாகுமரியை தரிசித்த நான், காஷ்மீர் தேவியின் சன்னதியிலும் கால் வைத்து அவளை பக்தியுடன் நினைத்து மனதில் சேவித்து விட்டேன். அந்தத் திருப்தி எனக்கு இருக்கிறது.

— வேதா நரசிம்மன்


மிளகு பொடி
தனியா பொடி
மிளகாய் பொடி
மஞ்சள் பொடி



Dr.C.K.M சபாபதி

இல்லறமும் நல்லறமே!

சர்க்கரை வியாதியா? இயலாமையா?

அல்சரா? ஆஸ்த்மாவா? புற்றுநோயா?

கவலையே வேண்டாம்!



Dr.C.K.M குருபரன்


சர்க்கரை வியாதி (அ) நீரிழிவு நோயாளிகள் நடைமுறையில் பயன்படுத்த வேண்டிய மூலிகைகள் பற்றியும், உணவு முறைகள் பற்றியும், அதிலும் முன்பு வியாதிக்கான காரணங்களையும், எளிய அதிசய உண்மைகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். நீரிழிவு என்பது கணையத்திலிருந்து இன்சுலின் சுரக்காததினால் உண்டாவதாகும். இன்சுலின் சுரப்பது குறைவதற்கான காரணம் என்ன? நாம் உண்ணும் உணவிலிருந்து கணையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட சக்தியே இன்சுலினாக மாற்றப்பட்டு வெளியாகின்றது. இரத்தமானது சக்தியை கணையத்திற்கு கொண்டு செல்லவும், உற்பத்தியான இன்சுலின் வெளியேறவும் இரத்தக் குழாய்களில் எந்தவித அடைப்பும் இருக்கக் கூடாது. இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதற்கு காரணம் நாம் உண்ணும் உணவுகளில் கொழுப்புப் பொருட்கள் தேவைக்கு அதிகமாக இருப்பதே காரணம் ஆகும். எனவே இரத்தக் குழாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்பு நீங்கவும் இனி இதுபோன்ற தடைகள் இரத்தக் குழாய்களில் ஏற்படாமல் இருக்கவும் கொழுப்பு சக்தி நிறைந்த ஆகாரங்களை உண்ணுவதை தவிர்க்கவும், குறிப்பாக இறைச்சி உண்பதை தவிர்க்கவும், பழங்கள், பச்சையாக உண்ணக்கூடிய காய்கறிகள் ஆகிய இயற்கை உணவுகளை உண்பதால் ஏற்கனவே படிந்துள்ள கொழுப்புப் பொருட்களால் ஏற்பட்டுள்ள அடைப்புகள் சிறிதுசிறிதாக வெளியேறி இரத்த ஓட்டம் சீரடையும். இதனால் சக்திகள் முறைபாக கணையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இன்சுலினாக மாற்றமடைந்து வெளியேறும். எனவே நீரிழிவு நோயாளிகள் தங்கள் உடலில் கணையம் முழுவதுமாக பாதிக்கப்பட்டு விட்டதாக நினைத்துக் கொண்டு இனி இன்சுலின் சுரக்காது என்ற பயத்தினை விட்டு விடலாம்.

மேலும் தூய்மையான இரத்த உற்பத்தி, சீரான இரத்த ஓட்டம், முறையான ரத்த சுத்திகரிப்பு ஏற்படுவதால் உடலில் பூரண நோய் எதிர்ப்பு சக்தி ஏற்பட்டு எவ்வகை பிணிகளும் இன்றி மகிழ்ச்சியுடன் வாழ்வது உறுதி!

குறிப்பு: எமது சன் டி.வி. பேட்டியைப் பார்க்கத் தவறியவர்கள், பேட்டியின் விளக்க உரை அடங்கிய ஒலிப்பதிவு கேசட்டை பதிவு அஞ்சல் பார்சலில் பெற ரூ.35/- ஐ கீழ்கண்ட திருப்பத்தூர் முகவரிக்கு M.O. அனுப்புங்கள். கேசட்டை முழுவதும் கேட்ட பின்னர் நேரில் ஆலோசனை பெற வருவது நல்லது.

சென்னை முகவரி:

Dr.C.K.M. சபாபதி,
S/o. Dr.C.K. மாணிக்கவாசகம்
115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை
(ரெடிமணி ஷாப் எதிரில் உள்ள சந்தில்)
கெல்லீஸ், சென்னை - 600 010.
போன் : 6424285, 6427638



Dr.C.K.M.

திருப்பத்தூர் முகவரி:

ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்
Dr.C.K.M. குருபரன்
S/o. Dr.C.K.மாணிக்கவாசகம்
P.B. No: 30, (காலேஜ் எதிரில்)
திருப்பத்தூர் (N.A.A.) 635 601
போன் : 04179-20469, 22329.

வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மூலிகைப்பொடி பெற : 1996ம் வருட புதிய முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2ந் தேதி - வேலூர் (N.A.) : பிற்பகல் 1 to 2 மணி வரை ஹோட்டல் [illegible], 16, [illegible]. ஃபோன் : 0416 / 23060.
3 & 19 ந்தேதி - சென்னை : காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில். ஃபோன் : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி - கடலூர் (S.A.Dt.) : காலை 9 to 11 [illegible] ஹோட்டல். ஃபோன் : 04142 / 23707.
4-ந் தேதி - விழுப்புரம் : பிற்பகல் 2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில். ஃபோன் : 04146 / 22962.
4-ந் தேதி - திருவண்ணாமலை : மாலை 5 to 6 [illegible] லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில். ஃபோன்: 04175 / 22576.
9-ந் தேதி - பெங்களூர் : காலை 11 to 12.30 ஹோட்டல் [illegible] ரோட். ✆ : 2266374.
9-ந் தேதி - ஓசூர் : மாலை 3 to 4 [illegible] லாட்ஜ், பாகலூர் ரோட். ஃபோன் : 04344 / 22899.
9-ந் தேதி - கிருஷ்ணகிரி : மாலை 5 to 6 [illegible] லாட்ஜ். ஃபோன் : 04343 / 22120.
12-ந் தேதி - சேலம் : காலை 11.30 to 12.30 ஹோட்டல் [illegible], புதிய பஸ் நிலையம் எதிரில். ஃபோன் : 0427 / 449333.
12-ந் தேதி - ஈரோடு : மாலை 4 to 5 ஹோட்டல் [illegible], பஸ் நிலையம் எதிரில். ஃபோன் : 0424 / 20763.
13-ந் தேதி - கோயம்புத்தூர் : காலை 9.30 to 12.30 [illegible] லாட்ஜ் [illegible] பின்புறம் ஃபோன் : 0422 / 300211, 302220
14-ந் தேதி - மதுரை : காலை 9 to 11 ஹோட்டல் [illegible] ✆ 0452 / 543940.
14-ந் தேதி - தஞ்சாவூர் : மாலை 5 to 6 [illegible] லாட்ஜ். ஃபோன் : 04362 / 70023.
15-ந் தேதி - திருச்சி : காலை 9 to 11 ஹோட்டல் [illegible] பஸ் நிலையம் அருகில். ஃபோன்: 0431 / 460545.
15-ந் தேதி - நாமக்கல் : பிற்பகல் 2.30 to 3.30 ஹோட்டல் [illegible]. ஃபோன் : 04286 / 21336.
18-ந் தேதி - ஆம்பூர் : காலை 10 to 11 [illegible] லாட்ஜ். ஃபோன்: 04176 / 43311.
18-ந் தேதி - காஞ்சிபுரம் : மாலை 4 to 5 [illegible] லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு. ஃபோன் : 04112 / 22519.
19-ந் தேதி - சென்னை : காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில். ஃபோன் : 044 / 6424285, 6427638.
22-ந் தேதி - தர்மபுரி : காலை 9 to 13 ஸ்ரீ [illegible] லாட்ஜ். ஃபோன்: 04342 / 60226.
22-ந் தேதி - திருப்பூர் : பிற்பகல் 2 to 3 [illegible] லாட்ஜ். ஃபோன் : 0421 / 240418.
22-ந் தேதி - உடுமலைப்பேட்டை : மாலை 6 to 7 [illegible] லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ஃபோன்: 04252 / 24353.
23-ந் தேதி - திண்டுக்கல் : காலை 9 to 10.30 ஹோட்டல் [illegible], பஸ் நிலையம் பின்புறம் ஃபோன்: 0451 / 31206, 27017.
23-ந் தேதி - தூத்துக்குடி : மாலை 5 to 6 ஹோட்டல் [illegible] ரோடு. ஃபோன் : 0461 / 22780.
24-ந் தேதி - திருநெல்வேலி : காலை 8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ [illegible], மதுரை ரோடு. ஃபோன் : 0462 / 23312
24-ந் தேதி - நாகர்கோவில் : பிற்பகல் 2 to 3 ஹோட்டல் [illegible]. ஃபோன்: 04652 / 25689.
25-ந் தேதி - விருதுநகர் : காலை 9 to 10 [illegible] லாட்ஜ், மதுரை ரோடு. ஃபோன் : 04562 / 45537.
25-ந் தேதி - கரூர் : பிற்பகல் 2.30 to 3.30 மணி வரை [illegible] லாட்ஜ், [illegible]. ஃபோன் : 04324 / 22663, 23763.

ரம்யா

2

கோதா பார்த்தசாரதி

"போண்டாவுக்கு உப்புப் போறுமா? வெறும் கேசரி பண்ணி அலுத்துப் போச்சு. கோதுமை அல்வா கிளறினேன். நல்லா வந்திருக்கு. காப்பி சூடா போட்டு, பாலும் காய்ச்சி ஆச்சு. பழம், வெற்றிலை, பூ, சந்தனம் எல்லாம் டிரேயில் ரெடியா எடுத்து வெச்சிருக்கேன். புடைவையை மாத்திண்டு ஹாலுக்குப் போங்க. இதோ நானும் மாத்திண்டு வந்துடறேன்!"

விஜியும் மதுரமும் ரெடியாகி ஹாலுக்கு வரவும், கார் வந்து வாசலில் நிற்கவும் சரியாக இருந்தது. ரவி பன்னீர் தெளிக்க, விஜி சந்தனம் குங்குமம் கொடுக்க, ரமேஷ் கல்கண்டுத் தட்டை நீட்டி வரவேற்றான்.

"வாங்கோ பயணம் சௌகர்யமா இருந்ததா? நேரே நம்ம வீட்டுக்கே வந்திருக்கலாமே?" என்றாள் மதுரம்.

நாசுக்காக நுனி விரலை சந்தனத்தில் தோய்த்து, கழுத்தில் பூசிக் கொண்ட மங்களம், குங்குமத்தைக் கொஞ்சமாக எடுத்து வகிட்டில் தீற்றிக் கொண்டாள். பெண்கள் இருவரும், கூட வந்திருந்த தங்கையும் அப்படியே எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

"அது எப்படி நேரா உங்க வீட்டுக்கு வர முடியும்? நிச்சயம் பண்றதுக்கு முன்னாடி சம்பந்தி வீட்டுலே கை நனைக்கலாமோ?" என்று அழுத்தலாகப் பேசியபடி மங்களம் சோபாவில் அமர்ந்தாள்.

தங்கை, அவள் புருஷன், மங்களம், சங்கர், அவன் சகோதரிகள் வனஜா, கிரிஜா - தங்கையின் பையன் என்று நிறைய பேர் வந்திருந்ததால், நாற்காலி, சோபா தவிர, தரையில் விரிக்கப்பட்ட ரத்ன கம்பளத்திலுமாக சௌகரியமாக அமர்ந்தனர்.

"முதல்லே டிபன் சாப்பிடுங்க. அப்புறம் பெண்ணைப் பார்க்கலாம்" என்று உபசரித்தார் மகாதேவன்.

"டிபனெல்லாம் அப்புறம் ஆகட்டும். மின்னே பெண்ணை வரச் சொல்லுங்க" என்றாள் மங்களம்.

அலங்காரமெல்லாம் முடிந்து அழகுச் சிலையாக நின்ற ரம்யாவைக் கன்னத்தில் கிள்ளி, 'ரம்யாக்கா. இன்னிக்கு நீ ரொம்ப அழகா இருக்கே. இந்த நீல டிரஸ்ஸூம், நீலசெட் நகையும். பாற்கடல்லேயிருந்து சாக்ஷாத் மகாலக்ஷ்மியே எழும்பி வந்த மாதிரி இருக்கு" என்று முத்தமிட்டாள் பிரியா.

வெட்கத்தில் ரம்யாவின் முகம் சிவந்தது.

வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது. பால்கனி வழியாக எட்டிப் பார்த்து ரன்னிங் காமெண்டரி கொடுக்க ஆரம்பித்தாள் பிரியா.

"விது இங்கே வாயேன். நம்ம கார் போறாம ஒரு டூரிஸ்ட் காரும் வந்திருக்கு. ஒரு படையே திரண்டு வந்திருக்காப்பலே இருக்கு. அதோ ஜரிகை வேஷ்டி, சில்க் ஜிப்பா. கொஞ்சம் வழுக்கை மண்டை, சோடா பாட்டில் கண்ணாடி. காதிலே வெள்ளைக் கடுக்கன். மாப்பிள்ளை அப்பா வரலைன்னாங்களே, வேறே யாராவது உறவுக்காரராயிருக்குமோ?"

"ஹய் இதுதான் மாப்பிள்ளையா அக்கா நீ ரொம்ப லக்கி. மாப்பிள்ளை மெய்யாலுமே சினிமா ஹீரோ மாதிரி ஜம்னு இருக்கார். ஸ்டெப் கட்டிங், சரிகை வேஷ்டி, சில்க் ஜிப்பா, கம்மா அமர்க்களமா மைனர் செயின் குப்பரா

இருக்கார்!"

"விஜி! மேலே போய் ரம்யாவை அழைச்சுண்டு வாம்மா!" என்று மதுரம் மங்களத்திடம் சொல்வது கேட்டது. தொடர்ந்து படியேறி வந்த விஜி, "ரெடியா ரம்யா, போகலாமா?"



என்று அருகில் வந்து புடைவை திருத்தி, கூந்தலை ஒதுக்கி, கீழே அழைத்து வந்தாள்.

பலமுறை இந்த அனுபவம் நேர்ந்திருந்தாலும், ரம்யாவுக்கு வியர்வை ஊற்றாகப் பெருகியது. நெஞ்சில் ஒரு கனம் வந்து அடைத்துக் கொண்டது.

தன் பிடியில் இருக்கும் அவள் கரம் நடுங்குவதை உணர்ந்த விஜி, "பயப்படாதே ரமி! நிச்சயமா இது முடிவாயிடும் பாரேன். மாப்பிள்ளை ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கார்!" என்று ஆறுதலாகப் பேசி அவள் தோளில் தட்டிக் கொடுத்தாள்.

சமாளித்துக் கொண்டு வந்து எல்லாரையும் நமஸ்கரித்தாள் ரம்யா.

"ஒரு பாட்டுப் பாடேன்!" என்று மங்களம் உத்தரவிட, ரம்யா தயக்கத்துடன் விஜியைப் பார்த்தாள்.

"என்ன யோசனை? பாடத் தெரியாதா? பாட்டு கூட சொல்லித் தரல்லியா?" என்றாள் மங்களம் இடக்காக.

"வீணை நல்லா வாசிப்பாள். வாய்ப்பாட்டு விஜியோடு சேர்ந்து பாடித்தான் வழக்கம். உங்களுக்கு எது பிரியமோ பாடச் சொல்றேன்!" என்றாள் மதுரம் பவ்யமாக.

"போற இடத்துக்கெல்லாம் வீணையைத் தூக்கிண்டா போக முடியும்? மஞ்சள் குங்குமம் வாங்கிக்கன்னு ஒரு இடத்துக்குப் போனா, பாடுன்னு யாராவது கேட்டா, வாய்ப்பாட்டாயிருந்தா நறுக்னு உடனே பாடலாம் இல்லையா? நா எங்க வனஜா, கிரிஜா ரெண்டு பேருக்கும் வாய்ப்பாட்டுதான் சொல்லிக் கொடுத்திருக்கேன்" என்று நொடித்துக் கொண்டாள் மங்களம்.

ஒன்றும் புரியாமல் விஜி மதுரத்தைப் பார்க்க, "வாய்ப்பாட்டே பாடு!" என்று மதுரம் சைகை காட்டினாள்.

"நனுபாலிம்ப..."





உங்கள் குழந்தையும் இந்நிலையை அடையலாம்.



சில்ட்ரன்ஸ் காலேஜ் அண்ட் கேரியர் ஃபண்ட்

இப்போது முறையான 'ஸ்காலர்ஷிப் பேமெண்ட்களை' வழங்குகிறது. உங்கள் குழந்தையின் வளர்ந்து வரும் கல்விக்கான செலவுகளை இதன் உதவி கொண்டு நீங்கள் மீட்க முடியும். யூடிஐ-ன் சிசிசிஎஃப் திட்டத்தில் முதலீடு செய்து, உங்கள் குழந்தையின் எதிர்காலத்தில் முதலீடு செய்வீர்.

சிறப்பம்சங்கள்:

• 15 வயது வரையிலான குழந்தைகளுக்கான திட்டம். • குறைந்தபட்ச முதலீடு ரூ.2000/- மற்றும் அதற்கு மேல் ரூ.1000 த்தின் மடங்குகளில். • முகப்பு மதிப்பு: ரூ.10 என்றவாறு சம விலைக்கு அக்டோபர் 95-ல் விற்கப்பட்டது. அதற்கு பிறகு என்ஏவி அடிப்படையிலான விலைகளில் விற்கப்படுகிறது. • முழு ஆண்டு அல்லது அரை ஆண்டிற்கு செய்யப்பட்ட 'ஸ்காலர்ஷிப் பேமெண்ட்களில்' முதலீட்டிற்கான வளர்ச்சியைக் காண முடியும். • வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 10(16)ன் கீழ் நன்கொடை பெறும் குழந்தைக்கு வரிச்சலுகை உண்டு.

அதிகப்படியான விவரங்களுக்கு அருகாமையிலுள்ள யூடிஐ அலுவலகத்தையோ அல்லது தலைமை பிரதிநிதியையோ அணுகவும்.

CHILDREN'S COLLEGE AND CAREER FUND
UNIT PLAN-95

சிசிசிஎஃப் திட்டத்தில் தற்போதுள்ள யூனிட்தாரர்கள் ஸ்காலர்ஷிப் பேமெண்ட் வசதிக்கு என்ஏவி அடிப்படையில் மாற முடியும்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்காக.

அனைத்து மியூச்சுவல்ஃபண்ட் மற்றும் செக்யூரிட்டி முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு உட்பட்டவை. செக்யூரிடி மார்க்கெட்டுகளை பாதிக்கும் காரணங்களால் திட்டங்களின் என்ஏவி மதிப்பு அதிகமாகலாம் அல்லது குறையலாம். கடந்தகால செயலாற்றல் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுபவை அல்ல. சில்ட்ரன்ஸ் காலேஜ் அண்ட் கேரியர் ஃபண்ட் திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரம், அதன் எதிர்கால ஆதாயம் அல்லது வருவாயை எவ்விதத்திலும் குறிப்பிடுபவை அல்ல. முதலீடு செய்யும் முன் வழங்கு பத்திரத்தை தயவு செய்து படிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101
கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர், போன்: 214973 • சென்னை, போன்: 517101, 517190 • மதுரை, போன்: 38186 • திருச்சி, போன்: 766060

3041/96 M TM A

கணீரென்று இரண்டு பேர் குரலும் மோக னத்தால் கூடம் முழுதும் நிறைந்தது. தங்கை புருஷன் மட்டும் ஏதோ புரிந்த மாதிரி 'பேஷ்... பேஷ்' என்றார். மற்றவர்கள் எதுவும் வாயே திறக்கவில்லை.

ஒருவழியாக டிபன் பரிமாறப்பட்டது.

நிச்சயமாகுமுன் கை நனைக்கக் கூடாது என்று மங்களம், பழங்கள், பாலுடன் நிறுத்திக் கொண்டாள். சங்கரும் சாப்பிடக் கூடாது என்று சொல்லி விட்டான். மற்றவர்கள் சாப் பிட்ட பின் ஹாலில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தனர்.

"போய் லெட்டர் போடறேன் அப்படி இப் படின்னெல்லாம் இழுத்தடிக்கிறது எனக்குப் பிடிக்காது. நீங்கள்ளாம் டிபன் சாப்பிடறச்சே சங்கரைக் கேட்டுட்டேன். என் பையன் என் பேச்சைத் தட்ட மாட்டான். உனக்குப் பிடிச் சிருந்தா எனக்கும் பிடிச்ச மாதிரிதான் என் கிறான்.

அவன் எப்பவுமே இப்படித்தான். என் னைக் கேட்காம எதுவும் செய்ய மாட்டான். ஆபீசுக்குப் போக ஷர்ட் எடுத்துத் தருவதில் இருந்து எல்லாம் நான்தான் செய்யணும்!" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டாள் மங்களம்.

"ஒரு நல்ல நாளா, இந்த வாரத்திலேயே பாருங்க. நிச்சயதார்த்தம் பண்ணிடலாம். அப் புறம் ஆடி பிறந்துடும். ஆவணி முதல்லே முகூர்த்தம் வெச்சுக்கலாம். இப்ப லௌகீக விஷயம் பேசலாமா?"

மங்களம் இப்படிச் சொல்லிவிட்டு கம்பீர மாக ஒரு ராஜபார்வை பார்த்தாள். மகாதேவன் இருக்கையில் நெளிந்தார்.

'இந்தம்மா என்ன இப்படி இங்கிதம் தெரி யாமல் ஒரே அவசரமாக நிச்சயதார்த்தம், கல் யாணம் என்று போய் விட்டாளே! ரம்யாவின் சம்மதம் கேட்க வேண்டாமா? மதுரத்துடன் கலந்து பேச வேண்டாமா?'

சங்கரின் அப்பா வரவில்லை. வந்திருக்கும் மாமா, தங்கை புருஷன் யாரும் வாய் திறக்க வில்லை. தங்கை என்று வந்திருப்பவளும் அக்கா சொன்னால்தான் சாப்பிடவே வாயைத் திறப்பா போலிருக்கு!'

"ஊருக்குப் போய் சங்கர் அப்பாவையும் கலந்துண்டு உங்க முடிவை எழுதலாமே. நானும் குழந்தைகிட்டயும் எல்லாரிடமும் கலந்து பேசி எழுதறேனே" என்று மெதுவாக ஆரம்பித்தார் மகாதேவன்.

"அதெல்லாம் அவர் ஒண்ணும் மறுத்துச் சொல்ல மாட்டார். நா சொல்றதுதான் எங்க வீட்டிலே வேதவாக்கு! நீயும் உன் பிள்ளையும் தானே மாட்டுப் பெண்ணை வெச்சு குடும்பம் நடத்தப் போறவா. உங்களுக்குப் பிடிச்சா சரி. நா எதுக்குன்னுட்டார். அவர் வரலையேன்னு நீங்க எதையும் ஒத்திப் போட வேண்டாம்.

அம்பது பவுன் நகை போட்டு வெள்ளி ஸ்டூல் பாத்திரம் சபை நிறைக்கச் செய்யணும். குடும்பம் நடத்தறா மாதிரி பாத்திரம் செட்டா, மிக்சி, கிரைண்டர், காஸ் அடுப்பு இப்படி உப யோகமா, உங்களுக்குத் தெரியாததா? நீங்களும் ஒரு பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணி மாட் டுப் பெண் வந்திருக்கா.

கல்யாணத்தை விமரிசையா நல்ல மண்ட பத்துலே வெச்சு நல்லா செய்து தரணும். எங் களுக்கு மனுஷா நிறைய வருவா. எல்லாருக்கும் ஒரு குறையும் இல்லாம நல்லா கவனிக்கக் கணும்.

அவனும் ரெண்டு வருஷமா சம்பாதிக்கறா. யாருக்குப் பண்ணப் போறேன்? எல்லாம் உங்க பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும்தானே? பைய னுக்கு வைர மோதிரம் போட்டா கௌரதையா இருக்கும். வனஜா, கிரிஜா ரெண்டு பேருக்கும் தாலி முடிய நல்லதா நெறைய சரிகை போட்டு புடைவை எடுக்கணும்.

எனக்குப் பணம் காசு பெரிசில்லை. மனு ஷாதான் முக்கியம். தவிரவும் ஜோஸ்யம், ஜாதகத்துலே ரொம்ப நம்பிக்கை எனக்கு. இவா ரெண்டு பேர் ஜாதகமும் ரொம்பப் பொருந்தி இருக்குன்னு எங்க ஜோஸ்யர் சொன்னார். அத னாலேதான் நானே வலுவிலே லெட்டர் போட்டுப் பெண் பார்க்க வந்தேன்.

என்ன இது, நா பாட்டுக்கு நீளமா பேசின் டிருக்கேன். நீங்க ஒண்ணுமே பேசாம, வாயைத் திறக்காத இருந்தா என்ன அர்த்தம்?" என்று ஒரு அதட்டல் போட்டார்.

மகாதேவனோ ரொம்ப சங்கோஜி. பிற



உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாதவர்கள் தினசரி ஒரு ஸ்பூன் தேன் சாப்பிட்டால் பலம் பெறும்.

– என். கலா

பெண்களிடம் நின்று பேசவே கூச்சப்படுவார். இப்போது சம்பந்தம் பேசி முடிவு செய்ய வேண்டியது ஒரு பெண்மணியிடம்!

"நாங்க எல்லாரும் கலந்து பேசிவிட்டு, நாளைக்கு உங்க தங்கை வீட்டுக்கு வந்து உங்களைப் பார்க்கிறேனே!"

மங்களத்தின் முகம் சுண்டியது. தன் மதிப்பு ஒரு பிடி குறைந்து விட்டது போல் உணர்ந்தாள்.

"பிள்ளையைப் பெற்றவள் நான். நானே சம்மதம் சொன்ன பிறகும், இவர் கலந்து யோசனை பண்ணிய பிறகு சொல்றாராமே?"

அவள் ஈகோ உறுத்தியது. அதே கடுப்புடன் "நா இந்த வாரம் முழுக்க, மெட்ராசில்தான் இருப்பேன். உங்க முடிவை சீக்கிரம் சொன்னா, எனக்கும் வேறு இடம் பார்க்க சௌகர்யமாக இருக்கும்" என்றாள்.

"எழுந்திருங்களேண்டி!" என்று விஜி, பிரியா, வித்யாவிடம் பேசிக் கொண்டிருந்த பெண்களிடம் எரிந்து விழுந்தாள்.

ரவி மீண்டும் அவர்களைக் கொண்டு விடப் போனான். யாரும் எதுவும் சாப்பிடவில்லை. பிடிக்கவில்லை. எல்லாரும் களைத்துப் போன முகத்துடன், ஒருவருடன் ஒருவர் பேசவும் பயந்து, ஒரு இறுக்கமான சூழ்நிலை அங்கே நிலவியது. முக்கியமாக விஜி மிகவும் அதிர்ந்து போயிருந்தாள்.

'எவ்வளவு பெருந்தன்மையான குடும்பம்!'

தன்னை வந்து பெண் பார்த்ததும், பைசா கூட எதிர்பார்க்காமல், தன்னை மருமகளாக ஏற்றுக் கொண்டு, பெற்ற பெண்ணுக்கும் மேலாகப் பார்த்துக் கொள்ளும் மதுரத்துக்கு இப்படியொரு சம்பந்தியா?

ரவி வந்த பின்பு கூட யாரும் எதுவும் கேட்கப் பயந்தனர். யாரோ மந்திரக் கோலால் இயக்கத்தையே நிறுத்தி விட்ட மாதிரி கலகலப்பான அந்தக் குடும்பமே களை இழந்து மௌனமாக இயங்கியது. எல்லாரும் சாப்பிட்டதாகப் பெயர் பண்ணி விட்டுப் போனார்கள்.

இரவு படுத்துக் கொள்ளும் போதுதான் ரவியைப் பார்த்துப் பேச முடிந்தது விஜிக்கு.

"ஏன் அந்த மாமி அப்படிப் பேசினா? நல்லாயில்லையே. எனக்கே ரொம்ப கஷ்டமா இருந்ததுப்பா. அம்மாவுக்கு எப்படி இருக்கும்? அப்பாவுக்கும் ரொம்ப தர்மசங்கடமாப் போச்சு" என்றாள் விஜி.

அதுவரை பொறுத்துக் கொண்டிருந்த ரவி வெடித்து விட்டான்.

"அவங்க பேச்சை எடுக்காதே விஜி. எனக்கு ரொம்ப எரிச்சலா இருக்கு. இங்கேதான் இப்படிப் பேசினா. காரிலே நான் ஒருத்தன் இருக்கிறதையே மறந்துட்டாளோ, வேணும்னேதான் பேசினாளோ.

நாளைக்கு திருவல்லிக்கேணி டாக்டர்



வடை மாவு அதிகமாக மீந்து விட்டது. அதை வடாம் மாதிரி உருட்டி வைத்து காய வைத்து எடுத்து விட்டேன். புது மாதிரி கூட்டு வடாம். ருசியான ருசி. (ஆம வடை, உளுந்து வடை எதிலானாலும் செய்யலாம்.)

— காந்தாமணி

பெண்ணைப் பார்க்கணும். மறுநாள் மைலாப்பூர் வக்கீல் பெண். அப்புறம் அம்பத்தூரில் பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட் பெண் என்று அளந்துகிட்டே வரா. நிஜமாகவே பார்க்கப் போறாளோ டூப்போ. எனக்கு வந்த கோபத்துலே பாதி வழியிலே காரை நிறுத்தி இறக்கி விட்டுட்டு 'இதுக்கு மேலே அவங்களை கார் கொண்டு வந்து அழைச்சிக்கிட்டு போகச் சொல்லுங்க!' என்று சொல்லிவிட்டு ஓடி வந்துடலாமான்னு தோணித்து" என்று கோபமாகச் சொன்னான் ரவி.

"ரம்யா ரொம்ப சாது. அதிர்ந்து கூட பேச மாட்டா. அந்த மாமி பேசினதெல்லாம் கேட்டு, பாவம், ரொம்பவும் பயந்துட்டா. வேறே நல்ல மனுஷா கிடைக்காமலா போறா? கவலைப் படாதீங்க!" என்று ரவியைத் தேற்றினாள்.

வித்யா, பிரியா, ராஜா, ரமேஷ் நால்வரும் மொட்டை மாடியில் ரகசியமாக இதைப் பற்றிப் பேசிப் பேசி தீர்த்தனர். ரம்யாவோ தூக்கம் வராமல் மனதுக்குள் புலம்பிக் கொண்டிருந்தாள்.

எல்லாரும் படுக்கப் போன பின்னும் ஆபீஸ் வேலை எதிலோ மூழ்கியிருந்த மகாதேவன், படுக்கப் போன போது இன்னும் கட்டிலில் மதுரம் விழித்துக் கொண்டிருந்தாள்.

"இன்னுமா தூங்கல்லை மது? உடம்பு ஏதும் சரியில்லையா? அல்லது ஏதாவது குருட்டு யோசனையா? மாத்திரையெல்லாம் விஜி குடுத்திருப்பாளே! மறக்காம போட்டுண்டியா?" என்று பரிவுடன் கேட்டபடி கட்டிலில் உட்கார்ந்தார் மகாதேவன்.

மிகுந்த சிரமத்துடன் சாய்ந்து படுத்திருந்த மதுரம், "எல்லாம் முழுங்கியாச்சு. ஆனா என்னமோ நெஞ்சை அடைக்கிற மாதிரி இருக்கு. மனசை ஏதோ சங்கடம் பண்றது. மூச்சு விட

நீடித்து நிலைக்கும் வெண்மைக்கு

உஜாலா



UJALA

From Jyothy Laboratories

ஜோதி லேபாரட்டரீஸ்
பம்பாய்.

உஜாலாவின் இரகசியம்

நூதனமான மைக்ரோ ஒயிட்னிங் மற்றும் மைக்ரோ டிஸ்பெர்ஷன் தொழில் நுட்பவழியில் ஜோதி லேபரேட்டரீஸால் V+ ஃபார்முலா கொண்டு தயாரிக்கப்பட்டது உஜாலா.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை கவர்ந்து நிரந்தரமாக விரும்பப்படுகிறது உஜாலா. இதுவே உஜாலாவின் அபார வெற்றியின் இரகசியமாகும்.

உஜாலாவைப் போன்று தோற்றமளிக்கும் ஏராளமானவைகள் விற்பனைக்கு வருகின்றன. அவைகள் உஜாலாவின் இரகசியத்தை பெற முடியாது.

இப்போது 250 மிலி ஃபேமிலி பேக்கிலும் கிடைக்கிறது.




ராஜாளி® நான்-ஸ்டிக் அதிசயம்
இதுவரை தோசைக்கல், ஃப்ரை பான், கடாய்
மட்டுமே தயாரித்து வழங்கி வந்த ராஜாளி
இப்போது முதன் முதலாக யாரும் பார்த்திராத
புதிய நான்-ஸ்டிக் இட்லி தட்டுகளும், நான்-ஸ்டிக் மில்க் பாய்லரும்
தயாரித்து வழங்கி உங்களை அதிசயத்தில் ஆழ்த்த வந்திருக்கிறது.
தொடர்கிறது...
இதெல்லாந்தான் கிடைக்கிறதே! இதிலென்ன அதிசயம்?!
RAJALI
அதிசயம்தான்!
நான்-ஸ்டிக்கில்
இதல்லாங்கூட
கிடைக்குமா?!
மில்க் பாய்லர் கூட
ராஜாளி நான்-ஸ்டிக்கா?!
மல்லிகைப் பூப் போன்ற மிருதுவான
இட்லிகள் தயார் செய்ய
● சாதாரண மில்க் பாய்லரில் உட்புறம் பாலேடு படிந்து கொள்வது போல் ராஜாளி நான்-ஸ்டிக் மில்க் பாய்லரில் ஒட்டாது
● தொடர்ச்சியாக உபயோகப்படுத்திய பின்பும் கூட பாத்திரத்தில் முந்திய காய்ச்சிய பால் வாசம் இருக்காது. ● சுத்தம் செய்ய எளிது
● வழவழப்பான டெஃப்லான் உட்புறப் பூச்சினால் பால் திரிந்து போகாது
● இது அகல வடிவமைப்பு பாத்திரமாகையால் எரிபொருள் மிச்சம்
● எண்ணெய் தடவாமலேயே தட்டிலிருந்து இட்லிகளை எடுக்கலாம்.
● இட்லி ஒட்டாததால் மாவு விரயம் ஆகாது
● நேரமும் எரிபொருளும் மிச்சம். ● தட்டுகள் சுத்தம் செய்வது எளிது
● எல்லா குக்கர் & இட்லி குக்கர்களிலும் பொருந்தக்கூடியது
● 4 தட்டுகள் மேலும் 6 தட்டுகளாக கிடைக்கிறது
நான்-ஸ்டிக்கில் இவையனைத்தும் கிடைப்பது அதிசயம்தானே!!
❑ தோசைக்கல் (Flat & Concave) ❑ கடாய் ❑ ஆப்பக் கடாய்
❑ இட்லித் தட்டுக்கள் ❑ மில்க் குக்கர்
❑ சாஸ் பான் ❑ ஃப்ரை பான் ❑ டீ ட்ரே ஸ்டாண்டர்
எல்லா பிரபல பாத்திரக் கடைகளிலும் கிடைக்கும்
ISI முத்திரையினைக் கொண்டது
RAJALI®
HOME EQUIPMENTS
50-A, Appar Swamy Koil Street, Thiruvottiyur, Madras - 600 019. ☎: 543391, 543867

முடியல்லை" என்று கண்களில் நீர்த் தளிக்கக் கூறினான்.

"அசடு பக்கத்து ரூம்லேதானே இருந்தேன். ஒரு குரல் கொடுத்தா ஓடி வந்திருக்க மாட்டேனா? மந்நியானம் அவங்க வந்துட்டுப் போனதிலிருந்து உன் முகம் சரியாகவே இல்லை. கவனிச்சேன். உனக்குப் பிடிக்கல லைனா நா இந்த வரனை முடிப்பேனா? அது தானே உன் கவலை?"

சிறிது நேரம் கண்களில் நீர் மல்க அவரையே பார்த்துக் கொண்டிருந்தவள் தயங்கித் தயங்கி,

"எப்படியாவது இந்த இடத்தை முடிச்சிடலாமே. ரம்யாக்கு இந்த ஆடியோட இருபத்தஞ்சு வயசாயிடறது. அடுத்தடுத்துப் பெண் குழந்தைகளும் இருக்கு. நமக்கும் வயசு ஏறிண்டு தானே இருக்கு? நம் கடமையை முடிக்க வேண்டாமா? ரம்யாவும் எத்தனை நாள்?"

மேலே பேச முடியாமல் துக்கம் அடைத்தது.

"அந்தம்மா பேசினதையும், நடந்துண்ட மாதிரியையும் பாத்துண்டுதானே இருந்தே மது? அதுக்குப் பிறகுமா இதையே முடிக்கலாம்கிறே. ரொம்ப டாமினேடிங் டைப். சுபாவமும் கரடு முரடா இருக்கு.

பையனோ அம்மா கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டான்னு அவங்களே சொல்லிட்டா. உண்மையும் அதுதான். இந்த மாதிரி இடத்துலே நம்ம குழந்தைக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையாதுன்னு தோணறது."

"பையன் கண்ணுக்கு நல்லா இருக்கான். பாங்க் வேலை. நல்ல சம்பளம். இதெல்லாம் ஒரு குறையா? அஞ்சு விரலும் ஒரே மாதிரியாவா இருக்கு? அவங்க கேட்டது தப்பில்லைன்னு தோணித்து. மழுப்பலா நீங்க செஞ்சது போதும்னு சொல்லிட்டு அப்புறமா நம்ம குழந்தையைப் பிடுங்காம பளிச்னு வாயை விட்டு கேட்டதே நல்லதில்லையா? பையன் அம்மாவுக்கு அடங்கின பிள்ளைதான். அதிலே தப்பு ஒண்ணும் இல்லையே? அதுக்காக பெண்டாட்டிகிட்ட பிரியம் இல்லாத போயிடுமா?"

"மது! நீ மனசுலே எதையோ நெனச்சிண்டு மறுகறே. நாம் என்ன பிளாக்கிலும் ஒயிட்டிலுமா சம்பாதிச்சு வெச்சிருக்கேனா? நியாயமா மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாம, யாரிட்டயும் கைநீட்டி வாங்காம, உழைச்சு முன்னுக்கு வந்தேன். என்னாலே முடிஞ்சது குழந்தைகளுக்கு நல்ல படிப்பைக் கொடுத்திருக்கேன். ஏதோ குழந்தைகள் கல்யாணத்துக்குன்னு கொஞ்சம் சேர்த்து வெச்சிருக்கேன். கடன் கேட்டா ஆபீசிலும் வெளியிலும் கிடைக்கும். இருந்தாலும் அந்தம்மா கேட்டது ரொம்ப அதிகம். ஏதோ கிராமத்துலே பெரியவா தேடின நிலம், வீடு இருந்தது. வித்து அந்த நாளிலே இந்தப் பெரிய வீட்டை மலிவா வாங்கிப் போட்டோம். சாப்பாட்டுக்கு நெல் கிராமத்திலிருந்து வந்து விடுவதால் ஓரளவு சேமிக்க முடிகிறது."

"அந்தம்மா கேட்டபடி அவ்வளவு செய்ய முடியாதுதான். ஆனா நம்ம கப்புணியை விட்டு நம்மாலே செய்ய முடிஞ்சதைச் சொல்லி பேசிப் பார்க்கச் சொல்லலாமே? அவசியம்னா இந்த வீட்டையும் மீதி இருக்கிற நிலத்தையும் வித்துடலாம். எல்லாம் பொருந்தி வாரது கஷ்டமா இருக்கு. பொருந்தி வந்ததை பணத்துக்காக விட வேண்டாமேனுதான்."

"மது என்ன பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசறியா நீ? நமக்கு இன்னும் ரெண்டு குழந்தைகள் கல்யாணத்துக்கு இருக்குங்கறதை மறந்துட்டியா? பின்னையும் அமெரிக்கா போக ஆசைப்படறான். ரமேஷ் படிப்பு முடியல்லை இன்னும். இப்பவே ரவி தலையில் இவ்வளவு சுமையை ஏத்தலாமா?" என்று வேதனையுடன் கேட்டார் மகாதேவன்.

"எல்லாம் தெரிஞ்சுதான் பேசறேன். நமக்குக் கடமை இன்னும் நிறைய பாக்கி இருக்கு. நான் மறக்கல்லை. ரவி நல்லா சம்பாதிக்கறான். ராஜாவுக்கு அதிர்ஷ்டம் இருந்தா கண்டிப்பா அமெரிக்கா போவான். இப்ப அவனும் தலை




பாப்கார்ன் துவையல் :

பாக்கெட் பாப்கார்ன் திறந்து சாப்பிட ஆரம்பித்தால் முழுவதும் சாப்பிட முடியாவிட்டால் நமுத்துப் போய்விடும். வீணாகி விட்டதே என்று கவலை வேண்டாம். கறிவேப்பிலை துவையலுடனோ, தக்காளி, வெங்காயம் துவையலுடனோ, தேங்காய்த் துவையலுடனோ நமுத்த பாப்கார்னை சேர்த்து அரைத்து எடுத்தால் ருசியோ ருசி.

— காந்தாமணி

வெய்யில் அதிகமாக உள்ள இந்த நாட்களில் வீட்டிற்குள் இரவில் படுப்பதே மிகவும் சிரமம். அதுவும் ஜன்னல் கதவுகளை திறந்து வைத்துப் படுத்தால் காற்று சிறிதாவது வரும். ஆனால் கதவைத் திறந்து வைத்துப் படுக்கவும் இக்காலத்தில் பயமாக உள்ளது. அதனால் ஒரு அகன்ற பாத்திரமோ அல்லது டப் இருந்தால் அது நிறைய நீர் நிரப்பி ஃபேனுக்கு அடியில் வைத்து விட்டுப் படுத்தால் குளிர்ந்த காற்று அடிக்கும். ஈரமான துணிகளையும் படுக்கும் அறையில் கொடியில் உலர்த்தினால் காற்று ஈரப்பசையுடன் குளிர்ந்து இருக்கும். வெயிலுக்கு இதமாக இருக்கும்.

— டி. ஜெய்சங்கர்



யெடுத்து வேலைக்குப் போறான். ரமேஷ் படிப்பு முடிஞ்சு வேலைக்குப் போகவும் ப்ரியாக்கு வரன் பார்க்கவும் சரியா இருக்கும். ஸ்வாமி இருக்கார். நாம்தான் நம்ம கையிலே ஏதோ இருக்கறதா நெனச்சு கலங்கறோம்."

ஏக்கத்துடன் அவர் முகத்தையே பார்த்த மதுரத்தை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தார் மகாதேவன்.

"உனக்கு அவ்வளவு தூரம் இந்த வரனை முடிக்கிறதுலே ஆர்வம் இருந்தா, கூடக் குறைய ஆனாலும் இதையே முடிச்சுடலாம். இருந்தாலும் அப்படி என்ன அவசரம், அவசியம்னு தான் புரியல்லை எனக்கு!"

"அவசரந்தான்னா. அவசியமும்தான். தலைச்சன் பிள்ளை கல்யாணத்தை கண் குளிரப் பார்த்தாச்சு. முதல் பெண்ணோட கல்யாணத்தையும் அப்படிப் பார்க்க வேண்டாமா? இப்படி ரொம்பத் தள்ளிண்டே போனா, அவ கல்யாணத்தைப் பார்க்க நான் இருப்பேனான்னு பயமா இருக்கு" கேவினாள் மதுரம்.

"மது! என்ன சொல்றே நீ?"

அதிர்ந்து போன மகாதேவன் அலறினார்.

கண்ணகி சிலையருகே மாருதியை நிறுத்தி விட்டுக் காத்திருந்தாள் அருணா. கொஞ்சம் கொஞ்சமாக பொறுமை பறிபோய்க் கொண்டிருந்தது.

"பேசாம கிளம்பிப் போயிடலாமா? வந்து நல்லா தேடி தவிக்கட்டும். நேத்து பூரா நான் தன்னந்தனியா இவருக்காக காத்துக் கிடந்தாச்சு. இன்னிக்குமா?"

முறுக்கிக் கொண்டது அவள் பெண் மனம்.

அந்த நேரத்தில்தான் தன் ஹோண்டாவில் வந்திறங்கினான் ராஜா.

"ஹாய் அருண்! ரொம்ப நேரமா காத்துட்டிருக்கியா, ஸாரிடா!" என்று மன்னிப்புக் கேட்டபடி வந்தான்.

ராஜா வந்தால் அவனுடன் பேசக் கூடாது. அவன் வருவதற்கு முன்பே கிளம்பிப் போய் அவனை தவிக்க விட வேண்டும் என்றெல்லாம் முறுக்கிக் கொண்ட அந்தப் பொல்லாத மனம் அவனைக் கண்டதும் ரோஷம், வெட்கம் எல்லாவற்றையும் உதறிவிட்டு அவனுடன் பேசத் துடித்தது.

"நீங்க ஆனாலும் ரொம்ப மோசம் ராஜ்! அஞ்சு மணிக்கு வரேன்னீங்க. இப்ப மணி என்ன ஃபைவ் தர்ட்டி! எப்பவும் பாய்பிரண்டு தான் கேர்ள் பிரண்டுக்காக காத்துண்டு தவம் கிடப்பான். நம்ம கேஸிலே எல்லாமே உல்டாவா இருக்குப்பா.

நேத்து சாயங்காலம் பூரா காத்து காத்து உடம்பு மனசு ரெண்டுமே களைச்சுப் போச்சு. வர முடியாட்டி ஒரு ஃபோனாவது பண்ணக் கூடாதா? இன்னிக்கும் நா ஃபோன் பண்ணப் புறம் 'சாரி'னு வழியறீங்க. ஏன் வரல்லைன்னா நேரிலே வந்து சொல்றேன்னு சஸ்பென்ஸ் வேறே!"

சிணுங்கினாள் அருணா.

"என் மேலே தப்பில்லை டியர்! நா சரியா அஞ்சு மணிக்கு என் வேலையெல்லாம் முடிச்சிண்டு கிளம்பிட்டேன். கிளம்பற டயத்துலே பாஸ் வந்து அதாம்பா உன் டேடி வேறே ஏதோ வேலை கொடுத்துட்டார். வேலை கொடுத்தவர், பெண்ணையும் கொடுக்கப் போறவராச்சே, மறுக்கவா முடியும்?"

"ம். இன்னிக்கு வராததுக்கு எங்கப்பா மேல பழியைப் போட்டாச்சு. வீட்டுக்கு போய் அப்பாவோட தனியா சண்டை போட்டுக்கறேன். இப்பச் சொல்லுங்க. நேத்து வர முடியாதபடி என்ன ஆச்சு, என் செல்ல ராஜா வுக்கு?" என்று செல்லமாக அவன் கன்னத்தைப் பிடித்து இழுத்தாள் அருணா.

"அம்மாடி தாயே! இந்தப் பழக்கத்தை

விட்டுடா கண்ணா. இதே மாதிரி உனக்கு குழி வர போறதெல்லாம் இன்னிசை, அப்புறம் தேவைப்படறச்சே என் கன்னம் காணாமப் போயிடுண்டா. சின்ன வயசிலே ஆப்பிள் கன்னம், அமுல் பேபினு கேலி செய்வாங்க எல்லாரும். இப்ப நீ அந்தக் கன்னத்தையே கன்னம் வைக்கப் பார்க்கிறியே நியாயமா?" – கன்னத்தைத் தடவிக் கொண்டான் ராஜா.

"நேத்து முதல் நாள்தான் 'ரம்யாவைப் பெண் பார்க்க வராங்க. நா அவசியம் வீட்டுலே இருக்கணும்னு சொன்னீங்க. இன்னிக்கு பேடி வேலை வைத்து விட்டதாகச் சொல்லிட்டீங்க. நேத்து என்ன ஆச்சு?"

"நேத்து ரம்யாவைப் பெண் பார்க்க வந்தப்புறம்...."

"ஹை... என்னாச்சு ரம்யா கல்யாணம் முடிவாயிடுத்தா. அப்புறம் நம்ம லைன் கிளியர்னு சொல்லுங்க. அப்ப நம்ம லவ் மேட்டரை அப்பாகிட்டே ஆரம்பிக்கலாமா?"

"அம். ஆசையைப் பாரு. நா இப்பத்தான் வேலையிலேயே சேர்ந்திருக்கேன். இன்னும் செட்டில் ஆகல்லை. உனக்கோ படிப்பே முடியல்லை, அதுக்குள்ளே கல்யாணம்னா வித்யாவுக்கும் முடியணும். அவ உன்னை விடப் பெரியவ, தெரியுமோ?"

"ஏன் பிரியாவை விட்டுட்டீங்க? அவளுக்கும் ஆகட்டும். இப்படியே தள்ளிப் போட்டுண்டே போனா, நாம கல்யாணத்தோட சஷ்டியப்த பூர்த்தியும் பண்ணிக்க வேண்டியதாயிடும்பா!"

கோபத்துடன் கன்னத்தைக் கிள்ள அருணா கையை நீட்டவும், துள்ளி நகர்ந்து கொண்டான் ராஜா.

"பின்னே என்ன ராஜ்! கல்யாணம்னா ஆகாசத்தைப் பாக்கறீங்க! சொந்தக் கால்லே நிக்கணும்கறீங்க. எங்கப்பா பெரிய பிசினஸ்மேன்னு உங்களுக்கே தெரியும். எத்தனையோ கம்பெனிகள் அவருக்குச் சொந்தம். கறுப்பும் வெளுப்புமா ஏகப்பணம் குவிஞ்சு கிடக்கு. அத்தனை சொத்துக்கும் ஒரே வாரிசு நான்தான். என்னைக் கல்யாணம் பண்ணிட்டு அத்தனை கம்பெனிகளையும் கட்டிக் காப்பாத்தறதுதான் மாப்பிள்ளையா லட்சணமா நீங்க செய்ய வேண்டிய வேலை. அதை விட்டுட்டு..."

சிணுங்கினாள் அருணா.

"எனக்கு இந்தப் பழைய சோறெல்லாம் பிடிக்காதுப்பா."

"பழைய சோறா?" புரியாமல் திகைத்தாள் அருணா.

"ஆமான்டா. பெரியவங்க தேடி வெச்ச சொத்துலே உட்கார்ந்து தின்னா, பஞ்சபட்ச பரமான்னமாயிருந்தாலும், அது பழைய சோறுதான். நம் கையால் உழைச்சு, நம் தகுதிக்கேற்ப கிடைக்கிற ஊதியத்துல சாப்பிடறதுதான் கடு சோறு. உங்கப்பா அளவுக்கு இல்லாட்டியும், என் தகுதியைப் பார்த்து அவர் கொடுத்த வேலையில் மேலும் உயர்ந்து, ஓரளவுக்கு சொந்தக் காலில் நிற்க தெம்பு வந்த பிறகு உரிமையோடு எங்கப்பாவோட நானே வந்து பெண் கேட்பேன்.

அதுக்குள்ள அவசரப்படறியே. கொஞ்சம் பொறுத்துக்கடா!

அருணாவின் முகம் கருங்குவதைப் பார்த்து, "சாரி அருண். நேத்து எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லை. நேத்து ராத்திரி மாரடைப்பு மாதிரி வந்து ரொம்ப பயமா போச்சு. எங்க டாக்டர் வந்து பார்த்து விட்டு அவர் நர்சிங் ஹோமில் அட்மிட் பண்ணி எல்லா டெஸ்டும் பார்க்கணும்னுட்டார். அம்மா இன்னும் கூட நர்சிங் ஹோமிலதான் இருக்காங்க.


உடனடியா பயப்படும்படி ஒண்ணும் இல்லைன்னாலும் நேத்து வீடே ஆடிப் போச்சு. அம்மா நர்சிங்ஹோமிலிருந்து நல்லபடியா திரும்பி வரவரைக்கும் எதுவும் மனசுலே ஓடாது. அடிக்கடி நாம முன்போல சந்திக்க முடியுமான்னும் தெரியல்லை. ..சரி. நீ கிளம்பு. இருட்டிடுச்சு. நான் கொஞ்ச நேரம் காத்தாட உட்கார்ந்துட்டுக் கிளம்பறேன்..." என்றான். அருணா மனமில்லாமல் பிரிந்தாள்.

இரண்டு வருஷத்துக்கும் மேல் ஆகிறது அவர்கள் பழக ஆரம்பித்து. அப்போது வண்டி கிடையாது. பஸ்ஸில்தான் காலேஜுக்குப் போய்க் கொண்டிருந்தான்.



உருளைக் கிழங்கு வெங்காயம் போட்ட காரக் கறி மீந்து விட்டது. அத்துடன் கடலை மாவு அரிசி மாவு, கொஞ்சம், மைதா, டால்டா காய்ச்சி ஊற்றி உப்புப் போட்டு, கறிவேப்பிலை, நிலக்கடலை சேர்த்து பக்கோடா உருட்டிப் போட்டால் மொறுமொறுவென்று புதிய ருசியில் பக்கோடா மணக்கும்.

– காந்தாமணி



வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவது சகஜம். ஒரே பிராண்ட் பொருளை நான்கு கடைகளில் விசாரித்துப் பார்த்து விலை குறைவாகச் சொல்லும் கடையில் வாங்கினால் செலவு குறையும். பல பொருட்கள் இப்படி வாங்கி அனுபவப்பட்டவள் என்ற முறையில் சொல்கிறேன்.

- ராதிகா அழகப்பன்

அன்று காலேஜ் முடிந்து பஸ் ஸ்டாண்டுக்கு வந்து கொண்டிருந்தான். அப்போது வேகமாக வந்த கார் ஒன்று, திடீரென்று பின்னால் வரும் வண்டிக்காக ஓரமாக ஒதுங்கி கிரீச் என்று பிரேக் போட்டு நின்றது. மழைக் காலமாதலால் ஆங்காங்கு குட்டை குட்டையாய் நீர்தேங்கிக் கிடந்தது.

அந்தக் குட்டை ஒன்றில் இறங்கி ஏறிய அந்த மாருதி, சேற்றையும் குழம்பிய மழைத் தண்ணீரையும் வாரி அடித்தது. பயந்து கொண்டு பிளாட்பாரத்தில் மேலே ஏறி ஓடியும் விடாமல் அவன் வெள்ளை உடை பூராவும் அபிஷேகம். ராஜா எப்போதும் வெள்ளைதான் அணிவான். அப்படி ஒரு மோகம்.

டிரைவிங் சீட்டிலிருந்து ஒரு இளம்பெண்ணின் தலை வெளியே நீண்டது. எவளோ 'புல்' ஆகப் போட்டு விட்டு டிரைவிங் பண்ணுகிறாளோ என்று நினைக்கும்படி அந்தக் கார் வளைந்து நெளிந்து ஆடிக் கொண்டு வந்தது. அவனைப் பார்த்ததும் 'பாவம் எல் போர்டாக இருக்கும். மன்னிப்பு கேட்டு பயந்து போய் அழும்' என்று நினைத்தபடி அலட்சியமாக நிமிர்ந்து பார்த்தான். ஆனால் அந்தப் பெண்ணோ...?

"ஏய் மிஸ்டர்... கண்ணு தெரியலையா? ரோட்டைப் பார்த்து நடக்கிறதில்லை? இது என்ன உங்க பாட்டன் ரோடா? சாலையே உங்களுக்குத்தான் சொந்தம்கிற மாதிரி நடந்து போறீங்களே! கற்பனையா இல்லை கனாக் காணறீங்களா?" என்று ஊசிப் பட்டாசாய்ச் சீறினாள்.

"சாரி மிஸ். நானும் கொஞ்சம் கவனக் குறைவா இருந்துட்டேன். உங்க கார் அங்கே வரச்சேயே ஒரே ஆட்டம். அப்பவே பிளாட்பாரத்துலே ஏறி ஓடி இருக்கணும். என் தப்புதான். நீங்களும் கொஞ்சம் பார்த்து வந்திருக்கலாம். இப்ப என்ன ஆச்சு? பரவாயில்லை. டிரஸ்தானே பாழாப் போச்சு? நல்லவேளை. காலேஜ் முடிந்து வீட்டுக்கு வர நேரம்.. பரவாயில்லை. மானேஜ் பண்ணிக்கலாம்" என்று நகர்ந்தான் ராஜா.

'களுக்'கென்று வெள்ளி மணியைக் குலுக்கியது போல் சிரித்தாள் அருணா.

"இந்தக் கோலத்தோட எங்கே எப்படி போவீங்க?"

"பக்கத்துலேதான் என் ஃப்ரெண்ட் வீடு இருக்கு. அங்கே போய் டிரெஸ் மாத்திட்டு அப்படியே பஸ் பிடிச்சு வீட்டுக்குப் போறேன்."

"நோ... நோ இப்படியே ரோடுல போனால், எல்லாரும் சிரிப்பாங்க. கமான் காரிலே ஏறுங்க. எங்க வீட்டுக்குப் போகலாம்" - கார்க் கதவைத் திறந்து விட்டாள் அருணா.

"மழைக் காலத்துலே இந்த மாதிரி அபிஷேகமெல்லாம் ரொம்ப சகஜம். உங்களுக்கு எதுக்கு சிரமம்? நானே போய்க்கிறேன். நீங்க போங்க."

"ப்ளீஸ். காரிலே ஏறுங்களேன். என்னால்தானே இப்படி ஆச்சு? ஐ ஃபீல் வெரி பேட். வீட்டிலே வாஷிங் மெஷின் இருக்கு. அதிலே போட்டா சீக்கிரம் வாஷும் ஆகி, 'டிரை'யும் ஆகிடும். அயர்ன் பண்ணி போட்டுட்டு ராஜா மாதிரி போகலாம்."

முன்பக்கக் கதவைத் திறந்தாள் அருணா. கொஞ்சம் விட்டால் கையைப் பிடித்து இழுத்து காரிலேயே கடத்திக் கொண்டு போய் விடுவாள் போல இருந்ததால் பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்து விட்டான் ராஜா.

அவள் வீட்டை அடைந்தபோது... வீடா இது, மாளிகை! அடேயப்பா. பெ...ரி...ய...ய... பணக்கார வீட்டுப் பெண்தான் போல் இருக்கு!

கார் வருமுன் ஓடிவந்து திறந்த கூர்க்கா, காரை ஷெட்டில் விடப் போன டிரைவர், இன்னும் சின்னம்மா, சின்னம்மா என்று பணிவுடன் அவள் உத்தரவுக்குக் காத்து நிற்கும் வேலைக்காரர்கள் எல்லாரும் அவள் இந்த வீட்டின் ராணி என்பதைச் சொல்லாமலே உணர்த்தினார்கள்.

"வேலு... கொஞ்சம் மேலே வரியா" விசாலமான அவளுடைய அறையை அடைந்தவுடன் இண்டர்காமில் அருணா கூப்பிட்டாள்.

வேலு மாடிக்கு ஓடி வந்தான்.

அருணா ராஜாவிடம், "எங்கப்பா டிரஸ் உங்களுக்கு சூட் ஆகாது. அவர் 'கனபாடி' அவர் லுங்கி ஒன்று தருகிறேன். டி-ஷர்ட் என்னுடையதைப் போட்டுக்கலாம். அப்பாவுடையதைப் போட்டுக் கொண்டால், காணாமல் போய் விடுவீர்கள்!" என்று வேஷ்டியை எடுத்துக் கொடுத்து விட்டு, டி-ஷர்ட்டுக்காகத் தன் வார்ட்ரோபைத் திறந்தாள்.

ஓ அது ஒரு வண்ணமயமான உலகம்!

அதிலிருந்து ஒரு டி-ஷர்ட் எடுத்துக் கொடுத்து விட்டு, "முகம் கழுவிண்டு வாங்க. இல்லே குளிக்கிறதா இருந்தாலும் குளிச்சிட்டே வரலாம். சோப், டவலெல்லாம் அங்கேயே

இருக்கு!" என்று அட்டாச்ட் பாத்ரூமைக் காட்டினான்.

புது டிரஸ்ஸை பாத்ரூம் டவல் ஸ்டாண்டில் போட்டு விட்டு செருகி இருந்த உடைகளைக் களைந்து வெளியே வைத்துவிட்டு பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டான்.

"வேலு– இந்த டிரஸ்ஸை வாஷரில் போட்டு தோய்த்து உலர்த்தி அயர்ன் பண்ணிட்டு வா!" என்று வேலுவிடம் அருணா சொன்னது உள்ளே கேட்டது.

பாத்ரூமில் சலவைக் கல்லில் குளிக்கும் தொட்டி. சுவரெங்கும் கண்ணாடி. சந்தன சோப்பின் நறுமணத்தை அனுபவித்து ஷவரில் ஆனந்தமாகக் குளித்தான். ரெடியாக இருந்த டிரஸ்ஸைப் போட்டுக் கொண்டான். டி-ஷர்ட்டில் அவன் வாசனை பிரத்யேகமாக வீசியது.

பாத்ரூமுக்குள்ளேயே பவுடர், சீப்பு எல்லாம் இருந்ததால் டிரஸ் செய்து கொண்டு வெளியே வந்தான்.

"ஜரிகை வேஷ்டியில் புது மாப்பிள்ளை மாதிரி இருக்கீங்க!" என்று உற்சாகமாகக் கூறி விட்ட அருணா வெட்கத்தில் நெளிந்தாள். பார்த்து ஒரு மணி நேரம் கூட ஆகல்லை. அதற்குள் உரிமை எடுத்துக் கொண்டு பேசி விட்டோமே!"

ராஜாவுக்கு சற்று பெண்மைச் சாயல் கலந்த முகம். அச்சாக மதுரம் போலவே இருப் பான். ஜரிகை வேஷ்டியில் அழகாகவே தெரிந் தான். சரியாகத் துவட்டாததால் நீர் சொட்டிய முடியை இழுத்துத் துடைக்கலாம் போல் இருந்தது அருணாவுக்கு.

"வாங்க ராஜ். அப்பா வந்தாச்சுன்னு நினைக்கிறேன். உங்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்."

அடுத்த அறைக்குள் இருவரும் நுழைந்தனர். அங்கு, ஒரே புகை மண்டலமாக இருந்தது. இங்கு யாரையும் காணோமே என்று திகைத்த போது ஆடும் நாற்காலி ஆடுவது தெரிந்தது.

"ஹாய் பேபி! காலேஜிலிருந்து ஏன் இவ்வளோ லேட்? நீ வர நேரமானா தவிச்சுப் போறேன்டா! எத்தனை நாய், எத்தனை ஆடு, எத்தனை கோழி அவுட் இன்னிக்கு? மாருதி ஷேப்பிலே இருக்கா. கூடையிலே வாரிட்டு வந்தியா?" என்று கேட்டவர்,

"அடடே, யாரிந்தப் பெண்ணு? ஆட்டை அடிச்ச மாட்டை அடிச்ச கடைசியிலே மனுஷனை அடிச்ச கதையா இந்தப் பெண்ணு மேலே காரை ஏத்திட்டியா?" என்று பதறினார் ஈஸ்வரன்.

ஹய்யோ டேடி! என்று வலிக்காமல் தலையில் அடித்துக் கொண்ட அருணா, "உங்க வழுக்கைத் தலை மேலே ஏத்திட்டிருக்கிற கண்ணாடியைக் கொஞ்சம் கீழே இறக்கி கண்ணிலே போட்டுண்டு பாருங்க டாடி. இது பெண்ணா, பையனான்னு தெரியும். நா ஒண்ணும் அவரை இடிக்கல்லை.

நா பாட்டுக்கு சமத்தா மாருதியிலே வந்துண்டிருந்தேன். அவராத்தான் என் காரிலே வந்து விழுந்தாரு. நோ நோ அவர் விழல்லை. சேறுதான் அவர் டிரஸ்ஸிலே பட்டுப் பாழா யிடுச்சு. அப்படியே எப்படிப் போக முடியும்? அதான் வீட்டுக்கு வந்துட்டு போகலாம்னு கூட்டி வந்தேன்.

"மீட் மை ஃபாதர் ராஜா, டேட் திஸ் இஸ் ராஜா!" என்று அறிமுகம் செய்தாள். இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர்.

அவனைப் பற்றி, அவன் படிப்பு குடும்பத்தில் எல்லாரையும் பற்றி அன்புடன் விசாரித்தார். தன்னைப் பற்றியும் சொல்லிக் கொண்டார். இந்தியாவின் மிகப் பெரிய பிசினஸ் புள்ளிகளில் ஒருவரான ஈஸ்வரன் தன் முன் அமர்ந்து சரளமாகப் பேசிக் கொண்டிருப்பதை நம்ப முடியாமல் திகைத்தான் ராஜா.

தை மாதக் கடைசியில் தம்பி கல்யாணம் தமிழ்நாட்டில். அதோடு கூட உறவினர்கள் வீட்டுக்கெல்லாம் ஃபிளையிங் விஸிட் அடித்து வந்த பலன் ஊருக்குத் திரும்பியதும் பையை கொட்டினால், வெற்றிலைப் பாக்குடன் உறவினர் கள் வைத்துக் கொடுத்த பசு மஞ்சளும், கஸ்தூரி மஞ்சளுமாய் 1 கிலோ போல் சேர்ந்திருந்தது. இவ்வூரிலோ வாசனை மஞ்சள் அரைக்கும் மிஷின் கிடையாது. என்ன பண்ணுவது? சட்டென்று ஓர் ஐடியா. மஞ்சள்களை 4,5 துண்டுகளாக வெட்டி மிக்ஸியில், வெஜிடபிள் கட் செய்யும் பிளேடை போட்டு ஒரு சுழற்று சுழற்ற நிமிஷத்தில் தேங்காய்த் துருவலாய் மஞ்சள் துருவல். அன்றும், மறுநாளும் வெய்யிலில் வைக்க சுக்காய் காய்ந்து விட்டது. மறுநாள் மிக்ஸியில் ட்ரை பிளேடை போட்டு பொடி செய்ய 5 நிமிடத்தில் பட்டாய், அம்மா அரைத்துக் கொடுக்கும் அதே வாசனை மஞ்சள் தூள்.

– ஜானகி ஸ்ரீநிவாஸன்



"ஓகே. சித்திரகுப்தன் கணக்குக்கு இன்னிக்கு யாரும் அகப்படாதது சந்தோஷம்தான். கமான் பேபி, ராஜா டிபன் சாப்பிடலாமா? பசிக்கிறது!" என்றார் ஈஸ்வரன்.

"நோ தாங்க்ஸ் சார். தப்பா நினைச்சுக்காதீங்க. வீட்டுலே நேரமாச்சு. இன்னும் வரல்லையேன்னு கவலைப்படுவாங்க" என்றான் தயக்கத்துடன்.

"நோ நோ. இப்பத்தான் புதுசா எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க. ஒண்ணும் சாப்பிடாம போனா எப்படி? கம்மா கூச்சப்படாதே ராஜா. உங்க வீடு மாதிரி நெனைச்சுக்கோ. நேரமானால் காரில் கொண்டு விடச் சொல்றேன். பயப்படாதே. டிரைவர்தான் வண்டி ஓட்டுவார்..." என்று கண்களைச் சிமிட்டினார்.

"டேட் யூ யூ!" என்று பொய்க் கோபத்துடன் அருணா துரத்த, அவனை இழுத்துக் கொண்டு மாடிப் படிகளில் இறங்கினார்.

டிராயிங் ரூமின் மறுபக்கம் டைனிங் ஹால் பெரிய மேஜை. வெள்ளிக் கிண்ணத்தில் ஆப்பிள், வாழை, மாதுளை, கொய்யா, திராக்ஷை முதலிய பழங்கள் அலங்காரமாக அடுக்கப்பட்டிருக்க, வெள்ளித் தட்டுகள் போடப்பட்டு, வெள்ளி ஜக்கில் ஐஸ் வாட்டர் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது.

அருகில் இருந்த வாஷ்பேசினில் கைகழுவித் துடைத்து விட்டு டேபிளில் உட்கார்ந்தார்கள்.

வேடிக்கையும், சிரிப்புமாகப் பேசிக் கொண்டிருந்த ஈஸ்வரன், சிறிது நேரம் மௌனமாக இருந்த பின்னர், "பொல்லாத பொண்ணுப்பா இந்த அருணா. இப்படித்தான் ஏதாவது குறும்பா பண்ணிட்டே இருக்கும். ஒரு நல்ல புருஷனைத் தேடி இவளை ஒப்பிச்சுட்டா என் பொறுப்பு தீர்ந்தது. எல்லா பொறுப்பையும் அவன்கிட்டே சுமத்திட்டு ஜாலியா போயிடுவேன்!" என்றார்.

"நோ டேட் அது மட்டும் நடக்காது. நான் உங்களை விட்டுப் போக மாட்டேன். வர வரப் பேச்சு எங்கே ஆரம்பிச்சாலும் கடைசியா என்னை ஒருத்தன் கிட்ட தள்ளி விடறது லேதான் முடியறது. நா இதுக்கு சம்மதிக்கவே மாட்டேன்" என்று அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சினாள் அருணா.

வந்ததிலிருந்து அந்த வீட்டில் குடும்பத் தலைவி என்று ஒருத்தி இருப்பதாகவே தெரியவில்லை. இப்ப இவரோ பெண் என் பொறுப்புங்கறார். ஒருவேளை அம்மா இல்லையோ?

மனத்தில் இருந்தது வாயில் வந்து விட்டது.

"இவங்கம்மா" என்று தயக்கத்துடன் கேட்டான் ராஜா.

"ஓ. நீ தப்பா நெனச்சுட்டியா தம்பி? இவங்கம்மா ரொம்ப பிஸி. பெரிய மனுஷன் பெண்டாட்டின்னா சும்மாவா? அந்த மன்றம், இந்த சபா, டீவி., ரேடியோன்னு ஏகப்பட்ட இடங்களுக்குப் போவா. இப்பவும் எங்கேயோ டூர் தான் போயிருக்கா.

ஒரு வாரமாச்சு, ஊரில் இல்லை. இருந்தாலும் வீட்டிலே தங்கறதோ, ஒருவரையொருவர் பார்த்துக்கறதோ அபூர்வம். நா எங்கே போனாலும் ஈவினிங் வந்துடுவேன். அருணை விட்டுப் பிரிஞ்சு என்னால் இருக்க முடியாது. கம்பெனி விஷயமா டூர் போனால் கூட ஒருநாள் இரண்டு நாள்தான்.

ரொம்ப செல்லம் கொடுத்து கெடுத்திட்டேன்னு அவ கூடத் திட்டுவா.

நீ அடிக்கடி வந்தா எப்பவாவது ஒருநாள் பார்க்கிற பாக்கியம் கிடைக்கும்.

"சாரி சார். நா தப்பா நெனச்சு..." என்று இழுத்தான் ராஜா.

"இட்ஸ் ஓகே ராஜா. இலையைப் பார்த்து சாப்பிடப்பா. ஜயர் இன்னும் கொஞ்சம் இட்லி கொண்டு வாங்க!" என்று உபசரித்தார் ஈஸ்வரன்.

"அய்யோ ஹவுஸ்ஃபுல்! வேண்டாம்!" என்று அலறியபடி எழுந்து விட்டான். வேலு அயர்ன் பண்ணி தந்த டிரஸ்ஸைப் போட்டுக் கொண்டு கிளம்பினான்.


"அடிக்கடி வா ராஜா! அருணுக்கு சந்தோஷமா இருக்கும். அருண் டிரைவர் இருக்காரா, பாரு!" என்றார் ஈஸ்வரன்.

"வேண்டாம் சார். பக்கத்துலேதான் வீடு. நடந்தே கூடப் போயிடுவேன். அப்ப நான் வரட்டுமா அருண், வரேன் சார்!"

"சீ யூ தென்!" என்று இருவரும் கை அசைத்து விடைகொடுத்தார்கள். அப்படி ஆரம்பித்த நட்புதான் இப்படி காதலில் வந்து முடிந்திருக்கிறது...

படபடவென்று தூறல் மேலே விழ கற்பனையிலிருந்து மீண்டு, ஹோண்டாவை மெதுவாகச் செலுத்தினான்.

(தொடரும்)



ஆப்பிளை ஜூஸ் எடுத்துச் சாப்பிடும் போது அதிலுள்ள நார்ப் பொருள் பெரும் பாலும் அகன்று விடுகிறது. இதனால் உடலுக்கு பலன் கிடைப்பதில்லை. ஆப்பிளை நன்கு கழுவி அப்படியே கடித்து அல்லது துண்டுகள் செய்து சாப்பிடுவது உடல்நலத் திற்கு மிகவும் நல்லது.

– ராதிகா அழகப்பன்

திருமண மலர்

மணமகள் தேவை

● 31/176செ.மீ/4000/DEEE (AMIE) அரசுத் துறையில் பணி புரியும் வரனுக்கு நல்ல அழகும் படிப்பும் உள்ள அரசு பணியிலிருக்கும் மணப்பெண் தேவை. ஆதரவற்ற பெண் களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 12842

● ஐயர், வடமாள், காஸ்யப, திருவாதிரை, 38/5'3"/ PUC/ சொந்த வீடு/ சென்னையில் தனியார் கம்பெனியில்1800/- வருமானமுள்ள வரனுக்கு வேலை செய்யும்/வேலை செய் யாத பெண் தேவை. இடது கண்ணில் மேற்புறம் கொஞ்சம் சதை வளர்ந்திருக்கும். பார்வை கோளாறில்லை. தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 12843

● Architect, Chettion boy, 25/175cms/10,000/ doing private practice, seeks B.E/B.A. Arch brides of Chettion/ Naidu/Mudalier and other equal communities. Contact Box No. 12844. Ph: 6282485

● சௌராஷ்ட்ரா/ரூ.5000/29/177செ.மீ/ டில்லியில் தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டர் ஆப்பரேட்டராய் வேலை பார்க்கும் மணமகனுக்கு, டிகிரி படித்த, வேலைக்குச் செல்கின்ற, வேலைக்குச் செல்ல விருப்பமுள்ள குடும்பப்பாங்கான, அழ கான மணமகள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய பெட்டி எண்: 12845

● வயது 47, அர்ச்சகர், 14 ஆண்டுகளுக்குமுன் தாரமிழந் தவர். உறவுகள் விட்டநிலை, தன்னை பராமரிக்க குணவதி யான லைப் பார்ட்னர் தேவை. 40லிருந்து45குள், விதவை, விவாகரத்து, ஜாதி தடையில்லை. பெட்டி எண்: 12846

● Brahacharnam, Kountinyam, Sadhayam, 30/161/5000, Bank, M.Sc., CAIIB -I, Doing PGDCA, only son seeks smart, Pretty, Music loving Suddha Jadhaga girl Preferably employed (Transferable) or Having excellent qualification/ skills in computers. Box No. 12847

● ஐயர், பிரஹசரணம், சங்க்ருதி, ஹஸ்தம், 25/ எம்.காம்.,(ICWA) நல்ல வேலையில் உள்ள ஒரே பையனுக்கு குடும்பப்பாங்கான, வேலையில் இல்லாத, பட்டதாரி பெண், நல்ல குடும்பத்தில் இருந்து தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 12848

● 31/5.8cm/Iyer, Shadamarshanam, Brahcharanam, Post Graduate, Central Govt., Bombay, 5000, Healthy, Handsome, Independent, Clean habits, Singer. Not interested in having children. Good looking Graduate Girls sharing this opinion apply. Box No. 12849

● தஞ்சை மாவட்ட சைவ வேளாளபிள்ளை/ BE(Mech) ஹோசூர் TVS Groupல் Asst Manager Rs.9000/- 26/ 180cms. அழகிய சிவந்த இளைஞருக்கு அதே இனத்தைச் சேர்ந்த ஹோசூருக்கு மாறுதல் பெறத்தக்க அரசுப் பணி/ வங்கி/LICயில் பணிபுரியும் சிவந்த அழகிய பட்டதாரி மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 12850

● தமிழ் யாதவா/(நெல்லை மாவட்டம்) சென்னையில் விமானப் படையில் பணிபுரியும் கடகம்/பூசம்/27/ BA., DEE/ 4000 டெக்னீசியனுக்கு நல்ல குணமுள்ள பட்டதாரி மண மகள் தேவை. பணியிலிருந்தால் நலம். ஜாதகத்துடன் விண் ணப்பிக்கவும். பெட்டி எண்: 12851

● தமிழ் விஸ்வகர்மா/ சுவாதி/B.Sc/ MCA/வயது 29/ 5'6". சென்னையில் ரயில்வேயில் வேலை. ரூ.3000/-, பட்டதாரி, வேலையில் உள்ள இல்லாத குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகம் குடும்ப விபரத்துடன் அணுகவும். பெட்டி எண் : 12852

● Vadma, Moudgalya Gothram, Anusham, B.Com.,31/ 5'8". Own business at Madras earning monthly income of Rs. 8000/- Seeks good looking Vadama Graduate girl. Box No. 12853

● வயது 34/ இந்து நாடார்/ தனுசு ராசி/ பூராடம் நட்சத்திரம் உள்ளவர்க்கு இரண்டாம்தாரமாக, இரு குழந்தைகளை கவனிக்கக் கூடிய, இதே ராசியுள்ள, நாடார் பெண், நல்ல குணமும், கடவுள் பக்தியும் கொண்ட 20-25 வயதிற்குள் பெண் தேவை. பெட்டி எண்: 12854

● Madhwa Kannada, Brahmin, 31/Kasyaba, Rohini, 5'7", Diploma in Electronics.Technical officer, Abu Dabhi, Drawing more than Rs. 25,000/- Seeks alliance beautiful, Educated and Respectable family. Reply Box No. 12855

● Wanted Non-Haritha Unemployed Goodlooking/ Fair Girl below 25/over 160cms/ for well settled Bombay based Tanjore Vadama Graduate with computer Diploma/29yrs/ 180cms/ Anusham/Own Flat/Rs. 12,000/- Salary. Sub-Sect no bar. Send horoscope with details to Box No. 12856

● Alliance invited Iyer girl employed or qualified willing to work for Brahacharanam boy Koundinya Sathayam, 31/ 170cms/B.Com/MBA/(Calcutta) Accounts Officer (Private Company Delhi) Mars Dosham Sub-sect no bar. Box No. 12857

● ஐயர்/ தமிழ்/ பிரஹசரணம்/ பூரட்டாதி/ காசியப கோத்திரம்/ 29/5'6"/டிப்ளமா. ஓசூரில் சொந்த தொழிற்சாலை நடத்தி வரும் வசதியான மணமகனுக்கு, அதே இனத்தைச் சேர்ந்த, வசதியான நல்ல குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, அழகான, குடும்பப்பாங்கான மணமகள் தேவை. பெட்டி எண்: 12858

● Alliance invited for Sourashtra boy M.Tech/29/ 5000. Working in Private Company in Madras seeks fair homely Sourashtra working girl settled in Madras. Apply with horoscope family details. Box No. 12860

● Central Govt. Employee. Commerce Graduate/29years. Vegetarian mother Madhawa Brahmin father Kerala Kshatriya requires Bride below 25 years from Tamil Nadu/ Karela Brahmin Community. Reply Box No. 12861

● Alliance invited for well settled Iyer, Srivatsam, 41yrs/ Legally Divorced, without encumberance, working with an international Airline in the Gulf for 14 yrs, From girls upto 35yrs. Please send details. Box No. 12862

● திருநெல்வேலி சைவ வெள்ளாளப் பிள்ளை/ B.Sc, /31/ 165செ.மீ/5000/ சிகப்பான நல்ல தோற்றமும் தமிழ் நாவலாசிரி யருமான, இன்சூரன்ஸில் பணிபுரியும் மணமகனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த கதைகள் எழுதத் தெரிந்த அல்லது ஆர்வமுள்ள அழகிய பட்டதாரி, பணி புரியும், பணியில்லாத மணமகள் தேவை. பெற்றோர்கள் குடும்ப விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய பெட்டி எண்: 12863

● Alliance invited from Goodlooking employed Graduate Girl for Vadma/Kousikam/Revathi/30/5'5"/M.Sc (IIT Bombay)over 1.25Lakhs P.A/ Employed in a all India reputed firm Sub-sect acceptable. Reply with horoscope to Box No. 12864

● For 37 years old boy (Star Avitam) working in a Private Firm (Gothram/ Srivatsa/Brahacharanam) employed girl is required. No expectation and sub-sect no bar. Please apply with details to Box No. 12865

● Alliance invited for Solia Vellala Pillai Bachlor fair look yound PUC/48/125 7000 Pvt Agency Business. Caste no bar. Widow/Divorce may also wirte. Box No. 12866

● Wanted educated good looking, very fair, Brahmin (any subsect) girl preferably. Employed, from decent family, for Brahmin, Haritha, Vadhyama sub-sect. Boy, 180cms, 25, Well-built, graduate, doing Independent Business, with income over 8,000 p.m. at Madras. Contant Box No. 12867

● தென்கலை ஐய்யங்கார், கௌடின்னிய கோத்திரம், அனுஷ நட்சத்திரம், மாதம் ரூ.3,000/- வருமானமுள்ள பையனுக்கு, வேலைக்கு செல்லும் பெண் தேவை. பெட்டி எண்: 12868

● Alliance invited for Vadama, Kausikam, Poorathadi, Central Govt. Employed boy. 177/31years/Rs.5,500pm seeks. Sutable bride employed in LIC/BANK/INS/C.Govt. Preferably Vadama. Box No. 12869

● Alliance invited for Kannada Madhva/Merugaseerisham IIpadam/Vishvamitra Gothram/27/165/7000/Exce in Public Ltd Co., seeks fair goodlooking employed bride. Box No. 12870

● Vadagalai, Naithrupakesyapam, Poosam, V.Fair, 35/ 5'8"/10,000 Offier, Madras, Widower (lost wife in a road accident) having one daughter aged 5 years seeks Unemployed fair graduate bride form a decent family. Simple Marriage. Reply Box No. 12871.

● உபமன்யு கோத்திரம், ஸ்மார்த்தேஸ்வர்தா மராட்டி பேசுபவர். வயது 29, அவிட்டம் 4ம் பாதம், கும்ப ராசி, 165செ.மீ., வருமானம் ரூ 4000/- மத்திய அரசாங்க உத்யோகத்தில் உள்ள வரனுக்கு படித்த சென்னையிலேயே வேலைப் பார்க்கும் மணமகள் தேவை. பெட்டி எண்: 12872

● Vadama, Non Vadoola, Madras City based graduate employed bride for boy, 34, M.Com, ICWA Inter. decently employed (TVS) group, Star Thiruvonam. Sevvai Dosham. Box No. 12873

● Brahacharanam, Koundinya Gothram, Sadayam, M.A(Eco) M.A.(Phy) B.Ed, 28/170 as teacher in Pvt,Higher Secondary School, Madras, Rs.4500/-Pm. seeks graduate, fair from respectable family. Reply horoscope, family details. Box No. 12874

● Kannada Madhwa 33 years, 5½ feet, Pushyam, 3rd padam, Kashyapa doing business, income 7000/- p.m. seeks a bride from same community with financially sound. Contact with full horoscope details to Box No. 12875

● Palaghat Iyer Vadamal Bharadwaj/Chittirai/42/ Widower no issue employed Calcutta reputed firm drawing salary more than one lakh per year spinster only apply with details with horoscope to Box No. 13001

● வடமாள்/ ஐயர்/ கர்க கோத்திரம்/ வயது 42/ பட்டதாரி. உயரம் 5'3", மாதம் ரூ. 5000/- சம்பளம். தமிழ்நாடு அரசில் கிளார்க்காகப் பணிபுரியும் வரனுக்கு தகுந்த மணப் பெண் தேவை. ஐயரில் உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம் மற்றும் குடும்ப விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 13002

● Alliance for U.S. employed, HI visa, M.S.(Computers) 26,6' Iyengar boy, Vadoola Gothram, Swathi, Vadagalai from fair girls with masters/professional degree. Iyers/ Iyengars. Reply with horoscopes. Box No. 13003

● Tamil Iyer Bharathwaja Gothram, Bharani, 27/165/ 10,000 D.E.C.E. Own business seeks alliance from fair slim Graduate girls preferably Madurai based. Box No.13004

● Arunthathiyar lower middle class 30/174cms/68Kgs, B.E., Rs.7000/-Pm, Central Government Gazetted Officer at Madras. Simple,Non-smoking Teetotaller, spiritual interested seeks suitable alliance. Same caste preferred. Respond with full details, Horoscope. Box No. 13005

● Alliance from Non-Kashyapa, girl below 29years for Vadama Iyer, Pooram, Central Government employed boy. 32/170cms/5000. Employed girls preferred. Box No.13006

● ஐயர், பிரஹசரணம், ஸ்ரீவத்ஸ, கார்த்திகை, 27 வயது, டி.ஈ.சி.ஈ. 5'7". சொந்தமாக சிட் அண்டு பைனான்ஸின் நிறுவனத்தை நடத்தும் (மாத வருமானம் 4000/-) வரனுக்கு வேலைக்குப் போக விரும்பாத, குடும்பப் பாங்கான படித்த மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம், குடும்ப விபரத்துடன் அணுகவும். பெட்டி எண்: 13007

● Wanted smart graduate employed below 30 Bride for Iyer Vadama Avittam 1961 B.com., Well employed Bombay settled. Own house only son. Reply Box No. 13008

● Brahacharanam, Bharadwajam, Punar poosam, graduate central Govt., Job Madras. 32/5'2"/4000/ Seeks preferably employed or Qualified fair Good looking girl 5'-5'2". Sub-sects no bar. Contact with horoscope. Box No. 13009

● கார்காத்தார், சிவப்பான மணமகன், M.Sc.(PHY), M.Ed., 31/175/6500/பணியிடம் சென்னை. B.Sc/B.Ed/M.CA/M.Sc/ (PHY/Maths/Chem) அல்லது பணியில் உள்ள/இல்லாத உயரம் 165செ.மீ/25 வயதுக்குள் அழகுடன் சிவப்பு மணமகள் தேவை. பெட்டி எண்: 13010

● கௌத்தமரிஷி கோத்திரம், உத்திர நட்சத்திரம், கத்ரி, பட்டு நூல்காரர் (Sha), இனத்தைச் சார்ந்த M.Com/29/ 168cms/3500/- மாநில அரசு பணி. அதே பிரிவைச் சார்ந்த அரசு/தனியார் நிறுவனத்தில் நிரந்தர பணியில் உள்ள பட்டதாரி மணமகள் தேவை. முழு குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 13011

● வாத்திமாள், ஹரிதம், மூலம், 37, ஆடிட்டர், சுயமாக தொழில் நடத்துபவர், சென்னையில் சொந்தமாக வீடு, நல்லவருமானம், தாரமிழந்தவர், 6வயது பெண் குழந்தை உள்ள இவருக்கு, பிராமணாள், 30 வயதுக்குமேல், படித்த வேலைக்குப் போகாத, குடும்பப்பாங்கான பெண் தேவை. விதவை விவாகரத்தானவர் வேண்டாம். பெட்டி எண்: 13012

● Alliance invited for Vadagalai Iyengar Groom, Bachelor, Srivatsa, Sathayam, B.Com, 42/171/5,5000 Public sector undertaking (Tamil Nadu) Sub-sect acceptable. Box No. 13013

● Tamil Iyer, Vadamal, Bharadwajam, Handsom, 30yrs, 5'8", Employed in reputed private firm at Nagpur Rs.4000/ Wellversed in Karnatic Vocal seeking suitable good looking, Employed and Music interested girl. Box No. 13014

● ஐயர், பிரஹசரணம், பாரத்வாஜம், 26 வயது, 162 செ.மீ., வெளிநாட்டில் இஞ்சினியர் வேலை பார்க்கும் நல்ல பழக்க வழக்கமுள்ள பையனுக்கு அழகான, படித்த, குடும்பப்பாங்கான, 24வயதுக்கு குறைந்த, 152லிருந்து 160 செ.மீ. உயரமுள்ள பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஆயில்யம்.


அதிரடி
சலவைக்கு
NEW
சுந்தரி
முற்றிலும் மாறுபட்ட டிடர்ஜெண்ட் கேக்
NEW Sundari
SUNDARI SOAP
Mfrs : LAKSHMI INDUSTRIES,
S.M.ROAD, COIMBATORE-26.
விலை
ரூ 3.25
மட்டும்
அனுபவமுள்ள முன்பணம் கட்ட கூடிய
விநியோகஸ்தர்கள் தேவை

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்யக் கட்டணம் ரூ. 100/- தொகையை, 'மங்கையர் மலர்' பெயருக்குச் சென்னையில் மாற்றலாகக்கூடிய டிமாண்ட் டிராப்டாக மட்டுமே அனுப்ப வேண்டும். மணியார்டரோ, போஸ்டல் ஆர்டரோ ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்பவர்களின் விலாசங்களைக் கொடுப்பதற்கில்லை. விளம்பரங்களுக்குப் பதில் அனுப்புபவர்கள், 'விளம்பரதாரர், பெட்டி எண் : C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097' என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். தபால் பெட்டி எண்ணிற்கு வரும் கடிதங்களை அதற்குரிய விலாசத்திற்கு 15 நாட்களுக்கு ஒருமுறை அனுப்பி வைக்கப்படும். தபால் செலவிற்குத் தனிக் கட்டணம் எதுவும் கிடையாது. இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண்களுக்குப் பதில்கள் ஆகஸ்டு'96 31ஆம் தேதிக்குள் எங்களுக்கு வந்து சேர வேண்டும். திருமண தகவல் நிலையங்கள் அனுப்பி வைக்கும் தபால்களை எங்கள் அலுவலகம் ஏற்றுக் கொள்வதில்லை. தனிப்பட்ட எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

மூலம், பூராடம், விசாகம் 4ம் பாதம் தவிர்க்கவும். குடும்ப விவரத்துடன் ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண்: 13015

- சைவவெள்ளாளர், இன்ஜினியரிங் டிப்ளமோ, வயது 30, சுயதொழில், அவிட்டம் நட்சத்திரம், 165செ.மீ. உயரம், மாத வருமானம் ரூ. 5.000/- *சிவப்பான அழகிய குடும்பப்பாங்கான* பெண் தேவை. பட்டதாரி விரும்பத்தக்கது. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 13016

- 38/5500/168cms/ Brahacharanam, Athreya Thiruvonam/ Central Govt., Madras/ Iyer boy. Seeks INS/BANK/Central Govt., employed girl sub-sect no bar. Box No. 13017

- Vathima, Kousika boy, business, aged 34, invites alliance from educated homeloving employed/unemployed girls. Sub-sect no bar. Reply full family details horoscope to Box No. 13018

- Born again Christian boy, Physio tharapist, 29 years fair good looking, prefered physiotharapist (BPT) Occupational therapist, M.B.A., M.S.C. computer, B.E., B.E Computer from decent God Fearing Christian family. Box No. 13019

- அஷ்ட சகஸ்ரம்/பாரத்வாஜ கோத்திரம்/மூலம் நட்சத்திரம் 4ம் பாதம். வயது 30/165செ.மீ/DME/சென்னையில் பிரபல நிறுவனத்தில் ரூ.5000/- சம்பளம் பெறும் பையனுக்கு தகுந்த படித்த வேலையில் உள்ள பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 13020

- வடகலை ஐயங்கார், பணக்கார தொழிலதிபரின் மகன், 25/ME/8500. அரசு வேலை. நல்ல உயரம், நிறம், லட்சணம் கொண்ட வரனுக்கு நல்ல வசதியுள்ள ஐயங்கார் குடும்பத்தில் இருந்து குடும்பப்பாங்கான லட்சணமான பட்டதாரி பெண் தேவை. பெட்டி எண்: 13021

- மிதுன ராசி, புனர்பூசம் நட்சத்திரம், பிறந்த தேதி 20-12-1964, வயது 31, 6 அடி உயரம், எஸ்.எஸ்.எல்.சி., சுயதொழில், மாத வருமானம் ரூ.3000, அகமுடையர்/இசைவேளாளர் விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 13022

- Alliance for Vadamal Iyer boy, Barathwaja Gothram, Barani, 32 years, B.A., PG.D.M.M.emplyoed in A.E.G-NGEF Ltd, Visakhapatnam. Salary Rs.5000/- with freequarters. Girl in the same sect with graduation only contact to Box No. 13023

- Brahacharanam, Iyer, Moolam, 32/165/10,000/- Officer in Bank. Seeks alliance from goodlooking graduate girls. Sub-sect no bar. Reply with Bio-data and horoscopes to Box No. 13024

- wanted Bombay based employed girl for Tamil Iyer, Vadama, Srivatsa Anusham, graduate, 30/5'11"/4500/boy, Private employment, working Bombay. Girl should be working at Bombay or Transferable to Bombay. No demands. Send details to Box No. 13025

- வெள்ளாளர் செட்டியார், அட்வகேட், பி.ஏ.பி.எல்., 28/ அசுவினி/சுத்தஜாதகம்/உயரம்5'6". டாக்டர், என்ஜினியர், முதுகலை, இளங்கலை பட்டதாரி, ஆசிரியைகள், பட்டம் பெற்று அரசு, தனியார் துறையில் நிரந்தர பணியில் உள்ளோர், பேங்க்/தமிழ்நாடு வெள்ளாளர் செட்டியார் அமைப்பில் உள்ள 55 பிரிவுகளில் உள்ளோர் சம்மதம். பெட்டி எண்: 13026

- வன்னிய குல க்ஷத்திரியர் (தென்னாற்காடு), பிளாஸ்டிக் இன்ஜினியரிங் டிப்ளமா, சென்னையில் தனியார் நிறுவனம்,25/2500/ படித்த குடும்பத்தைச் சேர்ந்த வரனுக்கு 20-22வயது, டிப்ளமா அல்லது +2, அதே இனத்தில் அழகான பெண் தேவை. பெட்டி எண்:13027

- பாரத்வாஜம், 48, பி.ஏ., அசுவதி, வீட்டு வாடகை வருமானம் ரூ.6000/- எழுந்து நிற்கவோ, நடக்கவோ முடியாது. சக்கர நாற்காலியில் உட்கார்ந்துள்ளவரை திருமணம் செய்து கொண்டு அன்பு, பாசம் பரிவு காட்டக் கூடிய, தியாக உள்ளம் படைத்த +2 படித்த 42 வயதுக்குள், குடும்பப் பாங்கான பிராமணப் பெண்கள் எழுதவும். பெட்டி எண்: 13028

- சேனைத் தலைவர்/ 36/ பி.எஸ்சி/ டி.எம்.எம். பெங்களூரில் பொது நிறுவனத்தில் ஸ்டோர்ஸ் சூப்பர்வைசராக நிரந்தர பணி, மாத சம்பளம் ரூ.5000/- பெறும் வரனுக்கு படித்த வேலை பார்க்கும்/பார்க்காத அதே இனத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு உட்பட்ட பெண் தேவை. பெட்டி எண்: 13029

- சேனைத் தலைவர், வயது 34, பி.டெக், பம்பாயில் இந்திய அரசு நிறுவனம் ONGCல் நிர்வாகப் பொறியாளர் வரனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு உட்பட்ட டாக்டர் அல்லது என்ஜினியர் பெண் தேவை. பெட்டி எண்: 13030

- பலிஜாநாயுடு, 35/5'10"/ M.E. (Dy. Manager) Pvt Ltd, Company, மாதம், ரூ.5000/- வருமானமுள்ள, திருமணமாகி 1வருடம் 10மாத தாரமிழந்த, குழந்தைகள் இல்லாத பையனுக்கு, குடும்பப்பாங்கான 30 வயதுக்குள் உள்ள பெண் தேவை. பெட்டி எண்: 13031

- Vadama 34, Srivatsa, Moolam, 3rd Padam, 178cms. Area Manager in reputed company. Only son. Having mild psoriasis own house. Sub-sects no bar. Parents alive. Brides over 162cms preferred. Box No. 13032

- Wanted Tirunelveli Saiva Vellala Pillai Girl for boy B.Sc./Chithirai/30/5'10"/ 2500/- Sales Executive private company Madras. Apply with bride's Biodata and horoscope to Box No. 13033

- Alliance invited for Brahmin, Kashyapa Gotram, Telugu boy, employed Pvt, Co. in Delhi, Age 33, B.Com, Good family Backround. Girl belonging to same caste preffered.

Reply with horoscope to Box No. 13034

- தமிழக அரசில் அலுவலக உதவியாளராக வேலை பார்க்கும், மற்றும் மாதம் ரூபாய் மூவாயிரத்திற்கு மேல் வாடகையாக வரக் கூடிய ரூபாய் ஏழு லட்சத்திற்கு மேல் பெறுமானம் உள்ள சொத்துக்கள் உடைய வயது 45, உயரம் 180 செ.மீ., படிப்பு 10-ம் வகுப்பு. இந்து முதலியார் வகுப்பைச் சேர்ந்தவருக்கு, அரசில் வேலை பார்க்கும் குழந்தையுடன் விதவையான பெண் தேவை. ஜாதி, மத பேதம் இல்லை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 13035

- Alliance for Delhi Based Tamil Iyer, Brahacharanam, Srivastsa, Kettai, Graduate, 28/180, Senior Executive in leading Advertising Agency from graduate employed or qualified for employment Brides. Sub-sects no bar. Box No. 13036

- இந்து. ஆதி திராவிடர். வயது 30/ 150செ.மீ./ எம்.ஏ/ கலெக்டர் ஆபீசில் நிரந்தரபணி. மாநிறம் உள்ள மணமகனுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி, அரசுப்பணி அழகு/குணமுடைய அதே உயர மணமகள் தேவை. ஜாதகம் குடும்ப விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 13037

- Alliance invited for Tamil Vadamal, Kousika, Avitam, aged 28, 5'6", Fair Rs.2000/- seeks bride with SSLC/+2 well trained in domestic duties, Vadamal only. No demands. Box No. 13038

- Tamil Iyer, B.Com, Sankriti, 29/170cms. Fair, Handsome cultured family. Sr. Accounts executive-KLM dutch Airlines, Bombay, own flat-prefering graduate employed girl. Ph: 4093464, 4074053. V. Unnathan, Box No. 13039

- திருநெல்வேலி கார்காத்தார், 29/180செ.மீ./ ஹஸ்தம்/ C.A., மேனேஜர், Pvt, Co., சென்னை வாலுக்கு B.Com/ M.Com படித்த அழகான, குடும்பப்பாங்கான மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 13040

- வயது 35 வன்னியர் சென்னையில் சுய தொழில், செய்யும் மணமகனுக்கு தொழிலில் துணையாக, ஆங்கிலம் பேச தெரிந்த படித்த மிக அழகான விதவை மணமகள் தேவை. விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். ஜாதி தடையில்லை. பெட்டி எண்: 13041

- வயது 35 வன்னியர் சென்னையில் சுயதொழில் செய்து வரும் மணமகனுக்கு நல்ல குடும்பத்தை சார்ந்த மிக அழகான ஏழ்மையான மணமகள் தேவை. வரதட்சனை வேண்டாம். ஜாதி தடையில்லை விபரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 13042

- தெலுங்கு தேவாங்கர் இஞ்சினியர் 31,5'8", 10,000/- மாத வருமானம் உள்ள பையனுக்கு, படிப்பும் நல்ல அழகும் உள்ள மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 13043

- Boy, Vellala, 34/160cms, MA, Home Ministry, nearing officer grade, own house Delhi, Alliance form same community sought. Send full details with horoscope. Box No. 13044

- B.Com, DCA, Tamil, Vathima, Haritha, Punarpoosam, 29/169cms/3000 employed in Pvt firm invites alliance from educated, employed Iyer girls. Sub-sects acceptable. Apply to Box No. 13045.

- Iyer, 34, Security, 1700, SPIC group, BA Orphan like Situation வாழ்நாள் முழுவதும் வாழ்க்கைத் துணைவியாக, அன்பையும், பாசமும் பகிர்ந்து கொள்ள வேலை செய்யும் இளம் விதவை மணமகள் தேவை. பெட்டி எண்: 13046

- பிரஹச்சரணம், பாரத்வாஜ கோத்திரம், ஆயில்யம், வயது 34/ரூ.3000/-165செ.மீ/ A/C Asst. ஆக தனியார் கம்பெனியில் வேலை பார்க்கும் வாலுக்கு 27 முதல் 30 வயதுக்குள் படித்த வேலையிலுள்ள பெண் தேவை. பெட்டி எண்: 13047

- சைவப்பிள்ளை வயது 31/ 5"/ நல்ல தனியார் நிறுவனம் ஒன்றில் "Computer Programmer" பதவியில் மாதம் ரூ.5000/- சம்பளம் பணிபுரிபவர் வாலுக்கு, அதே இனத்தில் டில்லியில் பணிபுரியும் பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 13048

- Alliance invited from employed Vadama girls preferably in LIC/BANK/ Government for Vadamal Baradhwajam, Punarpoosam boy, aged 25, B.Sc./ 5'8½"/ Rs.3500/ employed in LIC (HFL). Reply with horoscope. Box No. 13049

- வயது 31, வடகலை, ஐயங்கார், ஸ்ரீவத்ஸ கோத்திரம், கார்த்திகை நட்சத்திரம், உயரம் 5½, மாநிறம், படிப்பு எஸ்.எஸ்.எல்.சி., வேலை-தனியார் கம்பெனி (Texmo) கோயம்புத்தூர், சம்பளம் 1700/- பெறும் மணமகனுக்கு வேலையில் உள்ள மணமகள் தேவை. தென்கலை சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 13050

- இந்து- இல்லத்து பிள்ளை- தோஷம் இல்லை. வயது 29, படிப்பு டி.சி.இ. மாநில பொதுப்பணித்துறையில் பணிபுரிபவருக்கு அதே இனத்தைச் சேர்ந்த டிகிரி/டிப்ளோமா படித்து வேலையிலுள்ள பெண் தேவை. குடும்ப விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய பெட்டி எண்: 13051

- எந்த எதிர்பார்ப்பும் இல்லாத பிரஹசரணம்/கௌதம/ பூராடம்/29/165cms, ITI R & AC மைசூரில் தனியார் கல்வி நிறுவனத்தில் விரிவுரையாளர். நிரந்தர வேலை. (விரைவில் மாநில அரசால் அங்கீகரிக்கப்படும்). மாதியம் 1000+இதர வழியில் வருமானம் உண்டு. வேலைக்கு செல்லும்/செல்லாத, படித்த குடும்பப்பாங்கான பெண் தேவை. Res. Ph. No.23052. பெட்டி எண்: 13052

- Alliance for well placed Tamil Iyer Ashtasahasram boy Haritha/Hastham graduate, 30/5'6", executive Rs.4500/- TUTICORIN - Seeks graduate bride from decent family of same sect employed/unemployed prefered. Box No. 13053

- ஐயர், பிரஹசரணம், ஹரிதகோத்திரம், புனர்பூசம், வயது 30, உயரம் 5'6", நல்ல நிறமான, கல்கத்தாவில் தனியார் கம்பெனியில், மாதம் ரூ.4500/- வேலை செய்யும் பையனுக்கு, நல்ல நிறமான, குடும்பப்பாங்கான, தெய்வபக்தியுள்ள, படித்து வேலையில் உள்ள அல்லது வேலைக்கு செல்ல தகுதியுள்ள இதே இனத்தில் பெண் தேவை. விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 13054

- Correspondences invited from the parents of Madras based decently employed Tamil Iyer girls for Vadama/ Kousiga/Thiruvadhirai/ 34/Post Graduate/165cms/5000/ Southern Railway/Madras employed boy. Send horoscope & details to Box No. 13055

- தென்கலை அய்யங்கார், வயது 36, ஹரிதகோத்திரம், திருவாதிரை. மாதம் 2,500க்கு மேல் சம்பாதிக்கும் உள்ள சுய தொழில், படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. வீட்டுப்பாங்கான பெண் தேவை. ஜாதகம் இல்லை. தென் மாவட்டதாரர்களுக்கு முன்னுரிமை. உட்பிரிவுகள் சம்மதம். முகவரி: டி. கோபாலன், 5, தெற்குமாடத்தெரு, ஸ்ரீவைகுண்டம் - 628601.

- Vadama, Kausika Palghat Iyer boy. Kettai, 35, Graduate well employed. Multinational firm Delhi. Residing own house. Respond with horoscope to: Venkateswaran, 595 Pocket -5, Mayur Vihar -I, Delhi - 110091. Tel: 2255346

